# கம்பஹா மாவட்ட முஸ்லிம்கள்



கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு,
முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இலங்கை

# MUSLIMS OF GAMPAHA DISTRICT

## HISTORY AND HERITAGE

Editor:
**S. H. M. JAMEEL**

A Presentation
of the

## Ministry of Cultural & Religious Affairs

Department of Muslim Religious & Cultural Affairs,
34, Malay Street,
Colombo 02,
Sri Lanka
1998

| | | |
|---|---|---|
| Title | : | MUSLIMS OF GAMPAHA DISTRICT<br>History & Heritage |
| Editor | : | S. H. M. JAMEEL<br>B. A. (Sp.) Dip. Ed; M. A.<br>Advisor<br>Ministry of Cultural & Religious Affairs |
| Publishers | : | Ministry of Cultural & Religious Affairs<br>Department of Muslim Religious &<br>Cultural Affairs<br>34, Malay Street<br>Colombo 02.<br>Sri Lanka |
| First Edition | : | July 1998 |
| | | |
|---|---|---|
| Copy Right | : | ©Publishers |
| | | |
|---|---|---|
| Printer | : | State Printing Corporation,<br>Nawala Road, Nugegoda and<br>Panaluwa, Padukka.<br>Sri Lanka |

# கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள்

## வரலாறும் பாரம்பரியமும்


பதிப்பாசிரியர்:
எஸ். எச். எம். ஜெமீல்



வெளியீடு:
கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு

முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
34, மலே வீதி,
கொழும்பு 02,
இலங்கை.
1998

## PUBLICATION ADVISORY COMMITTEE

- **A. C. M. Razik**
  Additional Secretary,
  Ministry of Cultural & Religious Affairs

- **M. H. M. Uwain**
  Co-ordinating Secretary,
  Ministry of Cultural & Religious Affairs

- **Fahumiya Nizar**
  Assistant Director,
  Department of Muslim Religious & Cultural Affairs

- **M. S. M. Masood**
  Retired Principal

- **M. Y. M. Naseer**
  Department of Muslim Religious & Cultural Affairs

This Book is published
on the occasion of the

**National Meelad-un-Nabi Celebrations - 1998**

held at Malwana

on July 7, 1998

**A. H. 1419 Rabiyyul Awwal 12**

and

Presented to

**Her Excellency Chandrika Bandaranaike Kumaratunga**
President of the Democratic Socialist
Republic of Sri Lanka

by

**Hon. Lakshman Jayakody**
Minister of Buddha Sasana, & Minister of Cultural &
Religious Affairs

وما ارسلنك الا رحمة للعالمين

SRI LANKA NATIONAL

MEELADUN NABI CELEBRATION

# பொருளடக்கம்

பக்கம்

පෙරවදන: ගරු ලක්ෂ්මන් ජයකොඩි
බුද්ධ ශාසන, සංස්කෘතික හා
ආගමික කටයුතු අමාත්‍ය ix

முன்னுரை: மாண்புமிகு லக்ஷ்மன் ஜயகொடி
புத்த சாஸன, கலாசார,
சமய அலுவல்கள் அமைச்சர் xi

Foreword: Hon. Lakshman Jayakody
Minister of Buddha Sasana,
Cultural & Religious Affairs xiii

வெளியீட்டுரை: ஏ. ஸீ. எம். ராஸீக் xv

பதிப்புரை: எஸ். எச். எம். ஜெமீல் xvii

அத்தியாயம்:

1. வரலாற்றுப் பாரம்பரியம் - எம். எம். எம். மஹரூப் 01
2. வரலாற்றுத் தேடல் - எம். வை. ஸப்ருள்ளாகான் 33
3. குடியிருப்புக்களின் பரம்பல் - எம். எஸ். எம். மசூத் 47
4. மஸ்ஜித்கள், மத்ரஸாக்கள், மகான்கள் - எம். எச். எம். லாபிர் 67
5. வாழ்வியலும் பண்பாடும் - எம். வை. ஏ. அப்துல் காதர் 135
6. கல்வி - எம். எச். எம். அமீன், எம். எச். எம். புஹாரி 161
7. கலை, இலக்கியம் - மு. பஷீர் 199
8. பொருளாதார அமைப்பும் தொழில்களும் - எம். எச். ஏ. சல்மான் 215

இணைப்புக்கள்

i. கம்பஹ மாவட்ட தேர்தல் தொகுதிகள் 227
ii. முஸ்லிம்கள் வாழும் ஊர்கள் 228
iii. பள்ளிவாசல்கள், தக்கியாக்கள் 230
iv. ஸியாரங்கள் 234
v. அறபுக் கலாசாலைகள் 235
vi. பாடசாலைகள் 236
vii. முக்கிய நிறுவனங்கள் 237
viii. கட்டுரைகள் வழங்கியோர் 238
ix. மாவட்ட வரைபடம் 243

# පෙරවදන

මාගේ අමාත්‍යාංශය වූ සංස්කෘතික හා ආගමික කටයුතු අමාත්‍යාංශයට අයත් මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව විසින් පල කරනු ලබන "ගම්පහ දිස්ත්‍රික්කයේ මුස්ලිම් ජනතාව – ඉතිහාසය හා උරුමය" නැමැති මෙම ග්‍රන්ථයට පෙරවදනක් තිකුත් කිරීමට ලැබීම ඉමහත් සන්තෝෂයට කරුණකි. ගම්පහ දිස්ත්‍රික්කය වූ කලී ගරු අගමැති/අගමැතිණියන් මෙන්ම අතිගරු ජනාධිපති ප්‍රමුඛ ජන නායකයින් බොහෝ දෙනෙකු බිහි කළ ප්‍රදේශයකි, එමෙන්ම මගේ මැතිවරණ කොට්ඨාශය ද ගම්පහ දිස්ත්‍රික්කයේ වීම තවදුරටත් ප්‍රමෝදයට පත්වෙමි. බොහෝ කලක්ම කොළඹ දිස්ත්‍රික්කයේ කොටසක්ව පැවැති ගම්පහ 1979 දී වෙනම පරිපාලන දිස්ත්‍රික්කයක් බවට පත් වූ අතර, ඉන් පසු අද දක්වා එහි අනන්‍යතාව රැක ගෙන ඇත.

තම අසල්වාසී සිංහල ජනතාව සමඟ ඉතා සුහදතාවයෙන් මෙම දිස්ත්‍රික්කයේ මුස්ලිම් ජනතාව ජීවත්වී සිටීම ඉතා අගේ කොට සැළකිය යුතුය. ස්වකීය ආගමික හා සංස්කෘතික අනන්‍යතාව ආරක්ෂා කරන අතරම සිංහල ජනතාව සමඟ දැඩි එකමුතු භාවයෙන් ඉතා සුහදශීලීව මෙම මුස්ලිම් ජනතාව ජීවත්වීම වූ කලි ප්‍රශංසනීයයි.

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික දෙපාර්තමේන්තුව විසින් එබඳු ජන කොට්ඨාශයක් පිළිබඳ ඉතිහාසය, උරුමය හා සම්ප්‍රදායන් ඓතිහාසික ලෙස සකස්කර ලේඛනගත කිරීම ඉතා කාලෝචිතයි. එබඳු ප්‍රකාශන මාලාවක සත්වැනි ප්‍රකාශනය මෙය වන අතර, කළුතර, අනුරාධපුරය, මාතලේ, මාතර, මහනුවර හා අම්පාර වැනි දිස්ත්‍රික්කයන්හි මුස්ලිම් ජනතාවගේ ඉතිහාසය පිළිබඳව ප්‍රකාශන දැනටමත් තිකුත් කර ඇත.

මෙම අනගි කාර්යයෙහි නිරත වූ නිලධාරීන් හා අනෙකුත් සියලු දෙනාගේම සේවය ඉතා අගය කොට සලකමි. මෙම අමාත්‍යාංශයේ අතිරේක ලේකම් ඒ. සී. එම්. රාසික් මහතා හා දෙපාර්තමේන්තුවේ සෙසු නිලධාරීන්ගේ සහාය ඇතිව අමාත්‍යාංශයේ උපදේශක එස්. එච්. එම්. ජමීල් මහතා තම වටිනා කාලය හා ශ්‍රමය මේ වෙනුවෙන් වැය කර ඇත. මෙහි අඩංගු සියළුම ලිපි ලේඛනාදිය සපයා ඇත්තේ මෙම ප්‍රදේශයේ විද්වතුන් විසිනි.

සෙසු දිස්ත්‍රික්කයන්හි ජීවත්වන මුස්ලිම් ජනතාවගේ ඉතිහාසය ලේඛනගත කිරීමේ මෙම වැඩ සටහන අනාගතයේ දී ද අඛණ්ඩව පවත්වාගෙන යනු ඇතැයි බලාපොරොත්තු වෙමි.

**ලක්ෂ්මන් ජයකොඩි**
බුද්ධශාසන අමාත්‍ය සහ සංස්කෘතික හා
ආගමික කටයුතු අමාත්‍ය

## முன்னுரை

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின்கீழ் இயங்கும் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிடும் "கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் - வரலாறும் பாரம்பரியமும்" எனும் இந்நூலுக்கான முன்னுரையை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கம்பஹ மாவட்டம் எனது தொகுதி மட்டுமல்லாது, இந்நாட்டின் ஜனாதிபதிகளையும், பிரதமர்களையும் பெற்றெடுத்த பிரதேசம் எனும் வகையிலும் இம்மாவட்டத்தின் வரலாறு வெளிவருவதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன். இப்பிரதேசம் கொழும்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாக நீண்டகாலம் இருந்து தனியொரு மாவட்டமாக 1979 இல் பிரிந்து அதன் தனித்துவத்தைப் பேணி வருகின்றது.

இங்கு வாழும் முஸ்லிம்கள் பன்னெடுங்காலமாகவே தமது சிங்களச் சகோதர அயலவர்களுடன் பூரண அன்னியோன்யத்துடன் வாழ்ந்து வருகின்றனர். தமது சமய, கலாசாரத் தனித்துவங்களைப் பேணிப் பாதுகாக்கும் அதேவேளையில், சிங்கள சமூகத்துடனும் கலந்துறவாடி சமாதான வாழ்க்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய ஒரு சமூகத்தின் வரலாற்றுப் பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் என்பனவற்றை ஒழுங்குநிரற்படுத்தி, பதிவாக்கி வருகின்ற பாரிய பணியொன்றினை முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான வெளியீடுகளில் இது ஏழாவதாகும். களுத்துறை, அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, கண்டி, அம்பாரை ஆகிய மாவட்டங்களின் வரலாறுகள் ஏற்கனவே நூலுருவில் வெளிவந்துள்ளன.

இப்பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள

விரும்புகிறேன். இவ்வமைச்சின் ஆலோசகரான ஜனாப் எஸ். எச். எம். ஜெமீல் இத்தகைய நூல்களைத் திட்டமிடுவதிலும் வெளிக்கொணர்வதிலும் அதிக நேரத்தையும், உழைப்பையும் நுணுக்கமாகச் செலவிட்டு வருகிறார். மேதிகச் செயலாளர் ஜனாப் ஏ.ஸீ.எம். ராஸீக், அத்துடன் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இப்பணியில் மிகவும் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நூலிலுள்ள ஆய்வுக் கட்டுரைகள் யாவும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த அறிவுசால்பாளர்களால் எழுதப்பட்டுள்ளன.

இவ்வாறு ஏனைய மாவட்ட முஸ்லிம்களின் வரலாறுகளையும் வருங்காலத்தில் நூலாக வெளியிடும் இத்திட்டம் தொடர வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

**லக்ஷ்மன் ஜயகொடி**
புத்த சாஸன, கலாசார, சமய
அலுவல்கள் அமைச்சர்

## FOREWORD

It gives me great pleasure to write this Foreword to this book "Muslims of Gampaha District–History and Heritage" that is being published by the Department of Muslim Religious and Cultural Affairs, which is under the perview of my Ministry of Cultural and Religious Affairs.

I am further delighted because Gampaha District happens to be my electorate as well as an area that has produced Presidents and Prime Ministers of this country. This was part of the Colombo District for a long time and became a separate district in 1979, and now has its own identity.

The Muslims of this district have lived in perfect harmony with the Sinhala neighbours for a very long time. While retaining their religious and cultural individuality, they have very well assimilated with the Sinhala community and are leading a harmonious life.

It is very appropriate that the history, heritage, traditions and culture of such a group of people are being chronicled and documented by the Department of Muslim Religious and Cultural Affairs. This is the seventh in the series of such publications, as the history of Muslims of Kalutara, Anuradhapura, Matale, Matara, Kandy and Ampara Districts have already been published.

I wish to record my appreciation of the efforts of the officers and others involved in this venture. Mr. S. H. M. Jameel, Advisor, spends much time and energy in the diligent planning and publications, together with the Additional Secretary Mr .A. C. M. Razik and other officers of the Department. All the articles have been contributed by knowledgeable persons of the area.

I hope that this programme of documenting the history of Muslims of other districts will continue in the future as well.

**Lakshman Jayakody**
Minister of Buddha Sasana and
Cultural & Religious Affairs

# சிறப்புரை

இவ்வருடம் தேசிய மீலாதுன்நபி கொண்டாட்டங்கள் கம்பஹா மாவட்டத்தின் மல்வானை நகரில் நடைபெறுவதை ஒட்டி "கம்பஹா மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு" எனும் இந்நூலை ஆக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இத்துடன் மற்றுமொரு மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு தெட்டத்தெளிவாக ஆராய்ந்து வெளியிடப்படுகின்றது. ஏற்கனவே களுத்துறை, அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, கண்டி, அம்பாரை என்பவற்றின் வரலாறுகள் வெளியிடப்பட்டுள்ளன. திணைக்களத்தின் உதவியுடன் புத்தளம் மாவட்ட வரலாறும் நூலுருப்பெற்றுள்ளது.

திணைக்களத்தின் நீண்டகாலத் திட்டங்களுள் ஒன்றான சகல மாவட்டங்களினதும் வரலாறுகள் தொகுக்கப்பட வேண்டும் எனும் நோக்கம், தொடருமாயின் இன்னுஞ் சில காலத்தில் இப்பணி பூர்த்தி செய்யப்பட்டுவிடும்.

இந்நூலில் கூறப்படும் கருத்துக்கள் தகுந்த வரலாற்று ஆதாரங்களுடன் நிறுவப்பட்டவையாகும். விசேடமாக தரவுகள், வரைபடங்கள் என்பன மிகமிக நுணுக்கமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே சேர்க்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு வழிகோலும் வகையில் நிரைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்துடன் நெருங்கிய தொடர்புடைய எழுத்தாளர்களைத் தேர்ந்து எமது வேண்டுகோளைக் கூறியபோது அதனை விரும்பி ஏற்ற அவர்கள் இந்த ஆக்கங்களைச் செய்துள்ளனர். இவர்களுடன் இணைந்து எமது அமைச்சின் ஆலோசகர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் அவர்கள் பதிப்பாசிரியராக சிறந்த முறையில் இதனை நூலுருவாக்கித் தந்துள்ளார். பிரபல எழுத்தாளர் என்ற அவரது அனுபவம் அதற்கு உதவியாக அமைந்துள்ளது.

இந்நூலின் எட்டுக் கட்டுரைகளையும் ஆக்கித் தந்துள்ள எம். எம். எம். மஹரூப், எம். வை. சப்ருள்ளாகான், எம். எஸ். எம். மசூத், எம். எச். எம். லாபீர், எம். வை. ஏ. அப்துல் காதர், எம். எச். எம். அமீன், எம். எச். எம். புஹாரி, மு. பஷீர், எம். எச். ஏ. சல்மான் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். இக்கட்டுரை ஆக்கங்களுக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமங்கள் பல. பலரைச் சந்தித்து விபரங்களை, தரவுகளை அவர்கள் சேர்க்க வேண்டியிருந்தது. அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்.

இப்பணிகள் சிறப்புற நடைபெறுவதற்கு எமது அமைச்சர் கௌரவ லக்ஷ்மன் ஜயகொடி அவர்கள் தரும் உற்சாகமும் வழிகாட்டலும் குறிப்பிடத்தக்கது. அதேபோல எமது பிரதி அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஏ. வீ. சுரவீர அவர்களது கலை, இலக்கிய ஆர்வமும் இப்பணிகளுக்கு உதவியாக உள்ளது.

இந்நூலை வெளியிடும் பணியில் உதவியாகவிருந்த அமைச்சையும், திணைக்களத்தையும் சேர்ந்த உத்தியோகத் தர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏ. ஸீ. எம். ராஸீக்
*கலாசார, சமய, அமைச்சின் மேலதிகச் செயலாளரும்,*
*முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்*
*பதில் பணிப்பாளரும்*

# பதிப்புரை

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தொடராகச் செய்து வரும் பாரிய பணியொன்றின் பூரண உபயோகம் இன்று உணரப்படுவது குறைவாயிருப்பினும்; இன்னும் சில தசாப்தங்களின் பின் அதுவே மிகப் பெரிய பங்களிப்பாகக் கொள்ளப்படும். அதுதான் இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களிலும் வாழும் முஸ்லிம்களின் வரலாற்றையும், பாரம்பரியத்தையும் ஆய்வுரீதியில் பதிவு செய்தலாகும்.

இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத் தசாப்தங்களில், கல்வித்துறையில் முஸ்லிம்கள் பின்னிலையிலிருந்தது போன்று, தமது வரலாறு, வாழ்வியல், பண்பாடு என்பனவற்றைப் பதிவு செய்வதிலும் பின்னின்றனர். ஓரிரு பதிவுகள் செய்யப்பட்டாலும் அவை, சேர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்ரன், எமர்சன் டெனன்ட் போன்ற ஆங்கிலேயராலேயே செய்யப்பட்டன. முகம்மது காசிம் சித்திலெவ்வை, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் போன்ற ஒரு சிலர் மட்டுமே சமுதாயச் சுவடுகளை விட்டுச் சென்றுள்ளனர்.

எதிர்வரும் நூற்றாண்டுகளில் இலங்கை வரலாற்றை ஆய்வு செய்ய விழைவோர் இந்நாட்டு முஸ்லிம்களைப் பற்றிய போதிய தகவல்களையும், தரவுகளையும் பெறுவதற்கான வழிவகைகள் அருகியிருக்காது, அபரிமித மாக இருப்பதற்கான முயற்சிகளிலொன்றே இந்நூற் தொடராகும், களுத்துறை, அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, கண்டி, அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறுகள் ஏற்கனவே இத்திணைக் களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றினைக் கூறும் இந்நூலுக்கான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளோர் அனைவரும் இம் மாவட்டத்தைச் சேர்ந்தோரேயாவர். அதனால் இவற்றிலடங்கியுள்ள தகவல்கள் யாவும் இரண்டாம்தர மூலாதாரமானதாகவன்றி; நேரடி ஆய்வுத் தகவல்களாயுள்ளன.

எனவே இவற்றை எழுதியுதவியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திணைக்களத்தின் இம்முயற்சி தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணம் மாண்புமிகு புத்தசாசன, கலாசார, சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜயகொடி அவர்களால் தரப்படும் பேராதரவேயாகும். அதற்காக அவர் என்றும் நன்றிக்குரியவராவார். அதேபோன்று இத்தகைய பணிகளில் என்றும் நல்ல ஆலோசனைகள் வழங்கும் மாண்புமிகு பிரதியமைச்சர் பேராசிரியர் ஏ. வீ. சுரவீர அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

எஸ். எச். எம். ஜெமீல்
ஆலோசகர்
கலாசார, சமய விவகார அமைச்சு

# 1

# வரலாற்றுப் பாரம்பரியம்

எம். எம். எம். மஹ்ரூப்

கம்பஹ மாவட்டம் இலங்கையின் இருபத்து ஐந்து மாவட்டங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இன்றைய மாவட்டங்களுள் கம்பஹ மாவட்டமே மிக இளமையானது. 1979 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு, நீர்கொழும்பு, கட்டானை, திவுலப்பிட்டிய, மீரிகம, அத்தனகலை, மினுவாங்கொடை, வத்தளை, ஜாஎல, கம்பஹா, மஹர, தொம்பை, பியகம, களனி என்ற பதின்மூன்று பிரதேச செயலகங்களோடு, கம்பஹ மாவட்டம் தனித்துவம் பெற்று நிற்கின்றது.

கம்பஹ மாவட்டத்தின் நில அமைப்பு விசேடமானது. புவியியல் நிபுணர் ஒருவர் அதை இவ்வாறு விபரிக்கின்றார்.

> "வடமேல் கரையோரப்பகுதி, தென்கிழக்குக் கரையோரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த உண்மை, கரையோர வீதிகளில் செல்பவர் யாவருக்கும் எளிதில் புரிந்துவிடுகின்றது. கொழும்பிலிருந்து காலிக்குப் போகும்போது, கடல் நம்மைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் கொழும்பிலிருந்து புத்தளத்துக்குச் சென்றால், நாம் கடலைப் பார்க்க முடியாது. கரையோரம் கடல் தொடர்ந்து தள்ளிக்கொண்டு போவதே அதற்கு முக்கிய காரணமாகும். வடமேல் கடற்கரையில் கடல் மட்டம் மிகுந்த ஆளமானது அல்ல. எனவே, கடல் அலைகளினால் கரையில் வீசப்படும் பிரமாண்டமான மணல் குவியல்கள் நாளாவட்டத்தில் காயல்கள், ஏரிகள், வில்லுகள் சதுப்பு நிலங்கள் என்பவற்றை உருவாக்குகின்றன[1].

344,117 ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்ட இம்மாவட்டம், பெரும்பாலும் நெய்தல், மருதை நிலமாகவும், கொஞ்சம் குறிஞ்சிப் பிரதேசமாகவும் விளங்குகின்றது. இந்நாட்டிலுள்ள

மாவட்டங்களுள் மிகக் கூடுதலான சனத்தொகை கொண்டுள்ள பிரதேசமாக கொழும்பு மாவட்டம் இருக்க, அதற்கு அடுத்தபடியாக கம்பஹ மாவட்டம் உள்ளது.

கம்பஹ மாவட்டத்தின் நில அமைப்பு, குறிப்பிடத்தக்க சில அம்சங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் முத்துராஜவெல சதுப்பு நிலம் ஒன்று, மற்றொன்று நீர்கொழும்பு காயல் ஆகும்.

கொழும்புக்கு சிறிது தூரத்தில் வடக்கே உள்ள முத்துராஜவெல சதுப்பு நிலம் என்பது நீர்கொழும்பு காயலின் தெற்கு விஸ்தீரணம் எனவும், சுமார் பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பதாக அது வண்டல் படிந்து தரையாகிவிட்டது எனவும் கருதப்படுகின்றது.[2] முத்துராஜவெல சதுப்பு நிலத்தின் மூலப்பொருள் பீட் என அழைக்கப்படும் நிலக்கரிக் கழியாகும். மூன்று வகையான இந்த நிலக்கரிக்களி தரம்பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவையாவன: மரக்களி. இதனை மரஞ் செடிகொடிகளின் செரிமானமான பகுதிகள் எனலாம். இன்னொன்று நாணல் களி. நாணல், கொருக்கைகளின் அழிந்தொழிந்த மிச்சங்களைக் கொண்டது இது. மூன்றாவது வகை, மக்கிய களி. மூலப்பொருள் யாது என அடையாளம் காணாதவாறு முற்றிலும் சிதைந்துபோன களி இது.

முத்துராஜவெல சதுப்பு நிலம், வத்தளையிலிருந்து தொடங்கி, கடற்கரைப் பிரதேசம் ஊடாக, கந்தானை, ஜா-எல, எகலை ஆகியவற்றின் வண்டல் நிலங்களை உள்ளடக்கி, நீர்கொழும்பில் சேர்ந்துவிடுகின்றது. நிரந்தர நெல் விளைச்சலுக்கு அருகதை யற்றதாக இருந்தாலும், முத்துராஜவெல சதுப்பு நிலம் கடல் சார்ந்த வர்த்தகத்துக்கு, படகுப் போக்குவரத்து என்ற அடிப்படையில் அன்றுதொட்டு இன்று வரைக்கும் குந்தகமாக இருந்ததில்லை.

நீர்கொழும்பு காயல், அப்பிரதேசத்துக்குக் கடல் தந்த அன்பளிப்பு எனக் கருதமுடிகிறது. நீர்கொழும்புப் பிரதேசத்துக்கு முன்னால் உள்ள கடல், தொடர்ந்து வண்டல் மண்ணை அள்ளி வீச, அது நாளாவட்டத்தில் பூமி முனையாக, வண்டல் நிலமாக உருவெடுக்கிறது. அதுவும் படிப்படியாக வளர்ந்து நிலைகொண்டுவிடுகிறது. கடைசியில் அங்கு தோன்றுவது ஒரு தீபகற்பம், ஒரு கடல் ஏரியாகும். அதுவே காயல் எனப்படும். நீர்கொழும்புக் காயலில் வண்டல் பிரதேசம், தடுப்பு முனை நிலம்,

கடற்கரை, பழைய கடற்கரை சமவெளியும் முகடுகளும், காயல் மட்டத்தரை, மூழ்கிய காயல் மட்டத்தரை, படிக அடிமட்டம் ஆகியவற்றை இனங்கண்டுகொள்ளலாம்.[3]

## முஸ்லிம்களின் பூர்வாங்க சரிதை

கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் புராதன வரலாறு, அம்மாவட்டத்தின் புவிய அமைப்பில் ஒன்றியுள்ளது எனக் கூறுவது பொருத்தமானது. அதன் சில அம்சங்களை மேலே, ஒருவாறு நோக்கியுள்ளோம். இலங்கை முஸ்லிம்களின் கணிசமான பொருளாதார பங்களிப்பு வர்த்தகத்தை ஒட்டியது என நாம் கொள்வோமேயானால், வர்த்தக சாதனங்கள், குறிப்பாக துறைமுகங்கள், இறங்குதுறைகளென்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

இருவகை கப்பல்கள் இருவகை துறைமுகங்களைத் தேவைப்படுத்துகின்றன. முதலாவது, பாரிய படகுகள், வள்ளங்கள் என்பன; இவற்றுக்கு கடல் ஆழம் மிகுதியாக இருக்கவேண்டியதில்லை. இவை எளிதாகத் தரை தட்டுவதில்லை. வேண்டுமென்றால் பாரிய படகுகளை கரையில் ஏற்றிவிடவும் முடிகிறது. இவ்வகை மரக்கலங்கள், கரையை ஒட்டிஓடும் படகுகளாகவும், பெரிய கப்பல்களிலிருந்து சரக்குகளைக் கொண்டுவரும் வள்ளங்களாகவும் சின்னஞ்சிறு கப்பல்களாகவும் இருந்தன. தூத்துக்குடி, இராமநாதபுரம் அதிராம்பட்டினம், திருநெல்வேலி, கீழக்கரை, காயல்பட்டினம் போன்ற (தற்சமய) தமிழ்நாடு இறங்குதுறைகளும், கேரள மாநிலத்தின் துறைமுகங்கள், அந்தரோத்தீவு (இலட்சத்தீவுகள்) ஆகியவற்றின் துறைமுகங்கள் என்பன இவ்வகை வர்த்தகத்தை தரிசித்து நின்றவை.

இந்தப் பட்டியலில் முத்துராஜவெலயின் இறங்குதுறைகளையும் சேர்த்துக்கொள்ளத் தோன்றுகிறது. மேற்சொன்ன துறைமுகங்களில் பாரியனவும், சென்னை, காயல் பட்டினம், கொழும்பு, காலி, நீர்கொழும்பு என்பனவும், பெரிய கப்பல்களுக்கு தமது சேவையைத் தந்தவை. அவற்றின் கடல்மட்டம் ஆழ்ந்து இருப்பது மட்டுமன்றி, சாமான்களை ஏற்றி இறக்கும் பணியாளர்கள், பண்டகசாலைகள், கிட்டங்கிகள், கப்பல் கட்டும், செப்பனிடும் நிலையங்கள் போன்றவற்றையும் அவை உள்ளடக்கியிருந்தன.

ஆசிய, அராபிய மக்கள் பண்டைய காலந்தொட்டே பெரிய கப்பல்களைக் கட்டும் தொழில் நுட்பத்தையும், அவற்றைச் செலுத்தும் திறனையும் பெற்றிருந்தார்கள். வங்காளத்திலிருந்து புத்தளத்துக்கு வந்த விஜய மன்னனின் கப்பல் பயணிகளையும், மாலுமிகளையும் சேர்த்து 150 லிருந்து 250 பேர்களை கொண்டிருந்தது என மஹாவம்சம் கூறுகிறது.[4] கி.மு. 300 லிருந்து இலங்கைக்கும் வட இந்தியாவுக்குமிடையே போக்குவரத்திலிருந்த கப்பல்கள், பெரியவை என இன்றைய ஆராய்ச்சியின் தீர்வாகும்.[5]

அராபியர் பாவித்த கப்பல்கள் இருவகையானவை. ஒன்று, ஜாவா (சாவக) வர்க்க கப்பல்கள், மற்றவை அராபிய தவ் கப்புல்கள். சாவக வர்த்தக கப்பல், 60 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்டிருந்தது. நீண்ட கப்பலின் அடிக்கட்டை மீது அது கட்டப்பட்டிருந்தது. அடிக்கட்டையின் மீது மரக் கூண்டுபோன்ற சட்டத்தை அமைத்து அதனை பலகையினால் பொருத்தி, சேர்த்து, கப்பலின் உட்பகுதியை உருவாக்கினார்கள். இவ்வகை கப்பல், விரைவாக கடலில் செல்ல முடியாமல் இருந்தபோதிலும் எளிதில் மூழ்கிவிடக்கூடியது அல்ல. தவ் கப்பல் இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அது கடல்மட்டத்திலிருந்து உயர்ந்து நிற்கவில்லை. விரைவாக செல்வதற்கும், எளிதாக திசை திருப்புவதற்கும் உகந்ததாக அது கட்டப்பட்டிருந்தது.

அராபியரின் கப்பல் வர்த்தகத்தைப்பற்றி ஒரு கடல் வாணிக வரலாற்று ஆசிரியர் இவ்வாறு எழுதுகிறார்.

"கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 16 ஆம் நூற்றாண்டுவரை நடந்த கடல்மார்க்க வியாபார வரலாற்றில், சில விட்டுப்போன பகுதிகள் இருக்கின்றன. இந்தியாவிற்கும் அதைக் கடந்த பிரதேசங்களுக்கும் அவர்கள் வியாபாரம் செய்தார்கள். ஆனால் அந்நாடுகளின் சுதேச மக்கள் அவ்வணிகத்தில் பங்கு பற்றினார்களா அல்லது ஆளுமை செலுத்தினார்களா என்பது சந்தேகமே."[6]

## இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அராபியர் வருகை

இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்தில் அராபியர் கம்பஹா மாவட்டத்தில் குடிகொண்டார்களா என்பது தொடர்ந்தும்

ஆய்வுக்குரிய விடயமாகவே உள்ளது. அதற்குரிய காரணங்களை இங்கு சுட்டிக்காட்ட முடிகிறது. அநுராதபுர யுகம், பொலநறுவை யுகம் என இன்று அடையாளம் காணப்படுகின்ற காலக்கட்டத்தில், அதாவது சுமார் கி.மு. 500 லிருந்து 13 ஆம் நூற்றாண்டுவரை, இலங்கையில் தலைநகர்கள், தலைமைப் பீடங்கள், ஆளும் வர்க்கத்தினரின் கேந்திர தானங்கள் யாவும், (தற்காலத்திய) வடமத்திய மாகாணத்தில் அமைந்திருந்தன. தென் - மேல் இலங்கையில், தாபிதமான கம்பஹ மாவட்டம் அன்று பெரும்பாலும் ஓரங்கட்டப்பட்ட பிரதேசமாக இருந்ததில் வியப்பில்லை. நிறைந்த மழையும், ஆகவே அடர்ந்த காடுகளும் கொண்டிருந்த அப்பிரதேசம், அக்காலத்திய தொழில் நுட்ப முறைகளை வென்று நின்றதால், மக்களின் குடியமர்வு தொகை அங்கு குறைந்ததாகவே இருந்தது. பாரிய நகரங்கள் அங்கு குறைந்து காணப்பட்டன. உண்மையில், அநுராதபுர, பொலநறுவை காலக்கட்டங்களில், க்ல்யாணி என அன்று அழைக்கப்பட்ட களனி நகரமே ஒரேயொரு பட்டணமாக இருந்ததுபோலும்.[7] அவ்வாறே அன்றைய வரலாறுகள் மகாவம்சம் உட்பட பறைசாற்றுகின்றன.

அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களைப்பற்றியும் சந்தேகங்கள் தீர்ந்தபாடில்லை. கி.பி.6 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மகாவம்சம் போன்ற வரலாற்று நூல்கள், நாகர்களையும், யக்கிரர்கள் (அசுரர்கள்) என்போரையும் பற்றி பிரஸ்தாபிக்கின்றன. உதாரணமாக, நாகர்களைப்பற்றி குறிப்பிடும்பொழுது மகாவம்சம் இவ்வாறு கூறுகிறது: "நாகர் தலைவனான மஹோதரன், நாகர்களுக்கு அரசனாக இருந்து வந்தான். அவனுக்கு பிரமாண்டமான சக்தி இருந்தமை மட்டுமன்றி கடலில் (பெரியதொரு) இராஜதானியும் அவனிடம் இருந்தது. கண்ணவதமான என்ற மலைப்பகுதியை ஆண்டுவந்த நாகராசனுக்கு மஹோதரனின் தங்கை மனைவியாக, அரசியாக இருந்தாள். அவளுடைய மகனே குலோதரன் ஆவான். அவனுடைய தாயின் தந்தை (பாட்டன்) அவளுக்கு (நவமணிகளால்) இழைத்த சிம்மாசனம் ஒன்றை அளித்திருந்தான். எனவே, மாமனும் மருமகனும் அதற்காக சண்டைசெய்ய ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். ..மஹோதரனின் தாயின் சகோதரனான (மாமன்) கல்யாணி (களனி) நாட்டை ஆண்ட நாகராசன் மணியக்சிக்கனும் அங்கு வந்து சேர்ந்தான்.[8]

இதிலிருந்து (இன்றைய) கம்பஹா மாவட்டத்தில் வாழ்ந்த நாகர் இனமக்கள் புஜபல பராக்கிரமத்தை மட்டும் நம்பி வாழாமல் பல தொழில் நுட்பங்களிலும் சிறந்து விளங்கி, மாணிக்க வகையறாக்களின் தன்மைகளை உணர்ந்த உயர் இரசிகர்களாக இருந்திருக்கவேண்டும் என்ற எண்ணம் எழலாம்.

இந்தக் கருத்தை இன்றைய ஆராய்ச்சி, பெரும்பாலும் திட்டவட்டமாக மறுக்கின்றது. இலங்கை பல்கலைக்கழகம் வெளியிட்ட இலங்கை வரலாற்றுச்சுருக்கம் இவ்வாறு தெரிவிக்கின்றது:

"இலங்கையில் இந்தோ ஆரியர்கள் (விஜயனின் விஜயத்துக்குப்பின்) குடியமர்ந்த போது, வாழ்ந்துவந்த ஜன சமூகத்திற்கு வரலாற்று ஆசிரியர்கள், புதிய கற்கால மனிதர்கள் என்ற பட்டத்தை அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு உலோகங்களின் பாவனை தெரிந்திருக்கவில்லை. அவர்கள் ஆயுதங்களாகவும் உபகரணங்களாகவும் பாவித்தவை கூழாங்கல், மரப்பலகை, மிருகங்களின் எலும்புகள் என்பனவை மட்டுமே. பழங்கள், காய்கள் போன்றவற்றை சேகரிக்கும் நிலையில் அவர்கள் இருந்தபோதிலும், நெசவுத் தொழிலும் சேனை விவசாயமும் அவர்களுக்கு கொஞ்சம் தெரிந்திருக்கக் கூடும். புதிதாக குடியமர்ந்த இந்தோ - ஆரியர்களுக்கு அவர்கள் எதிர்ப்புக் காட்டவில்லை. மாறாக தமது விவசாயப் பொருட்களை புதியவர்களின் அற்ப பொருட்களுக்குப் பகரமாகத் தரவும் அவர்கள் இசைந்தார்கள். வேட்டையாடுதலை முக்கிய ஜீவனாம்சமாகக் கைக்கொண்டிருந்த இம்மக்களை, இலங்கையில் எழுந்த பாளி நூல்கள், மிலேச்சர்கள் என்றோ நேசாதாஸ் என்றோ தான் அழைத்திருக்கின்றன.[9]

5 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து, இரு வருடங்கள் இங்கு தங்கிய, பாஹியன் என்ற பிரபல சீனத்துறவி, இதே கருத்தை முன்வைக்கிறார். ஆனால் ஒரு வித்தியாசம் அவரின் கருத்தில் உள்ளது. இலங்கையில் முதலில் வாழ்ந்து வந்தவர்கள் பைசாக்கர்கள் என்றும் அவர்கள் வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்றும், ஆனால் தம்மை இனங் காட்டிக்கொள்ளாமல், தமது பொருட்களையும் அவற்றின் மதிப்புகளையும் மட்டுமே காட்டினார்கள் என்றும் பாஹியன் அபிப்பிராயப்படுகிறார்.[10] அதன் அடிப்படையில் வெளிநாட்டு வியாபாரிகள் தமது பொருட்களை பகரமாக தந்து வியாபாரம்

செய்தார்கள். அவ்வாறே வருடங்கள் பற்பல கடந்தன. வெளிநாட்டு வணிகர்களும் அவர் தம் தோழர்களும், இந்நாட்டின் சௌந்தர்யத்தினால் கவரப்பட்டு நாளடைவில் இங்கு குடியமர்ந்து விட்டார்கள். இவ்வாறு பாஹியன் எழுதினார்.

இக்கருத்து அரேபிய வர்த்தகர்களின் வரலாறுகளில் எதிரொலிக்கிறது. 1850 களில் இலங்கை பிரித்தானிய துரைத்தனத்தின் இரண்டாவது முக்கிய பதவியான அரசினர் செயலாளர் என்ற பதவியில் அமர்திருந்த சேர். எமர்சன் டெனெண்ட் என்பார் 1856 ல் இலங்கையைப்பற்றிய சிறப்பான நூல் ஒன்றினை வெளியிட்டார். பல அராபிய நூல்களை மொழிபெயர்ப்புகள் மூலமாக வாசித்தறிந்தும் உத்தியோக பூர்வமாக இலங்கை நாட்டு அறிஞர் தம் கருத்துக்களை கேட்டறிந்தும், அவர் இவ்வாறு எழுதினார், இந்நாட்டின் சில பின்தங்கிய மக்களைக் குறிப்பிட்டு:

"அவர்கள் தமது எளிய வாழ்க்கைக்குத் தேவையான சில அத்தியாவசியமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு கடைப்பிடிக்கும் முயற்சிகள் விசித்திரமானவை. தாம் வேட்டையாடும் காடுகளுக்கு அண்மித்த கிராமங்களுக்கு இராப்படையாக போவார்கள். சமிக்கைகள் மூலமாக தமக்கு வேண்டிய பொருட்களை அறிவித்து அவற்றிற்குப் பகரமான தேன் போன்றவற்றை விற்பனையாளரின் வாசல்படியில் சாத்தி விட்டுச் செல்வார்கள். ஒரு குறிப்பிட்ட காலவரைக்குப் பின்னர் ஓசையில்லாமல் வந்து விற்பனையாளர் வைத்துச்சென்ற பகரப் பொருட்களைக் கொண்டு போவார்கள். இந்த விசித்திர பழக்கத்தைப் பல வெளிநாட்டு எழுத்தாளர்கள் விபரித்திருக்கிறார்கள். உதாரணமாக (கண்டியில் ராஜசிங்கனின் கட்டாய அதிதியாக வாழ்ந்த) ரொபேட் நொக்ஸ் 1681 இல் இதைப்பற்றி விஸ்தாரமாக எழுதியுள்ளார். ஒல்லாந்து நாட்டு வரலாற்று ஆசிரியரான வலைண்டைனும், அவருக்கு முன் எழுதிய ரிபய்ரோ என்ற போர்த்துக்கேய படை உத்தியோகத்தரும் நொக்ஸின் கருத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்".

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் கஜனி முஹம்மத் என்ற இந்திய சக்கரவர்த்தியின் காலத்தில் வாழ்ந்த பன்மொழி அறிஞரும் சிந்தனையாளருமான அல் பிருனி என்பார் மேற்கூறிய விஸ்தாரத்தையே வலியுறுத்துகிறார்.[12] என எழுதியுள்ளார்.

அரேபிய, பாரசீக, கிரேக்க, ரோமானிய அறிஞர்கள் தந்த தகவல்களை ஆராய்ந்து எமர்சன் டெணன்ட் தமது தீர்வுகளை இவ்வாறு தருகிறார்:

"புராதனக் காலந்தொட்டு தென் இலங்கை சிங்கள மக்கள் வர்த்தகத்தில் தமக்குள்ள வெறுப்பினை நேரடியாகக் காட்டினார்கள் என்றும் வியாபார நோக்குடன் தமது கரையோரங்களை அண்டி, வர்த்தகம் செய்யவந்த அந்நியர்களுடன் சகஜமாகப் பழகுவதை அவர்கள் தவிர்த்தும் கொண்டார்கள் என்றும் நாம் நிரூபிக்கத் தவறவில்லை. அந்த ஒட்டிப் பழகாத காரணத்தினால் கி.பி. 8 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து எழுதிய பாரசீக, அரேபிய அறிஞர்களின் ஆக்கங்களில், இலங்கையின் உள்ளூர் சம்பந்தமான தகவல்கள் அருகியிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.[13]

(தென் இலங்கை என்று டெணன்ட் குறிப்பிடுவது, அநுராதபுர, பொலநறுவை ஆகிய இராஜதானிகளிலிருந்து வெகுதூரம் இருக்கும் தற்பொழுதுள்ள தென் மாகாணம், மேல் மாகாணம் ஆகியவை எனலாம்.

இந்த நிகழ்வுகளை இன்னொரு கோணத்திலிருந்தும் அவதானிக்க முடிகிறது. புதைபொருள் ஆராய்ச்சி விட்டுவிட்டு சில இலங்கை மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் எழுந்தபோதிலும், ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் தான் அவை கிரமமாக, விஸ்தாரமாக எழுத்தில் நிறைவு பெற்றன எனலாம். அதற்கு ஒரு காரணம், ஐரோப்பியர் அவற்றை நேரடியாகப் பார்க்க முடியாத ஐரோப்பாவில் வாழ்ந்த தம் இனமக்களுக்காக விபரமாக எழுதினர்.[14] அதனால் ஏனையோரும் குறிப்பாக பின்னால் வந்த தலைமுறையினர் இலாபம் பெற்றார்கள். மேலும், 1890 இல் நிரந்தரமாகத் தாபிதமான இலங்கை புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம், அதன் வாழ்நாளில் பல திணைக்கள ஆணையாளர்களைச் சுமந்து பல இடங்களில் கால் ஊன்றி கொழுமபை வந்தடைந்திருக்கிறது.[15] பல இன்னல்களை அனுபவித்து பல சாதனைகளையும் புரிந்திருக்கிறது. அதன் தலையாய செயல்பாடுகள் அநுராதபுரி, பொலநறுவை ஆகிய காலக்கட்ட ஆராய்ச்சியைத் தமதாக்கி கொண்டுள்ளன எனலாம். இந்தக் கருத்தின் தாக்கத்தை கம்பஹ மாவட்ட ஆராய்ச்சிகளில் நோக்கலாம் என சில எழுத்தாளர்கள் கருதுகிறார்கள்.

எனவே இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்தில் அராபியர் வெகுவாக வியாபாரத்துக்காகவே கம்பஹ பிரதேசத்தை அண்டினார்கள் என்றும் அக்கால கட்டத்தில் அங்கு நிரந்தரமாகத் தங்கவில்லை எனவும் ஒருவாறு அனுமானிக்க முடிகிறது. அவ்வாறாயின், அப்பிரதேசங்களின் கடலோரம் கொழும்பிற்கும் நீர்கொழும்பிற்கும் இடையில் அமைந்த சிறு இறங்குதுறைகளாக அராபியரினால் கருதப்பட்டிருக்கவேண்டும்.

கி.மு. 500 லிருந்து கி.பி. 400 வரையிலுள்ள காலப்பகுதியில், அதாவது பழைய அநுராதபுரி யுகத்தில், அநுராதபுரியை ஆண்ட மன்னர்கள் முக்கிய துறைமுகங்களில் தமது உத்தியோகத்தர்களை அமர்த்தி, சுங்க வரிகளை வசூலித்தார்கள் எனத் தெரியவருகிறது.[16] ஆனால் அந்த நிலைப்பாடு (தற்கால) மேல் மாகாணத்தில் செயலில் இருந்தது வந்ததா என்பது கேள்விக்குரிய விடயமாகும். கி.பி. 1344 இல் கூட இப்னு பதூதா என்ற இஸ்லாமிய அறிஞர் இலங்கைக்கு வருகை தந்தபொழுது, கொழும்பு, ஒரு முஸ்லிம் பிரதேசமாகவும், ஜலாசி என்ற கடற்படை தலைவனின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையையும் அவர் கண்டார். கொழும்பை தரிசித்த அவர், கோனாகர் என்ற நகரத்தையும் பார்வையிட்டார். கோனாகர் என்பது தற்கால இரத்தினபுரி பட்டணம் ஆகும்.[17]

அராபியர் (பின்னர் முஸ்லிம்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள்) இலங்கையின் மேற்குப்பகுதித் துறைமுகங்களில் செல்வாக்குக் கொண்டிருந்தமை ஒரு வகையில் நியாயம்தான். தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற தத்துவம் தலைவிரித்தாடிய புராதன யுகம், மத்திய காலம் ஆகிய காலக்கட்டங்களில் அராபியர்கள் இலங்கையில் ஆட்சி பீடத்திலிருந்த அரசர்களுக்கு மிகுந்த மனநிம்மதியைத் தந்தார்கள். இலங்கை அரசர்கள் தமது இன பந்துகளிடமிருந்தும் எதிர்ப்பை எதிர்பார்த்ததுடன் ஏனைய சிறுபான்மைக் குழுவிடமிருந்தும் துரோதத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அச்சூழ்நிலையில் மண்ணாசையிலிருந்து முற்றிலும் விடுபட்ட அராபிய சமூகம், இலங்கை அரசர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக்கொண்டது. அராபியரின் வர்த்தகச் செயல்முறை இலங்கை மன்னர்களின் மரியாதையை ஈர்த்தது.

## மத்திய கால கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள்

புராதன காலத்தில் முற்றிலும் வியாபாரப் பொருட்களை சேகரித்து வெளிநாட்டினருக்குக் கொண்டுசெல்லும் வணிகர்களாக செயல்பட்ட முஸ்லிம் சமூகம் உள்ளுர் வணிகத்திலும் காலக்கிரமத்தில் தம்மை நுழைத்துக்கொண்டது. உதாரணமாக கம்பஹ மாவட்டத்திலும், அண்மித்த பகுதிகளிலும் காணப்பட்ட மாணிக்கக் கல் போன்ற பொருட்கள் அநுராதபுரி இராஜதானிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அநுராதபுரியில் நடைபெற்ற நில அகழ்வுகளில் பதினைந்துக்கு மேல்பட்ட மாணிக்க வகையராக்கள் காணப்பட்டதாக தெரிகிறது.[18]

கம்பஹ மாவட்ட கரையோரப் பகுதிகளை கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய துறைமுகங்களின் விஸ்தரிப்புகளாக, புறநகர்ப் பகுதிகளாக, மத்திய காலத்தில் இருந்தன என நாம் அவதானிக்கக்கூடும். அந்த இரு பெரும் துறைமுகங்களில் தங்கமுடியாத முஸ்லிம்களின் வதிவிடங்களாகவும் அத் துறைமுகங்களுக்குத் தேவையான பொருட்களை விளைவிக்கும், பெருக்கும், சேகரிக்கும் களமாகவும் கம்பஹ மாவட்ட நெய்தல் பகுதிகளை நோக்கமுடிகிறது.

கி.பி. 1030 இல் வாழ்ந்த அல் - பிரூனி, அக்காலத்தில் நடமாடிய கடல் கொள்ளைக்காரர்கள், செரன்றிப் (இலங்கை) கடற்கரையில் தமது குடிபதிகளை கொண்டிருந்தார்கள் என எழுதினார்.[19] ஒருவேளை கம்பஹ கடலோரத்தில் வாழ்ந்த கன்னனூர், மலபார், கொச்சி ஆகிய துறைமுகங்களோடு தொடர்புகொண்ட தனிநபர் சரக்கு கப்பல்களின் தலைவர்களையும் (நாக்குதாக்கள்) மாலுமிகளையும் அவர் அவ்வாறு தப்புக்கணக்குப் போட்டிருக்கலாம்.

கொழும்பு, மன்னார் ஆகிய மாபெரும் துறைமுகங்களுக்குப் புறம்பாக, நீர்கொழும்பு துறைமுகம், மத்திய காலத்தில் அராபிய முஸ்லிம்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. தொடர்ந்து அவர்கள் நீர்கொழும்பு துறைமுகத்தை நாடினார்கள். அதற்கு பல காரணங்கள் இயல்பாக இருந்தன. நீர்கொழும்பு ஒரு காயல்கழி ஆகும். மூன்று பக்கங்களில் கடல் சூழ்ந்த தரைப்பகுதி காயல்கழி எனப்படும். அரேபிய மக்களுக்குக் குறிப்பாக அல்ஜீரிய, துனிசியா, மொரோக்கோ வாசிகளுக்கு காயல்கழிகள் பழக்கமானவை. நீர்கொழும்பு என்ற சொல்கூட அரபி மொழியிலிருந்து வந்ததாகும். (கொப் என்பது மக்ரிப்), அதாவது தூனிஸியா, அல்ஜீரியா, மொரோக்கோ ஆகிய நாடுகளின் மொழி

வழக்கில் காயல் என அர்த்தம் பெறுகிறது.[20] அல் - பிரூனியும் கொப் என்பதை அரபிச் சொல்லாக கருதுகிறார்.

நீர்கொழும்பில் கப்பல் நிற்பதற்குத் தகுதியான இறங்குதுறை உள்ளது. மேலும் காயல் கழி பருவக் காற்றுகளின் தாக்கத்தை தடுக்கவல்லன. பருவக் காற்றுகளின் உக்கிரமான காலத்தில் அராபி மாலுமிகள் நீர்கொழும்பில் தங்கி, பல வேலைகளைச் செய்தனர். கப்பல்களின் பாய்களை புதுப்பித்தல், கயிறுகளை மாற்றுதல் அவற்றில் சில. நீர்கொழும்பு பிரதேசத்தில் நிறைய விளைந்த தென்னைகள் அவற்றின் தும்பு, பலகைகள் தந்து முஸ்லிம் கப்பல் கட்டும் தொழிலை ஊக்குவித்தன. கடலில் வைத்து கப்பல்களைச் சரிபார்க்கும் தொழிலும், கப்பல்களை கரையில் இழுத்து புனருத்தாரணம் செய்யும் பணியும், முஸ்லிம்கள் நீர்கொழும்பில் திறம்பட செய்தார்கள். அதற்கு, நீர்கொழும்பு பொருட்கள் உதவியாக இருந்தன. இன்றுகூட நீர்கொழும்பு வட்டார பெயர்கள் நமக்கு இந்த உண்மையை உணர்த்துகின்றன. கம்மல்துறை என்பது, கப்பல்களை திருத்தும் வேலைக்கூடங்களை குறிப்பிடுகிறது. பலகத்துறை, பலகைகளை ஆயத்தம்செய்து பொருத்தும், கப்பல் அடிமட்ட வேலைகளை சுட்டும் சொல்லாகும். கொச்சிக்கடை, கப்பல் கட்டுவதில் இலங்கை முஸ்லிம்களுக்கு ஆதாரம் தந்த கேரளவாசிகளை குறிப்பிடுகிறது.

இதற்கு ஒரு நவீன உதாரணத்தை தரமுடிகிறது. 1960 களில் ஆங்கிலேய புவியியல் அறிஞரும், பிரபல பயணியுமான டிம் ஸெவரின் என்பார் சிந்துபாது என்ற முஸ்லிம் பயணியின் பிரயாணத்தைப் பின்பற்ற ஆயத்தம் செய்தார். ஏறக்குறைய 900 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த சிந்துபாத்தின் கடல் பிரயாணம் எவ்வளவு தூரத்துக்கு உண்மையானது என நிருபிப்பதே டிம் ஸெவரனின் நோக்கமாக இருந்தது. அதற்காக, சிந்துபாது பாவித்த அதே மாதிரி கப்பலைத் தயாரித்து, அவர் காலத்தில் பாவனையிலிருந்த அதேவித பொருட்களை உபயோகித்து தமது பிரயாணத்தை ஸெவரின் தொடர்ந்தார். நீர்கொழும்பிலும் அதற்கு அண்மித்த கேரள மாநில துறைமுகங்களிலும் பல விடயங்களை கண்டறிந்தார். ஆணிகளை பாவனையில் உட்படுத்தாமல் தென்னங் கயிற்றை மட்டும் கப்பல் பலகைகளை பிணைக்கும் சாதனமாக உபயோகித்தால் நாளடைவில், நீர் பட்டுபொங்கும் பலகைகளை இன்னும் இறுக்கமாக தென்னங்கயிறு பிடித்துக் கொள்கிறது என்றும் அவர் அறிந்தார். இவ்வகையில் பார்க்கப் போனால் அரேபிய-முஸ்லிம் கடல்மார்க்க பயணத்துக்கு, நீர்கொழும்பு தென்னை செய்த உபகாரம் கொஞ்சநஞ்சமல்ல.

கடைசியில் டிம் ஸெவரின் தனது பிரயாணங்களினால், சிந்துபாத்தின் கடல் பயணம் முற்றிலும் சாத்தியமானது என நிருபித்தார்.[21]

அல்ஜீரியா, தூனிஸியா, மொரோக்கா ஆகிய நாடுகளின் முஸ்லிம்கள் நீர்கொழும்புக்கு அளித்த இன்னொரு ரசமான பங்களிப்பு, தற்காலத்தில் நீர்கொழும்பு ஹல்வா என அழைக்கப்படும் மஸ்கட் வகையாகும். ரெவன் - ஹார்ட் என்ற பன்மொழி எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார்:

> "நீர்கொழும்பு ஹல்வா கீழ்க்கண்டவற்றை கொண்டிருக்கவேண்டும்: வறுத்து இடித்த அரிசி மா, சர்க்கரை (கருப்பட்டி) கஜுக்கொட்டை (மரமுந்திரிகை), தென்னம்பாணி, நெய், பன்னீர், நச்சீரகம். இரண்டாம் ராஜசிங்க மன்னன் காலத்தில் கண்டியில் வசித்த ஆங்கிலேயரான நொக்ஸ் என்பார் "நீர்கொழும்பு ஹல்வா, தலை சுற்றலுக்கு நல்லது, அதிக தாகம் கொண்டோர் அதனுடன் நீரையும் அருந்தினால், தாகம் தீர்ந்துவிடும். மாலையில் மிக உகந்த தீன் பண்டம் நீர்கொழும்பு ஹல்வா" என்றார்.[22]

நீர்கொழும்பு ஹல்வா உண்மையில், முஸ்லிம்களின் பங்களிப்பு என்றார் ரெவன் ஹார்ட்.[23] மத்திய காலப்பகுதியில், நீர்கொழும்பை உள்ளடக்கிய கம்பஹ மாவட்ட முஸ்லிம்களை, சில குறிப்பிட்ட தொழில்வாரி பிரிவினராக பொருளாதார மட்டத்தில் கருத முடிகிறது. ஒன்று கப்பல்களை தொழிலாகக் கொண்ட முஸ்லிம்கள். இவர்கள், கப்பல்களையும் வள்ளங்களையும் படகுகளையும் சாரத்தியம் செய்யும் திறன் கொண்டவர்கள். இலங்கை முஸ்லிம்களின் வியாபார தீட்சண்யம், செழுமை ஆகியவை இவர்களின் கைகளிலே தங்கியிருந்தது.

இந்தப் பிரிவினரின் ஒரு பகுதியாக தம்மை இனங்காட்டிக் கொண்டவர்கள், போர் ஆயுதங்களின் பாவனையில் திறமை பெற்றவர்கள். கப்பல்களில் யுத்த ஆயுதம் தாங்கிய இவர்கள், தரையிலும் அதே தொழிலில் இறங்கக்கூடியவர்கள். அன்றைய காலக்கட்டத்தில் ஒரு சில ஆயுதங்கள் இருந்தன. அவற்றில் ஒருவகை ஜிங்கல் என்பதாகும். அவை, "இருகால் சட்டங்களின்மீது வைத்து, வெடி தீர்க்கப்படும் சிறு பீரங்கிகள்" எனலாம்.[24] சாதாரணமாக அக்காலத்தில், இயக்கப்பட்ட துப்பாக்கிகளில் இரும்பு பந்துகளைத் திணித்து, பின்னால் வெடி மருந்தை

திரிவாயில் அடைத்து, சக்கிமுக்கி கல்லினால் தீமூட்டவேண்டும். இவ்வாறு செய்தால்தான் துப்பாக்கி வெடிதீர்க்கும். எனவே, அக்காலகட்டத்தில் எடுத்தோம், சுட்டோம் என்ற அனாயாசம் இருக்கவில்லை. முஸ்லிம்களுக்கு இந்தத்துறையில் பயிற்சி இருந்தமைக்கு ஒரு காரணம், அவர்கள் நிரந்தரமாக இலங்கையின் நிலமான்ய முறையில் ஒட்டியிருக்கவில்லை.

மேலும், கேரள மாநிலத்தை ஆண்ட சாமுத்திர மன்னர்கள் போன்ற சுதேச ஆளுனர்களின் தரைப் படைகளிலும், கப்பல் படைகளிலும் அவர்கள் கணிசமான அளவு பங்குகொண்டு, தமது யுத்த அனுபவங்களையும், தொழில்நுட்பங்களையும் பெருக்கிக் கொண்டார்கள். ஆகவே, கொழும்பு, நீர்கொழும்பு ஆகியவற்றின் ஆதிக்கத்தில், படைபலத்தின் முக்கிய காரணியாக அவர்கள் செயலாற்றி கோட்டே மன்னன், பிற்பாடு சீதாவக்கையை ஆண்ட அரசர்கள் ஆகியோரின் விஸ்வாசத்தையும் மதிப்பையும் அவர்கள் பெற்றார்கள். மல்வானை முஸ்லிம்கள் கொழும்புடன் வணிகம் செய்தார்கள் எனவும் 1350 ஆம் ஆண்டில் அவர்கள் நீர்கொழும்பில் வணிகத்தில் ஈடுபடுவதற்கு மூன்றாவது விக்கிரமபாகு மன்னன் அனுமதியளித்தான் எனவும் அறியப்படுகிறது.[25]

## போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள்

போர்த்துக்கேயர் கொழும்பிற்கு 1505 இல் வருகை தரும் வரைக்கும், கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள், உப-நகர் வாசிகளாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால், கொழும்பு வாழ் முஸ்லிம்கள் அதிக தொகையினராகவும், ஏகோபித்த செல்வந்தர்களாகவும், ஆயுத பலம்மிக்கவர்களாகவும் தோன்றியபடியால், கொழும்பு ஒருவகையில் முஸ்லிம் நகர மாகவே அடையாளங்காட்டிக் கொண்டது. எனினும், முஸ்லிம்கள் இலங்கை அரசியலில் கிஞ்சிற்றும் அக்கறையில்லாததனால் கொழும்பில் அவர்கள் அவ்வாறு இருந்தது, கோட்டே இராஜ தானியை ஆண்ட மன்னர்களுக்கு மன நிறைவையும் நிம்மதியை யும் அளித்தது என்பதில் சந்தேகமில்லை.

போர்த்துக்கேயரின் இலங்கை வாசம் இருவகை அபிப் பிராயங்களை எழுப்பியுள்ளது. ஒன்று அவர்கள் முஸ்லிம்களை இம்சித்தார்கள் என்ற தீர்வு. இரண்டாவது அது பிழையானது

என்ற கொள்கைப்பாடு. இலங்கை வாழ் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அவர்களால் எழுதப்பட்ட ஆவணங்கள் மிகக் குறைந்தே காணப்படுகின்றன. எனினும் கேரள மாநிலத்தில் போர்த்துக்கேயர் முஸ்லிம்களை சந்தித்து அவர்களுக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்தார்கள். அவற்றுள் ஒன்று, முஸ்லிம்களை ஓரம்கட்டுதல்; இன்னொன்று, முக்கிய பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்களை அகற்றுவது. இவை, இரண்டும் திட்டவட்டமாக , கிரமமாக நடைபெற்றன. இந்தக் கேரள நிகழ்ச்சிகளைப்பற்றி பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பிரபலமானது, துஹ்பத்-உல்-முஜாஹிதீன் (இஸ்லாத்தில் நின்று உழைப்பவர்களுக்கு ஒரு பரிசு) என்ற வரலாற்று நூலாகும். 16 ஆம் நூற்றாண்டில், அரபு மொழியில் இது வெளிவந்துள்ளது. போர்த்துக்கேயரின் அக்கிரமங்களையும் அடாவடித்தனங்களையும் தெளிவாக விபரிக்கின்றது. மலபார் பிரதேசத்தை ஆக்கிரமித்த போர்த்துக்கேயர், முஸ்லிம்கள் தமது சமயத்திற்கும் தனித்துவத்திற்கும் காட்டிய அசைக்கமுடியாத பிணைப்பைக்கண்டு வியந்தார்கள். பிறகு அந்த வியப்பு கோபமாக மாறியது. போர்த்துக்கேயர் முஸ்லிம்களின் மீது பல துன்பங்களைச் சுமத்தினார்கள். ஆயினும் முஸ்லிம்கள் அசைந்துவிடவில்லை. பொறுத்துக்கொண்டார்கள். இவ்வாறு துஹ்பத்-உல்- முஜாஹிதீன் கூறுகிறது.

முஸ்லிம்களை மதம் மாற்றப் பிரயத்தனங்கள், போர்த்துக்கேய அரசிடமிருந்து நேரிடையாக வந்த உத்தரவுகளாகும். ஒரு பிரபல அறிஞர் இவ்வாறு எழுதுகிறார்:

> "கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்வதற்கு போர்த்துக்கேய அரசர்கள் (போர்த்துக்கேய மொழியில் கூறப்படும்) படவ்தா அதாவது உயர்மட்ட ஆதரவு அளித்தார்கள். மேலும், பாப்பரசர்கள் இந்த வகையில், போர்த்துக்கேய அரசர்களுக்கு விசேட அதிகாரங்களையும் ஒப்புதலையும் சலுகைகளை யும் தந்தார்கள்.[26]

இன்னொரு வரலாற்றாசிரியர், இந்தக் கருத்தை ஊர்ஜிதம் செய்கிறார். போர்த்துக்கேயரின் கீழ்,

> "பௌத்த மதமும் இந்து சமயமும் சட்டமூலமாகத் தடுக்கப்படவில்லை. முஸ்லிம்களுக்கு எதிராகச் சட்டங்கள்

நிறைவேற்றப்பட்டன. ஆனால், பௌத்தர்களுக்கோ இந்துக்களுக்கோ எதிராகச் சட்டங்கள் இருக்கவில்லை.[27]

கொழும்பு முஸ்லிம்கள், இவ்வாறு அச்சுறுத்தப்பட்டு கொழும்பு நகரத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகள் தீக்கிரையாக்கப்பட்டபடியால், கொழும்பு முஸ்லிம்களுக்கு ஒரு சரணாலயம் தேவைப்பட்டது. ஆகவே, களனி ஆற்றுக்கு அக்கரையில் இருக்கும் (தற்கால பெயர்களைக் கொண்ட) பேலியகொடை, வத்தளை, மாபொல, ஜாஎல என்பனவும், உள்நாட்டு பிரதேசங்களான திஹாரி, மல்வானை, கஹேஎட்டோவிட்ட, நாம்புளுவை, கல்எலிய, உடுகொடை, அத்தனகலை போன்றவையும் அந்த வகையில் உசிதமான ஜனபதிகளாக கருதப்பட்டன.

கோட்டே இராஜதானியை தமதாக்கிக்கொண்ட போர்த்துக்கேயரின் கெடுபிடிகள், சூழலுக்கு ஏற்பவும் அவர்களின் ஏனைய பிரச்சினைகளின் தாக்கத்துக்கு பொருந்தவும் மாறின, வலுத்தன, நெகிழ்ந்தன. போர்த்துக்கேயரின் ஏனைய பிரச்சினைகள் அதிகரித்தால், இலங்கை முஸ்லிம்களின் மீது அவர்கள் செலுத்திய ஆக்கிரமிப்பு தளர்ந்தது. ஏனைய பிரச்சினைகள் தீர்ந்தால் அல்லது குறைந்துபோனால், முஸ்லிம்கள்மீது போர்த்துக்கேயர் செலுத்திய ஆதிக்கம் வலுத்தது. மேலும், இலங்கைவாழ் போர்த்துக்கேய துரைத்தனம் வெகுவாக இலஞ்சம் என்ற அடித்தளத்தில் எழுப்பப்பட்டிருந்தபடியால், முஸ்லிம்களின் பணபலத்தில் சில சமயம் போர்த்துக்கேய பலவந்தம் கரைந்தது. ஆனால் சில வேளைகளில், போர்த்துக்கேய மன்னர்களின் ஆணித்தரமான ஆணைகளினாலோ அல்லது தீவிரவாதிகளான இலங்கை போர்த்துக்கேய ஆளுனர்களின் (கப்பித்தான்- ஜெனரல்கள்) அசைக்கமுடியாத நடவடிக்கைகளினாலோ கொழும்பு முஸ்லிம்கள், தமது நகரத்தைவிட்டு நீங்கவேண்டிய சந்தர்ப்பங்கள் எழுந்தன. அதில் ஒன்று, தொன் ஜெரனிமோ டி அஸ்விடோ என்ற போர்த்துக்கேய ஆளுனரின் 1613 இல் நிறைவேற்றப்பட்ட ஆணையாகும். அதைவிட உக்கிரமானது 1622 ஆம் ஆண்டு போர்த்துக்கேய அரசிடமிருந்து கோவா (இந்தியா) விலிருந்த போர்த்துக்கேய அரச பிரதிநிதியின் மூலமாக, இலங்கை போர்த்துக்கேய துரைத்தனத்திற்கு வந்த ஆணையாகும். இதன் வழியாக கொழும்பு முஸ்லிம்கள் திட்டவட்டமாக, தமது நகரத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். அவர்களில் பலர் கண்டி மன்னனால்

வரவேற்கப்பட வேறு பலர் கம்பஹ மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கு சென்றார்கள்.

இந்த நகர நீக்கத்தின் சில குறிப்பிட்ட அம்சங்களை நாம் மறந்துவிடுவதற்கில்லை. போர்த்துக்கேயரின் முஸ்லிம்களை வெளியேற்றும் நிகழ்ச்சிகள், கொழும்பில் நிலைபதியான பாரம்பரிய முஸ்லிம்களை சட்டபூர்வமாக பாதிக்கவில்லை. ஆனால் அக்காலத்தில் இன்றுபோல் ஆவணங்கள், பிறப்பு, இறப்புப் பத்திரங்கள் கிரமமாக இல்லாதபடியால் பாரம்பரியம் என்பது பெரும்பாலும் கர்ணபரம்பரை விடயம்தான். பலர் அறிய நிலையாக இருப்பதும் செயல்படுவதும் செல்வாக்கான செல்வந்த முஸ்லிம்களுக்கு மட்டும் கிடைக்கக்கூடிய சம்பத்து ஆகும். மேலும் கொழும்பை விட்டு நீங்கிய முஸ்லிம்கள் போர்த்துக்கேய உயர் மட்டத்தின் கவனம் வேறு திசையில் திரும்பும்பொழுது, மீண்டும் கொழும்புக்கு வந்து சேருவது விதிவிலக்கான நிகழ்ச்சியல்ல. போர்த்துக்கேய தொம்போ (பெயர், காணி இடாப்பு) களில் முஸ்லிம்களும் இடம்பெற சந்தர்ப்பம் இல்லை.

ஆனால் இவற்றிற்கு எதிர்மாறாக, கொழும்பைவிட்டு நீங்கவேண்டும் என்ற மனக்கிலேசம், எல்லா மட்ட முஸ்லிம் களையும் பாதித்தது. ஒரு நம்பிக்கை இல்லாததன்மை தோன்றியது. எவ்வளவுதான் போர்த்துக்கேய அதிகாரிகள் தமது பக்கம் இருந்தபோதிலும், அவர்கள் போர்த்துக்கேய அரசின் ஆணையை செயலாக்க கடமைப்பட்டவர்கள் என்ற எண்ணம் முஸ்லிம்களை வாட்டத் தவறவில்லை. அதுவும் தான்மட்டும் போவதாக இல்லை; தமது மனைவிமார், பிள்ளைகள், பெற்றோர், வேறு இனபந்துக்கள் ஆகியோரையும் தம்முடன் எடுத்துச்செல்ல வேண்டும் என்ற கடமைப்பாடு எல்லா முஸ்லிம் வீட்டுத் தலைவர்களையும் சதா துன்புறுத்திய விடயமாகும்.

ஆகவே போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலகட்டத்தில், வசதியுடன் வாழ்ந்த முஸ்லிம்களும் நிரந்தரமான நிம்மதியை கொண்டிருந்தவர்கள் இல்லை. போர்த்துக்கேய ஆளுனரான தி அஸ்வேடா தமது இராணுவ கேந்திர தானத்தை கொழும்பிலிருந்து சில மைல்கள் தூரத்திற்கு அப்பால் இருக்கும் மல்வானை நகரத்திற்கு மாற்றியபொழுது அது முஸ்லிம்கள் மத்தியில் சில குடிசன மாறுதல்களை ஏற்படுத்தியது. இராணுவ முகாமுக்கு அண்மித்து இருப்பது, கண்ணாடி மண்டபத்தில்

வாழ்வது போன்றது. எனவே, அப்பகுதி மக்கள் அதைவிட்டு அகன்று பிற நகர்களான நாப்பாவெல, கஹட்டவிட்ட, பூகொடை, கன்னத்தோட்டை போன்றவற்றை நாடத் தொடங்கினர். ஏற்கனவே 17 ஆம் நூற்றாண்டில், கள்ளிக் கோட்டை (தற்காலத்தில் கேரள மாநிலத்தில் கோழிக்கோடு) யிலிருந்து, ஓட்டு வியாபாரம் மல்வானைக்கு வந்துள்ளது. வாய்க்கால், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் ஓடு தயாரிப்பு, விநியோகம் ஆகியவை முன்னரே தாபிதமாகி உள்ளன. அவை, இன்றும் களிகட் ஓடுகள் என அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கி.பி. 1600 இல் கள்ளிக்கோட்டையிலிருந்து கொழும்பிற்கு ஓட்டு வியாபாரம் செய்த மீராலெவ்பை என்பவர் மல்வானைக்கு அண்மித்த ரக்ஸபானையில் குடியேறியுள்ளார்.[28]

தி அஸ்வேடா ஏற்படுத்திய இன்னொரு நடவடிக்கை முத்துராஜவெலை என்ற நிலப்பிராந்தியத்தைப் பற்றியதாகும் எனத் தற்கால எழுத்தாளர் சிலர் எண்ணுகிறார்கள். போர்த்துக் கேயர் காலத்திற்கு முன்னர் அப்பிரதேசம், பூத்துக்குலுங்கும் மருதை என்ற அதன் பெயருக்கு ஒப்பாக, சாரபூமியாக இருந்ததாகவும் தி அஸ்வேடா அதை, துஷ்பிரயோகம் செய்து, மேட்டுக்குழியாகவும், சதுப்பு நிலமாகவும் மாற்றியதாகவும் அவர்கள் கருத்து வெளியிட்டார்கள்.[29] அதனால் அப்பிரதேசம் வெறும் பஞ்சக்காடாக மாறியது. அப்பகுதி மக்கள் கோட்டே இராஜதானியை ஆண்ட சுதேச மன்னர்களுக்கு மிகுந்த விசுவாசமாக இருந்ததாகவும், அதனை ஒழித்து சுதேச மன்னர்களின் ஆட்பலத்தையும் மனோபலத்தையும் அழிப்பதே தி அஸ்விடோவின் நடவடிக்கையின் ஆணிவேராக இருந்ததெனக் கூறப்படுகிறது.[30]

காலக்கிரமத்தில் போர்த்துக்கேயரின் இலங்கை ஆதிக்கம் சிதைந்தது. 1656 இல் ஒல்லாந்துக்காரர் போர்த்துக்கேயரை முறியடித்து போர்த்துக்கேய இலங்கையை தமதாக்கிக் கொண்டனர். இலங்கையை ஆக்கிரமித்த போர்த்துக்கேயர் போர்த்துக்கேய அரசின் சேவகர்களாக, ஊழியர்களாக இருக்க, அவர்களைத் தொடர்ந்த ஒல்லாந்தர் ஒரு கம்பனியின் அதாவது VOC என்றழைக்கப்பட்ட ஒல்லாந்து கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பந்திகளாக இருந்தனர். கம்பனி என்றாலும் அக்காலத்தில் அது ஓர் அரசாங்கமாக இருந்து செயற்பட்டது. ஓர் எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார்:

"1669 இல் அக்கம்பனிக்கு 65 இலட்சம் (ஒல்லாந்து) நாணயங்கள் முதலாக இருக்க அதற்கு அது 40 சதம் அளவு வட்டி அளித்தது. அதற்கு 150 வர்த்தகக் கப்பல்கள் இருந்தன. அதன் யுத்தக் கப்பல்களின் தொகை 40 ஆகும். அதன் படைவீரர் 10,000 பேர் அதன் ஆணையை நிறைவேற்றினர்."

"(தற்காலத்தில் இந்தோனீசிய நாட்டின் மாநிலங்களாக இருக்கும்) தேர்நாடே, ஜாவா, அம்போன், மகஸர், பண்டா பிரதேசங்களின் ஆட்சிப் பொறுப்பும், மலக்கா, (மலேயா நாடு), இலங்கை, நன்நம்பிக்கைமுனை (தென் ஆபிரிக்கா என்பவற்றின் பரிபாலனமும் அக்கம்பனியின் கைகளிலே இருந்தன.[31]

VOC என்ற கம்பனி சொந்த நாடான ஒல்லாந்து தேசத்துக்கு தனது காலனித்துவ செயல்பாடுகளின் மூலம் மிகுந்த பண பலத்தைத் தந்தது. 1647 லிருந்து 1672 என்ற காலவரையில் அது ஒல்லாந்திற்கு சராசரி வருடத்துக்கு ஒன்றரை கோடி யிலிருந்து இரண்டு கோடி (ஒல்லாந்து) நாணயங்களை நிகர இலாபமாக அளித்தது எனலாம்.[32] எனவே, இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் அவர்களது பொருளாதார வளங்கள்தாம் ஒல்லாந்தரின் அடக்குமுறைக்கு வெகுவாக உள்ளாகின. கொட்டைப்பாக்கு, உப்பு, உப்பிட்ட மீன், துணிமணிகள் போன்றவை கம்பஹ மாவட்ட முஸ்லிம்களுக்கு கொழும்புவாழ் முஸ்லிம்களின் முகவர்கள் என்ற தோரணையில் சேகரிக்கப்பட்டு சுதேச மன்னர்களால் ஆளப்பட்டுவந்த கண்டி அரசிற்கு கொண்டுசெல்லப்பட்டன. அதன் இலாபகரமான அம்சம் ஒல்லாந்தரின் வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிட்டது. அதே வேளையில் சாரம், கம்பாயசீலை போன்றவை இராமநாதபுரம் மாநிலத்திலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. அவ்வாறு கொண்டுவரப்பட்டவை கப்பல்களில் அல்லாமல் வள்ளங்களிலும் பாரிய படகுகளிலும் வந்தபடியால் நீர்கொழும்பு போன்ற இறங்குதுறைகளில் இறக்கப்பட்டன. பிறகு பல வழிகளில் கண்டி இராச்சியத்துக்கும் ஏனைய பிற பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன. இவற்றையெல்லாம் அடக்குவதற்கு இலங்கையின் ஒல்லாந்தர் துரைத்தனம் பல சட்டங்களை கையாண்டுவந்தது. முஸ்லிம்கள் ஒல்லாந்தருக்கு அளித்த அரசகருமம் என்ற ஊழியச்சேவை,

நகரங்களில் வீடுகள் வாங்க முடியாது என்ற சட்டம், காணிகளை பரிவர்த்தனை, கொள்வனவு செய்யமுடியாது எனும் ஆணைகள் என்பன அவற்றுள் சிலவாகும்.

கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் ஒல்லாந்தரின் கெடுபிடிகளை பல தடுப்பு நடவடிக்கைகள் மூலமாக நிவர்த்தி செய்ய எத்தனித்தார்கள். பண பரிவர்த்தனை, ஆடு மாடுகளை அறுத்து உணவுக்காக ஆயத்தம் செய்தல், தையல் கலை போன்றவற்றை அதற்காக உபயோகப்படுத்தினார்கள்.

கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் ஒல்லாந்தரின் வருகையால் இன்னொரு வகையில் பயனடைந்தார்கள். ரம்புட்டான் பழம், கம்பஹ மாவட்டத்திற்கு குறிப்பாக மல்வானைக்கு வந்தது. ஒல்லாந்தர், போர்த்துக்கேயரின் மல்வானை கோட்டை கொத்தளங்களை கைவிட்டனர். ஷூலைட்சர் என்ற ஒல்லாந்து படைவீரர், தமது தினக்குறிப்பில் மல்வானை மிகக் கூடுதலான மழைவீழ்ச்சி கொண்டுள்ளது என எழுதிவைத்தார். (தி அஸ்விடோவின் அட்டூழியச் செயல்களில் ஒன்று, தனக்குப் பிடிக்காதவர்களை மல்வானைக் கரையிலிருந்து களனி ஆற்றில் வாழும் முதலைகளுக்கு இரையாக வீசுவதுதானாம்.)

ஜாவா பிரதேசங்களில் இருந்து ஒல்லாந்தர் திரட்டிய மலாய் படைகள், கம்பஹ மாவட்டத்தில் சில கோட்டைகளில் அமர்த்தி வைக்கப்பட்டார்கள். அவற்றுள் முக்கியமானது ஜாஎல நகரமாகும். அவற்றுள் வாழ்ந்த மலாய் வீரர் விவாகஞ்செய்து குடித்தனம் நடத்தியபடியால், நாளடைவில் ஒல்லாந்தர் ஆதிக்கம் தளர்ந்தபோது ஜாஎல போன்ற கோட்டைகள் முஸ்லிம்களின் குறிப்பாக மலாய மக்களின் ஊர்மனைகளாக மாறி அபிவிருத்தி அடைந்தமை வியப்பிற்குரியது அல்ல. மேலும் கம்பஹ மாவட்டத்தின் கிழக்கு எல்லை அன்று கண்டி இராச்சியத்துடன் ஒன்றியிருந்தபடியால் அங்கு ஒல்லாந்தருக்கு எதிராக புரட்சிகள் எழுவதும் உண்டு. அவை மாபோலை, களனி போன்ற பிரதேசங்களுக்குப் பரவியபோது அங்கு ஒல்லாந்தர் முஸ்லிம்களை (மலாயரை) முக்கிய அங்கமாகக் கொண்ட பட்டாளங்களை அனுப்பி புரட்சிகளை அடக்கினார்கள். பின்னர் அங்கு அவர்கள் முஸ்லிம்களை குடியமர்த்தினார்கள். பின்னர் அந்த குடிபதிகள் பெருகி ஹூனுப்பிட்டி, வத்தளை, எந்தரமுல்லை போன்ற

அண்மித்த இடங்களுக்கு பரவின. (பேலியகொடை அதற்குப் புறம்பாக, கொழும்பு நகரின் வடகிழக்கு எல்லையின் விஸ்தீரணம் ஆகும்).

இலங்கையின் ஒல்லாந்தர் துரைத்தனம் இந்நாட்டு மக்களின் சட்டதிட்டங்களை தமது காலனித்துவ அடிப்படையில் நிறுவியது. அதில் ஒன்று இஸ்லாமிய சட்டமாகும். அதற்கு ஒல்லாந்தர் அளித்த காரணம் இவ்வாறு இருந்தது:

> "இலங்கை முஸ்லிம்களுக்கு அவர்களின் சட்டத்தைப்பற்றி சரிவரத் தெரியாமல் உள்ளது. அவர்களுடைய கிராம அதிகாரிகளின் தனிப்பட்ட பக்கச்சார்பான அல்லது ஊழல் கலந்த தீர்வுகளினால் முஸ்லிம்கள் அனுபவிக்கும் துன்பங்கள் கொஞ்சமல்ல."[33]

இதற்குப் பரிகாரமாக ஒல்லாந்தர் துரைத்தனம் ஜாவா நாட்டில் பழக்கத்திலிருந்த இஸ்லாமிய சட்டத்தை இலங்கை அனுஷ்டிக்க முன்வந்தது.[34] அதன் காரணமாக ஒல்லாந்தர் துரைத்தனம் முஸ்லிம்களின் உயர்மட்டோர் சிலரின் ஆதரவை வரவேற்றது. அதன் நிமித்தம் முஸ்லிம்கள் சிலர் கொழும்பிலும் கம்பஹ மாவட்டத்திலும் நிலங்கள், காணிகள் பெற்றார்கள் எனலாம்.

### பிரித்தானிய ஆட்சியில் கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள்

காலச்சக்கரத்தின் சுழற்சியில் போர்த்துக்கேயருக்கு நடந்தது போலவே ஒல்லாந்தருக்கும் நலிவும் ஏகாதிபத்திய சிதைவும் ஏற்பட்டன. மிகச் சிறிய நாடான ஒல்லாந்துக்கு தனது ஏகாதிபத்திய முயற்சிகளுக்கு முக்கியமான ஆட்பலம், ஆயுதபலம், படைபலம், பணப்பலம் ஆகியவற்றை திரட்டமுடியாமல் போக, அதன் எதிரிகளான பிரான்ஸ் நாடும் பிரித்தானியாவும் அதன் ஏகாதிபத்திய நிலபுலன்களை தமதாக்கிக்கொண்டன. எனவே 1796 ஆம் ஆண்டில் இலங்கையும் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் வந்தது.

அரசியல் சாணக்கியர்களான பிரித்தானியர் அவர்களது இலங்கை முன்னோடிகளான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கைபிடித்த குறுகிய சமய, சமூக கொள்கைகளை கைவிட்டு விட்டார்கள். இலங்கையில் வாழ்ந்த எல்லா இனங்களுக்கும்

பிரித்தானியர் மத சுதந்திரம் அளித்தார்கள். ஊழியத் தொண்டும், வீடுகள் வாங்க முடியாமை, காணிகளை கொள்வனவு செய்ய இயலாமை போன்ற முஸ்லிம்களை பாதித்த பீடைகளும் ஒழிந்தன. உதாரணமாக பிரித்தானியரின் 1832 ஆம் ஆண்டில், (தமது எண். 2 ஆம் ஆணைச் சட்டத்தின் மூலமாக) முஸ்லிம்கள் கொழும்பில் வீடுகள், நிலங்கள் வாங்குவதை தடைசெய்த ஒல்லாந்தர் சட்டத்தை இரத்துச் செய்தனர். இவ்வகையான நிவாரணங்களைப்பற்றி ஒரு பறங்கிய எழுத்தாளர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> "இலங்கைவாழ் முஸ்லிம்கள் 1804 ஆம் ஆண்டிலேயே, பிரித்தானியரின் ஆதரவையும், அனுதாபத்தையும் பெற்றார்கள். தமது அதிகாரத்திற்குட்பட்ட மக்களின் உரிமைகளைப் பறிப்பதிலும் அவர்களின் உள்ளங்களைப் புண்படுத்துவதிலும் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் சதா கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். ஆனால் அரசியல் விவேகிகளான ஆங்கிலேயர் முஸ்லிம்களை தமது அரசியல் அரவணைப்பில் வைத்துக்கொண்டார்கள். எனவே சோனகர்கள் கொழும்பு மாநகருக்கு கூட்டங்கூட்டமாக வந்து சேர்ந்தார்கள்."[35]

தமது நாட்டின் முன்னேற்றத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்ட பிரித்தானியர், இலங்கையின் வணிகத்தைப் பெருக்குவதில் மிகுந்த ஆர்வங் காட்டினார்கள். அதில் ஒரு அம்சம் என்னவென்றால் வெளிநாட்டு வியாபாரிகளை அராபியர் உட்பட இலங்கைக்கு வந்து வர்த்தகம் செய்வதைத் தூண்டுவதாகும். 1833 ஆம் ஆண்டில், இலங்கைக்குப் பொறுப்பாக இருந்த பிரித்தானிய நாட்டு காலனித்துவ அமைச்சரான கொடரிக் பிரபு இவ்வாறு இலங்கை ஆளுனருக்கு எழுதினார்.

> "பிரித்தானிய கிழக்கு இந்திய கம்பனி, கறுவா ஏற்றுமதியில் ஏகபோக உரிமைகொண்டிருந்தபோது குறைந்த விலைக்கு அதை விற்று பெரும் இலாபத்தைச் சம்பாதித்தது. தற்பொழுது பத்தேவியா (ஜாவா), மலபார் (இந்தியா) ஆகிய பிரதேசங்களில் விளையும் கறுவாவை இந்திய வணிகர்களும், அராபிய வர்த்தகர்களும் வாங்குகிறார்கள். அவர்கள் மீண்டும் இலங்கை கறுவாவை வாங்கவேண்டும் என்றால் கறுவாவின்

விலையைக் குறைப்பதைத் தவிர நமக்கு வேறு வழி யில்லை."[36]

இந்தியாவுக்கும் குறிப்பாக தென்னிந்தியாவுக்கும் இலங் கைக்குமிடையே நடைபெற்றுவந்த வியாபாரத்தை ஊக்குவிக் கும் நோக்கம் எனது பிரித்தானிய துரைத்தனத்துக்கும் ஏனைய உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இருந்துவந்த நிரந்தர அபிலாஷை ஆகும். 1829 இல் இலங்கைக்கு வந்து, அரசியல் சாசனம் ஒன்றை சிபாரிசு செய்த கோல்புறூக் என்பாரும் அக்கருத்தில் பங்குபற்றினார். தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நடக்கும் வர்த்தகம் ஏறக்குறைய நடைபெற்று வருகிறது என்றார். கோல்புறூக் அதற்குப் பரிகாரமாக கால்வாய்கள் வெட்டப்படுவதை சிபாரிசு செய்தார். அவர் அவ்வாறு முன்வைத்த கால்வாய் திட்டங்களுள் ஒன்று, கொழும்பு முகத்துவாரத்தில் கால்வாய் ஒன்றை வெட்டி, அதை நீர்கொழும்பு வரைக்கும் நீடிப்பதாகும்.[37]

பிரித்தானியரின் இவ்வகை நடவடிக்கைகள் கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் மீது கனிசமான செல்வாக்கைச் செலுத்தின. வியாபார அபிவிருத்தியின் பயனாக கொழும்பு முஸ்லிம்களில் சிலர் பாரிய வர்த்தக நிலையங்களை நிறுவினார்கள். பீங்கான், கோப்பை, கண்ணாடி, தீந்தையும் புருவிகளும், துணிமணிகள், சப்பாத்துகளும் செருப்புகளும், குடை, தோல் பொருட்கள், தாளும் புத்தகங்களும், இரும்புச் சாமான்கள், பித்தளைப் பொருட்கள், நூலும் ரேந்தையும், கப்பல்களுக்கு பொருட்களை பட்டுவாடா செய்தல், அரிசி போன்ற சகல பொருட்களையும் சந்தைப்படுத்துவதில் முஸ்லிம் வணிகர்கள் முன்னணியில் நின்றார்கள். இந்த் வாணிபம் கம்பஹ மாவட்ட முஸ்லிம் செல்வர்கள் பலரை ஈர்த்தது. பிறிதொரு செல்வந்தர் கூட்டம் நீர்கொழும்பைச் சென்றடைந்தது. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், கொழும்பில் பெரியகடைகள் வைத்து நடத்துவதற்கு பெரிய முதலீடு தேவைப்பட்டது. நீர்கொழும்பில் தேவைப்பட்ட முதலீடு கொழும்பை ஒப்பிட்டுப்பார்த்தால் சிறிதுதான்.

எனவே, கம்பஹ மாவட்ட கிராமங்கள் இவ்விரு நகரங்களுக்கும் தமது பிரஜைகளை தத்து அளித்தன போலும். சிறு வணிகர்களாக, முகவர்களாக, கடை ஊழியர்களாக, வேறு பலர், கோழி

வியாபாரிகளாகவும், கால்நடை புரோக்கர்களாகவும் தொழில் புரிந்தார்கள்.

19 ஆம் நூற்றாண்டின் முதல் கால் பங்கில், வீடுகளில் கொத்தடிமைகள் வேலை செய்தார்கள். முஸ்லிம் செல்வர்கள் பலரும் அடிமைகளை தமது வீடுகளில் ஊழியத்திற்கு வைத்திருந்தார்கள். பெரும்பாலும் பிரித்தானிய துரைத்தனம் அடிமைத்தனத்தை வெறுத்தது. எனவே, முதல் படியாக அடிமை சொந்தக்காரர்களை, தமது அடிமைகளை, தாமாகவே முன்வந்து விடுவிக்க வேண்டும் என்று அரசாங்கம் வேண்டுகோளை விடுத்தது. பலர் அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டார்கள். ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி 1816 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த அடிமை பிள்ளைகளை அடிமைத்தளையிலிருந்து விடுவித்து அவர்களுக்கு பூரண சுதந்திரம் அளிப்பதாக பிரித்தானிய ஆளும் மன்னருக்கு அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அவ்வாறு, வாக்குறுதி அளித்த கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் நால்வர் ஆவர். அவர்கள் எல்லோரும் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு: (அக்காலத்தில் எழுதப்பட்ட விதத்தில் தரப்பட்டிருக்கின்றன.)[38]

1. சேகு உசன்
2. இஸ்மா லெவ்வை வாத்தியார்
3. சிலேமா லெவ்வை
4. அசனா லெவ்வை

1844 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி இலங்கை அரசாங்கம், அடிமைத்தனத்தை உத்தியோகபூர்வமாக முற்றிலும் ஒழித்தது.

19 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து இலங்கை நாடு ஓர் ஏற்றுமதி - இறக்குமதி நாடாக பரிணாமம் பெற்றது. முதலில் கோப்பியும் பின்னர் தேயிலையும் பெருந்தோட்ட விளைபொருட்களாக பூதாகார உருவம் எய்தின. தேயிலை வணிகத்தின் துணைகொண்டு, பெருவாரியாக இறக்குமதிகள் இலங்கைக்கு வந்து சேர்ந்தன. காசு, எல்லோருடைய கைகளிலும் சிறு சல்லியாகவோ, பெரும் தொகையாகவோ புரண்டது. 1885 க்கும் 1892 க்கும் இடையே மொத்த இறக்குமதிகளின் பெறுமதி 40 கோடி ரூபாய்களிலிருந்து 62 கோடி ரூபாய்களாக உயர்ந்தது. அதே காலகட்டத்தில், தங்கத்தின் (பொன்னின்) பெறுமதி 34 இலட்சம் (பிரித்தானிய) பவுணிலிருந்து 39 இலட்ச பவுண்டுகளாக

பெருகியது. ஆனால் கஷ்ட காலங்களும் சுபீட்ச காலங்களும் மாறிமாறி வந்தன. உதாரணமாக, 1893 ஆம், 1901 ஆம் ஆண்டுகள் வர்த்தகம் கீழிறங்கிய வருடங்களாகும். ஆனால் 1885 ஆம் 1892 ஆம் இடைப்பட்ட காலகட்டத்தில் ஏற்றுமதிகளின் பெறுமதி இரட்டிப்பாகியது. 1885 ஆம் 1900 க்கும் இடையே சராசரி மாதாந்த நாணய செலாவணி 38 இலட்ச ரூபாயிலிருந்து 1 கோடி 31 இலட்ச ரூபாய்களாக பெருகியது.[39]

இந்த பொருளாதார முன்னேற்றம், கொழும்பு, நீர்கொழும்பு ஆகியவற்றின் மூலமாக கம்பஹ மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் மாறுதல்களை ஏற்படுத்தியது. முஸ்லிம்களின் கிராமிய குடிபகுதிகளில், சில்லறை கடைகள் தொடங்கப்பட்டு, பிரித்தானிய, ஜேர்மனிய, ஜப்பான் ஆகிய நாடுகளின் கைத் தொழில் பேட்டை பொருட்களான ஜேம், விஸ்கோத்து போன்ற தீன் பண்டங்களும் கத்தி, பூட்டு போன்ற வீட்டு சாமான்களும் துணிமணிகளும் விற்பனையாகின. அதேவேளையில் கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் தமது தொழிற்பேற்றினை ஏனைய நகரங்களில் நிறைவேற்றி, தமது பொருளாதார வசதிகளை பெருக்கிக் கொண்டனர். மேசன்மார், தச்சர்கள், தையல்காரர், பிரம்பு முடைவோர் என்போர் அவர்களுள் சிலர்.

1901 இலிருந்து, இலங்கையில் இறப்பர் ஏற்றுமதிகள் முன்னேறின. கம்பஹ மாவட்டம், றப்பர் மரச் செய்கையின் நாற்று மேடை என்பதால், அங்குள்ள முஸ்லிம் மக்களுக்கும் இறப்பருக்கும் நெருங்கிய ஒட்டுதல் இருந்தது. பல முஸ்லிம்கள் காலக்கிரமத்தில், இறப்பர் தோட்டச் சொந்தக்காரர்களாக பரிணமித்தனர். ஏனையோர் பதிவு செய்யப்பட்ட இறப்பர் முகவர்களாகவும், வேறு சிலர் இறப்பர் வர்த்தகர்களாகவும் செயல்படத் தலைப்பட்டனர். இன்றுகூட, இறப்பர் ஏற்றுமதி தொழிலில், கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் கணிசமான அளவு பங்களிப்பினைத் தருகிறார்கள்.

கம்பஹ மாவட்டம் இலங்கையில் உள்ள சகல இனங்களையும் தன்னகத்தே கொண்ட பிரதேசமாகும். இது இன்றைய, நேற்றைய வழக்காறு அல்ல. பல தசாப்தங்களாக நிகழ்ந்துவரும் சம்பிரதாய வரலாறு எனலாம். உதாரணமாக 1901 இல் நடந்த குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கையின் மொத்த சனத்தொகை 3,576,990 ஆகும். அவர்கள் இவ்வாறு பிரித்தனர்: ஐரோப்பியர்

(9,583), பறங்கியர் (23,312) , சிங்களவர் (2,334,817), தமிழர் (952237), சோனகர் (2,24,719), மலாயர் (11,207), ஏனையோர் (21,115) என்பன.[40]

கம்பஹ மாவட்டம் என்ற தனிப்பட்ட பிரிவு அன்று இல்லை. கொழும்பு மாவட்டம், நீர்கொழும்பு மாவட்டம் ஆகியவற்றில் அது புதைந்து கிடந்தது. அதில் ஒரு பங்கான வட அலுத் குரு கோரளை பகுதியை அவதானித்தால் கீழ்க்காணும் இனவாரி சனத்தொகை தெரிய வருகிறது. மொத்த சனத்தொகை 96,496, இனவாரி சனத்தொகை இவ்வாறு: ஐரோப்பியர் (19), பறங்கியர் (68), சிங்களவர் (87,527), தமிழர் (7,491), சோனகர் (1,342), மலாயர் (04) என்பன.[41]

அன்றும் இன்றும் கம்பஹ மாவட்டத்தின் பிரதான நகரான நீர்கொழும்பின் பொதுசன தத்துவம் இவ்வாறு இருந்தது. (1901 இல் நீர்கொழும்பு, சிறு பட்டணசபை என அழைக்கப்பட்டது). அன்று நீர்கொழும்பு பட்டணத்தில் முழு சனத்தொகை 19,949 ஆகும். இனவாரியாக இவ்வாறு: ஐரோப்பியர் (26), பறங்கியர் (346), சிங்களவர் (13,840), தமிழர் (4,316), சோனகர் (1,293), மலாயர் (89), ஏனையோர் (39) என்பன.[42] தொடர்ந்தும், நீர்கொழும்பு, கம்பஹ மாவட்டத்தின் முக்கிய நகரமாகவும், முஸ்லிம்களின் கேந்திர ஸ்தானமாகவும் உள்ளது.

கம்பஹ மாவட்டத்தின் புராதன வரலாற்று சம்பத்து கொண்ட இடம், அத்தனகலை பகுதியாகும். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் அதன் மகத்துவம் இன்னும் பெருகியது. அப்பொழுது, 3 ஆம் விஜயபாகு மன்னன், பொலன்னறுவையில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொண்டான். பல நற்கருமங்களைப் புரிந்து, அக்கால புத்திஜீவிகளின் நல்மதிப்பினையும், கவிஞர்களின் புகழாரத்தையும் பெற்றுக்கொண்டான். இலங்கை பல்கலைக்கழக வரலாற்றுச் சுருக்கம் இவ்வாறு கூறுகிறது:

"மூன்றாம் விஜயபாகு மன்னன் நிறுவிய ஆலயங்கள் அல்லது அவன் செப்பனிட்டவை அவன் அரசாட்சி செய்த பகுதிகளின் விஸ்தாரத்தைக் காட்டுகின்றன. அவை, தம்பதெனிய, பெலிகலை, வத்தளை, களனி, தொடகமுவை (ஹிக்கடுவை) என்பன. நான்கு வருட (1232-1236) ஆட்சியின் பின்பு அவன் மரணமானான். அத்தனகலையில் அவன் உடல் தகனம் செய்யப் பட்டு அஸ்தியின் மீது ஒருதூபி கட்டப்பட்டது. சிரிசங்கபோ

அரசனின் பெயரோடு சம்பந்தப்பட்ட அத்தனகலையை தகன பூமியாக தேர்ந்தெடுக்கப்பட்டமையும், தூபி கட்டப்பட்டமையும் எமக்கு ஓர் உண்மையை உணர்த்துகிறது. புராதன கால சிரிசங்கபோ மன்னனின் சிந்தனையும் அவனது தெய்வாம்சம் பொருந்திய குணங்களையும் விஜயபாகு மன்ன னுக்கு அளிப்பதே அச்செயல்பாட்டுக்கு காரணமாகும்.[43]

கி.பி. 251 இல் அரச கட்டிலுக்கு வந்த சிரிசங்க போ மன்னனைப் பற்றி பல்கலைக்கழக வரலாற்றுச் சுருக்கம் இவ்வாறு கருத்து வெளியிடுகிறது:

> "மகியங்கனையைச் சேர்ந்த இரண்டாவது இலம்பகர்ண அரசகுமாரனான சிரிசங்கபோ அரச பதவியை ஏற்றபோது மூன்றாம் இளவரசான கோதாபயன் பொருளாளராக நியமனம் பெற்றார். புத்த மதத்தின் பஞ்சசீலங்களை அனுஷ்டிக்க உறுதிபூண்ட சிரிசங்கபோ அதில் ஒன்றான கொல்லாமையைத் தீவிரமாகப் பின்பற்றினான்.
>
> இந்தத் தயாள சிந்தனை மன்னனைச் சார்ந்தவர்களுக்கு ஒத்துவரவில்லை. கடைசியில் சிரிசங்கபோ மன்னன் தன்னுடைய உடலையும் உயிரையும் தியாகம் செய்தான்"[44]

மூன்றாம் விஜயபாகு நிறுவிய ஆலயங்களுள் வத்தளையிலும் களனியிலும் இருப்பவை கம்பஹ மாவட்டத்தில் உள்ளவையே. விஜயபாகு மன்னன் காலத்தில் கம்பஹ மாவட்டத்தில் மன்னனின் பிரதிநிதிகளின் காவல் படையில் முஸ்லிம்கள் இருந்திருக்க வேண்டும்.

20 ஆம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களில் கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் கிரமமாக பொருளாதாரத்துறையில் முன்னேறினார்கள். ஆனால் 1930ல் பொருளாதார வேகம் தேக்கம் அடைந்தது. அதற்கு ஒரு காரணம் பிரதம ஏற்றுமதிப் பொருளான றப்பரின் விலை கீழிறங்கியதுதான். உதாரணமாக 1923ல் ஒரு இறாத்தல் றப்பரின் சராசரி விலை 88 சதமாக இருக்க, 1932ம் ஆண்டில் விலை 11 சதத்துக்கு வீழ்ந்தது. 1940ல் இரண்டாம் உலக யுத்தம் ஊக்குவித்த நாணய செலாவணி காரணமாக கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் மீண்டும் பொருளாதாரத்தில் வளம் கண்டார்கள்.

கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் பாரம்பரியக் கல்வி, ஏனைய முஸ்லிம் பகுதிகளைப் போன்று குர்ஆன் பாடசாலைகளில் நடந்தேறியது. திருக்குர்ஆனை ஓதவும், மனனம்செய்யவும் அரபு, தமிழ் வாசினையும் தமிழ் இலக்கணக் கல்வியும் இலகு கணிதமும் அப்பாடசாலைகளில் பயிற்றுவிக்கப்பட்டன. அதன் ஆசிரியர்கள் (லெவ்வைமார்) வேர்விலை, தர்காநகர், களுத்துறை, கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்து வந்திருக்கிறார்கள். மார்க்க அறிஞர் சிலர் கொழும்பு நகரத்தின் சந்தடியிலிருந்து தம்மை அகற்றுவதற்காக கம்பஹ மாவட்டத்திற்குக் குடிபெயர்ந் திருக்கிறார்கள். அவர்களின் ஒருவர் கால்நடையாக கொழும்பிலிருந்து கலகெடிஹேன (திஹாரி) க்கு வந்து, மார்க்க விடயங்களில், போதனைகளில் ஈடுபட்டார். அம்மக்களின் மனதில் இடம் பெற்றுக்கொண்டார்.

1931ம் ஆண்டு அமுலுக்கு வந்த டொனமூர் அரசியல் திட்டத் தின் பயனாக, முஸ்லிம் கல்வி முன்னேற்றம் பெற்றது. தமிழ் கனிஷ்ட பாடசாலைகளை அரசாங்கம் கம்பஹ மாவட்ட முஸ்லிம் கிராமங்களில் நிறுவியது. பின்னர் படிப்படியாக அவை சிரேஷ்ட முஸ்லிம் பாடசாலைகளாக உருவம் பெற்றன. அவற்றில் கற்றவர்கள் சிலரை அரபு, இஸ்லாம், தமிழ் ஆசிரியர்களாக அரசாங்கம் நியமித்தது. வசதியுள்ளோர் தமது ஆண் பிள்ளைகளை கொழும்புக் கல்லூரிகளுக்கு அனுப்பினார்கள். மிக்க வசதி படைத் தோர் தமது பிள்ளைகளை உயர் கல்விக்காக சீமைக்கு அனுப்பினார்கள். அப்பிள்ளைகள், சட்ட அறிஞர்களாகவோ அல்லது வைத்திய கலாநிதிகளாகவோ தாயகம் திரும்பினார்கள்.

கொழும்புக்கு அருகாமையில் இருப்பதனாலும், வளமான கிருஷிக சூழலைக் கொண்டுள்ளதாலும் கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் தொழில் அபிவிருத்தியும் சனவிருத்தியும் கிரமமாக உயர்ந்தன. உதாரணமாக, 1961ல் கம்பஹ மாவட்ட பகுதிகளின் முஸ்லிம் தொகை இவ்வாறு இருந்தது.

| | முஸ்லிம் தொகையினர் | மொத்த தொகையினர் |
|---|---|---|
| கல்லொளுவை (கிராம அதிகாரி பிரிவுஎண்: 121) | 1043 | 2238 |
| ஹுனுப்பிட்டி (கிராம அதிகாரி பிரிவுஎண்: 256) | 1263 | 7657 |
| வல்கமை (கிராம அதிகாரி பிரிவுஎண்: 291) | 2095 | 2983 |
| திஹாரி (கிராம அதிகாரி பிரிவுஎண்: 318) | 2028 | 3239 |

இதனால் கம்பஹா மாவட்டத்தில், முஸ்லிம்கள் சகல இடங்களிலும் பரவியிருப்பதுடன், சில குறிப்பிட்ட பகுதிகளில் பெரும்பான்மையாகச் செயல்படுகிறார்கள். இது சகல இன சௌஜன்யத்திற்கும், சமூக ஆரோக்கியத்துக்கும் இடமளிக்கிறது. இதே பரிணாமத்தை அரசியல் அமைப்புத் திட்டங்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக, 1976ம் ஆண்டு, தேர்தல் தொகுதி நிர்ணயக் குழுவின் தீர்வுகள் கம்பஹா மாவட்டப் பகுதிகளைப் பொறுத்தவரையில் இவ்வாறு அமைந்திருந்தது.[45]

| தொகுதி | பௌத்தர் | இந்துக்கள் | முஸ்லிம்கள் | கிஸ்தவர்கள் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| வத்தளை | 28.35% | 6.48% | 4.3% | 60.73% | .13% |
| நீர்கொழும்பு | 13.28% | 4.60% | 9.50% | 72.57% | .07% |
| கடானை | 50.28% | 1.22% | 1.85% | 46.50% | .04% |
| திவுலப்பிட்டிய | 85.39% | 0.46% | 0.12% | 14.01% | .02% |
| மீரிகமை | 95.77% | 0.41% | 2.89% | 0.92% | .01% |
| மினுவாங்கொடை | 90.94% | 0.27% | 2.24% | 6.53% | .02% |
| அத்தனகலை | 90.27% | 0.74% | 7.39% | 1.58% | .02% |
| கம்பஹா | 86.97% | 0.33% | 0.64% | 12.05% | .01% |
| ஜாஎல | 35.96% | 2.23% | 2.00% | 59.78% | .03% |
| மஹர | 86.40% | 0.47% | 2.74% | 10.37% | .02% |
| தொம்பே | 95.26% | 0.42% | 1.13% | 3.15% | .03% |
| பியகம | 87.49% | 0.93% | 5.58% | 5.96% | .06% |
| களனி | 73.57% | 5.35% | 7.12% | 13.89% | .07% |

இதன் பயனாக முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும், அதேவேளையில் தமது கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருக்கவும் வழிபிறக்கிறது.

மொழி அளவில் பார்க்கப் போனால் கம்பஹா மாவட்டத்தில் மும்மொழி தெரிந்தவர்கள் பெரும்பாலும் ஏனைய மாவட்டங் களைவிட, அதிகமாக உள்ளனர். இன்றும் ஆங்கில மொழி தெரிந்தவர்கள் அதிக தொகையினராக இருப்பதை அவதானிக்க முடிகிறது. முன்னர் இங்கு மலாய் மொழி சகஜமாகப் பேசப்பட்டது. இன்று சூழல் காரணமாக அவ்வாறு இல்லைப் போலும்.[46]

கலாசார அலுவல்களில், கம்பஹா மாவட்ட முஸ்லிம்கள் சில வகைகளில், முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள். வட்டி யில்லா சேமிப்புச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் உதயமாகி யிருக்கின்றன. தரீக்காக்கள் இலங்கையில் பல பகுதிகளில்

வியாபித்திருக்க கம்பஹ மாவட்டத்தில் தாம், முதன்முதலில், அவை அரசாங்க அங்கீகாரம் பெற்ற அறக்கட்டளையாக சட்ட ரூபம் பெற்றிருக்கின்றது. 1947ம் ஆண்டில் கஹட்டோவிட்ட பாதி-பியா சங்கத்தின் பொது நிர்வாகக் குழு, பாதி-பியா சங்கம் என்ற மகுடத்தில் ஒன்றியக்கமாக (கோர்பரேசனாக) அரசு ஆணை எண் மூலமாக, அரசாங்க அங்கீகாரம் பெற்றது.[47] அதன் ஷரத்து 3(டீ) இவ்வாறு கூறுகிறது:

> "இந்த சங்கத்தின் ஒரு நோக்கம் யாதெனில் கஹட்டோ விட்ட கிராமத்தில், பொதுவாக எல்லா முஸ்லிம் சிறார்களுக்கும், குறிப்பாக இந்தக் கிராமத்தின் முஸ்லிம் சிறார்களுக்கு அவர்களுக்கு கல்வியறிவு ஊட்டுவதற்காகச் சமய, கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி நடாத்துவதாகும்."[48]

எனவே, கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள், தொன்றுதொட்டு தமது நலன்களைப் பாதுகாத்து வந்தது மட்டுமன்றி, தமது இனத்துக்கும் சமயத்திற்கும் நாட்டிற்கும் தம்மால் இயன்ற அளவு தொண்டினை அளித்துவந்திருக்கிறார்கள், வருகிறார்கள்.

## Foot notes

(1) P. G. Cooray, *An Introduction to the Geology of Ceylon (Colombo, National Museum)* 1967, P. 79.

(2) Ibid P. 172

(3) Ibid P. 17

(4) W. Geiger and M. H. Bode, *The Mahavamsa or the Great Chronicle* (Colombo, Information Dept. 1950, Chapter XIX, Lines 1-6.

(5) Ananda W. P. Guruge (trans and comm) *Mahavamsa* (Colombo ANCL, 1989) P. 847.

(6) H. Watkins (art in) S. E. N. Nicholas (ed) *Commercial Ceylon* (Colombo 1933) P. 119.

(7) C. W. Nicholas and S. Paranavitana, *A Concise History of Ceylon from the earliest times to 1505* (University of Ceylon, Colombo 1961) PP. 64 (map) 208 (map)

(8) Geiger and Bode, Mahavamsa P. 6 & 7.

(9) Nicholas and Paranavitana, P. 26-28.

(10) Ibid P. 20.

(11) Sir James Emerson Tennent. *Ceylon, An Account of the Island etc.* (Dehiwala, 1977 reprint of 1860 London Edition) P. 502.

(12) Ibid P. 502.

(13) Ibid P. 504.

(14) C. E. Godakumbura, *History of Archaeology in Ceylon* in Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society (New Series Vol. XIII, 1969) P. 2 (JRAS/CB).

(15) *Ibid, passim*

(16) Nicholas and Paranavitana, P. 101.

(17) Ibid P. 296.

(18) Raj Somadeva, *Economy in Early Sri Lanka-An Epigraphical Survey* (art) in *Island* 13 May 1998.

(19) Hakim Muhammed Said (ed) Al-Berunis Book on Minerology *(Kitab-al-Jamahir-fi Ma'rifat al-Jawahir)* (Islamabad, 1989), P. 149.

(20) R. Raven-Hart. Ceylon-*History in Stone* (Colombo 1973)

(21) Tim Severin, *The Sindbad Voyage* (London 1982) passim

(22) R. Raven-Hart.. P. 203.

(23) Ibid, P. 203.

(24) Ibid, P. 109.

(25) M.Y.M. Mohamed Nazeer (Kal Eliya) P. 60, (National Meeladun Nabi Souvenir, 1994).

(26) Rev. Fr. W. L. A. Don Peter, *Portuguese Missionery Activities in the Spread of Education in Ceylon A Centenary Volume* (Colombo 1969) P. 283.

(27) Rev. Fr. V. Perniola in Sunday Observer, 23 Decembor 1990.

(28) M. Y. Mohamed Nazeer (Kal Eliya) P. 60.

(29) Salvinia, as a scourage, came to Muturaajavela in 1939.

(30) Ibid.

(31) P. Macguire *Westward the Course* (London, 1948) P. 164.

(32) Review by Anthony Reid of Jonathan I. Israel, *Dutch Primary in World Trade 1585-1740 (Oxford, 1989)* in Journal of Asian Studies (USA) 49/4, (Nov. 1990) P. 881.

(33) T. Nadarajah, *The Administration of Justice in Ceylon under the Dutch Government 1656* - 1796 in JRAS/CB (New series, Vol. XIII, 1969 O. 11 and 12.

(34) Ibid. P. 12.

(35) J. C. Van Sanden, *Sonahar - A Brief History of the Moors of Ceylon* (Colombo 1926).

(36) *Dispatch of Viscount Goderich, Secretary of State, for Sir R. W. Horton, Government of Ceylon* represented in G. C. Mendis (ed) The Colebrooe - Cameron Papers (London 1956 Vol. I. P. 261.

(37) W. M. G. Colebrooke *Report on Administration* to Viscount Goderich 24 December 1832 reprinted in Madras. The Colebrooe-Cameron Papers Vol. I. P. 16.

(38) G. C. Mendis, *Colebrooke Cameron Paper* Vol. I.

(39) H. A. de S. Gunasekera, *From Dependent Currency to Central Banking in Ceylon* 1825-1967 (London 1962) passim.

(40) *Census of Ceylon 1901-Interim Report.*

(41) Ibid.

(42) Ibid.

(43) C. W. Nicholas and S. Paranavitana - P. 279.

(44) Ibid. P. 84

(45) Report of the Delimitation Commission 1976 (Sess Paper I. of 1976 (Colombo) PP. 24-38.

(46) M. M. M. Mahroof. (a) *The Malays of Sri Lanka* (in) Asian Affairs (London Feb. 1990) Vol. XXI, Part I. PP. 55-65. (b) *Sri Lanka Malay Community: A Minority within a Minority (in)* Al-Nahda (Kualalampur, Malasiya) Vol. 10-3-4 July/Dec. 1990 PP. 29-33:

 (c) *Malay Language in Sri Lanka:* Socio-mechanics of a minority language in its historical setting (in) Islamic Studies (Islamabad Pakistan) Vol. 31 No. 4 (Winter 1992) PP. 463-478.

 (d) *The Community of Sri Lanka Malay:* notes *towards a socio-historical analysis* (in) *Journal* of Institute of Muslim Minority Affairs (Jeddah, Saudi Arabia) Vol. 14. No. 1-2 (Jan/July 1993) PP. 143-155.

(47) Legal Enactments of Ceylon (Colombo 1956) Cap. 348.

(48) Ibid.

# 2

# ஒரு வரலாற்றுத் தேடல்

**எம். வை. ஸப்ருள்ளாகான்**

அறிமுகம்:

கம்பஹா மாவட்டத்தை மையமாகக் கொண்டு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆராயும் பொழுது இம்மாவட்டம் 1979ஆம் ஆண்டு தனி மாவட்டமாகப் பிரகடனப் படுத்தப் படும்வரை பல்வேறு காலகட்டங்களில் பல இராசதானிகளதும் ஆட்சியாளர்களின் கீழும் ஒரு பகுதியாக விளங்கி வந்துள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கது. இவ்வகையில் கோட்டை இராசதானி, சீதாவக்கை இராசதானி, மல்வானையை ஆட்சி பீடமாகக் கொண்ட போர்த்துக்கேய ஆட்சி மற்றும் ஒல்லாந்த ஆங்கிலேய யுகம் என்பன உள்ளடங்குகின்றன.

இம்மாவட்டத்தின் கணிசமான ஒரு பகுதி சியனே கோரளைக்கு கீழ் வருகின்றது. இக்கோரளை அநுராதபுர யுகத்தில் ரன்துனு கோரளை எனவும், களனி யுகத்தில் கல்யாணிக் கோரளை எனவும், கோதபாய மன்னன் காலத்தில் அத்தனகலு கோரளை, மெனிக்பந்தன கோரளை, கேத்ய கோரளை எனவும், கோட்டை யுகத்தில் கீர்த்தி அகம்படி கோரளை, மாயாதுனு கோரளை, சீதாவக்க கோரளை எனவும், சீதாவக காலம் முதல் சியனே கோரளை எனவும் வழங்கி வருகிறது. அரச வைபவமொன்றில் நூறு உறவினர்கள் ஆரக் கட்டித் தழுவிக் கொண்டமையால் இப்பெயர் பெற்றதென நாட்டார் வழக்குக் கூறுகிறது. கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பைச் சூழவுள்ள கரையோரப் பிரதேசம் ஏழு கோரளை (ஸத் கோரளை)க்கு உட்படுகின்றது.

5 ஆம் புவனேகுபாகு காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட நகரங்களில் இப்பகுதியிலுள்ள மாயாதுன்ன நகரமும் ஒன்றாக விளங்கியதால் முன்பு சியனே கோரளை மாயாதுனு கோரளை என அழைக்கப்பட்ட கோட்டை ஸ்ரீ பராக்கிரமபாகு (6 ஆம்) வின் சகோதரன் மாயாதுனு பராக்கிரமபாகு என்ற பெயரில் இந்நகரில்

வசித்துள்ளான். சீதாவக்கையை ஆண்ட மாயாதுன்ன மன்னனின் பிறந்த இடம் மாயாதுன்னைக் கிராமமாகும்.

### போர்த்துக்கேயருக்கு முன்:

கம்பஹ மாவட்டத்தில் இன்று சிதறி வாழும் முஸ்லிம்களும் கிராமங்களும் போர்த்துக்கேயரின் வருகைக்கு முன் இருந்தமைக்கான சான்றுகள் அரிதாகக் காணப்பட்டாலும் "15 ஆம், 16ஆம் நூற்றாண்டுகளில் மேற்குக் கரையோரப் பகுதிகளில் கணிசமான முஸ்லிம் குடியேற்றங்கள் இருந்தன. குறிப்பாக புத்தளம், சிலாபம், மாதம்பை, நீர்கொழும்பு, களுத்துறை, மக்கொனை, பயாகலை, அளுத்கம, வேருவளை, காலி, வெலிகம, மாத்தறை பகுதிகளில் அவை காணப்பட்டன" என பிரபல போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் பெர்னாவோ க்வேரோஸ் போர்த்துக்கேய தோம்புகளிலுள்ள குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்டுள்ளார். எனவே, கம்பஹ மாவட்டத்தின் நீர்கொழும்புப் பிரதேசத்தில் போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பே முஸ்லிம்கள் குடிபதியாக வாழ்ந்தனர் என்பது தெளிவாகின்றது. இம்மாவட்டத்தின் உள்நாட்டுப் பகுதிகளான மல்வானை, பஸ்யாலை, பூகொட பிரதேச முஸ்லிம்கள் தமது முன்னோர் களுத்துறை, வேருவளை, அளுத்கம, கிந்தொட்டை பகுதிகளிலிருந்தே இங்கு வந்தனர் எனக் குறிப்பிடுவதால் கம்பஹ மாவட்டத்தின் உட்பிரதேச முஸ்லிம் கிராமங்கள் மேற்குறித்த மேற்குக் கரையோரக் குடியேற்றங்களின் பிற்காலப் பரம்பல் என்றே கொள்ள வேண்டும்.

### கோட்டே யுகம்:

கோட்டே மன்னன் தர்ம பராக்கிரமபாகு (1491 - 1513) வின் ஆட்சியில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதர சற்று முன்னர் 'காயல் பட்டணத்தைச் சேர்ந்த கதிராயன்' என்ற சோனகர் சிலாபத்தில் பலாத்காரமாக முத்துக் குளிக்கவும் யானைகளைப் பெற்றுக்கொள்ளவும் அனேக சோனகர்களுடன் வந்தான் எனவும் அரசனின் கட்டளைப்படி அவனது சகோதரர்களான கம்பஹ மாவட்டத்தில் 'உடுகம்பொல'யை ஆண்ட சகலகலாவல்ல என்ற யுவ அரசனும் மாதம்பையை ஆண்ட 'தனியவல்ல' யுவ அரசனும் சோனக படைகளை இரு பக்கமாகச் சென்று தாக்கிக் கொன்று சோனகரை சிறைபிடித்து அவர்களது

'சம்பான்' படகுகளை யானைகள் மூலம் சுக்கு நூறாக்கி ஒன்பது குதிரைகளையும் கைப்பற்றினர் என்ற சம்பவத்தை 'ராஜாவலிய' குறிப்பிடுகிறது. 'கதிராயன' என்ற இச்சோனக தலைவனை 'அழுகேஸ்வர யுத்தய' என்ற போர்க்காவியம் அதிராசராயன், அதிராசராயன எனக் குறிப்பிடுகிறது. இங்கு குறிப்பிடப்படும் 'காயல் பட்டணம்' மலபார் கரையிலுள்ள வெய்பூ நதிக்குத் தெற்கே அமைந்துள்ள துறைமுகம் என 'பர்கியுஸன்' குறிப்பிடுகிறார். 'யோகி குரு யாதின்ன' என்ற ஓலைச்சுவடிக் கவிதை ஏடொன்றில் மதுர நாட்டிலிருந்து சிலாபத்திற்கு வந்து அரசனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்த இரட்டை யோகிகள் இருவரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ராஜாவலிய தரும் செய்தியாக இருக்கலாமென பேராசிரியர் ஏ. வீ. சுரவீர தனது 'ராஜாவலிய' விரிவுரை நூலில் குறிப்பிடுகிறார்.

கம்பஹ, புத்தளம் மாவட்டங்களுடன் தொடர்புபடும் இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் காயல் பட்டணத்தின் கதிராயன், இரு யோகிகளான முஸ்லிம்கள் பற்றி இதுவரை எந்தவொரு வரலாற்று ஆய்வாளரும் சிரத்தை கொள்ளாமை பெரும் குறையாகும். இலங்கை முஸ்லிம்களுக்கும் காயல்பட்டண முஸ்லிம்களுக்குமிடையில் நிலவிய நீண்டகால வர்த்தக, சமய, கலாசாரப், பண்பாட்டு, குடும்பத் தொடர்புகள் பற்றிய தகவல்களை இவ்வாய்வின் மூலம் வெளிக்கொண்டுவர முடியும்.

**சீதாவக்கை மாயாதுன்னை**

1521 ஆம் ஆண்டு ஏற்பட்ட 'விஜயபா கொல்லய' அல்லது 'மரக்கல கோலஹால' என்ற சதிப் புரட்சியில் கோட்டை மன்னன் 6 ஆம் விஜயபாகு (1509 - 1521) புவனேகபாகு சகோதரர்களின் தூண்டுதலால் சாலமன் அல்லது ஸலமான் என்ற ஏவலாளனால் கொலை செய்யப்பட்டு கோட்டே இராச்சியம், கோட்டே, சீதாவக்கை, ரைகம என மூன்று இராசதானிகளாகப் பிரிந்தது. அன்று முதல் கம்பஹ மாவட்டத்தின் சியனே கோரளை சீதாவக்கை இராசதானியின் கீழ் வந்தது. கோட்டே மன்னன் 7 ஆம் புவனேகபாகு (1521 - 1551) விற்கும் சீதாவக்கை மன்னன் மாயாதுன்னைக்குமிடையில் ஏற்பட்ட ஆட்சி அதிகார மோதலில் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியையும் மாயாதுன்னை கள்ளிக் கோட்டை ஸமோரின் மன்னனதும் உதவியையும் நாடினர். போர்த்துக்கேயரின் முஸ்லிம் விரோதக் கொள்கைக்கு

ஏற்ப புவனேகபாகுவால் கோட்டே இராசதானி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபொழுது மாயாதுன்னை அவர்களை தனது இராசதானியில் குடியேற்றினான்.

1537 ஆம் ஆண்டு 'குருபெவுல' என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் மாயாதுன்னையின் படையில் ஸமோரின் மன்னரின் தளபதிகளான குஞ்சலி மரைக்கார், பச்சை மரைக்கார், அலி இப்றாஹீம் ஆகியோரும் இடம் பெற்றனர்.

பின்னர் இத்தளபதிகளுடன் வந்த முஸ்லிம்கள் மல்வானை, குருபெவுல, கலகெதர, தல்துவ, நாபாவலை, குருகல் முதலிய இடங்களிலும் கனதொட்ட, அம்பே, கொட்டியாகும்புற முதலிய இடங்களிலும் குடியேற்றப்பட்டனர். இவர்களுடன் கோட்டே இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் அட்டூழியத்திற்கு உட்பட்ட முஸ்லிம்களும் வந்து குடியேறினர். இவர்களில் சிலருக்கு 'பட்டபெந்தி' என நாமகரணங்களும் சூட்டப்பட்டன. 'துவேகொட ரணசிங்க முதியான்ஸலாகே' என்ற பெயரில் ஒரு முஸ்லிம் வைத்திய பரம்பரை இன்றும் தல்துவ (துவேகொட) இல் வாழ்ந்து வருகிறது. மேலும் அம்பே முகந்திரங்கள், வியனலேகம்கள் போன்ற உயர் நிருவாகப் பதவிகள் வகித்தவர்களும் முஸ்லிம்களிடையே உள்ளனர். இரண்டாம் இராஜசிங்கனின் மனைவிக்கு சிறந்த முறையில் வைத்தியம் புரிந்த இவ்வைத்தியர், நாடி சாஸ்திரத்தில் சிறந்து விளங்கினார். தல்துவ நகரிலுள்ள 'அங்கம்பிட்டிய' எனப்படும் போர்க்கலை பயிற்சித்தளம் கொடவத்தயில் அமைந்திருந்தது. இதுவே பின்னர் 'துவேகொட' என அழைக்கப்பட்டது.

### சீதாவக்கை இராஜசிங்க (1581 - 1592)

மாயாதுன்னைக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அவனது மகன் சீதாவக்கை ரிகிரிபண்டா ராஜசிங்க மன்னன் 1564, 1579 1580, 1587 ஆகிய ஆண்டுகளில் பல முறை கொழும்புக் கோட்டையை முற்றுகையிட்டான். இவனது படையில் இந்திய பொறியியலாளர்களும், சேனாதிபதிகளும் கடமையாற்றினர். ஹிந்துக்களை அதிகமாகக் கொண்ட சம்பளம் கொடுக்கும் நிரந்தரப் படையொன்று அவனிடம் இருந்தது. முல்லேரியா, ரக்கஹவத்த, பளுவெல, ஹங்வெல்ல முதலிய இறங்கு துறைகளும், தரால, கனம்வெல்ல, அகரவிட்ட, குருபெவுல முதலிய கோட்டைகளும் இருந்தன. மல்வான, கடுவெல,

ஹோமாகம என்பன 1562 இன் முல்லேரிய யுத்த வெற்றிக்குப் பின்னர் அமைக்கப்பட்ட கோட்டைகளாகும். இம்மன்னனின் அதிகாரத்தை ஏற்று இறை செலுத்திய குறுநில மன்னர்களும் இருந்தனர். வன்னியர்கள் எனப்படும் வன்னிமைகளின் தலைவர்கள் இவனது அரச சபைக்கு வந்து சென்றனர். இவனது காலத்தில் நாபாவல, தல்துவ, மத்தமகொட, கன்னத்தொட்ட, குருபெவுல, மல்வான, கலகெதர போன்ற முஸ்லிம் கிராமங்கள் இருந்தன. அளுத்கமை துறைமுக முஸ்லிம்கள் இராஜசிங்க மன்னனுக்கு வருடாந்தம் 60 வரீன்களை துப்பட்டிப் பணமாக வழங்கியதாகவும் அப்பணம் அவர்கள் காணிகளை வைத்திருக்கவும் குடிபதியாக வாழவும் துறைமுகங்களில் வர்த்தகம் புரியவும் வழங்கும் ஒரு சம்பிரதாயமாக மேற்கொள்ளப்பட்டது எனவும் போர்த்துக்கேயத் தோம்புகள் குறிப்பிடுகின்றன.

சீதாவக்கை இராசதானியில் முஸ்லிம்கள் கறுவா, பாக்கு, மிளகு, சாதிக்காய், யானைத்தந்தம் முதலிய பொருட்களை இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ததுடன் பிடவை, கருவாடு முதலியவற்றை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்தனர். மாணிக்கக்கல் வியாபாரம் முஸ்லிம்கள் கையில் இருந்தது. கறுவா ஏற்றிய 'சம்பான்' படகுகள் பற்றி போர்த்துக்கேய ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

1587 ஆம் ஆண்டு இம்மன்னன் கொழும்புக் கோட்டையை முற்றுகையிட்ட சமயம் அவன் தங்கியிருந்த பகுதிகளே இன்று தெமட்டகொட பகுதியிலுள்ள மாளிகாகந்த , மாளிகாவத்த முதலிய பிரதேசங்களாகும். இப்படையில் முஸ்லிம்கள், மலாயர், காபிரி இனத்தவர்களும் பங்கு கொண்டனர். இம்முற்றுகை யின்போது கோவாவிலிருந்து உதவிக்கு வந்த போர்த்துக்கேய படைகளுக்குப் பயந்து அஞ்சியமையால் கம்பஹ மாவட்டத்தின் 'பாகம' என்ற பகுதி 'பியகம' என வழங்கலாயிற்று. பியகமையில் அரசனின் 'ரக்ஷபான' என்ற இடத்திலிருந்த உயர் கற்பாறை மீது மாளிகை ஒன்று கட்டப்பட்டது. மல்வானைக் கோட்டையை பாதுகாக்கும் வகையில் இவ்விடம் அமைந்திருந்தமையால் 'ரக்ஷபான' என அழைக்கப்பட்டது. இது ஒரு இறங்குதுறையாகும். இதன் ஒருபுறம் மல்வானையும் மறுபுறம் போமிரிய பகுதியும் அமைந்துள்ளன. அக்காலத்தில் களனி கங்கை வழியாக கொழும்பிலிருந்து நதியின் மேற்பகுதிக்கு வரும் போர்த்துக்கேய வள்ளங்களைத் தடுக்க மல்வானைப் பகுதியில்

அமைந்துள்ள பாரிய கற்பாறையைத் துளைத்து மல்வானை முதல் போமிரிய வரை பெரிய சங்கிலிகள் இரண்டை மன்னன் பொருத்தி வைத்தான். இன்றுகூட இதற்காக இடப்பட்ட துளைகள் அக்கற்பாறையில் காணப்படுகின்றன. ரக்ஸபான மாளிகைக்கு அண்மையிலுள்ள 'உல்ஹிட்டிவெல' பிரதேசம் அரசன் குற்றவாளிகளை கழு ஏற்றிய இடமாகும். பியகமைக்கு அருகிலுள்ள 'யபரலுவ' என்ற இடம் அரசனுக்கு ஆயுதம் தயாரிக்க இரும்புத்தாது பெறப்பட்ட இடமாகும். 'யபர' எனப்படும் இரும்புத்தாதுக் கழிவுகள் படிந்த பகுதி என்பதால் 'யபரலுவ' என அழைக்கப்பட்டது. 'ரக்கஹவத்த' என்ற இடம் 1561 இல் முல்லேரியா யுத்தத்திற்குப் பாசறை அமைத்த பகுதியாகும். சீதாவக்கை அரச மாளிகைக்கு விறகு வழங்கிய இடம் 'தரனேகம' எனவும் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் சிரமதானம் மூலம் வயல் உழுத பொழுது பாற்சோறு பகிர்ந்த இடம் கிரிபத்கொட எனவும் அதற்காக பெருந்தொகையான இலைகளைக் கொண்டுவந்த இடம் 'மாகொல' எனவும் அழைக்கப்பட்டதாக வழக்கிலுள்ளது. இதற்குப் பக்கத்திலுள்ள 'ஸபுகஸ்கந்த' வலகம்பா மன்னனுக்கு பாதுகாப்பு வழங்கிய உயர்ந்த கற்பாறைகளைக் கொண்ட இடமாகும். 1505 இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரை கோட்டே அரச மாளிகைக்கு அழைத்துச் செல்லும்போது சிங்களவர்கள் அவர்களை இக்கற்பாறை உச்சிக்கு அழைத்துச் சென்றனர்.

**பிற கிராமங்கள்**

கம்பஹ மாவட்டத்தின் கம்பஹ பிரதேசம் இஹலகம, பஹலகம, மெதகம, அளுத்கம, அத்தனகலு ஓய, ஊருவில் ஓய ஆகிய பகுதிகளை உள்ளடக்குகின்றது.

அத்தனகல்ல பிரதேசம் அனுராதபுர கால மன்னர்கள் பாதுகாப்பு தேடிச் சென்ற பிரதேசமாகும். அந்தணனுக்கு தனது தலையைத் தானமாகக் கொடுத்த ஸ்ரீ சங்கபோ மன்னனின் ஆட்சிப் பிரதேசம் இதுவாகும்.

நீர்கொழும்புப் பிரதேசம் 15-18 நூற்றாண்டு வரை கடற்றொழிலுக்கு மிகப் பிரசித்தம் பெற்று விளங்கியது. 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் இப்பிரதேசத்தின் கறுவாவை கொண்டு செல்ல வசதியாக ஹமில்டன் கால்வாயை வெட்டி புத்தளம் வரை படகுச் சேவை ஒன்றை நடத்தினர்.

11 வது காவதீச மன்னன் மயுராவதி என்ற இளவரசிக்கும் பிராமணர் ஒருவருக்கும் அளித்த 29 கிராமங்களை முப்பது கிராமங்களாக அதிகரிக்க அளிக்கப்பட்ட கிராமமே திஹாரிய. சிங்களத்தில் திஹரிய (முப்பதாம் பகுதி) என்பதே 'திஹாரிய' ஆக மாறியது.

11 ஆம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயருடன் போராடிப் பின்வாங்கிய சமயம் அவனுக்கு எதிராக சியனே கோரளையில் ஏற்பட்ட கலவரம் அடக்கப்பட்டதாக செவியுற்ற இனிய கிராமம் மிஹிரிகம அல்லது 'மீரிகம' ஆகும்.

வேகே பகுதி 1971 வரை அத்தனகல்ல பிரதேசத்துடன் இணைந்து இருந்தது. 1972 இல் இலங்கையில் உருவாக்கப்பட்ட முதல் உப செயலகப் பிரிவு இதுவாகும். இதனுள் வேகே, பூகொடை, கேரகல, தொம்பே என்பன அடங்குகின்றன.

## மல்வானை மாநாடும் ஒப்பந்தமும்

1592 இல் சீதாவக்கை இராஜசிங்கனின் வீழ்ச்சிக்குப் பின்னர் மக்கள் ஒழுங்கான தலைவரின்றித் திண்டாடினர். ஆட்சி அதிகாரத்தில் குழப்பநிலை உருவாகியது. 1594 இல் அசிவிடோ சீதாவக்கையை முற்றுகையிட்டான். மக்கள் முன்னாள் போர்த்துக் கேய வஸ்கிரிஞ்ச படைத் தளபதியான தொமில்கோ த கொரயாவின் தலைமையில் அணிதிரண்டனர். பல யுத்தங் களுக்குப் பின்னர் சீதாவக்கை வீழ்ந்தது. இந்நிலையில் கோட்டே தர்மபால மன்னனும் இறந்தான். இலங்கையின் சுதந்திரம் முதற் தடவையாக ஐரோப்பிய இனத்தவர்களுக்குப் பறிபோனது. கோட்டே, ரைகம, சீதாவக்கை இராசதானிகளும்; பாணமை, மட்டக்களப்பு, கொட்டியாரம், திருகோணமலை முதலிய பிரதேசங்களும் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சிக்குக் கீழ் வந்தன. இந்நிலையில் மக்களின் அபிப்பிராயத்தை அறிய செரனிமோ டி அசிவிடோ மல்வானையில் ஒரு சுதேசியப் பிரதிநிதிகளின் மாநாட்டைக் கூட்டினான்.

போர்த்துக்கேயரின் புதிய காலனிகளுக்குக் கீழுள்ள ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் இரு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் தாம் சுதேசிய சட்டதிட்டங்களின் வழக்காறுகளின்படி ஆளப்படவேண்டுமென வேண்டினர். அசிவிடோவும் தயக்கத் துடன் இணக்கம் தெரிவித்தான். சுயவிருப்பில் கத்தோலிக்க மதத்தைத் தழுவுபவர்களுக்கு இடமளிக்கப்பட்டது. இதுவரை

பலாத்காரமாக மதமாற்றம் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முடிவிற்குக் கொண்டுவருவதெனவும் இரு தரப்பினரும் இணக்கத்துக்கு வந்தனர். இம் மாநாட்டில் சிங்கள தரப்பிற்கு தலைமை தாங்கிய அந்தோனியோ முதலி போர்த்துக்கேய மன்னனை இலங்கை மன்னனாக ஏற்க ஒழுங்கு செய்தான். போர்த்துக்கேயக் கொடிகளை உயரத்தில் பிடித்தவண்ணம் அவனும் சகாக்களும் கொழும்பில் வீதிவலம் வந்தனர். 'கோட்டை மன்னன், பிலிப் மன்னன்' என்ற கோஷம் அவ் ஊர்வலத்தில் எதிரொலித்தது. அசிவிடோ அவனின் இலங்கைப் பிரதிநிதியானான். 'மல்வானை மன்னன்' என்ற பட்டம் இச்சமயத்தில் அவனுக்குச் சூட்டப்பட்டது. போர்த்துக்கேய ஆட்சிப் பிரிவுகள் கொழும்பு, மாத்தறை, சப்ரகமுவ, யாழ்ப்பாணம் என நான்கு திசாவனிகளாக பிரிக்கப்பட்டு நிருவாகம் சீரமைக்கப்பட்டது.

எனவே கம்பஹ மாவட்டத்தின் மல்வானையில் கூட்டப்பட்ட மாநாடும் அதன் தீர்மானங்களும் இலங்கை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைவதை இங்கு காணலாம்.

**மல்வானை**

மல்வானை சிங்கள அரசர் காலம் முதல் பிரசித்திபெற்ற ஒரு கோட்டையாகும். இராஜசிங்க மன்னனின் வீழ்ச்சியுடன் 1591-1630 வரை இது போர்த்துக்கேய தேசாதிபதிகளின் வாசஸ்தலமாக விளங்கியது. இங்கு வாழ்ந்த போர்த்துக்கேய தேசாதிபதி ஜெரனிடோ டி அசிவிடோ தன்னை ஒரு மன்னன் என்ற தோரணையிலே இங்கு வாழ்ந்தான். அவனை மக்கள் 'மல்வானே ரஜ்ஜுருவோ' (அரசன்) என அழைத்தனர். 1565 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையை விட்டுச் செல்லும்பொழுது அதனைத் தரைமட்டமாக்கிவிட்டுச் சென்றனர். எனவே புதுத் தலைநகரமொன்றின் தேவையை ஈடுசெய்யவே மல்வானை தெரிவு செய்யப்பட்டது. 6 ஆம் புவனேகபாகு காலத்தில் மலல தேசத்திலிருந்து இலங்கைக்கு வந்த ஏழு மலல இளவரசர்களில் ஒருவருக்கு துன்னால மூலம் எல்லை குறித்து வழங்கப்பட்ட பிரதேசமாகவும், 'மல்வத்த' அல்லது மல்வானை 'வித்திபொத்' எனும் பண்டைய செய்தி நூல்களில்கூட குறிப்பிடப்பட்டுள்ளது. அசிவிடோ தனக்குப் பின்னர் வந்தவர்களுக்கும் மல்வானையை தொடர்ந்து ஆட்சி பீடமாக

வைத்திருக்கும்படி வேண்டினான். இவனுக்குப் பின்னர் கொன்ஸ்தந்தின் டி சா இங்கு ஆட்சி செலுத்தினான். இம்மாளிகை இருந்த பிரதேசம் மாளிகாவத்தை என அழைக்கப்படுவதும் இன்று அல் முபாறக் மத்திய கல்லூரி உள்ள பிரதேசம் 'மல்வத்த' என வழங்கப்படுவதும் மல்வானையின் வரலாற்று முக்கியத்துவத்தை பிரதிபலிக்கின்றன.

அக்காலத்தில் மல்வானையில் இரு களங்கள் இருந்தன. இவற்றில் பெரியது வெகுகாலம் தூர்ந்துபோய் காணப்பட்டது. பின்னர் அரசாங்கத்தினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. குளத்தின் நீர் நிரம்பி வடியும் பகுதியை 'வான' என சிங்களத்தில் கூறுவர். இவ்விடத்தில் மலர்கள் சேகரம் பெற்று நீருடன் மலர்களும் நிரம்பி வடிவதால் 'மல்வான' என அழைக்கப்பட்டு அது பிரதேசத்தைச் சுட்டியதெனக் கூறலாம். போர்த்துக்கேயரின் நினைவுச் சின்னங்களாக படை வீரர்கள் தாங்கிய 'காபிரி கொடெ'வும் பூந்தோட்டப்பகுதியும் விளங்குகின்றன. தோட்டப்பகுதி மட்டுமன்றி மல்வானைக் கோட்டைப்பகுதியும் வெகுகாலமாக முஸ்லிம்கள் கையிலே இருந்ததாக பிரபல வரலாற்றாசிரியர் வீ. டீ. த. லெனரோல் குறிப்பிடுகிறார். மல்வானை கடைப் பிரதேசம் முஸ்லிம்களின் ஆதிக்கப்பகுதியாக விளங்கியது. 1603 இல் ஏற்பட்ட கலவரத்தில் சிங்களவர்களால் இங்கிருந்த போர்த்துக்கேய மாளிகை தீக்கிரையாக்கப்பட்டது. 1613இல் தொன் மனுவெல் என்ற சேனாதிபதி மல்வானையிலிருந்து படையெடுத்துச் சென்று பதுளை நகரைத் தீக்கிரையாக்கினான். 1618 இல் குருவிட்டரால எனப்பட்ட அந்தோனியோ பரெந்து என்ற சிங்களத் தளபதிக்கு எதிராக கொன்ஸ்தந்தின் டி சா நடாத்திய யுத்தத்தை வர்ணிக்கும் 'கொன்ஸ்தந்தினு ஹடடன' என்ற அழகியவண்ண முஹறவெட்டியின் போர்க்காவியம் மல்வானையிலிருந்து புறப்பட்ட படைகளில் அராபியர், மலாயர் உட்பட பல இனத்தவர்கள் பங்கு கொண்டதாகக் குறிப்பிடுகிறது. இதனைப் பின்வரும் பாடல்களால் அறியலாம்:

களிங்கு, தெலிங்கு, கன்னடி உருமு ஸி
கவிஸி, கபிஸி, அராபி இஸ்பா ஸி
ஜபவக, கொங்கன, சீன பரா ஸி
நிக்முனு அவி லெலவா பெனவா ஸி.

இக்கவிஞர் இப்பகுதியில் வாழ்ந்தவராவார். பின்னர் கத்தோலிக்க மதத்தைத் தழுவி போர்த்துக்கேயரின் தோம்பு ஒன்றைத் தயாரித்தார். சிங்கள இலக்கியத்திற்கு இவர் செய்த பங்களிப்பு முக்கியமானது.

1628 ஆம் ஆண்டு கொன்ஸ்தந்தின் டிசா மல்வானையிலிருந்தே செனரத் மன்னனுக்கு எதிராகப் படையெடுத்தான். 1630ஆம் ஆண்டு அவன் மேற்கொண்ட மற்றுமொரு படையெடுப்பின்போது வெல்லவாயவில் 'ரன்தெனிவெல' என்ற இடத்தில் செனரத் மன்னனின் 17 வயது மகன் மகா அஸ்தான குமாரன் எனப்பட்ட இரண்டாம் இராஜசிங்கனின் 'அலுபொத' மாளிகையிலிருந்து புறப்பட்ட படைகளிடம் படுதோல்வி அடைந்து கொன்ஸ்தந்தின் டி சாவும் இறந்தான். சிங்களப் படையுடன் அரசனின் முஸ்லிம் மனைவிக்கு உதவியாக வந்த முஸ்லிம் படையொன்றும் தோளோடு தோள் சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடியதாக ஸ.ஐ. சுமனசேகர பண்டாவின் 'ஊவே தாயாத' என்ற நூல் குறிப்பிடுகிறது.

இக்காலப்பிரிவில் இலங்கைக்கு வருகை தந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை ஆண்டொன்றிற்கு 500 - 600 க்கு இடைப்பட்டிருந்தது. இலங்கையில் வாழ்ந்த போர்த்துக்கேயருக்குச் சொந்தமான நிலங்களில் விளைந்த பாக்கினை முஸ்லிம்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டு தொம் அன்குடா டி நொரண்ஹோ முஸ்லிம்களுக்கு சில சலுகைகளை வழங்கினான். எனினும் 1597 - 1600 வரை கோவாவில் வைஸ்ராயாக இருந்த கனன்ட் விடிகுவேரி இலங்கையிலுள்ள முஸ்லிம்களை வெளியேறும்படி கட்டளையிட்டான். பின்னர் அசிவிடோ கோவாவில் வைஸ்ராயாக இருந்த பொழுது (1612 - 1617) 1613 இல் விடுத்த பிரகடனத்தின்படி பருவக்காற்று காலங்களுக்கு இடைப்பட்ட காலங்களில் அன்றி ஏனைய காலங்களில் கொழும்பில் முஸ்லிம்கள் இருக்க அனுமதிக்கப்படவில்லை. எனினும் சீதாவக்கை இராஜசிங்கன் காலம் முதல் இந்நகரில் வசித்தவர்களுக்கும் சுதேசிய முஸ்லிம்களுக்கும் விதிவிலக்கு வழங்கப்பட்டது.

### ஒல்லாந்தர் காலம்: (1658 - 1796)

ஒல்லாந்தர் காலத்தில் 1758 - 60 க்கும் இடைப்பட்ட விடுதலைப் போர்க்கலவரங்களின் போது கம்பஹ மாவட்டத்தின் அடுத்துள்ள ஹேவாகம் கோரளையின் 'கிரிவந்தெல' பகுதியில் வாழ்ந்த காஸி லெப்பே சுலைமான் லெப்பே என்ற பிரபல வைத்தியர் கண்டி

இராசதானியின் மூன்று - நான்கு கோரளையில் குடியேறினார். இவரது வைத்தியத் திறனைக் கேள்வியுற்ற தும்பறை திசாவை தனது மகனுக்கு சிகிச்சை செய்ய அவரது உதவியை நாடினார். சிகிச்சையளித்த பின்னர் இவ்வைத்தியர் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழுள்ள கொழும்பு மாவட்டத்தின் சியனே கோரளைக்குத் திரும்பினார் என 1792 ஆம் ஆண்டு நடைபெற்ற டச்சு அரசியல் கவுன்ஸிலின் இரகசிய கூட்ட அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

கண்டி இராசதானிக்கும் டச்சுப் பிராந்தியங்களுக்கும் இடையில் இலகுவாகச் சென்று வர அவருக்கு இருந்த வாய்ப்புகள் அவரது பிரபல்யத்திற்கும் அவரது இருதர தொடர்புகளுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். 1746 ஆம் ஆண்டின் முஸ்லிம்களுக்கும் செட்டிகளுக்கும் காணி வழங்குவதற்கான உத்தியோக முட்டுக்கட்டைகள் 1765 ஆம் ஆண்டு நீக்கப்பட்டு பணப்பயிர் உற்பத்திக்காக நிலங்கள் வழங்கப்பட்டமை பட்டியல்களிலிருந்து அறியமுடிகிறது. 1788 ஆம் ஆண்டு தேசாதிபதியின் கவுன்ஸிலுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின்படி 'சியனே ஹாவிட்டிகம' கோரளையைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்களுக்கு 8 வெவ்வேறு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## கண்டி இராசதானி: (1600 - 1815)

கண்டி இராசதானி காலப்பிரிவில் கரையோரப்பகுதிகளான கற்பிட்டி, புத்தளம், சிலாபம், கம்மல்துறை, நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, பேருவளை, காலி முஸ்லிம்கள் வர்த்தகத்தில் ஆதிக்கம் பெற்றுத் திகழ்ந்தனர். கண்டி இராஜதானியின் எல்லைப்புற நகரங்களான ருவான்வெல்லை, சீதாவக்கை, கட்டுவன என்பன ஊடாக வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டதுடன் சீதாவக்கை, ருவான்வெல்ல நகரங்களின் வழியாகக் கொழும்பிற்கும்; கட்டுவன ஊடாகத் தெற்குப் பகுதிக்கும் கண்டி இராஜதானியின் உற்பத்திப் பொருட்கள் அனுப்பப்பட்டன. இவற்றில் சம்பந்தப்பட்ட பல முஸ்லிம் வர்த்தகர்களின் தவலங்கள் பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன.

மலாயர் :

போர்த்துக்கேயர் காலம் முதலே மலாயர் கம்பஹ மாவட்டத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு அழகிய வண்ண முஹவெட்டி எழுதிய 'கொன்ஸ்தந்திறு ஹட்டன' என்ற

போர்க்காவியம் சான்று பகர்கிறது. அதில் 1668 ஆம் ஆண்டு மல்வானையிலிருந்து புறப்பட்ட போர்த்துக்கீச படையில் ஜாவகர்களும் பங்குபற்றியதாகக் குறிப்பிடுகின்றது. டச்சு ஆட்சியின் கீழ் இலங்கை வந்த மலாயர்களில் பல கிழக்கிந்திய இனத்தவர்கள் அடங்குவர். தும்பொய்ன், பன்டன், பாலிடிக், ஜாவா, மதுர், சுமனப்பர் என்போல் மலாயர் என்ற பதத்தில் அடக்கம் பெற்றனர். சீதாவக்கைக் கோட்டையில் டச்சுப் படைஅணியில் அம்சொய்ன் மலாய வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். 1680 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த கிறிஸ்தோபர் ஸ்கூலிட்ஸர் இது பற்றிக் குறிப்பிடுகிறார். அவரது குறிப்புக்களின்படி "சீதாவக்கை கோட்டை உயர்ந்த மலைப் பாதையில் அமைந்திருந்தது. இதற்கு அருகில் ஓடிய ஆற்றங்கரையை அடுத்து போர்த்துக்கேயரால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதாவக்கை மன்னனின் மாளிகை காணப்பட்டது. இங்கு அம்பொய்ன்கள் டச்சுப்படைச் சேவைக்கு வைக்கப்பட்டிருந்தனர். அவர்களது தலைவன் 'அலோன்' என அழைக்கப்பட்டான். பகலில் அவர்கள் தமது மனைவிமார்கள் சகிதம் கோட்டைக்கு வெளியே வீதிகளில் நிறைந்து காணப்பட்டனர். எனினும் இராக்காலங்களில் அவர்கள் கோட்டைக்குள் இருக்க வேண்டும். அவர்கள் வாள்களையும் பிச்சுவாக்களையும் அணிந்தனர். அவர்கள் தமது சொந்த மொழிக்கு மேலதிகமாக மலாய், சிங்களம், போர்த்துக்கேய, டச்சு மொழிகளைப் பேசினர். சீட்டு விளையாட்டுப் பிரியர்களான இவர்கள் அதில் ஈடுபட்டு முழுச் சம்பளத்தையும் இழந்தனர். ஞாயிறு தினங்களில் போர்க்கோழிச் சண்டையில் ஈடுபட்டனர். அவர்கள் பலவகையான கூடைவகைகளைத் தயாரித்துத் தமது வருமானத்தைச் சமாளித்துக் கொண்டனர். இவர்களின் மனைவிமார்களில் ஒரு பகுதியினர் சிங்களவர்களாகவும் மலபாரிகளாகவும் இருந்தனர். பாசறைகளில் வீரர்களுடன் அவர்களது மனைவிமார் தங்குவது வழமையாயினும் டச்சு-கண்டி இராசதானிகளுக்கு இடையிலான யுத்தங்களில் மலாயப் படை வீரர்களின் மனைவிமாரும் போர்க் களத்துக்கு தமது கணவன்மார்களைத் தொடர்ந்து சென்றனர். இது டச்சு இராணுவ அதிகாரிகளுக்குக் கட்டுப்படுத்த முடியாத ஒரு தொல்லையாக விளங்கியுள்ளது."

இன்று கம்பஹா மாவட்டத்திலுள்ள ஜா - எல பிரதேசம் இம் மலாயர்களின் பங்களிப்பை எடுத்துக் காட்டச் சிறந்த

உதாரணமாகும். அத்தனகலு ஓய விலிருந்து மா எலிய வரையுள்ள நீர்ப்பாதையை 15 அடிவரை அகலமாக ஜாவா இனத்தவர்கள் வெட்டியமையால் இந்நீர்ப்பாதை ஜா-எல என அழைக்கப்படுகின்றது.

மல்வானை பிரதேசத்திற்கே உரித்தான றம்புட்டான் பழத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் மலாய் இனத்தவர்களே. இவர்கள் மேலே குறிப்பிட்ட அம்பொய்ன் மலேயர்களாக இருக்கலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. பறங்கிக் கோட்டை - கலாநிதி டிகிரி அபேசிங்க
2. போர்த்துக்கேய யுகம் - ஏ. ஜீ. த. சில்வா
3. புராவுருத்த - டீ. பி. ரணசிங்க
4. லங்கா புராவுருத்த - ரீ. பீ. த லெனரோல்
5. ராஜாவலிய - பேராசிரியர் ஏ. வீ. சுரவீர
6. சத்கோரளே வித்தி - டீ. டீ. சோமரத்ன
7. சீதாவக்கபுர யுகய - சங்கைக்குரிய வேரஹெர ஆரியவன்ச தேரர்
8. இலங்கை முஸ்லிம்கள் - கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
9. இலங்கையும் மேற்கத்திய நாடுகளும் - ஹோரேஸ் பெரேரா.

# 3

# குடியிருப்புக்களின் பரம்பல்

எம். எஸ். எம். மசூத்

இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களில் முதன்மையான ஒரு மாவட்டமாக கம்பஹ மாவட்டம் விளங்குகிறது. சனத்தொகை அடிப்படையில் கொழும்பு மாவட்டத்துக்கு அடுத்து சனத்தொகை கூடிய மாவட்டம் இம்மாவட்டமாகும். எண்ணிக்கையில் முஸ்லிம்கள் குறைவாக இருந்தாலும் பழமை வாய்ந்த முஸ்லிம் குடியிருப்புக்கள் பல இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. பதின்மூன்று (13) பிரதேச செயலாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இம்மாவட்டத்தில், 11 பிரிவுகளில் முஸ்லிம் கிராமங்கள், பள்ளிவாசல், முஸ்லிம் பாடசாலை என்பன அமைந்துள்ளன. ஏனைய பிரிவுகளில் அண்மைக் காலம் தொட்டு முஸ்லிம்கள் சிதறி வாழத் தொடங்கியுள்ளனர். இன்று மாவட்டம் முழுவதிலும் முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கள் தாய்மொழியாகத் தமிழை உபயோகிப்பதோடு இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றி வாழ்கின்றனர். இக்குடியிருப்புக்கள் இப்பிரதேச சமூக, பொருளாதார, இயற்கை அமைப்புகளோடு பின்னிப்பிணைந்துள்ளன. முஸ்லிம்களின் பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் ஏனைய மாவட்ட முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களை ஒத்ததாகவே உள்ளன.

90% க்கும் அதிகமான சிங்கள மக்கள் வாழும் இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் அவர்களுடன் மிக அன்னியோன்யமாக வாழ்கின்றனர். பண்டைய காலம் தொட்டே அரசியல் ரீதியாகவும் பெரும்பான்மைச் சமூகத்துடன் தொடர்பினை வைத்துள்ளனர்.

இம்மக்களின் குடியேற்றம், குடிப்பரம்பல் எவ்வாறு இங்கு ஆரம்பித்தன, நிலைகொண்டன, என்பது பற்றி அறிவதற்கான முயற்சியே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மாவட்டம்

இலங்கையின் தலைநகரான கொழும்பை முதன்மையாகக் கொண்ட கொழும்பு மாவட்டம் 1979ம் ஆண்டு இருமாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இன்று மாவட்டச் செயலகம் அமைந்துள்ள கம்பஹா நகரைத் தலைநகராகக் கொண்ட வடபகுதி கம்பஹா மாவட்டம் எனப் பெயரிடப்பட்டது. இம்மாவட்டத்தின் விஸ்தீரணம் 1386.6 ச.கி.மீ.

இம்மாவட்டத்தின் கிழக்கே, கேகாலை மாவட்டமும் மேற்கே இந்து சமுத்திரமும் தெற்கே களனி கங்கையும் வடக்கே மாஓயாவும் எல்லைகளாகவுள்ளன.

கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்திலுள்ள மேட்டு நிலமும் மாவட்டத்தின் மத்தியில் ஓடும் அத்தனகல்ல ஓயா, பஸ்யாலை படலிய என்னும் இடத்தில் அமைந்துள்ள இயற்கை நீரூற்றுக்களும் குறிப்பிடத்தக்க இயற்கைக் கொடைகளாகும். இவ்வியற்கை அமைப்புக்கள், நதிப் பள்ளத்தாக்குகள், மேற்குக் கரையிலுள்ள பரந்த கடற்கரைப் பிரதேசமும் இம்மாவட்ட மக்களின், சமூக, பொருளாதார, வரலாற்றுத் துறைகளில் பெரிதும் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

அண்மைக் காலங்களில் இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்ட ஜா-எல கைத்தொழில் பேட்டை, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம், பியகம சுதந்திர வர்த்தக வலயம், மத்திய வகுப்பினருக்கான வீடமைப்புத்திட்டங்கள் (ரன்பொகுணுகம) என்பன குடிப்பரம்பலில் கணிசமான அளவு ஆதிக்கம் செலுத்தியுள்ளன. முஸ்லிம்களின் குடிப்பரம்பலிலும் அதிகரிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றன.

இம்மாவட்டத்தின் பண்டைய நிலையை ஆராயும்பொழுது அநுராதபுரக் காலத்தில் அத்தனகல்லைப் பிரதேசம் முக்கிய இடமாக விளங்கியதோடு களனி ஒரு இராசதானியாவும் இருந்துள்ளது. சீதவக்கை காலத்தில் இன்று முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மல்வானை முக்கிய ஆற்றுத்துறை யாகவும்,போர்த்துக்கீச தளபதி அஸவிடோவின் வாசஸ்தல மாகவும் இருந்துள்ளது.

கம்பஹ மாவட்டத்தின் மொத்த விஸ்தீரணமான 1386.6 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு, பிரதேச செயலகப் பிரிவு வாரியாக

பின்வருமாறு:

| பிரதேச செயலகப்பிரிவு | | பரப்பு கி. மீ. |
|---|---|---|
| 01. | நீர்கொழும்பு | 30.8 |
| 02. | அத்தனகல்ல | 154.0 |
| 03. | பியகம | 61.6 |
| 04. | களனிய | 21.9 |
| 05. | மீரிகம | 186.6 |
| 06. | மினுவன்கொடை | 130.5 |
| 07. | வத்தளை | 54.6 |
| 08. | மகர | 98.8 |
| 09. | தொம்பே (வேக்க) | 178.3 |
| 10. | ஜாஎல | 64.0 |
| 11. | கட்டான | 107.6 |
| 12. | திவுலபிட்டிய | 202.2 |
| 13. | கம்பஹா | 95.7 |
| | ச. கி. மீ. | 1386.6 |

## ஆரம்ப நிலை

பண்டையக் காலம் தொட்டே, அராபியர்கள் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தனர். 15ம், 16ம் நூற்றாண்டுகளில் கீழைத்தேச வர்த்தகத்தில் இலங்கை முக்கிய இடம் வகித்தது. இவ்வர்த்தகத் தொடர்பு காரணமாக, காலி, பேருவல, களுத்துறை, கொழும்பு, நீர்கொழும்பு, புத்தளம், கற்பிட்டி முதலிய கரையோர நகரங்கள் துறைமுகங்களாகப் பிரசித்தி பெற்றிருந்தன. இத்துறைமுக நகரங்களில் முதலில் முஸ்லிம்கள் குடியேற்றம் காரணமாகவும் சனப்பெருக்கம் கூடிச் சென்றதாக வரலாறு கூறுகிறது. 1518ல் 'பார்போஸா' என்ற போர்த்துக்கேயர் எழுதிய நூல் ஒன்றில் கரையோரத் துறைமுகங்களில் முஸ்லிம்களே பெருமளவு காணப்பட்டதாக எழுதியுள்ளார். அராபியர்களும், பாரசீகர்களும் பெருமளவில் இலங்கையில் வர்த்தகத்தில் ஈடுபட்டதால் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பெற்றனர். முஸ்லிம்கள் இரத்தினங்களையும், முத்துக்களையும் விற்றுப் பெரும் பணக்காரர்களாகத் திகழ்ந்தனர் என எமர்சன் டெனன்ட் என்பவர் கூறியுள்ளார்.

இவ்வாறு முஸ்லிம்கள் இலங்கையின்பால் ஈர்க்கப்படுவதற்கு, வேறு நாடுகளில் கிடைப்பதற்கரிய இரத்தினம், முத்து, யானைத்தந்தம், வாசனைத்திரவியங்கள் கிடைத்தமையும், பண்டைய அரசர்கள் காட்டிய ஒத்தாசையும் காரணம் எனலாம். இவ்வாறு கரையோர நகரங்களில் குடியேறிய முஸ்லிம்கள், நாளடைவில் உள்நாட்டிலும் சென்று குடியேறினர். ஐரோப்பியரின் வருகையின் பின் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் பாதுகாப்பான இடங்களில் குடியேறினர். இக்குடியேற்றங்களின் வளர்ச்சியே இன்று கம்பஹ மாவட்டத்திலும் காணப்படுகின்ற முஸ்லிம் கிராமங்கள்.

வர்த்தக நோக்கம்

முதலில் வர்த்தக நோக்கமாகவே முஸ்லிம்கள் கரையோரங்களில் குடியேறினர். வர்த்தக நோக்கத்திற்காக நாட்டின் உள்பகுதிக்கும் சென்ற முஸ்லிம்கள், நதிக்கரைகளிலும், பிரதான போக்குவரத்துப் பாதைகளின் அண்மையிலும் குடியேறினர். உள்ளூர் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும், பாக்கு, மிளகு, கறுவா முதலிய பொருட்களைத் துறைமுகங்களுக்கு எடுத்துச் சென்று, இறக்குமதி செய்யப்பட்ட உப்பு, கருவாடு, புடவை முதலிய பொருட்களை நாட்டின் உட்பகுதிக்கு எடுத்துச் சென்று விநியோகித்து வியாபாரத்தினை விருத்தி செய்தனர். வியாபாரவிருத்தியின் நோக்கமாக இருப்பிடங்களை உள்நாட்டிலும் அமைத்துக் கொண்டனர். முஸ்லிம் குடிப்பரம்பல் இம்மாவட்டத்தில் ஏற்பட இவ்வர்த்தக முயற்சி முதன்மைக் காரணியாக அமைந்தது.

அரேபியா, யெமன், இந்தியா முதலிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த வலிமார்கள், பிற்காலத்தில் வெலிகாமத்தில் இருந்து வந்த மௌலானாமார்களும் இம்முஸ்லிம் குடியிருப்புகளில் ஆத்மீகப் பிரசாரங்களை மேற்கொண்டனர். சரியான ஆத்மீக வழிகாட்டல் இன்மையாலும், பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் கலந்து வாழ்ந்தமையாலும் இவர்களின் வாழ்க்கையில், சிங்கள கலாசாரப் பாரம்பரியங்கள் கலந்து இருந்தன. இச்சந்தர்ப்பத்தில், தஃவாப் பணியை மேற்கொண்டவர்களின் முயற்சியால் முஸ்லிம் குடியேற்றங்களில் ஆத்மீகஒளி பரவியது. தக்கியாக்களையும் அந்தந்த ஊர்களில் மரணித்த வலிமார்களின் அடக்கஸ்தலங்களில் ஸியாரங்களை

அமைத்தமையாலும், பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டமையாலும் முஸ்லிம் குடிப்பரம்பல்கள் விருத்தியடைந்தன.

இவ்வாறு ஆத்மீகப் பிரசாரம் செய்து முஸ்லிம் குடிப்பரம்பலில் ஆதிக்கம் செலுத்திய ஞானிகளுள், மல்வானைக்கு வந்த அஸ்ஸெய்யதுஸ் ஸாதாத் அஹ்மத் இப்னு முபாரக் மௌலானா, அஷ்ஷெய்கு முஸ்தபா(வலீ) அவர்களும், கம்மல்துறையில் காதிரியா தக்கியாவை நிர்மாணித்த செய்கு சுலைமான் அல்காதிரி அவர்களும் கஹடோவிட்டயில் ஆத்மீகப் பணிபுரிந்த செய்கு அப்துல்லா பாதிப் (ரஹ்) அவர்களும் பூகொடையில் தஃவாப் பணிபுரிந்த அஸ்ஸெய்யித் பா ஹாசிம் பா அலவி மௌலானா, கல்-எலியாவில் தஃவாப் பணிபுரிந்த மௌலானா மௌலவி பாஸில் செய்கு சுலைமானுல் காதிரி அவர்களும் குறிப்பிடத்தக்கவர் களாவர். இப்பெரியார்களின் தஃவாப் பணிகள் முஸ்லிம் குடிப்பரம்பலின அபிவிருத்திக்குக் காரணமாக அமைந்தன.

### குடிப்பரம்பல்

1981ம் ஆண்டையக் குடிசனக் கணக்கெடுப்பு அட்டவணையை நோக்கும் போது, இம் மாவட்டத்தின் பதின்மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் முஸ்லிம்கள் வாழ்வதனை அவதானிக்கலாம். எனினும் பத்துப்பிரிவுகளிலே தான் பாரம்பரியக் குடியிருப்புக்கள் அமைந்துள்ளன. பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக இக்குடியிருப்புக்களின் வரலாற்றினை நோக்கலாம்.

இக்குடியிருப்புக்கள், போர்த்துக்கீசரின் வருகைக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் அரிதானதாகவே காணப்பட்டாலும், போர்த்துக்கீசரின் தோம்புகளில் கரையோரப் பட்டினங்களில் முஸ்லிம்கள் பெருமளவு காணப்பட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளமை பழைய குடியிருப்புக்கள் இருந்தமைக்கு ஆதாரமாகவுள்ளது.

நீர்கொழும்பில் முதலில் காமச்சோடையில் எமன் தேசத்தைச் சேர்ந்த ஒரு குடும்பமும், சில இந்திய வர்த்தகர்களும் குடியேறியுள்ளனர். ஓலையினால் ஒரு பள்ளிவாசலையும் அமைத்துள்ளனர். 1521ம் ஆண்டு கோட்டை இராச்சியத்தின் மன்னன் 6ம் விஜயபாகு 'விஜயபாகு கொஸ்லய' என்ற புரட்சி மூலம் கொலை செய்யப்பட, கோட்டை இராச்சியம் கோட்டே, சீதாவக்க, றைகம என மூன்று இராசதானிகளாகப் பிரிந்தது.

இதனைத் தொடர்ந்து 1526ம் ஆண்டு முஸ்லிம்களைப் புவனேகபாகு கோட்டையிலிருந்து வெளியேறுமாறு பணித்தான். போர்த்துக்கீசரின் தூண்டுதலால் இப்பிரகடனம் செய்யப்பட்டது. கரையோர நகரங்களிலிருந்து வெளியேறிய முஸ்லிம்கள் காமச்சோலைப்பகுதியில் குடியேறியுள்ளனர். இதனால் இங்கு ஒரு முஸ்லிம் குடியேற்றம் வளர்ச்சி அடைந்தது.

இதே கால கட்டத்தில் கண்டியிலிருந்து பஸ்யாலை, மீரிகம ஊடாகவந்த அஸீஸ் லெப்பே தாய்லான் என்பவர் பெரியமுல்லையின் எல்லையான தீன் சந்தியில் குடியேறியுள்ளார். இப்பகுதியில் அன்றிருந்த தொழிற்சாலையொன்றில் உயர் அதிகாரியாகவிருந்த இந்தோனிஷியர் ஒருவரும் வாழ்ந்துள்ளார். கொழும்பு, அளுத்கம, பேருவல முதலிய இடங்களில் இருந்து வந்த முஸ்லிம்கள் மஹர, ஹுனுப்பிட்டி பகுதிகளில் காணிகளை வாங்கிக் குடியேறியுள்ளனர். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இக் கிராமமே இன்று, பெரியமுல்லை, ஹுணுப்பிட்டி, உடையார் தோப்பு, மஹர ஹுணுபிட்டி என்ற பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இன்று பல பள்ளிவாசல்களையும், தனியான பாடசாலையும் அமைந்துள்ள ஒரு பெரிய முஸ்லிம் குடியிருப்பாக அமைந்துள்ளது. தொடர்ந்து வளர்ச்சி கண்ட இப்பிரிவு முஸ்லிம்கள் அரச சேவையிலும் செல்வாக்கடைந்து தமது தனித்துவத்தைப் பேணி வாழ்ந்துள்னர். 1750ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 155 வருடங்கள் ஒரு முஸ்லிம் குடும்பத்தினர் பொலிஸ் விதானையாகக் கடமை புரிந்துள்ளனர். இவர்களின் பெயர்கள் - சின்ன பக்கிரி, மொகம்மது தம்பி, இஸ்மல மரிக்கார், மூனா வானா சம்சுதீன், ஈனா வீனா உமர்தீன் எனவும், சம்சுதீன் என்பவர் 15 வருடங்கள் டவுன் ஆராச்சியாகவும் இஸ்மல மரிக்கார் சியனா கோரளையில் திஹாரிப் பகுதிக்கு கிராமத் தலைவராக 10 ஆண்டுகள் இருந்ததாகவும் நியமனக் கடிதப் பிரதியொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் வட எல்லையாகிய மாஓயா கடலில் சங்கமிக்கின்ற இடத்தில் அமைந்துள்ள கம்மல்துறை என்ற இடத்தில், அளுத்கம, களுத்துறை முதலிய இடங்களில் இருந்து வந்த முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர். பெரியமுல்லையிலிருந்தும் பலர் இப்பிரதேசத்திற்குள் குடிபெயர்ந்துள்ளனர். இங்கு குடியேறிய முஸ்லிம்கள், மீன்பிடித்தல், சங்கு குழித்தல்,

வியாபாரம் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர். ஒல்லாந்தர் காலத்தில் மேசன் தொழிலில் ஈடுபட்டார்கள். இன்று பலர் மேசன் தொழில் செய்பவர்களாகவுள்ளனர். கொழும்புக்கும் - புத்தளத்துக்கு மிடையில் வெட்டு வாய்க்கால் வெட்டியபின் இப்பகுதி மேலும் பிரபல்யம் அடைந்தது. கம்மல்துறைப் பள்ளிவாசல் அமைக்கத் தேவையான பொருட்கள் இவ்வெட்டுவாய்க்கால் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

இக்கிராமத்துக்கு வந்த செய்கு சுலைமான் அல் காதிரி என்ற பெரியார் தஃவாப் பணி புரிந்து காதிரிய்யா தக்கியாவைக் கட்டியுள்ளார். இந்தச் சூழலும் முஸ்லிம்களின் குடிப்பரம்பலின் வளர்ச்சிக்குச் காரணமாக அமைந்துள்ளது.

இன்று பெரியமுல்லை, கம்மல்துறை, பலகத்துறை, தலுவகொடுவ, பள்ளஞ்சேனை வடக்கு, பள்ளஞ்சேனை தெற்கு, காமச்சோடை, கொச்சிக்கடை என முஸ்லிம்கள் வாழும் பிரிவுகள், நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் நீர்கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட முஸ்லிம் குடியிருப்புக்களாகும். யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் பல இப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். கம்பஹ மாவட்டத்தில் அதிக முஸ்லிம்கள் வாழும் ஒரு பிரிவாக இப்பிரதேசம் விளங்குகின்றது.

பியகம பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மல்வானைப் பிரதேசம் இம்மாவட்டத்திலுள்ள ஒரு முக்கிய முஸ்லிம் பிரதேசமாகும். இப்பிரதேசம் பண்டைய ஆரிய குடியேற்றம் இடம் பெற்ற களனிக்குப் பக்கத்தில்களனி நதிக்கரையில் அமைந்துள்ளமையால் முக்கியத்துவம் பெறுகிறது. களனி நதியில் களனிக்கு அடுத்து அமைந்துள்ள ஆற்றுத்துறையாக மல்வானை விளங்கியது. கொழும்பு-சீதாவக்கை வர்த்தகப்பாதையில் படகுகள் நிறுத்தப்படும் முக்கிய துறையாகவும் மல்வானையே விளங்கியது. பண்டையகாலம் தொட்டு வர்த்தகத் தொடர்புகள் இருந்த பிரதேசத்தில் 600 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அதாவது 14ம் நூற்றாண்டுகளில் முஸ்லிம்கள் குடியிருந்ததாகச் சான்றுகள் உள.

ஆரம்பத்தில் இவ்வூரின் தெற்கில் ஹிரியமுல்லை என்ற இடத்தில் மூன்று முஸ்லிம் குடும்பங்களும், மல்வானையில் இரண்டு முஸ்லிம் குடும்பங்களும் குடியேறினர். காலக் கிரமத்தில் இக்குடும்பங்கள் பல்கிப் பெருகி, மரவியாபாரத்தில் ஈடுபட்டு,

பெரும் லாபம் சம்பாதித்து சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர். சீதாவக்கை இராச்சியத்தின் முக்கிய பிரதேசமாக விளங்கிய இப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள், சிங்களப் படைகளில் போர் வீரர்களாகவும், அரசியல் ஆலோசகர்களாகவும், வைத்தியர் களாகவும் விளங்கி சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனால் அரசர்களும், பிரதானிகளும், சிங்கள மக்களும் முஸ்லிம் குடியேற்றத்தை ஆதரித்தனர். போர்த்துக்கீசர் வருகைக்குப் பின், கரையோர நகரங்களான, பேருவலை, அளுத்கம, முதலிய இடங்களில் இருந்து முஸ்லிம்கள் இங்கு வந்து குடியேறினர். வர்த்தக நோக்கமாக வசதி படைத்த குடும்பங்கள் சில வேறு பகுதிகளிலிருந்தும் வந்து இங்கு குடியேறினர். சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்த இக்குடி யேற்றத்தில் வீழ்ச்சியும் ஏற்பட்டது.

போர்த்துக்கீசர் உள்நாட்டுச் சிங்களவர் மத்தியில் தமது அதிகாரத்தை நிலை நாட்ட மல்வானையை மிகப் பொருத்தமான இடமாகக் கருதினர். இராஜசிங்க மன்னன் மீது அபிமானம் வைத்திருந்த முஸ்லிம்கள் முல்லேரியாப் போரில் பங்குபற்றியமையால் அவர்களைப் பலவீனப்படுத்தவும் மல்வானையைத் தேர்ந்தெடுத்து அஸவிடோ அவனது வாசஸ்தலத்தை அங்கு அமைத்துக்கொண்டான். அஸவிடோவும், போர்த்துக்கீச படைகளும் முஸ்லிம்களுக்கு சொல்லொணாத் தொல்லைகளை ஏற்படுத்தியதால்,தம் இருப்பிடத்தைவிட்டு வெளியேறி படகு மூலம் களனி ஆற்றுவழியே சென்று ஹன்வல்ல, பூகொடைத்துறைகளை அடைந்து கஹடோவிட்ட, திஹாரி முதலிய இடங்களில் குடியேறினர். 1597ம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட மல்வானை உடன்படிக்கையின் பின் 1610ல் அஸவிடோ தனது இருப்பிடத்தை மல்வானையில் இருந்து மாற்றிக் கொண்டான். காலப்போக்கில் மல்வானையை விட்டுச் சென்ற பல முஸ்லிம் குடும்பங்கள் மீண்டும் வந்து குடியேறினர். இவ்வாறு வளர்ச்சி கண்ட முஸ்லிம் குடியேற்றம், காலத்துக்குக் காலம் ஏற்பட்ட களனி நதியின் வெள்ளப் பெருக்கினால் பாதிப்புக்குள்ளாகினர். அக்கால கட்டத்தில் சியனா கோரளையில் செல்வாக்குப் பெற்ற செல்வந்தராகவிருந்த சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கா (காலஞ் சென்ற பிரதமர் எஸ். டப்ளியு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தந்தையார்) தமக்குச் சொந்தமான, தளுக்கலே என்ற மேட்டு நிலத்தை குடியிருப்புக்காக

முஸ்லிம்களுக்கு அன்பளிப்புச் செய்தார். இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் குடிப்பரம்பல், தளுக்கலே, வல்கம, உலஹிடுவலை, யட்டிஹேன போன்ற இடங்களுக்குப் பரவி இன்று மல்வானை நகரம், ரக்ஸபான, அப்துல் லதீப் மாவத்தை, பெலன்கஹ வத்தை, பிரதீபகம, பள்ளம மல்வத்தை, புருலபிட்டிய, கந்தவத்தை, வளவ்வத்தை என்ற பிரிவுகளுக்கும் பரவி உள்ளது.

யடிஹேன என்ற பிரிவு தனியான முஸ்லிம் கிராமமாகி இரு பள்ளிவாசல்களையும், ஒரு முஸ்லிம் பாடசாலையையும் கொண்ட பிரதேசமாக வளர்ச்சியடைந்துள்ளது. இக்கிராமத்தை அடுத்துள்ள சியம்பளாவவத்தை என்ற குடியேற்றத்திட்டத்தில் சில முஸ்லிம் குடும்பங்கள் காணிபெற்று இருப்பிடங்களை அமைத்துள்ளனர். இப்பகுதியில் மலிவாகக் காணிகள் வாங்கக் கூடிய வாய்ப்புகள் இருந்ததனாலும், கொழும்புக்கு அண்மையில் அமைந்துள்ளமை யாலும் வெளியூர் முஸ்லிம்களும் குடியேறி யுள்ளனர்.

பியகம சுதந்திர வர்த்தக வலயம் மல்வானையை அடுத்துள்ளமையால் தொடர்ந்தும் குடிப்பரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது. இவ்வர்த்தக வலயம் அமைந்துள்ள காணியில் அதிகமான நிலப்பரப்பு முஸ்லிம்களுக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பியகம செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாகொல பிரதேசத்திலும், களனி கோனவல என்ற இடத்திலும் அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரு முஸ்லிம் குடியிருப்புக்கள் அமைந்துள்ளதும் அவை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதும் குறிப்பி டத்தக்கதாகும்.

அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் பழமை வாய்ந்த குடியிருப்புக்கள் பல அமைந்துள்ளன. அத்தனகல்ல ஓயாவும், அல்கம ஓயாவும் சந்திக்கின்ற இடத்துக்குப் பக்கத்தில் உடுவன்கல்ல என்னுமிடத்தில் அவர்கள் இடம் பெயர்ந்து கஹடோவிட, உடுகொட, திஹாரிய, பூகொடை, வரக்காப்பொல கிராமங்களில் குடியேறியதாகவும் அறியக்கூடியதாகவுள்ளது. இன்று உடுவன்கல்லைப் பக்கத்தில் ஹனுபொலை என்ற இடத்தில் முஸ்லிம் கிராமம் ஒன்றமைந்துள்ளது. இது உடுவன்கல்ல குடியேற்றத்துக்குப் பின் உருவான கிராமமாகும். இங்குள்ள பள்ளிவாசல் இற்றைக்கு 70 வருடத்துக்கு முன் கட்டப்பட்டது எனவும் அதற்கு முன் இரு பள்ளிவாசல்கள்

இருந்ததாகவும் அறிய முடிந்தது. ஆரம்பத்தில் உடுகொடை, கஹடோவிட்ட ஆகிய இடங்களில் இருந்து தொழுகைக்காக இப்பள்ளிவாசலுக்குச் சென்றுள்ளார்கள் என்பதற்கான சான்றுகள் உள்ளன. இன்று இக்கிராமம் அவ்வளவு வளர்ச்சியடைந்ததாக இல்லாவிட்டாலும், மேற்கூறப்பட்ட வரலாற்றினை நோக்கும்போது 200 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது எனக் கருதமுடியும்.

சீதாவக்கை இராச்சியத்தின் பிரதான போக்குவரத்து மார்க்கமாக விளங்கிய களனி ஆற்றுப் பாதையில், மல்வானை ஆற்றுத்துறைக்கு அடுத்து ஆற்றுத்துறையாக விளங்கியது பூகொடை. வியாபார நோக்கமாக வள்ளங்களை வைத்திருந்தவர்கள் பலர் குமாரிமுல்லை என்ற இடத்தில் குடியேறினர். மல்வானை ஊடாகக் களனி ஆற்றுக்கரையை அடுத்து கண்டிக்குச் சென்ற பாதையில் கராகலமாவத்தை என்ற பாதை இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றது.

ஆற்றுப்பாதை, தரைப்பாதை இரண்டையும் அண்மித்துள்ள இக்கிராமத்தில் சிங்கள அரசிளங்குமரி ஒருவருக்கு அடைக்கலம் அளித்த இடம் என்பதால் குமாரிமுல்லை என அழைக்கப்படுகின்றது.

களுத்துறை, பேருவலை, கொழும்பு முதலிய இடங்களிலிருந்து வியாபார நோக்கமாக வந்தவர்கள் ஆற்றங்கரைக்கு அண்மித்த இடங்களை இருப்பிடமாக அமைத்தனர். வெதரால, ரதுரால, திகஞ்சிரால என்ற மூன்று குடும்பங்கள் முதலாவதாகக் குடியேறியுள்ளனர். இக்குடும்பத்தினரின் வாரிசுகளே இன்று இங்குள்ள முஸ்லிம்களாவர். அதிகமானோர் காலப்போக்கில் திருமணத் தொடர்புகளாலும், மற்றும் கொழும்பு, நாபாவள, மல்வானை முதலிய இடங்களிலிருந்து வந்த மக்களினால் இக்கிராமம் வளர்ச்சி கண்டது.

இன்று மரக்கல கொடல்ல, பள்ளியவத்த என்று அழைக்கப்படுகின்ற இடத்தில் முதல் பள்ளிவாசலை அமைத்திருந்தனர். இதன் பக்கத்தில் ஆற்றில் வள்ளங்கள் நிறுத்திய இடத்தைப் பள்ளியவத்தைத் துறை என்றே அழைக்கின்றனர். இன்றும் இக்காணிகள் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கே சொந்தமானதால் வெள்ள அனர்த்தங்கள் காரணமாக அவ்விடத்தை விட்டுத் தற்போது இருக்கும் இடத்தில்

இரண்டாவது பள்ளியைஅமைத்துள்ளனர். தஃவாப் பணிக்காக இங்கு வந்த செய்யது பா ஹாஸிம் பா அலவி மௌலானா அவர்களின் ஸியாரமும் இவ்வணக்கத் ஸ்தலங்களும் காரணமாக அமைந்தன. வெள்ள அனர்த்தம் காரணமாக ஆற்றங்கரையை அடுத்த மேட்டு நிலங்களில் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். இன்று இக்கிராமம் வளர்ச்சியடைந்து கொஸ்பிடியன, ஒவிட்டிகம, பூகொடை என்ற பிரிவுகளைக் கொண்டுள்ளது. 1000 இற்கு அதிகமானவர்கள் வாழும் இம் முஸ்லிம் குடியிருப்பு தொம்பே பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒரே முஸ்லிம் கிராமமாகும்.

வலகம்பா மன்னன் காலத்தில் யக்கம்முல்லை என்ற இடத்தில் சில முஸ்லிம்கள் குடியமர்ந்து, அவ்விடத்தில் போதிய வசதி இல்லாமையால் பின்னர் அத்தனகல்லை ஆற்றங்கரையில் றத்மரல என்ற இடத்தில் குடியேறியுள்ளனர். அவ்விடத்திலும் போதிய வசதிகள் இல்லாமையாலும், பின்னர் பால்தோட்டம் என்ற இடத்துக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இந்தக் குடியேற்றமும் திஹாரியின் முஸ்லிம் குடியேற்றத்தின் ஆரம்பமாகக் கருதப்படுகின்றது. 1500 ஆம் ஆண்டுக்குப் பின்புதான் ஏனைய கிராமங்களின் குடிப்பரம்பல் ஏற்பட்டது போன்று, இங்கும் அத்தனகல்ல, உடுவன்கல்ல, ஹுனுபொல ஆகிய இடங்களில் இருந்தும் பேருவலை, களுத்துறை முதலிய கரையோரப் பகுதிகளில் இருந்தும் முஸ்லிம்கள் வந்து குடியேறினர்.

முஸ்லிம்கள், சிங்கள மக்களுக்குத் தேவையான துணிமணிகள், வாசனைப்பொருட்கள், ஆபரணங்கள், கருவாடு முதலியவற்றைக் கரையோர நகரங்களிலிருந்து எடுத்து வந்து வியாபாரம் செய்தமையால் முஸ்லிம்களின் குடியேற்றத்தை சிங்களவர் ஆதரித்தனர். அக்காலத்தில் அத்தனகல்ல ஓயாவும் பிரதான போக்குவரத்துப் பாதையாகப் பயன்படுத்தப்படுத்தப்பட்டது. 1998 மார்ச் மாதம் 12ம் திகதி இவ்வாற்றில் புதையுண்டிருந்து கண்டுபிடிக்கப்பட்ட 60 அடி நீளமான மரத்தால் செய்யப்பட்ட தோணி இதற்குச் சான்று பகர்கின்றது.

போக்குவரத்து வசதிகளும் பாதுகாப்பாக வாழக்கூடியதான சூழலும் அமைந்திருந்தமையாலும் முஸ்லிம்கள் இங்கு குடியேறினர். காலப்போக்கில் பள்ளிவாசல்கள், பாடசாலை என்பன நிர்மாணிக்கப்பட இக்கிராமம் வளர்ச்சி அடைந்தது.

இவ்வாறு வளர்ச்சி கண்ட திஹாரிய கிராமம் புளியமரத்தடி, ஊர்மனை, தூல்மல, பண்டாரநாயக்க பெதெச முதலான இருபதுக்கு மதிகமான பிரிவுகளைக் கொண்ட ஒரு பெரிய கிராமமாக விளங்குகிறது. அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவில் இருக்கும் பெரிய முஸ்லிம் கிராமமான இங்கு 10,000 பேர் வரை வாழ்கின்றனர்.

1500ஆம் ஆண்டளவில் அத்தனகல்லவுக்குச் சென்ற சிங்களவர்களுடன் இராச லெவ்வை என்பவர் தலைமையில் 6 குடும்பங்கள் வந்து உடுகொடையில் குடியேறின. வர்த்தகம், விவசாயம், மந்தை வளர்ப்பு முதலிய துறைகளில் சிறந்து விளங்கியமையே இக்குடியேற்றத்திற்குக் காரணமாகும். காலப் போக்கில் மக்கள் பெருகி புதுக்குடியேற்றங்களும் ஏற்பட்டன. அத்தனகல்ல ஓயாக் கரையில் மேட்டு நிலமாக இப்பிரதேசம் காணப்படுவதால் உடுகொடை (உயர்ந்த நிலம்) என அழைக்கப்பட்டது. விவசாயம் விருத்தியடைந்த இப்பகுதியில் வேறு பகுதிகளிலிருந்து வந்து குடியேறியதால் திருமணத் தொடர்புகளும் சனத்தொகை அதிகரிப்பும் ஏற்பட்டது. இக் கிராமத்தைச் சூழவுள்ள சிங்கள மக்களும் நட்பாக வாழ்ந்தமையால் பெரும்பான்மை மக்கள் காட்டிய ஆதரவும் இக்குடியேற்ற வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது.

அயற்கிராமம் கஹடோவிட்டவிற்கு வந்த அஸ் ஸெய்யது அஷ் செய்கு அஹ்மத் பின் முபாரக் மௌலானா அவர்களதும், அன்னாரை அடுத்து அங்கு வந்த அஷ் செய்யது அப்துல்லாஹ் பின் உமர் பாதிப் அல்யமனி (ரஹ்) அவர்களினதும் ஆத்மீக வழிகாட்டல் இம் மக்களின் ஆத்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது.

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இறுதிப்பகுதி வரை முஹம்மது லெவ்வை விதான, ஹஸன் மீரா லெவ்வை விதான முதலியோர் அரச அதிகாரிகளாக சேவை செய்துள்ளனர். காலஞ்சென்ற எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மூதாதையர்களான வாசல முதலியார்களுடன் தொடர்பு வைத்திருந்தமை முஸ்லிங்களின் குடியேற்றத்துக்கு ஊன்று கோலாய் இருந்தன.

அரபு நாடுகளில் இருந்து வந்த சமயப் பெரியார்களும், வெலிகாமத்தில் இருந்து வந்த மௌலானாமார்களும் இங்கு

ஆத்மீகப் பணி செய்துள்ளனர். 1958ம் ஆண்டிலிருந்து ஒரு முஸ்லிம் பாடசாலையும் இயங்கி வருகிறது. 1924ம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசலுக்கு, பூகொடையில் சமாதியுற்றிருக்கும் செய்யது பா ஹாஷிம் பா அலவி மௌலானா அவர்களின் மகன் செய்யத் அஹ்மத் பா ஹாஷிம் மௌலானா அடிக்கல் நாட்டியுள்ளார்கள். இன்று, பள்ளிவாசல், அல் அரபா வித்தியாலயம் இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. கிப்லா பார்ப்பதில் பிரபல்யம் வாய்ந்த, வான சாஸ்திர, மார்க்க மேதை மர்ஹூம் அப்துஸ் ஸமத் ஆலிம் முப்தி அவர்கள் ஆரம்பித்து வைத்த, அரபு நாடுகளுடனும், அரச வளி மண்டல ஆராய்ச்சி நிலையத்துடனும் தொடர்புகள் வைத்துள்ள ஹஸனிய்யா அரபிக் கல்லூரி முழு இலங்கைக்கும் அறிவூட்டக் கூடிய கலாசாலையாக விளங்குகிறது. திஹாரிப் பாதை, ஹிஜ்ரா மாவத்தை, நஸார் மாவத்தை எனப் பல பிரிவுகளைக் கொண்ட இக் கிராமம் அத்தனகல்ல பிரதேசப் பிரிவில் உள்ள ஒரு முஸ்லிம் குடியிருப்பாகும்.

மல்வானை, திஹாரிய, உடுவன்கல்ல, உனுபொல (அத்தனகல்ல) முதலிய கிராமங்களிலிருந்தும் கொழும்பு (மோதர) இலிருந்தும் வந்த முஸ்லிம்கள் குடியேறிய மற்றொரு கிராமம் கஹடோவிட்ட. இங்கு குடியேறியவர்கள் ஆரம்பத்தில் அத்தனகல்ல, உனுபொல பள்ளிவாசல்களுக்கே சமயச் சடங்குகளுக்காகச் சென்றனர். 1792இல் கஹடோவிட்டவில் முதல் பள்ளிவாசல் கட்டப்பட்டது. பின்னர் 1795இல் இப்பொழுது முஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் பள்ளிவாசல் அமைத்துள்ளனர். காலப்போக்கில் பள்ளிவாசலை அண்டிய பிரதேசங்களில் முஸ்லிம்கள் குடியேறியதால் கிராமம் வளர்ச்சி அடைந்தது. 1754இல் செய்கு அஹமது மௌலானா அவர்களும் 1765இல் செய்யது அப்துல்லா பின் உமர் பாதிப் அஸ்ஸித்தீக்கி அல்யமெனி அவர்களும் கஹடோவிட்ட கிராமத்தில் சன்மார்க்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். 1881இல் அமைக்கப்பட்ட பாதிபிய்யாத் தக்கியா மூலம், சன்மார்க்கப் போதனையுடன் பாடசாலைக் கல்வியும் போதிக்கப்பட்டது. வெளியூர் முஸ்லிம்களுடன் தொடர்பும் ஏற்பட்டது. குடிப்பரம்பலுக்கும் காரணமாகவும் அமைந்தது. இப்பரம்பல் இக் கிராமத்துடன் இணைந்துள்ள ஓகடபொல என்ற கிராமமாக வளர்ச்சியுற்றுள்ளது.

250 வருடங்களுக்கு முன் இக்கிராமத்தில் வந்து குடியேறியவர்களின் பரம்பரையினரும், விவாகத் தொடர்புகள் காரணமாகவும், உள்ளூரில் அமைந்த சிறு சிறு குடியேற்றங்கள் காரணமாகவும் வெளியூர்களில் இருந்து வந்தவர்களும் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். இன்று பல பள்ளிவாயல்களும் தக்கியாக்களும் பாடசாலைகள் இரண்டும் அமைந்துள்ள இக்கிராமம் அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஒரு முக்கிய முஸ்லிம் குடியிருப்பாகும்.

மலைநாட்டுப் புகையிரதப் பாதையில் முக்கிய புகையிரத நிலையம் அமைந்துள்ள வெயங்கொட நகரத்திலும் வியாபார நோக்கமாக வந்த இந்திய முஸ்லிம்கள் பள்ளிவாசல் ஒன்றை அமைத்துள்ளனர். இந்த நகரத்துக்கண்மையிலும் பல முஸ்லிம் குடும்பங்கள் சிதறி வாழ்கின்றனர்.

கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் ஹொரகொல்லையில் வழங்கப்பட்ட காணிகளில் குடியேறிய முஸ்லிம் குடும்பங்களின் வளர்ச்சியே ஹொரகல்ல ஓர்சட்வத்த முஸ்லிம் குடியேற்றமாகும். தனியான முஸ்லிம் கிராமமாக இது வளர்ச்சியடைந்துள்ளது.

1700ஆம் ஆண்டளவில் கள்-எலிய மொரகொல்ல என்ற இடத்தில், திஹாரியில் இருந்து வந்த சேகுகான் குடும்பத்தினரும், மரிக்கார் குடும்பத்தினரும் குடியேறியுள்ளனர். 1650ல் கண்டி மன்னன் இராசசிங்கன் இப்பகுதிக்கு வருகை தந்தபோது கறுவாச் செய்கைக்காகக் காடாக இருந்த பகுதி துப்பரவு செய்யப் பட்டிருந்ததாகவும், மன்னன் கலா எலிவெலா என்று சொன்னது, மருவி கள்-எலிய என்ற பெயர் வந்ததாகவும் வாய்வழி வந்த கதைகள் முலம் அறியக் கூடியதாகவுள்ளது.

முஸ்லிம்கள் வியாபாரப் பொருட்களைச் சேகரிக்கும் நோக்கமாக இங்கும் குடியேறியுள்ளனர். காலப் போக்கில் திஹாரிய, நாம்புளுவ, பூகொடை, அத்தனகல்ல பகுதிகளில் இருந்தும் வேறு இடங்களில் இருந்தும் வந்து குடியேறியமையால் இக் கிராமம் வளர்ச்சியடைந்தது. ஆரம்பத்தில் மொரகொல்ல என்ற இடத்தில் பள்ளிவாசல் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது. 1845ம் ஆண்டு இரண்டாவது பள்ளிவாசலை இப்பொழுது பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் நிர்மாணித்தனர். 1938ல் முஸ்லிம் பாடசாலையை ஆரம்பித்தனர். இவ்வசதிகள் காரணமாக இக்கிராமம் படிப்படியாக வளர்ச்சி கண்டது.

சனப் பெருக்கம் காரணமாக படிப்படியாக இக் கிராமம் விஸ்தரிக்கப்பட்டது. 1959ம் ஆண்டு ஹன்ஸகிரி என்ற காணி 105 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு 84 துண்டுகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டன. அங்கு முஸ்லிம்கள் குடியேறி, காலப் போக்கில் காணித் துண்டுகளை வாங்கி அதனையும் விஸ்தரித்துக் கொண்டனர். இன்று ஹன்ஸகிரிக்கும்-கள்-எலியாவுக்கும் இடையில் இருந்த தம்பில்லாவ என்ற காணியில் ஒரு பகுதியை முஸ்லிம்கள் சிலர் ஒன்று சேர்ந்து வாங்கி முஸ்லிம்களுக்கு விற்பனை செய்தனர். மிகுதியாக இருந்த காணியையும் பணம் கொடுத்து வாங்கி அவற்றிலும் முஸ்லிம்கள் குடியேறினர். தொடர்ந்தும், டன்கன் எஸ்டேட், ஹிஜ்ரா மாவத்தை, ஸலீம்புர என்ற பகுதிகள், காணிகள் வாங்கப்பட்டு சலுகை அடிப்படையில் முஸ்லிம் மக்களுக்கு விற்பனை செய்ததாலும், பகிர்ந்து கொடுக்கப்பட்டமையாலும் விஸ்தரிக்கப்பட்டன. இக்கு டியிருப்புக்களின் விஸ்தரிப்புக்கு, ஊர்ப் பிரமுகர்களின் முயற்சியும், தியாகமும், அல்ஹாஜ் ஏ. எச். எல். ஏ. சலீம் அவர்களின் முதலீடும் காரணமாக அமைந்தன.

இலங்கையின் முதலாவது மகளிர் அரபுக்கல்லூரி கள்-எலியாவில் அமைக்கப்பட்டமையும் இக்கிராமத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. மர்ஹூம் அல்ஹாஜ் எச். எல். எம். ஏ. காதர் அவர்களும் அவர்களின் பாரியாரும் ஜித்தாவில் அவர்களுக்கு ஏற்பட்ட விபத்தொன்றில் அவர்களுக்கு உதவ வந்த அரபிப் பெண்களுக்குத் தங்கள் நிலமையை விளக்க முடியவில்லை. அப்பொழுது அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகளே முஸ்லிம் மகளிருக்கான அரபிக் கல்லூரி இக் கிராமத்தில் அமையக் காரணமாகியது.

இலங்கையின் மத்திய பகுதியிலிருந்து, கொழும்புக்கும், களனி விகாரைக்குச் செல்லும் பாதை, கி. பி. (248-260) சிரிசங்கபோ மன்னன் ஒளித்திருந்த அத்தனகல்ல விகாரைக்குச் செல்லும் பாதை, தம்பதெனிய இராசதானி (கி.பி. 1232-1271)க்குச் செல்லும் பாதைகளில் ஒன்றான கிரியுள்ள பாதை, யாப்பகுவ, குருநாகல், கம்பளை, கண்டி இராசதானிகளுக்குச் செல்லக் கூடிய பாதை பஸ்யாலை ஊடாகவே சென்றதாலும், விவசாய நிலங்கள் அமைந்த இடமாக இருந்ததாலும் பஸ்யால முக்கியத்துவம் பெற்றது. எனவே வியாபார நோக்கமாக வந்த முஸ்லிம்கள் சிலர் இவ்விடத்தை வியாபார மத்திய நிலையமாக ஆக்கினர்.

முஸ்லிம்கள் வியாபாரத் தொடர்பு வைத்திருந்த இப் பிரதேசத்தில் 1750ம் ஆண்டுகளில் பெந்தர பகுதியில் இருந்து வந்த பெந்தா மரிக்கார் எனப் பெயர் கொண்ட காஸிம் லெவ்வை என்பவரும் அம்பே முகாந்திரம் எனப் பெயர் கொண்ட உமர் மீராலெவ்வை என்பவரும் பஸ்யாலையில் சிறுகடை வைத்து வியாபாரம் செய்துள்ளனர். ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற பஸ்யாலையூடாகச் சென்றதால், பாதையருகில் வியாபாரம் செய்ய அச்சம் கொண்ட முஸ்லிம் வியாபாரிகள் பாதுகாப்பிற்காக நாம்புளுவ என்ற இடத்திற்கு இடம் பெயர்ந்தனர். இவ்வாறு 1760-1765க்குமிடையில் பெந்தா மரிக்கார் தலைமையில் ஒரு குடும்பமும் அம்பே முகாந்திரம் தலைமையில் ஒரு குடும்பமும் வந்துள்ளன. இக்குடும்பங்களின் வளர்ச்சியினாலும், மக்களின் தொடர்ச்சியான குடியேற்றங்களாலும் இக்கிராமம் வளர்ச்சியடைந்தது.

1850-1900 இடைப்பட்ட காலங்களில் இங்கிருந்த மக்கள் அண்மைக் கிராமங்களான அல்லலமுல்லை, கொடாம்ப, கள்-எலிய, வறகபொல, தியல்ல, வேவல்தெனிய, ஹொறகஸ்மங்கட ஆகிய இடங்களுக்குச் சென்று குடியேறினர்.

நான்கு குடும்பங்கள் அல்லலமுல்ல-கொடாம்ப என்ற இடத்தில் முதலில் குடியேறியுள்ளனர். இன்று 50க்கும் அதிகமான குடும்பங்கள் இங்கு வாழ்கின்றனர்.

அல்லலமுல்ல ஜும்மாப் பள்ளி 1967ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இப்பொழுது முஸ்லிம்களுக்கான தனிப்பாடசாலையும் அமைந்துள்ளது. போக்குவரத்துக்கு வசதியாக கொழும்பு - கண்டிப் பாதைக்கு 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளமையாலும் தொடர்ந்து வளர்ச்சி அடைந்துவரும் கிராமமாகவுள்ளது.

பேருவலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மதார் லெவ்வை என்பவர் 1830ம் ஆண்டு வேவல்தெனியவில் வந்து குடியேறியுள்ளார். வியாபாரப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கமாகவே இவ்விடத்தில் இருப்பிடத்தை அமைத்துள்ளார். அன்னாரின் மகன் முகம்மதலி என்பவரும் கொழும்புடன் வியாபாரத் தொடர்புகள் வைத்திருந்ததுடன் இக்காலத்தில் டி. எஸ். சேனாநாயக்க குடும்பத்தாருடன் தொடர்பு கொண்டிருந்தார். இதனால் செல்வாக்குடன் வாழ்ந்த இவர்களின்

குடும்பத்தாரே 1926ம் ஆண்டு பள்ளிவாசல் ஒன்றையும் அமைத்ததுடன் 1950ம் ஆண்டு தமிழ் மொழி போதனையை பள்ளியில் ஆரம்பித்துள்ளனர். 1953ல் நிரந்தரப் பாடசாலை அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது. போதிய காணிவசதிகள் முஸ்லிம்களுக்கு இல்லாதிருந்ததால் இக்குடியிருப்பு குறிப்பிடத்தக்க வளர்ச்சியடையவில்லை. கொழும்பு-கண்டிப் பாதையில் அமைந்துள்ளதால் சகல வசதிகளையும் உடைய இடமாக இக்கிராமம் விளங்குகின்றது. 1992ம் ஆண்டு புஹாரி ஹாஜியார் என்பவரது 8 ஏக்கர் நிலம் 30 பேர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. எனினும் ஒரு சிறிய தொகையினரே இங்கு வாழ்கின்றனர். வேவல்தெனிய பள்ளிக்கு உட்பட்ட எல்லைக்குள், தியெல்ல ஹொரகஸ்மன்கட, தன்ஓவிட ஆகிய இடங்களிலும் சில முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்றனர். இக்குடியிருப்புக்கள் 1915ம் ஆண்டுக்குப் பின்பே தோன்றியுள்ளன.

1984ம் ஆண்டு கடான பிரதேச செயலாளர் பிரிவில் ரத்தொழுகம என்ற இடத்தில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளை வாங்கி முஸ்லிம்கள் குடியேறினர். வீட்டுத்திட்டம் அமைய முன்பே பல முஸ்லிம் குடும்பங்கள் ரத்தொழுகம என்ற இடத்தில் வசித்தனர். பெரும்பாலும் கொழும்பிலிருந்தும், அண்மிய இடங்களில் இருந்தும் சென்றவர்கள் இங்கு குடியேறியுள்ளனர். வீடமைப்புத் திட்டத்திலும் வெளியிலும் 750 குடும்பங்கள் வாழ்கின்றனர். தனியான ஜும்மாப்பள்ளியும் அமைத்துள்ளனர். அதிகமானோர் மலாய் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

1987ம் ஆண்டு நிட்டம்புவ நகருக்கண்மையில் ரன்பொகுணுகம என்ற மத்திய வகுப்பினருக்கான 2000 வீடுகள் அமைக்கப்பட்டன. முஸ்லிம்கள் 65 குடும்பங்கள் முதலில் வீடுகளை வாங்கிக் குடியேறியுள்ளனர். பின்னர் தொழுகைக்காகப் பள்ளிவாசலையும் அமைத்துள்ளனர். அதிகமானோர் இம்மாவட்டத்திற்கு வெளியே இருந்து வந்தவர்களாவர்.

திவுலபிடிய, வல்பிட என்ற இடத்திலும், கம்ஹாவ கிராம எழுச்சித் திட்டத்தில் அமைத்த 15 வீடுகளில் முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர். இவர்கள் மினுவாங்கொடை பள்ளி வாசலுக்கே மார்க்கக் கடமைகளைச் செய்ய வரவேண்டியுள்ளது. காலக் கிரமத்தில் ஒரு சிறிய கிராமமாக வளர்ச்சி காணக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

கம்பஹ மாவட்டத்தில் மினுவாங்கொடை நகரத்தில் பல முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்றன. இந்திய வியாபாரிகளே முதலில் இங்கு வியாபாரத்தில் ஈடுபட்டனர். பின்னர் நகரத்தில் இருப்பிடங்களையும் அமைத்துக் கொண்டனர். 1875ல் இந்த வியாபாரிகளே முதலில் 30 பேர் தொழக்கூடிய பள்ளிவாசல் ஒன்றையும் அமைத்தனர். பின்னர் நீர்கொழும்பு, கொழும்பு, மாதம்ப முதலிய இடங்களில் இருந்து வந்தவர்களும் இங்கு குடியேறினர். நகரத்தில் இருந்த வியாபார வாய்ப்புக்களே முஸ்லிம்கள் இங்கு குடியேறக் காரணமாக இருந்தது. 120 குடும்பங்கள் வரை வாழ்கின்ற இங்கு 75% வீதமானோர் இந்திய வம்சாவழியினராவர்.

கல்லொழுவ, மினுவங்கொடையை அடுத்துள்ள ஒரு பெரிய முஸ்லிம் கிராமமாகும். முதலில் இராமம் கிராமமாக வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் சிலர் இங்கு குடியேறியுள்ளனர். பின்னர் இக்கிராமத்தை அடுத்துள்ள கொட்டுகொடை, மாபோதல, வெயங்கொடை ஆகிய இடங்களில் குடியிருந்த சிலரும் இங்கு குடியேறியுள்ளனர். நீர்கொழும்பில் இருந்து வந்த சிலரதும் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட இந்தியர் களினதும் குடியேற்றத்தால் குடிப்பரம்பல் அதிகரித்தது. வியாபார வாய்ப்புக்களும், மலிவான விலையில் காணிகள் வாங்கக்கூடியதாக இருந்தமையும் பலர் இங்கு வந்து குடியேறக் காரணமாக அமைந்தன. ஜும்மாப் பள்ளிவாசல், மத்ரஸா, தக்கியா, முஸ்லிம் பாடசாலை என்பன இங்கு அமைந்திருப்பதும் மேலும் முஸ்லிம்கள் வந்து குடியேறக் காரணமாக அமைந்தன.

மினுவாங்கொடை கல்லொழுவை ஆகியஇடங்களில் ஏற்பட்ட சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக வேறு இடங்களுக்கு இருப்பிட வசதிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் மினுவாங்கொடைக்கு அடுத்துள்ள கோப்பித்தோட்டம் என்ற இடத்தில் அரசாங்கம் வழங்கிய காணித் துண்டுகளில் முஸ்லிம்கள் குடியேறினர். 1958ல் இக்குடியேற்றம் ஏற்பட்டது.

இவ்வாறே மினுவாங்கொடை - கட்டுநாயக்க வீதியிலிருந்து சற்றுத் தொலைவில் கோவின்ன என்ற இடத்திலும் சில முஸ்லிம் குடும்பங்கள் குடியேறின. இக் குடியேற்றங்களில் பெரும்பாலும் வசதி குறைந்த மக்களே குடியேறினர். இப்பொழுது இவ்விரு கிராமங்களில் தனியான ஜும்மாப் பள்ளிவாசல்கள்

அமைந்துள்ளன. மிக அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் குடியேற்றங்கள் எனினும் குடிப்பரம்பல் அதிகரித்து வருகின்றது.

கொழும்புக்கு மிக அண்மையில் பேலியகொடையில் நீர்கொழும்பு வீதியில் பைதுல் முகர்ரம் என்ற ஜும்மாப் பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. பேலியகொடையை அண்மிய பகுதிகளில் சிறு சிறு ஒழுங்கைகளிலும், சிறு தோட்டங்களிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட சதுப்பு நிலப்பகுதிகளிலும் முஸ்லிம்கள் ஏனைய சமூகத்தவர்களுடன் கலந்து வாழ்கின்றனர். பெரும்பாலும் கொழும்பில் சிறு சிறு தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள் குடியேறியமையால் இப்பகுதியில் முஸ்லிம் குடியேற்றம் ஆரம்பமாகியது. பள்ளிவாசலை மையமாக வைத்து இக்குடியேற்றம் வளர்ச்சியடைந்துள்ளது.

ஹுணுப்பிட்டிய என்ற இடத்தில் 1927க்கு முன்பு அக்பர் என்பவர் கொழும்பில் இருந்து முஸ்லிம்களை அழைத்து வந்து வீடுகள் கட்டிக் கொடுத்துக் குடியமர்த்தியுள்ளார். 1940க்குப்பின் கொழும்பில் ஜப்பான் குண்டு போட்டதனால் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் இங்கு குடியேறினர். காலி, மாத்தறை போன்ற இடங்களிலிருந்தும் முஸ்லிம்கள் வந்து குடியேறியுள்ளனர். அக்பர் அவர்களும் உம்பிச்சி அவர்களும் இங்கு முஸ்லிம்கள் குடியேற உதவியுள்ளனர். முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான காணி இருந்தமையால் பிரச்சினை இன்றி முஸ்லிம்கள் குடியேற முடிந்தது. கொழும்புக்கு அண்மையில் இருப்பதாலும், பிரதான புகையிரதப் பாதை, கொழும்பு - நீர்கொழும்பு வீதி, கொழும்பு - கண்டி வீதி என்பவற்றிற்கு அண்மையில் இருப்பதாலும் பல்வேறு தொழில் வசதிகள் இருப்பதாலும் முஸ்லிம்கள் இங்கு குடியேறினர். அக்பர் டவுன் ஜும்மாப் பள்ளிவாசல் முதலில் தக்கியாவாக இருந்து 1938ல் ஜும்மாப் பள்ளிவாசலாக ஆக்கப்பட்டது. ஹுணுப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயமும் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்தும் முஸ்லிம் குடியிருப்பு விருத்தி அடைய இவைகள் காரணமாக அமைந்தன.

இன்று இப்பிரதேசம் பல முஸ்லிம் கிராமங்களாக விருத்தியடைந்துள்ளது. இன்று வெலேகொட, திப்பிடிகொட, பாதிலியதுடுவ, கொங்கிதொட, ரோஸ்விலா கார்டன், என்டேருமுல்ல என்பன தனி முஸ்லிம் குடியிருப்புக்களாக வளர்ச்சி

கண்டுள்ளன. நான்கு ஜும்மாப் பள்ளிவாசல்களும், இரண்டு முஸ்லிம் பாடசாலைகளும், சில தக்கியாக்களும் இவ்விடங்களில் அமைந்துள்ளன. 6000க்குமதிகமான முஸ்லிம்கள் வாழும் இக்கிராமங்கள் மஹர, களனி பிரதேச செயலகப் பிரிவு களுக்குட்பட்டவையாகும். இப்பிரதேசங்களிலுள்ள முஸ்லிம்களுள் மலாய் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அதிகமாக உள்ளனர். வடமாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களுள் பலரும் இப்பகுதிகளில் குடியேறியுள்ளனர்.

கொழும்பு - நீர்கொழும்பு வீதியில் மாபோலை முஸ்லிம்கள் குடியிருக்கும் ஒரு முக்கிய பிரதேசமாகும். கொழும்பில் இருந்தும், கொழும்பில் தொழிலுக்காகப் பிற இடங்களிலிருந்து வந்தவர்களும் இவ்விடத்தில் வசித்துள்ளனர். ஒரு சிலர் சொந்த வீடுகளை வாங்கினர். எனினும் பலர் கூலிவீடுகளில் வசித்துள்ளனர். பள்ளிவாசல் அமைக்கப்பட்டதுடன் பாடசாலையும் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. ஒரு தனி முஸ்லிம் குடியிருப்பு அமைவதற்கு உறுதுணையாக அமைந்தது.

கொழும்பில் இருந்து சிறு தூரத்தில் அமைந்துள்ளதாலும் போக்குவரத்து வசதி, தொழில் வசதிகள் இருப்பதாலும் குடியேற்றம் விருத்தியடைந்தது. மாபோலை, வத்தளை, ஹெந்தலை, மஹபாகே முதலிய இடங்களில் முஸ்லிம்கள் சிதறி வாழ்கின்றனர்.

### இன உறவு

கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் சிங்களப் பெரும்பான்மை இனத்தவர்களோடும் கரையோரப் பகுதிகளில் கத்தோலிக்க மக்களோடும், தமிழ் மக்களோடும் இரண்டறக் கலந்து வாழ்கின்றனர். பல சிங்களக் குடியிருப்புகளுக்கு மத்தியிலே ஒரு முஸ்லிம் குடியிருப்பு காணப்படுகிறது. சில பிரதேசங்களில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எனக் கலந்தும் வாழ்கின்றனர்.

# 4

# மஸ்ஜித்களும், மத்ரஸாக்களும், மகான்களும்

மௌலவி எம். எச். எம். லாபிர்

எந்தவொரு சமூகமும் தனது தனித்துவத்தைக் காத்துக் கொள்வதில் வணக்கஸ்தலங்களும், சமயக் கல்விக் கூடங்களும் உறுதுணையாக அமைகின்றன. அச்சமூகத்தினது மேம்பாட்டிலும் அவை வகிக்கும் பங்கை எவ்விதத்திலும் குறைத்து மதிப் பிடுவதற்கில்லை. இது வரலாறு புகட்டும் பாடமாகும். முற்கால சமூகங்களது வரலாறு இதற்குத் தக்க சான்றாகும்.

இஸ்லாமிய சமூகத்தின் நாகரிக மேம்பாட்டிற்கு உலகளாவிய மஸ்ஜித்களும், இஸ்லாமியக் கலைக் கூடங்களும் உரிய பங்கை ஆற்றத் தவறவில்லை. உலகின் பிரதான நகரங்களில் உள்ள ஜாமியா மஸ்ஜிதுகளும் இஸ்லாமிய கலாபீடங்களும் தக்க சான்றாக உள்ளன. அவை வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பெற்றுவருகின்றன.

இலங்கை முஸ்லிம்களது வரலாறு மாவட்ட ரீதியாக நூலுருப் பெறும் இவ்வேளை, மஸ்ஜிதுகளும் மத்ரஸாக்களும் இஸ்லாமிய அறிஞர் பெருந்தகைகளும் சமூக மறுமலர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகள் பற்றி மதிப்பீடு செய்யப்படுவது மிக மிகப் பொருத்த மானதாகும்.

## மஸ்ஜித்கள்

இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களில் கொழும்பு மாவட்டத்தை அடுத்து சனச் செறிவு கூடிய மாவட்டம் கம்பஹ மாவட்டமாகும். சுமார் 14 இலட்சம் மக்களைக் கொண்ட இம்மாவட்டத்தின் முஸ்லிம்களது சனத்தொகை சுமார் 50,000 ஆகும். மாவட்ட சனத்தொகையில் (1/28) சிறு தொகையினராக முஸ்லிம்கள் இருந்த போதிலும் அவர்களது குடியிருப்புகள் மாவட்டத்தில் பரந்துபட்டிருந்த போதிலும் அவர்கள் கணிசமான

செல்வாக்குடன் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு இப்பிரதேச மஸ்ஜிதுகளும் மத்ரஸாக்களும் தக்க சான்றுகளாக உள்ளன.

முஸ்லிம்களது முக்கிய சமயக் கடமைகளில் ஒன்றான ஐங்காலத் தொழுகையினை ஜமாஅத்தாக மஸ்ஜிதுகளில் நிறைவேற்ற வேண்டும் என்ற கடப்பாடும் வாராந்தம் ஒவ்வொரு முஸ்லிம் ஆண்மகனும் ஜும்ஆத் தொழுகையினை வெள்ளிக் கிழமைகளில் ஜமாஅத்தாக பள்ளிவாசலில் தொழுதாக வேண்டும் என்ற கட்டாயமும் முஸ்லிம் குடியிருப்புகள்தோறும் மஸ்ஜிதுகளை அமைத்துக்கொள்ள அவர்களைக் கட்டாயப்படுத்தியுள்ளன என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம். அதேபோல் ஒவ்வொரு முஸ்லிம் பெற்றோரும் தத்தமது பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் இஸ்லாத்தின் மூல நூலான குர்ஆனையும் கற்றுத்தேற மத்ரஸாக்களையும் அமைத்துக் கொள்ள வழி வகுத்துள்ளது. இந்த வகையில் முஸ்லிம் உம்மத்தின் பாசறைகளான மஸ்ஜிதுகள், மத்ரஸாக்கள் என்பன இம்மா வட்டத்தில் எந்நிலையில் இருந்துள்ளன என்பதனை தொகுத்து வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கட்டுரையின் முதல் அம்சமான மஸ்ஜிதுகள் பற்றி முதலில் நோக்குவோம். மஸ்ஜித் எனும் அரபு வார்த்தை ஸுஜுது செய்யும் இடம் எனும் பொருள் கொண்டது. மஸ்ஜிதுகளில் நிறைவேற்றப்படும் முக்கிய இபாதத்தாகிய தொழுகையின் மகுடமாக அமைவது ஸுஜுதாகும். எனவேதான் பொதுவாக வணக்கஸ்தலங்கள் மஸ்ஜித் என அழைக்கப்படுகின்றன. நாம் இங்கு வணக்கஸ்தலங்களுக்கு மஸ்ஜித் எனத் தலைப்பிட்டாலும் எல்லா வணக்கஸ்தலங்களும் மஸ்ஜித் எனப்படுவதில்லை. வணக்கஸ்தலங்கள் பற்றி நோக்கும் நாம் அதற்குரிய பதப்பிரயோகம் பற்றியும் அறிந்திருப்பது அவசியமானது.

(1) ஜாமிஆ மஸ்ஜித்:- ஐங்காலத் தொழுகையுடன் வாராந்த ஜும்ஆத் தொழுகையும் நடைபெறும் பெரிய பள்ளிவாசல்கள் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன.

(2) மஸ்ஜித்:- ஐங்காலத் தொழுகை நடைபெறும் சாதாரண பள்ளிவாசல்கள் மஸ்ஜிதுகளாகும். இவை 'தக்யா' என்ற பெயராலும் பொதுமக்களால் அழைக்கப்படுவதுண்டு.

(3) தக்யா:- இவை தரீக்காவின் அனுஷ்டானங்கள் நிறை வேற்றப்படுவதற்காக நிர்மாணிக்கப்பட்டவை. ஐங்காலத் தொழுகையுடன் தரீக்கா அனுஷ்டானங்களான ராதிப், மௌலித் என்பவையும் இங்கு இடம்பெறும்.

(4) ஸாவியா:- இது சாதுலிய்யாத் தரீக்காவின் அனுஷ் டானங்கள் நிறைவேற்றப்படும் இடமாகும். இங்கு ஐங்காலத் தொழுகையோடு திக்ர், ஹழரா என்பனவும் இடம்பெறும்.

கம்பஹ மாவட்டத்தின் பதின்மூன்று தேர்தற் தொகுதிகளில் மூன்று தவிர்ந்த எல்லாத் தேர்தற் தொகுதிகளிலும் மஸ்ஜிதுகள் உள்ளன. பியகம, அத்தனகல, நீர்கொழும்பு, மினுவாங்கொட, மீரிகம, வத்தளை, ஜா-அல, மஹர, களனி, தொம்பே, கடான, திவுலபிடிய, கம்பஹ என்பனவே 13 தேர்தற் தொகுதிகளுமாகும், ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலுமுள்ள மஸ்ஜிதுகள் பற்றி நோக்குவோம்.

**பியகம:**

1) றக்ஸபான ஜும்ஆ மஸ்ஜித்
2) தளுக்கள தக்யா ஜும்ஆ மஸ்ஜித்
3) உளஹிடுவள தக்யா ஜும்ஆ மஸ்ஜித்
4) யடிஹேன தக்யா ஜும்ஆ மஸ்ஜித்
5) வடுவேகம ஜும்ஆ மஸ்ஜித்
6) மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆ மஸ்ஜித், மாகொல
7) மஸ்ஜிதுல் கதீஜா ஜும்ஆ மஸ்ஜித் - உளஹிடுவள
8) மஸ்ஜிதுல் முஹ்ததீன் - உளஹிடுவள
9) கோனவல ஜும்ஆ மஸ்ஜித் - களனிய
10) வள்கம தக்யா - வள்கம, மள்வானை
11) ஹிதாயத் மஸ்ஜித், விதானகொட, மள்வானை
12) மஸ்ஜிதுஸ்ஸைப் - பெலன்கஹவத்த, மள்வானை
13) மாகொல அனாதை நிலைய மஸ்ஜித் - உளஹிடுவள, மள்வானை
14) மஸ்ஜிதுல் முபாறக் - அல் முபாறக் தேசிய கல்லூரி, மள்வானை
15) காந்திய வளவ்வ தக்யா - காந்தியவளவ்வ, மள்வானை
16) மஸ்ஜிதுஸ்ஸாலிஹீன் - வளவ்வத்த, மள்வானை

17) மஸ்ஜிதுத்தஃவா இஸ்லாமிய்யா - கராபுகஸ்ஹந்திய, மள்வானை

18) மல்வத்த தக்யா - மல்வத்த, மள்வானை

**றக்ஸபான ஜும்ஆ மஸ்ஜித்:**

றக்ஸபான, களனி கங்கையின் கரையோரமாக அமையப் பெற்றுள்ள முஸ்லிம் கிராமமாகும். இதுவே மள்வானை முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றமாகவும் இருந்து வந்துள்ளது. இங்கேயே இப்பிரதேச முஸ்லிம்களின் ஆரம்பப் பள்ளி வாசலும் அமைந்துள்ளது. கி. பி. 1792 காலப் பகுதியில் களனி கங்கையூடாக பிரயாணம் செய்து வந்த ஓட்டு மீரான் என்பார் தனது சொந்தச் செலவில் செங்கல்லிலான ஒரு பள்ளி வாசலை அமைத்துள்ளார். இவர் வெள்ளிக்கிழமைதோறும் குத்பா ஓதுவதற்காக இங்கு வந்து சென்றுள்ளார்.

காலப் போக்கில் ஜனப்பெருக்கம் ஏற்பட 1892இல் தற்போது பள்ளிவாசல் இருக்குமிடத்தில் விசாலமான பள்ளி கட்டப்பட்டது. முன்னைய பள்ளிவாசலின் இடிபாடுகள் அண்மைக் காலம் வரை இருந்து வந்துள்ளன. 1922 காலத்தில் இங்கு வாழ்ந்த அஹ்மது றிபாய்(பாம்பு) மௌலானா அவர்கள் இஸ்லாமிய கட்டிடக் கலை அம்சங்கள் பொருந்திய மின்பர் ஒன்றை இப்பள்ளிவாசலுக்கு அமைத்துக் கொடுத்தார். இலங்கையிலேயே பிரபல்யமான இம்மின்பர் இன்று வரை பேணிப் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

தொடர்ந்து ஏற்பட்ட இட நெருக்கடி காரணமாக 1961 காலப்பகுதியில் பள்ளிவாசல் பெருப்பித்துக் கட்டப்பட்டதோடு பல்வேறு வசதிகளும் அங்கு செய்யப்பட்டன. இன்று வரை இப்பள்ளி வாசலில் பல்வேறு விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இஸ்லாமிய தஃவாப் பணியைப் பொறுத்தவரை ஓட்டு மீராலெப்பையின் வருகையின் பின் 1834 இல் குத்ஸி மௌலானா இங்கு வருகை தந்துள்ளார். இவர் இங்குள்ள மக்கள் மத்தியில் மார்க்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பெரும் பாடுபட்டுள்ளார். 1866இல் முபாறக் மௌலானா அவர்கள் இங்கு வந்து மக்களை உண்மையான தீன்தாரிகளாக மாற்றுவதில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளார். இவருக்குப்பின் அஹ்மது றிபாய்(பாம்பு) மௌலானாவும் இப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

இங்கு பணியாற்றிய கதீப்மார்கள் வரிசையில் மர்ஹூம் ஹிழ்ர் லெவ்வையும் அவர் வழி வந்தோரும் முக்கிய இடம் வகிக்கின்றனர். இவரது இப்பணியை கௌரவிக்கும் வகையில் அக்கால ஆட்சியாளர்கள் மானியம் வழங்கி வந்ததாகவும் அதற்கான அத்தாட்சி தன்னிடம் இருப்பதாகவும் மர்ஹூம் ஸாலிஹ் லெவ்வை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளி நிர்வாகத்தைப் பொறுத்தவரை 1864இல் தள்களைப் பள்ளி கட்டப்படும் வரை இப்பள்ளிவாசல் தனித்து இயங்கி வந்தாலும் தள்களைப் பள்ளிவாசல் கட்டப்பட்டதும் இரண்டு பள்ளிவாசல்களும் ஒரே நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்ததால் வெள்ளிக்கிழமை குத்பா றக்ஸபான பள்ளியில் ஒரு வாரமும் தள்களைப் பள்ளியில் ஒரு வாரமுமாக மாறி மாறி இடம் பெற்றது. இடையில் சிற்சில நிர்வாக மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் 1974 வரை இதே நிலை நீடித்தது. ஜூம்ஆப்பள்ளியும் அதனைச்சூழவுள்ள மையவாடியும் முழு மள்வானைக்கும் பொதுவானதாக இருந்து வந்துள்ளது.

1974 காலப் பகுதியில் றக்ஸபான ஜூம்ஆப்பள்ளிவாசல் நிர்வாகம் முழுமையாக அப்பிரதேச வாசிகளது கைக்கு வந்ததோடு அப்பள்ளிவாசலில் வாரந்தோறும் தமிழ்மொழியுடன் கூடிய பிரசங்கத்துடன் குத்பா ஓதல் ஆரம்பித்தது. அன்றுமுதல் ஒரே குத்பா இடம் பெற்ற மள்வானையில் இரு குத்பாக்கள் இடம் பெறலாயிற்று. இன்று வரை இதே அடிப்படையிலேயே றக்ஸபான பள்ளிவாசலின் நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இதன்பின் இப்பள்ளிவாசலின் வருமானம் அதிகரிக்கச் செய்யப்பட்டது. பள்ளிவாசலின் பேரில் பல கடைகள் கட்டப்பட்டன. கதீப், முஅத்தின் என்போர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டனர். இதன் நிர்வாகத்தின் கீழ் பாலர் பாடசாலை, மூன்று குர்ஆன் மத்ரஸாக்கள் என்பன உள்ளன. ஸகாத் வசூல் விநியோகக்குழு, சமாதானக் குழு என்பனவும் செயல்பட்டு வருகின்றன. தஃவாப் பணி இப்பள்ளியை மையமாகக் கொண்டு பரந்த அளவில் இடம்பெற்று வருகின்றது.

இப்பள்ளி வாசல் வக்பு சபையில் கம்பஹ மாவட்டத்தில் பதியப்பட்ட முதற் பள்ளிவாசலாகவும் உள்ளது. இதன் நிர்வாகிகள் வரிசையில் அல்ஹாஜ் ஏ. ஆர். எம். அன்வர், அஹ்மத் ஸஹீத், எம். ஜே. அஹ்மத், எம். இஸட். எம். வஸீர்

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். தற்போது பல வருடங்களாக நிருவாக சபைத்தலைவராக எம். எச். எம். ஏ. றஹ்மான் ஆசிரியர் இருந்து வருகிறார்.

**தளுக்களத் தக்யா ஜும்ஆ மஸ்ஜித்:**

மள்வானை முஸ்லிம்களின் இரண்டாவது குடியேற்றமும் இரண்டாவது பள்ளிவாசலும் தளுக்களையில் அமையப் பெற்றுள்ளன. 1864இல் இப்பள்ளிவாசல் கட்டப்பட்டது. இப்பள்ளிவாசல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதன் ஒருபகுதி பள்ளியாகவும் மறு பகுதி தக்யாவாகவும் உள்ளது. இத்தக்யா மள்வானை முஸ்லிம்களின் கணிசமான தொகையினர் அனுசரித்து வரும் காதிரிய்யதுன்னபவிய்யா தரீக்கா அமைப்புக்களின் தலைமையகமாகவும் உள்ளது. தக்யா நிர்வாகத்திற்கும் பள்ளி வாசல் நிர்வாகத்திற்குமெனத் தனித்தனியாக நிர்வாக அமைப்புக்கள் உள்ளன. யடிஹேன, வள்கம, உளஹிட்டுவள தக்யாக்களின் நிர்வாகமும் தளுக்கள நிர்வாகத்தின் கீழ் உள்ளன. இதற்கான நிர்வாகிகள் யாவரும் மாளிகாஹேன புகாரி தக்யா செய்கும் காதிரிய்யதுல் நபவிய்யா தரீக்காவின் தலைவராக உள்ளவரால் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இப்பிரதேச மக்களை 1832இல் மள்வானைக்கு வருகைதந்த குத்ஸி மௌலானா அவர்கள் சமய நெறிப்படுத்தி வந்தார். இங்குள்ள 64 குடும்பத்தவர்கள் அவர்களது தலைமைத்து வத்தை ஏற்று பைஅத் செய்து கொடுத்தனர். அதன் பின் அஷ்ஷெய்கு முபாறக் மௌலானா அவர்கள் 1866இல் இங்கு வந்து மள்வானை மக்களின் தலைமைத்துவத்தை ஏற்று வழி நடாத்தினார். இங்குள்ள மக்கள் யாவரும் அவரது தலைமைத்துவத்தை ஏற்று பைஅத் செய்து கொடுத்தனர். அன்னார் காதிரிய்யதுன் நபவிய்யா தரீக்காவை நிறுவி மக்களை அத்தரீக்காவைப் பின்பற்றி வாழச்செய்தார்கள்.

மள்வானை முஸ்லிம்களால் அனுசரிக்கப்படும் ஒரே தரீக்காவாக காதிரிய்யதுன் நபவிய்யாத் தரீக்கா விளங்கலாயிற்று. இத்தரீக்காவின் செய்குகளாக முபாறக் மௌலானா அவர்களின் பின் செய்கு முஸ்தபா வலியுல்லாஹ், செய்கு முஹம்மத் வலியுல்லாஹ், செய்கு அப்துஸ்ஸமீஉ ஆலிம், செய்கு முஹம்மது ஆலிம் ஆகியோர் இருந்து வந்துள்ளனர். தற்போதைய

இத்தரீக்காவின் தலைவராக செய்கு அஹ்மத் இப்னு முஹம்மது ஆலிம் அவர்கள் இருந்து வருகிறார்கள்.

மள்வானையின் காதிரிய்யதுன் நபவிய்யாத் தரீக்காவின் தலைமையகமாக விளங்கும் தள்களைத் தக்யாவில் வாரந்தோறும் வெள்ளி இரவுகளில் மௌலித் அஸ்ராருர் ரப்பானிய்யா ஓதப் படுகிறது. காலையில் ஸுப்ஹுத் தொழுகையின் பின் புர்தாவும் ஜலாலியா ராதிபும் ஓதப்படுகின்றன. இது தவிர தினந்தோறும் இஷாத் தொழுகைக்கு முன்பாக ஹத்தாத் ராதிபும், வியாழன் இரவுகளில் இஷாத் தொழுகையின் பின் அஹ்தல் ராதிபும் ஓதப்படுகின்றன. மேலும் நபி(ஸல்) அவர்கள் பிறந்த ரபீயுல் அவ்வல் மாதம் 12 நாளும் ஸுப்ஹான மௌலித் ஓதப்படுகிறது. ரபீயுல் ஆகிர் மாதம் 12 நாட்களும் செய்கு முஹியதீன் (றஹ்) அவர்களின் பெயரிலான மனாகிப் ஓதப்பட்டு 12ம் நாள் பகல் பெரிய கந்தூரி நடைபெறுகிறது. ஸபர் மாத இரவுகளில் வித்ரியா, பத்ரு மாலை, மர்ழியா என்பனவும் ஓதப்படுகின்றன. மிஃராஜ் இரவில் மிஃராஜ் மௌலித் ஓதப்படுகிறது. மறைந்த நபவிய்யாத் தரீக்காவின் செய்குமார்கள் பெயரால் அவர்கள் மறைந்த வருடாந்த தினங்களில் கத்முல் குர்ஆன் தமாம் செய்யப்படுகிறது. தரீக்காவின் அமல்களை செய்கு அவர்களால் நியமிக்கப்படும் கலீபா முன்னின்று நடாத்துவார். பள்ளிவாசலில் ஐங்காலத் தொழுகை, குத்பா என்பன இடம்பெற்று வருவதோடு நோன்புப் பெருநாள் பித்ராவும் இங்கு சேகரித்து விநியோகிக்கப்படுகிறது. பெருநாள் இரவுகளில் விஷேட நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இத்தரீக்காவைச் சார்ந்தோர் ஹிஸாப் கணிப்பீட்டு அடிப்படையில் மாதங்களையும் நாட்களையும் நிர்ணயித்து தமது சமய அனுஷ்டானங்களை அவ்வத்தினங்களில் நிறைவேற்றி வருகின்றனர்.

தள்களைத்தக்யா ஜும்ஆ மஸ்ஜித்தில் நல்லதொரு அறபு மத்ரஸாவும் நூல் நிலையமும் இருந்து வந்துள்ளன. ஆரம்பத்தில் அவை சிறப்பாக இயங்கி, வெளி ஊர்களில் இருந்தும் பலர் இங்கு சன்மார்க்கக் கலை பயின்றுச் சென்றுள்ளனர். இடையிடையே அம்மத்ரஸா செயல்படாமலும் இருந்து வந்துள்ளது. தற்போது அம் மத்ரஸாவில் நஹ்வு, பிக்ஹு பாட போதனைகள் இடம் பெற்று வருகின்றன.

தள்களைப் பள்ளிவாசல் மின்பர் கலை அம்சங்கள் பொருந்தியதாகவும் மிக உயர்ந்ததாகவும் அமையப்

பெற்றுள்ளது. அதன் மினாரா கலை அம்சங்கள் கொண்டதாகவுள்ளது. பள்ளிவாசல் ஹவ்ழ் மிக விசாலமானதாகவுள்ளது. தற்போது தளுக்கல பள்ளிவாசல் மற்றும் ஊர்பிரதம நிருவாகியாக அல்-ஹாஜ் ஏ. ஆர். எம். லாபிர் அவர்களும் தக்யாவின் பிரதம நிர்வாகியாக அல்ஹாஜ் எம். ஜெ. அஹம்மத் ஸாபிர் அவர்களும் உள்ளனர்.

**உளஹிட்டுவள தக்யா ஜும்ஆப் பள்ளிவாசல்:**

மள்வானையின் பிரதான சிற்றூர்களில் உளஹிட்டுவள ஒரு முக்கிய பகுதியாகும். 1850 காலப்பகுதியில் முஸ்லிம்கள் இங்கு குடியேறியுள்ளனர். இங்குள்ளோரின் தொழுகை வசதிக்காக ஓலையால் வேயப்பட்ட ஒரு சிறு பள்ளி பண்டாரதெனியப் பகுதியில் அமையப் பெற்றது. அது தீயினால் எரிந்த போது தேகஸ்முல்லையில் ஓலையால் மற்றொரு பள்ளி அமைக்கப்பட்டது. அங்கும் ஐங்காலத் தொழுகை நடைபெற்று வந்தது. இதிலும் பிற்காலத்தில் தகராறுகள் ஏற்பட்டு செயலிழந்தது. அதே நேரம் இங்கு மக்கள் குடியேற்றமும் அதிகரித்துச் சென்றது.

இவ்வேளை காதிரிய்யதுன்னபவிய்யாத் தரீக்காவின் செய்காக இருந்த செய்கு முஹம்மது இப்னு செய்கு முஸ்தபா அவர்கள் உளஹிட்டுவள எடம்பகஹவத்த காணியில் கால் ஏக்கர் நிலத்தினை 100 ரூபாவுக்கு வாங்கி அங்கு ஒரு தக்யா கட்டினார். இதன் ஆரம்ப நிர்வாகிகளாக அப்துல் ஜப்பார், ஓ. எல். எம். மஜீத் ஆகியோர் இருந்து வந்துள்ளனர். 1952 காலப் பகுதியில் எஸ். எல். எம். சரீபு அவர்கள் இருந்து வந்துள்ளார். 1971இல் இத்தக்யா வக்பு சபையில் பதியப்பட்டது. 1985இல் இங்கு ஜும்ஆ குத்பா ஆரம்பமானது. அன்று முதல் பத்தாண்டுகளுக்கு மேலாக பள்ளி நிர்வாகம் ஜமாஅத்தார் கைக்குச் சென்றிருந்தது. பின் வழக்குத் தொடரப்பட்டு உயர் நீதிமன்றம் வரை வழக்கு சென்று மீண்டும் தக்யா நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளது.

**யடிஹேன தக்யா ஜும்ஆ மஸ்ஜித்:**

இதுவும் காதிரிய்யதுன்னபவிய்யா தக்யாவாகும். 1881இல் இது கட்டப்பட்டது. இங்கு ஐவேளைத் தொழுகையுடன் இரவில் இஷாத் தொழுகைக்கு முன்பாக ஹத்தாத் ராதிப் ஓதப்படுகிறது. வெள்ளிக்கிழமை இரவுகளில் அஸ்ராருர்ரப்பானிய்யா மௌலித் ஓதப்படுதிறது. வருடாந்தம் ஷஃபான் மாதம் முதல் பத்து

இரவுகளில் மௌலித், முனாஜாத் என்பன ஓதப்பட்டு 11ம் நாள் பெரிய கந்தூரி வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில் இங்குள்ளோர் இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள மள்வானைக்கே ஜும்ஆவுக்குச் சென்று வந்தனர். பின்னர் இவர்களது வசதி கருதி இங்கு 1980களில் ஜும்ஆ ஆரம்பிக்கப்பட்டது. இத்தக்யாவை மர்ஹூம் முஹம்மது தாஹா ஹாஜியார் அவர்கள் இதே காலப்பகுதியில் புதுப்பித்து பெருப்பித்துக் கட்டினார். இதன் நிர்வாகிகள் பேருவளை புகாரி தக்யா செய்குமார்களால் நியமிக்கப்படுகின்றனர்.

**வடுவேகம ஜும்ஆ மஸ்ஜித்:**

இவ்வூர் வடுவேகம என்றும் யடிஹேன என்றும் அழைக்கப் படுகின்றது. இங்கு ஆரம்ப காலத்திலிருந்து காதிரிய்யது நபவிய்யா தக்யா ஒன்று மட்டுமே இருந்தது. இதில் மக்களது விருப்பம் போல சகல சமயக் கடமைகளையும் நிறைவேற்றுவதில் பிரச்சனைகள் எழுந்தன. இதனால் பள்ளிவாசல் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் வெளிப்பாடே இப்பள்ளி வாசலாகும்.

1990 காலப்பகுதியில் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு ஊர்வாசிகளதும் வெளி தனவந்தர்களதும் உதவி கொண்டு 40 பேர்ச் காணி வாங்கப்பட்டு அதில் 42' × 30' அளவு கொண்ட மூன்று மாடிக்கட்டிடத்திற்கு 1990.04.07இல் அத்திவாரமிடப் பட்டது. 1991.03.17இல் கீழ் மாடி வேலை முடிந்த நிலையில் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது. இதன் பின் முதல் மாடி வேலையும் முற்றும் பெற்றது. 1995.10.20ம் திகதி இங்கு முதல் ஜும்ஆவும் இடம்பெற்றது. இது பியகம சுதந்திர வர்த்தக வலயத்திற்கு மிக அண்மையில் இருப்பதால் அங்கு வேலை செய்யும் உள்நாட்டு, வெளிநாட்டு முஸ்லிம்களுக்குப் பெரும் உபயோகமாகவுள்ளது. இங்கு குர்ஆன் மத்ரஸாவும் நடைபெற்று வருகிறது.

**மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ மஸ்ஜித் - மாகொல:**

மாகொல பாத்திமா கார்டன் முஸ்லிம்களின் புதுக் குடியேற்றமொன்றாகும். இதன் 18 ஏக்கர் நிலமும் ஹாஜியானி பாத்திமா இஸ்மாயீலுக்குச் சொந்தமானது. அவரே பள்ளிவாசலுக்குரிய காணியை அன்பளிப்புச் செய்தார். 1963இல்

இப்பள்ளிவாசல் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் இதனை மாகொல அனாதை நிலையத்தின் நிருவாகிகளே நிருவகித்து வந்தனர். அவர்களே இப்பள்ளிவாசலைக் கட்டி வக்பு செய்தவர்களாவர். அல்ஹாஜ் ஷாஹுல் ஹமீத், அல்ஹாஜ் மர்சூக், அல்ஹாஜ் மக்கீன், அல்ஹாஜ் மொஹிதீன், அல்ஹாஜ் ஹனீபா ஆகியோரே அவர்களாவர். பள்ளிவாசலுக்குரிய மையவாடியை மர்ஹூம் மொஹிதீன் ஹாஜியார் அன்பளிப்புச் செய்தார்.

100 குடும்பங்கள் வரை வாழும் பாத்திமா கார்டனில் அமையப் பெற்றுள்ள இப்பள்ளிவாசல் ஒரு ஜும்ஆப் பள்ளிவாசலாகும். இப்பிரதேசத்தைச் சூழ்ந்துள்ள சிங்களப் பிரதேசங்களில் ஆங்காங்கே சிதறுண்டு வாழும் முஸ்லிம்கள் இப்பள்ளிக்கே ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்ற வருகின்றனர்.

1970இல் ஹிப்ழ் மத்ரஸாவொன்று அமைப்பதற்கான காணியை ஹாஜி எஸ். பீ. எம். அன்வர் அவர்கள் அன்பளிப்புச் செய்தார். மத்ரஸாக்கட்டிடம் பாதி முடிக்கப்பட்டுள்ளது. அல்ஹாஜ் எம். யூ. எம். ஜிப்ரி, அல்ஹாஜ் சீ. எம். எம். உதுமான், அல்ஹாஜ் எம். எச். ஏ. ஹலீம், அல்ஹாஜ் ஆரிப் இஸ்பஹான், அல்ஹாஜ் எம். எஸ். எம். நவாஸ் ஆகியோரின் நிர்வாக காலத்தில் பள்ளிவாசலில் ஆக்கபூர்வமான பல வேலைகள் நடைபெற்று வந்துள்ளன.

**மஸ்ஜிதுல் கதீஜா உளஹிடுவள:**

இது இஸ்லாமிய கலாசார மத்திய நிலையம் என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒரு ஏக்கர் நிலம் 1989ம் ஆண்டு வாங்கப்பட்டு சுமார் பத்து இலட்சம் ரூபா செலவில் அகில இலங்கை அன்ஸாருஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா இஸ்தாபன உதவியுடன் பள்ளிவாசல் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 1993ம் ஆண்டு வக்பு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு முதல் இப்பள்ளிவாசலில் ஜும்ஆ குத்பாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய தஃவாப்பணி இங்கு சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது. பிற சமயத்தவரும் இஸ்லாத்தை அறிய வழி செய்யப்பட்டுள்ளது.

இப்பள்ளிவாசல் மூலம் பாலர் பாடசாலை, பைத்துல்மால் நிதியம், இணக்கச் சபை, வறியோர் கல்வி உபகார நிதியம் என்பனவும் செயற்படுத்தப்பட்டுச் சீராக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**மஸ்ஜிதுன் முஹ்ததீன், உளஹிடுவள:**

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக தற்காலிக கட்டிடம் ஒன்றில் இப்பள்ளி செயல்பட்டு வருகின்றது. இதில் குர்ஆன் மத்ரஸா, ஐவேளை தொழுகை, ஜும்ஆ குத்பா என்பன நடாத்தப்படுகின்றன.

**கோனவல ஜும்ஆ மஸ்ஜித்:**

கடந்த பத்து வருடங்களாக இங்கு குடியேறியுள்ளோர் சிறு பள்ளிவாசல் ஒன்றை அமைத்து அதில் ஐவேளை தொழுகை, ஜும்ஆ, குத்பா என்பவற்றை நடாத்தி வருகின்றனர். இதில் குர்ஆன் மத்ரஸாவும் உள்ளது. இங்கு தப்லீக் பணிகளும் நடந்து வருகின்றன.

**வள்கமத் தக்யா:**

இது காதிரிய்யதுன் நபவிய்யாத் தரீக்காவிற்குரிய ஒரு தக்யாவாகும். இதில் ஐவேளை தொழுகையும், இஷாத் தொழுகைக்கு முன் ஹத்தாத் ராதிப் ஓதல், வெள்ளி இரவுகளில் மௌலித் பர்ஸன்ஜி ஓதல் என்பனவும் நடந்து வருகின்றன. இது தவிர வருடந்தோறும் முஹர்ரம் மாத முதல் பத்து இரவுகளிலும் பர்ஸன்ஜி மௌலித் ஓதப்படுகிறது. பதினோராவது இரவில் ஜலாலியா ராதிப் ஓதப்படுகிறது. பகல் ஹுஸைன் மௌலித் ஓதப்பட்டு பெரிய கந்தூரி நடைபெறுகிறது.

1903ம் ஆண்டில் செய்கு முஹம்மது ஹாஜியாரால் காணி வாங்கப்பட்டு இத்தக்யா கட்டப்பட்டது. 1952 காலப்பகுதியில் பணம் வசூல் செய்யப்பட்டு இது புதுப்பித்துக் கட்டப்பட்டது. அதன் பின்னரும் கட்டடங்களில் மதில் அமைத்தல், குர்ஆன் மத்ரஸா அமைத்தல், மலசலகூடம் அமைத்தல் முதலான பல் வேறு அபிவிருத்திப்பணிகள் நடந்துள்ளன. இவ்வேலைகளை அவ்வப்போது நிர்வாகிகளாக இருந்தோரே முன்னின்று செய்து வந்துள்ளனர்.

**விதானகொட மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசல்:**

ஆரம்பத்தில் இங்கு குர்ஆன் மத்ரஸாவொன்று அமைக்க அப்துல் முத்தலிப் முஹம்மது நிதார் என்பார் காணித்துண்டு ஒன்றை அன்பளிப்புச் செய்தார். ரக்ஸபானையைச் சேர்ந்த அப்துல்லத்தீப் முஹம்மது நிசார் ஹஸ்ரத் அவர்கள் விதானகொட

ஜனாப். எம். எம். எஸ். சரீப்தீன், தளுக்கள அல்ஹாஜ் எம். எச். ஏ. ஸஹீத் ஆகியோரது உதவி கொண்டு மத்ரஸாவை அமைத்தார்.

ஆரம்ப காலத்தில் மள்வானைக்கு வருகை தந்த பெரியார் செய்கு முபாறக் மௌலானா அவர்களது குமாரர் அகமது முஸ்தபா மௌலானா வசித்த இடத்திலேயே இம்மத்ரஸாக் கட்டிடம் அமையப் பெற்றது. இதனாலேயே இம்மத்ரஸா அவர் தந்தை பெயரால் மத்ரஸதுல் முபாரகிய்யா எனப்படுகிறது. வசதி கருதி பக்கத்தில் உள்ளோர் இங்கு தொழ ஆரம்பிக்கவே அதில் ஒரு பகுதி பள்ளியாக மாறியது. தற்போது பெரும் பணச்செலவில் பெரிய பள்ளிவாசலாகக் கட்டப்பட்டு வருகிறது.

**மஸ்ஜிதுஸ்ஸைப் - பங்காளம்ஹேன, மள்வானை:**

காலஞ் சென்ற எஸ். ஏ. ஹமீதலி மரிக்கார் (பங்காளம்) என்பவருக்குச் சொந்தமான காணியிலேயே பங்காளஹேன கிராமம் அமையப் பெற்றுள்ளது. ஆரம்பத்தில் இங்கு 24 முஸ்லிம் குடும்பங்கள் இருந்தன. அப்போதைய தேவைக்கேற்ற விதமாக தற்காலிக பள்ளியொன்றை அமைத்து இப்பிரதேசவாசிகள் சமயக் கடமைகளை நிறைவேற்றி வந்தனர். ஆனாலும் காலப் போக்கில் குடியேற்றங்கள் அதிகரிக்கவே நிரந்தரப்பள்ளியொன்றின் தேவை உணரப்பட்டது.

இந்நிலையில் ஜனாப் எம். எச். எம். நியாஸ், அல்ஹாஜ் எம். எம். அஹ்மத் ஆகிய இருவரும் முன்வந்து ஸவூதி அரேபிய தனவந்தர் ஒருவரோடு தொடர்பு கொண்டு 05 இலட்சம் ரூபா செலவில் இப்பள்ளியைக் கட்டிக் கொடுத்தனர். அத்தனவந்தரின் மகளின் பெயரால் இப்பள்ளி கட்டப்பட்டதால் இப்பள்ளி மகளின் பெயரான ஸைப் எனும் பெயரில் மஸ்ஜிதுஸ்ஸைப் எனப் படுகிறது. இப்பள்ளிக்குரிய 20 பேர்ச் நிலத்தை எச். ஏ. எம். அபுல் ஹஸன் வழங்கினார். பின்னர் அவரது மகன் இக்பால் ஹஸன் மேலும் 10பேர்ச் நிலத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இப்பள்ளியின் ஆரம்ப நிர்வாகிகளாக மல்வானையைச் சேர்ந்த எம். எச். எம். நியாஸ், மௌலவி மர்ஹூம் எம். ஜே. எம். நுஃமான், அல்ஹாஜ் எம். எம். அஹ்மத், டாக்டர் எம். எம். மன்சூர் ஆகியோர் இருந்து வந்துள்ளனர். தற்போது இப்பிரதேச வாசிகளே சிறப்பாக நிர்வகித்து வருகின்றனர்.

**மாகொல அனாதை நிலைய மஸ்ஜித்:**

மாகொல அநாதை நிலைய மல்வானை உளஹிட்டுவள பிரதேச இல்லத்திலும் புதிய பள்ளியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதனைக் குவைத் பைத்துஸ்ஸகாத் நிறுவனம் கட்டிக் கொடுத்துள்ளது. இதில் 800 பேர் தொழக் கூடிய வசதியுள்ளது. இங்குள்ள சுமார் 500 மாணவர்களும் இங்கேயே தமது ஐங்காலத் தொழுகை, ஜூம்ஆக் கடமை என்பவற்றை நிறைவேற்றி வருகின்றனர். கடந்த இரு வருடங்களுக்குள்ளேயே இப்பள்ளி கட்டப்பட்டுள்ளது.

**மஸ்ஜிதுல் முபாறக்:**

அல் முபாறக் தேசியக் கல்லூரி வளவில் அமையப் பெற்றுள்ள இப்பள்ளிவாசல் பாடசாலை அபிவிருத்தி மன்ற உப தலைவர் அல்ஹாஜ் எம். எம். அஹ்மத் அவர்களின் வேண்டுகோளின் பேரில் கொழும்பு பிரபல வர்த்தகர் அல்ஹாஜ் பீ. எஸ். எம். ஸதக் அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது. இதன் கீழ்மாடி நூல் நிலையமாகவும் மேல்மாடி பள்ளிவாசலாகவுமுள்ளது. பாடசாலை மாணவர்களும் விடுதி மாணவர்களும் அயலவர்களும் இதன் மூலம் பயன் பெற்றுவருகின்றனர். 1980இல் இப்பள்ளி கட்டப்பட்டது.

**காந்திய வளவ்வ தக்யா:**

இது காந்தியவளவ்வ புதிய முஸ்லிம் குடியேற்றத்திலுள்ளது இதற்கான 20 பேர்ச் நிலத்தை அல்ஹாஜ் எம். எச். ஏ. ஸஊத் அவர்கள் அன்பளிப்புச் செய்தார். அவர் தனதும் சக உதவி யாளர்களதும் உதவி கொண்டு இத்தக்யாவை கட்டி முடித்தார். இது காதிரிய்யதுன்னபவிய்யா தரீக்காவிற்குரிய தக்யாவாக வக்பு செய்யப்பட்டது. கடந்த ரமழானுக்குமுன் இத்தக்யா திறந்து வைக்கப்பட்டது.

**மஸ்ஜிதுஸ்ஸாலிஹீன், வளவ்வத்த:**

ஹாஜி ஏ. எம். ஜவுபர் ஸாதிக் அவர்களது பெரு முயற்சியால் உள்ளூர், வெளியூர் தனவந்தர்களது உதவி கொண்டு இப் பள்ளிக்குரிய காணி வாங்கப்பட்டு பள்ளி கட்டப்பட்டுள்ளது. இப்பள்ளியில் ஐவேளைத் தொழுகையோடு தப்லீக் ஜமாஅத் பணிகளும் நடந்துவருகின்றன. ஐவர் கொண்ட நிர்வாக சபை இதனைப் பரிபாலித்து வருகிறது. நிர்வாக சபைத் தலைவராக ஓய்வுபெற்ற அதிபர் எம். ஏ. எம். அஜ்வாத் விளங்குகிறார். 1997 ஆரம்பத்தில் இப்பள்ளிவாயல் திறந்து வைக்கப்பட்டது.

**மஸ்ஜிதுத் தஃவா இஸ்லாமிய்யா:**

கறாபுகஸ்ஹந்தியில் தற்காலிக கட்டிடமொன்றில் மஸ்ஜிதுத் தஃவா இஸ்லாமிய்யா என்ற பெயரில் இயங்கி வருகிறது. இங்கு ஐங்காலத் தொழுகை மற்றும் மார்க்க உபதேசங்கள் நடந்து வருகின்றன.

**மல்வத்த தக்யா:**

இது தற்போது கட்டப்பட்டு வருகிறது. இதற்கான அத்திவாரம் செய்கு அஹ்மத் இப்னு முஹம்மத் ஆலிம் அவர்களால் சென்ற 10.05.1998 ஆம் திகதியில் இடப்பட்டது.

## அத்தனகல்ல

1. அல்மஸ்ஜிதுல் ரவ்ழா ஜும்ஆப் பள்ளிவாசல் - திகாரிய
2. முஹியத்தீன் ஜும்ஆ மஸ்ஜித், கஹட்டோவிட்ட
3. அல் மஸ்ஜிதுல் அமீனிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் - திகாரிய
4. அல் மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், உடுகொட
5. மஸ்ஜிதுல் ஹரம் ஜும்ஆப் பள்ளிவாசல், வெயாங்கொட
6. மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் - அத்தனகல
7. மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல்-கஹட்டோவிட்ட
8. அல் மஸ்ஜிதுன் நூராணிய்யா, ஹொரகொல்ல
9. மஸ்ஜிதுல் பலாஹ், ஒகொடபொல
10. அல் மஸ்ஜிதுல் அக்பர், தூல்மல, திஹாரிய
11. மஸ்ஜிதுல் இப்ராஹிமிய்யா, திஹாரிய
12. அல் மஸ்ஜிதுல் பத்தாஹ், பண்டாரநாயக்க பிளேஸ், திஹாரிய
13. மின்ஹத்துல் இப்ராஹிமிய்யா ஸாவியா, கஹட்டோவிட்ட
14. மீர் கனியா தக்யா, திஹாரிய
15. அல் மத்ரஸதுல் மல்ஹரிய்யா தக்யா, ஒகொடபொல
16. கறுவாத் தோட்டப் பள்ளிவாசல், திஹாரிய
17. பொல்ஹேன பள்ளிவாசல், திஹாரிய
18. ஹிஜ்ரா மாவத்தைப் பள்ளிவாசல், திஹாரிய
19. புகாரி தக்யா, திகாரிய
20. ரன்பொகுனுகம பள்ளிவாசல்
21. மௌலானபுர பள்ளிவாசல், கஹடொவிட

**அல் மஸ்ஜிதுல் ரவ்ழா ஜும்ஆப் பள்ளிவாசல்-திஹாரிய:-**

திஹாரிய முஸ்லிம் கிராமத்தின் முதல் பள்ளிவாசல் சிங்கள மன்னர்கள் காலத்தில் பால தோட்டம் என்ற இடத்தில் அமையப் பெற்றிருந்தது. காலம் செல்லச்செல்ல அப்பள்ளிவாசல் செய லிழக்கவே ஊர்மனை மையவாடி அமைந்துள்ள இடத்தில் இரண்டாம் பள்ளி அமையப்பெற்றிருந்தது. அதன் இடிபாடுகளை இன்றும் காணக் கூடியதாக உள்ளது. முஸ்லிம்களின் சனப்பெருக்கம் திஹாரியை மையமாகக் கொண்டு பெருகவே 1914 இல் தற்போதைய பள்ளிவாசல் கட்டப்பட்டது. இதனைக் கட்டுவதில் வெலிகமையைச் சேர்ந்த ஸைய்யத் அஹ்மத் இப்னு ஸைய்யத் அபூபக்கர் பாஹாசிம் பாஅலவி மௌலானா அவர்கள் முன்னின்று உழைத்தவராவார்.

அவர் பல மாத காலம் இங்கு தங்கியிருந்து தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் இதனை மிகச் சாதுரியமாகச் செய்து முடித்தார். பள்ளிவாசலுக்குத் தேவையான மணல் சிரமதான முறையில் ஊரார் அனைவரது பங்களிப்புடன் 700யார் தூரத் தில் உள்ள அத்தனகல ஓயாவிலிருந்து பெறப்பட்டது.

1915 இல் இப்பள்ளிவாசலைக் கட்டி முடிக்கும் தறுவாயில் இருந்தது. முதலாவது உலக மகா யுத்தத்தால் அது தடைப்பட்டு, 1916 ஏப்ரல் 13ம் திகதி அது வக்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இப்பள்ளிவாசலின் அப்போதைய பரிபாலகர் களாக சுலைமான் லெவ்வை மத்திச்சம், அ.ம. முஹம்மது லெவ்வை, அ.ம. அப்துஸ்ஸமது பொலிஸ் விதானை ஆகியோர் இருந்துள்ளனர்.

இப்பள்ளிவாசல் அன்று முதல் இன்று வரை இப்பிரதேச மக்களின் ஆன்மீகத் தேவையைப் பூர்த்தி செய்து வந்துள்ளது. இப்பள்ளிவாசல் கட்டப்பட்ட காலத்தில் மக்கள் தொகை 500 ஆக இருந்து இப்போது 5000 ஆக அதிகரித்துள்ளது. பள்ளிவாசலுடன் இணைந்ததாக குர்ஆன் மத்ரஸாவும் அமையப் பெற்றுள்ளது.

இப்பள்ளிவாசலின் நிருவாக சபையில் தற்போதைய தலைவ ராக ஜனாப் ஏ. சீ. எம். அல்வான் அவர்கள் விளங்குகிறார் இப்பள்ளிவாசலின் ஆரம்ப கதீப்களாக ஜனாப்கள் ஏ. சீ. எம். ரசாத், எம். சீ. எம். ஜுனைத் ஆகியோர் இருந்துள்ளனர். முஅத்தினாக எஸ்.எம்.எம். இஸ்மாயீல் அவர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

**அல் மஸ்ஜிதுல் அமீனிய்யா:**

1936 முதல் அல்ஹாஜ் ம. மெ. அஹமத் லெப்பே அவர்களுக்குச் சொந்தமான காணியில் மவ்கூபுஸ்ஸலாத் என்ற பெயரில் இயங்கி வந்த தக்யா 1952 இல் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு அல் மஸ்ஜிதுல் அமீனிய்யா என்ற பெயரில் ஜும்ஆப் பள்ளியாக வக்பு செய்யப்பட்டது. இப்பள்ளியைக் கட்டியதில் அல்ஹாஜ் ஏ. ஆர். எம். ஜுனைட் (ஜே. பி), அல்ஹாஜ் ஏ. எல். எம். ஸாலிஹ், ஜனாப்களான யூ. எம். எம். முபாறக், எல். எச். எம். ஸாலிஹ், எம். எம். அஹ்மத் லெவ்வை ஹாஜியார், ஏ. ஏ. மஹ்மூத் ஜே. பீ. ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இப்பள்ளிவாசலின் முதல் கதீபாக மர்ஹூம் மௌலவி ஏ. ஏ. எம். மஸ்ஊத் ஆலிம் அவர்கள் இருந்துள்ளார்கள்.

1950களில் ஊராரிடையே ஏற்பட்ட பிரிவினையை அகற்றி மனக்கசப்பைப் போக்கி ஒற்றுமை ஏற்படுத்துவதில் இப் பள்ளிவாசல் கதீப் அவர்கள் முன்னின்று பாடுபட்டார்கள். தமக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புக்களையும் இதற்காகப் பயன்படுத்தினார்கள்.

இதே அடிப்படையில் கடமையாற்றுவது சகல கதீப்மார்களதும் கடமை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**முஹியத்தீன் ஜும்ஆ மஸ்ஜித்:**

கஹட்டோவிட்ட பிரதேசத்தில் தோன்றிய முதற் பள்ளிவாசல் இதுவாகும். இதன் ஆரம்ப கட்டிடம் 1792இல் கஹட்டோவிட்டவில் உள்ள கொடல்ல எனுமிடத்தில் மோதரான அப்பாவுடைய காணியில் சின்ன லெப்பை சுலைமான் லெப்பை மத்திச்சம் தலைமையில் கட்டப்பட்டது. தற்போதுள்ள மஸ்ஜித் 1795 இல் கறுத்த ஆலிம் அப்பாவின் வழி காட்டலில் அமைக்கப்பட்டதாகும். இதற்கான காணியை அத்தனகல்ல பண்டார ஓவிடவைச் சேர்ந்தவரும் பின் கஹட்டோவிட்டவில் குடியேறியவருமான அகமது லெப்பை இங்கு குடியேறி பள்ளிக்கான காணியைக் கொடுத்துதவினார். இவரே பள்ளியின் முதற் கதீபுமாவார். இவரை அடுத்து கதீப் ஆலிம் அப்பா சுலைமான் லெப்பை அவர்களும் அடுத்து ஹமீது லெவ்வை அவர்களும் அப்துல் கரீம் லெப்பை அவர்களும் இருந்துதவினார்கள். 1910 இல்

பள்ளிக்குரிய காணி பதிவு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இப்பள்ளிவாசலின் பெயர் கஹட்டோவிட்ட ஜும்ஆ மஸ்ஜித் என இருந்து 1970 களில் அதன் பெயர் முஹியத்தீன் ஜும்ஆ மஸ்ஜித் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

**மஸ்ஜிதுன் நூர், உடுகொட:**

1924 இல் இப்பள்ளிக்கான அடிக்கல்லை வலிகாமம் மர்ஹூம் அஸ்ஸெய்யித் அஹ்மத் பாஹாசீம்பா அலவி மௌலானா அவர்கள் நாட்டி கட்டிட வேலையை ஆரம்பித்து வைத்தார். ஊர் மக்கள் ஒத்துழைப்புடன் கட்டிட வேலை பூர்த்தியாக்கப் பட்டது. 1934 இல் மர்ஹூம் அப்துஸ்ஸமது ஆலிம் அவர்கள் முதல் குத்பாவை இப்பள்ளியில் ஓதினார்கள். அன்றிலிருந்து இப்பள்ளி மஸ்ஜிதுன் நூர் எனப் பெயர் பெற்றது. எழுபது வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த இப்பள்ளிக் கட்டிடம் 1996 இல் அகற்றப்பட்டு புதுக்கட்டிட வேலை மர்ஹூம் அப்துஸ்ஸமது ஆலிம் அவர்களாலும் கொழும்பு பிரபல வர்த்தகர் அல்ஹாஜ் எம். எஸ். எம். றபீக் அவர்களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கட்டிட வேலை முழுமையாக நிறைவேறாத நிலையிலேயே அங்கு குத்பா, தொழுகை என்பன நடைபெற்று வருகின்றன.

1966 இல் மஸ்ஜிதுக்குரிய நிலத்தில் மத்ரஸாக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. மஸ்ஜிதுக்காக 70 பேர்ச் நிலம் தனவந்தர் களின் உதவிகொண்டு வாங்கப்பட்டுள்ளது.

**மஸ்ஜிதுல் ஹறம், வெயங்கொட:**

வெயங்கொட நகர் வாழ் இந்திய முஸ்லிம் வர்த்தகர்களால் கட்டப்பட்டது. இது இம்மாவட்டத்திலுள்ள பழமைவாய்ந்த பள்ளிகளுள் ஒன்று. இது ஜும்ஆப் பள்ளியாகவும் இருந்து வருகிறது.

**மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், அத்தனகல:**

அத்தனகல பண்டார ஓவிட என்னும் இடத்தில் ஒரு சிறு பள்ளிவாசல் கி.பி. 1600 காலப்பகுதியில் கட்டப்பட்டிருந்தது. அப்துல் காதர் லெப்பே என்பார் இதனை நிர்மாணித்தார். அக்கால சிங்கள மன்னர்களால் செய்கு அப்துல் காதருக்கும் சகபாடிகளுக்கும் காணி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசல் தூர்ந்து போகவே இரண்டாவது பள்ளியும் கட்டப்பட்டுள்ளது.

1925ல் ஹுனுபொல என்ற இடத்தில் மூன்றாவது பள்ளி கட்டப்பட்டது. அதுவே நிரந்தரப் பள்ளிவாசலாகவுள்ளது. 1979ல் இப்பள்ளிவாசல் விஸ்தரிக்கப்பட்டது. ஜும்ஆத் தொழுகையில் 75 பேர் வரை கலந்துகொள்கின்றனர்.

**மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், கஹட்டோவிட்ட:**

இது 1974 இல் உருவாக்கப்பட்ட பள்ளிவாசலாகும். இது கஹட்டோவிட்டயில் தோன்றிய இரண்டாவது ஜும்ஆப் பள்ளிவாசலாகும்.

**அல் மஸ்ஜிதுல் நூராணியா, ஹொரகொல்ல:**

காலஞ் சென்ற முன்னாள் பிரதம மந்திரி எஸ். டப்ளியூ. ஆர். டீ. பண்டாரநாயகாவினால் வழங்கப்பட்ட காணியிலேயே இப்பள்ளிவாசல் அமைந்துள்ளது. அவர் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் 1959 இல் இக்காணியை வழங்கினார். ஊர் மக்களது முயற்சியால் பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1998 இல் குவைத் நாட்டு உதவி மூலம் பள்ளிவாசல் பெருப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. இங்கு ஜும்ஆவும் நடைபெறுகிறது.

**மஸ்ஜிதுல் பலாஹ், ஒகடபொல:**

இங்கு வாழ்வோரின் தொழுகை வசதி கருதி இப்பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1987 இல் இது ஜும்ஆப் பள்ளியாக மாற்றம் பெற்றது.

**அல் மஸ்ஜிதுல் அக்பர், தூல்மல, திஹாரிய:**

இது திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்திற்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இதற்கான காணியை மர்ஹூம் எம். ஸீ. சேகு மஃமூத் அவர்கள் வழங்கினார்கள்.சில வருடங்களின் பின் மத்ரஸதுல் கொபார் என்ற பெயருடன் பள்ளிவாசலையும் இணைத்துக்கட்டியுள்ளனர். தூல்மலை ஜனாஸா நலன்புரிச் சங்கம் இதற்கென முழு மூச்சுடன் உழைத்தது.

**மஸ்ஜிதுல் இப்ராஹிமிய்யா, திஹாரிய:**

இப்பள்ளிவாசல் திஹாரிய பண்டாரநாயக்க பிளேஸில்அமைந் துள்ளது. இதற்கான காணியை வழங்கியவரும் பள்ளிவாசலைக் கட்டியவரும் அல்ஹாஜ் எம். ஈ. எம். லாபீர் ஜே. பீ. ஆவார்.

1990 ஒக்டோபர் 3ம் திகதி இது அன்னாரால் வக்பு செய்யப்பட்டது. அல்ஹாஜ் மௌலவி எம். கே. ஈ. அபுல் ஹஸன் (காஹிரி) அவர்களால் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது. இங்கு ஐங்காலத் தொழுகையும் தஃவாப் பணியும் இடம் பெற்றுவருகின்றன.

**மஸ்ஜிதுல் பத்தாஹ், நாப்பிரித்த, திஹாரிய:-**

தற்போதைய பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களால் பகிர்ந்தளிக்கப்பட்ட பிரதேசமே நாப்பிரித்த பிரதேசமாகும். இங்குள்ளோரின் மார்க்கக் கடமைகளை நிறை வேற்றவென 10 பேர்ச் காணி திருமதி சஹர்வான் தாஹா அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அக்காணியில் அமைந்த பள்ளிவாசலே இதுவாகும்.

**மின்ஹதுல் இப்ராஹிமிய்யா ஸாவியா:**

இது 1942 இல் கட்டப்பட்டது. சாதுலிய்யா இஹ்வான்களது அனுஷ்டானங்களை நிறைவேற்றவென இது நிர்மாணிக்கப் பட்டது.

**மீர்கனியா தக்யா, திஹாரிய:**

திஹாரிய சென்றல் பிளேஸில் அமையப் பெற்றுள்ள இது சுமார் 75 வருடங்களுக்கு மேலாக சன்மார்க்க மற்றும் தஃவாப் பணியாற்றும் நிலையமாக உள்ளது. இங்கு மீர் கனி தர்கா செய்கின் பெயரால் வருடாந்தக் கந்தூரியும் வாராந்த ராதிபும் தப்லீக் பணியும் இடம் பெற்று வருகின்றன.

**அல் மத்ரஸதுல் மல்ஹரிய்யா தக்யா, ஒகடபொல:**

இங்கு குர்ஆன் மத்ரஸாவுடன் கூடியதாக தொழுகைக்கான வசதியும் செய்யப்பட்டுள்ளது.

**கறுவாத்தோட்டப் பள்ளிவாசல்:**

நீர்கொழும்பு ஆராய்ச்சியார் குடும்பத்திற்குச் சொந்தமான காணி துண்டாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் வீடுகள் உருவாகின. அவர்களது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்ற வசதியாக ஓர் இறை இல்லம் அமைக்கப்பட்டு அது 1978 ஆகஸ்ட் 8ம் திகதி வக்பு

செய்யப்பட்டது. இப்பள்ளிவாசலின் போசகராக ஓய்வுபெற்ற அதிபர் அல்-ஹாஜ் அபுல் ஹஸன் பணியாற்றியுள்ளார்.

**பொல்ஹேனப் பள்ளிவாசல்:**

இதுவும் தூல்மலைப்பிரதேசத்தில் அமையப்பெற்றது. முஸ்லிம் பெண்மணியொருவருக்குச் சொந்தமான நிலத்தைத் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் லயனல் குணவர்தன அவர்களால் துண்டாடி அதனை முஸ்லிம்களுக்கே விற்றார். அவர் அதில் 10 பேர்ச் நிலத்தை பள்ளிவாசலுக்கு ஒதுக்கி அதனை 1996 இல் மஸ்ஜிதுர் ரௌலா நிர்வாகிகளிடம் கையளித்தார். அங்குள்ளோரினது தொழுகை வசதிக்காக அமைக்கப்பட்டதே இப்பள்ளிவாசலாகும்.

**ஹிஜ்ரா மாவத்தைப் பள்ளிவாசல்:**

இப்பள்ளிவாசலுக்கான நிலம் ஹிஜ்ரா மாவத்தையைச் சேர்ந்த அப்துல்லத்தீப் முஹம்மது ஸாலிஹ் என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதில் கட்டப்பட்ட பள்ளிவாசலருகில் குர்ஆன் மத்ரஸாவும் அமையப் பெற்றுள்ளது.

**புகாரி தக்யா:**

திஹாரி சென்றல் பிளேஸில் அமைந்துள்ள இத் தக்யா கி. பி. 1860 இல் கட்டப்பட்டது. காதிரிய்யத்துன் நபவிய்யாத் தரீக்காவின் அனுஷ்டானங்களை நிறைவேற்றவென இது அமைக்கப்பட்டது. இங்கு ஹதீஸ் மற்றும் ராதிப் மஜ்லிஸ் நடைபெறுகிறது. சேகு முஸ்தபா வலியுல்லாஹ் பேரிலான கத்முல் குர்ஆன் வைபவமும் வருடாந்தம் நடைபெறுகிறது. இதன் முகத்தமாக ஜனாப் ஏ.எல். எம். இப்ராஹீம் அவர்களும் அல்ஹாஜ் ஏ. எல். எம். ராஸீக் அவர்களும் செயல்பட்டுவருகிறார்கள்.

**ரன்பொகுனுகம பள்ளிவாசல்:**

ரன்பொகுனுகம அரச வீடமைப்புத்திட்டம் 1987ல் உருவாக்கப்பட்டது. இதில் 65 முஸ்லிம் வீடுகள் உள்ளன. இது தவிர திட்டத்துக்கு வெளியிலும் 58 முஸ்லிம் குடும்பங்கள் உள்ளன. 1990 முதல் பள்ளி கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1993 லேயே பள்ளி கட்டுவதற்கான காணி கிடைக்கப்பெற்று

பொதுமக்கள் உதவிகொண்டு பள்ளிவாசலும் அமைக்கப்பட்டது. இப்பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையும் நடைபெறுகிறது.

**மௌலானாபுர பள்ளிவாசல், கஹடோவிட:**

இது 1990 காலப்பகுதியில் மல்வானை ஸஊத் ஹாஜியாரால் கட்டப்பட்டது. அவரே இதற்கான காணியையும் அன்பளிப்புச் செய்தார்.

## நீர் கொழும்பு

1. காமச்சோடை ஜும்ஆப் பள்ளிவாசல்
2. மஃனமுல் பலாஹ் ஜும்ஆ மஸ்ஜித்
3. நீர்கொழும்பு பெரிய ஜும்ஆப் பள்ளி
4. கொச்சிக்கடை ஜாமிஉல் மிழுபர் பள்ளி
5. பலகத்துறை ஜும்ஆப் பள்ளிவாசல்
6. உடையார் தோப்புப் பள்ளிவாசல்
7. மஸ்ஜிதுல் ஹுதா
8. காதிரிய்யா தக்யா
9. மத்ரஸதுல் மினன் தக்யா

**காமச்சோடை ஜும்ஆப் பள்ளிவாசல்:**

நீர்கொழும்புப் பிரதேசத்தில் தோன்றிய முதல் முஸ்லிம் குடியேற்றம் நீர்கொழும்பு நகருடன் ஒட்டி காமச்சோடையிலேயே உண்டானது. இப்பிரதேசத்தில் கட்டப்பட்ட முதற் பள்ளிவாசலும் இங்கே உள்ளது. சுமார் 1700ம் ஆண்டளவில் ஓலையால் கட்டப்பட்ட இப்பள்ளிவாசல் 1840ம் ஆண்டளவில் இந்திய வர்த்தகர்களதும் உள்ளூர்வாசிகளதும் உதவிகொண்டு கல்லால் கட்டப்பட்டது. 1889 காலப்பகுதியில் இரு சாராரிடையே ஏற்பட்ட பிணக்கில் நீதிமன்றம் இதன் நிர்வாகத்தை ஊர்வாசிகளிடம் ஒப்படைத்தது. அகமது லெப்பே மதார் லெப்பே பள்ளிவாசலை பரிபாலனம் செய்து வந்தார்.

1982ல் இப்பள்ளிவாசல் விசாலமாக்கப்பட்டு இன்னும் அபி விருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஜும்ஆத் தொழுகையில் சுமார் 600பேர் வரையில் கலந்து கொள்கிறார்கள். பள்ளிவாசலுக்குரிய இரு ஏக்கர் காணியில் தர்காவும், குர்ஆன் மத்ரஸாவும், ஒரு பாடசாலையும் இயங்கி வருகின்றன.

**மஃனமுல் பலாஹ் ஜும்ஆ மஸ்ஜித்:**

நீர்கொழும்பு நகரில் அமையப் பெற்றுள்ள இப்பள்ளிவாசல் ஆற்றடிப் பள்ளிவாசல் என்று அழைக்கப்படுகிறது. ஒல்லாந்தர் வாய்க்காலுக்குப் பக்கமாக 1890ல் முஸ்லிம் வர்த்தகர்களால் கட்டப்பட்டது. இதன் நிர்வாகமும் அவர்கள் கையில் இருந்து வருகிறது. இவர்கள் 3 ஏக்கர் காணியை வாங்கி மையவாடியாகப் பயன்படுத்திவந்தனர். இதுவே இப்போது நீர்கொழும்பு வாழ் முஸ்லிம்களின் பொது மையவாடியாக இருந்து வருகிறது.

**நீர்கொழும்பு பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல்:**

இது முன்னர் சுன்னாபிட்டி முஹியத்தீன் பள்ளிவாசல் என்று அழைக்கப்பட்டு வந்தது. இப்பள்ளிவாசல் கட்டப்பட முன் இங்குள்ள முஸ்லிம்கள் உடையார் தோப்புப் பள்ளிவாசலுக்குச் சென்று தமது சமயக் கடமைகளை நிறைவேற்றிவந்தனர். காமச்சோடைப் பள்ளிவாசல் சென்று ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றிவந்தனர். இந்நிலையில் நீர்கொழும்பைச் சேர்ந்த சின்ன மரிக்கார் என்பவர் தற்போதுள்ள பள்ளி வாசலுக்குக் காணி கொடுத்து அங்கு பள்ளிவாசலையும் மத்ரஸாவையும் அமைக்க ஆவன செய்தார். இந்த மத்ரஸாவிலேயே காலை நேரத்தில் அரசாங்கப் பாடசாலை இயங்க ஆரம்பித்தது. இன்று இப் பள்ளிவாசலே நீர்கொழும்பு பிரதேசத்திற்குரிய பெரிய பள்ளி வாசலாகத் திகழ்கிறது. 1972ல் இப்பள்ளிவாசல் மூன்று மாடிகளைக் கொண்டதாக விசாலமாக்கப்பட்டுள்ளது. இதன் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

காமச்சோடை, நீர்கொழும்பு டவுன், கம்மல்துறை, கொச்சிக் கடை ஆகிய ஜும்ஆப் பள்ளிவாசல்களை உள்ளடக்கிய ஒன்றியத்தின் தலைமைப் பள்ளிவாசலாக நீர்கொழும்பு பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் நீர்கொழும்புப் பிரதேச செயலகப்பிரிவு முஸ்லிம்களுக்குரிய பொதுமையவாடிகள் இரண்டும் இப்பள்ளியை அண்மித்ததாக அமையப் பெற்றுள்ளன.

**ஜாமிஉல் மிழுபர் ஜும்ஆப் பள்ளிவாசல், கொச்சிக்கடை**

இந்தியாவைச் சேர்ந்த பொன்னாணியிலிருந்து வந்த முஸ்லிம்கள் இப்பிரதேசத்தில் பெரும் வர்த்தகர்களாக விளங்

கினர். அவர்கள் தமது மார்க்க அனுஷ்டானங்களை நிறைவேற்று வதற்காக ஒரு சிறிய பள்ளியை மகா ஓயா பாலத்திற்கு அருகில் அமைத்தனர். பின்னர் சுல்தானா பேக்கரி உரிமையாளர் குஞ்சு மூசா என்பவர் 1946ல் இதற்குப் பதிலாக கொச்சிக்கடை நகரில் அழகான பள்ளிவாசலைக் கட்டினார். ஜும்ஆப் பள்ளிவாசலாக விளங்கும் இப்பள்ளிவாசலின் பிரதம நிர்வாகியாக தற்போதைய சுல்தானா பேக்கரி உரிமையாளர் அல்ஹாஜ் நஸுர் தீன் அவர்கள் விளங்குகிறார்.

### பலகத்துறை ஜும்ஆப் பள்ளிவாசல்:

நீர்கொழும்பு பிரதேசத்தில் கட்டப்பட்ட 2வது பள்ளிவாசல் இதுவாகும். பலகத்துறை முஸ்லிம்கள் செறிந்து வாழும் தனிப் பெரும் கிராமமாகும். இப்பள்ளிவாசல் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் உள்ளூர்வாசிகளதும் இந்திய தனவந்தர்களதும் வர்த்தகர்களதும் உதவிகொண்டு கட்டப்பட்டதாகும். அழகிய வேலைப்பாடுடன் கூடிய இப்பள்ளிவாசல் கட்டிடம் 1982ல் உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. இப்பிர தேசத்திற்குரிய மையவாடி பள்ளியை ஒட்டியதாகவுள்ளது.

### உடையார் தோப்புப் பள்ளிவாசல்:

நீர்கொழும்பு-மீரிகம வீதி, சுன்னப்பிட்டிப் பகுதியை அண்டிய உடையார் தோப்புக் கிராம சேவகர் பிரிவில் அமையப் பெற்றுள்ளது இப்பள்ளிவாசலாகும். இப்பள்ளிவாசல் இதற்குப் பக்கமாக உள்ள தேங்காய்த்துருவல் ஆலையில் வேலை செய்யும் இந்தோனீசிய தொழிலாளர்கள் தொழுதுகொள்வதற்காகக் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் இப்பள்ளி பலகையால் கட்டப்பட்டிருந்தது. பின்னர் இது மண்ணால் கட்டப்பட்டது. மீரா லெப்பே மரிக்கார், மு.வி. சம்சுத்தீன் ஆராச்சி முதலானோர் அரசாங்க அதிகாரிகளாக இருந்தகாலை இப்பள்ளிவாசலுக்கு சுமார் $1^1/_2$ ஏக்கர் நிலம் பெறப்பட்டு கல்லால் நிர்மாணிக்கப்பட்டது. இப்பள்ளிவாசலின் நிர்வாகமும் இவர்களது பொறுப்பிலேயே இருந்து வருகிறது. 1840 வரை இங்கு ஜும்ஆ நடைபெற்று வந்துள்ளது. 1840க்குப் பின் இங்குள்ளோர் பெரியமுல்லைப் பள்ளிவாசலுக்கு ஜும்ஆவுக்குச் செல்லலாயினர்.

**மஸ்ஜிதுல் ஹுதா:**

வியாபார நோக்கில் நீர்கொழும்பில் வந்து குடியேறிய அல்ஹாஜ் எம். எச். எம். தையூப் அவர்கள் தமது சொந்தப் பணத்தில் 19பேர்ச் நிலத்தை வாங்கி தம் சொந்தச் செலவிலேயே இப்பள்ளி வாசலை 1990ம் ஆண்டில் கட்டிமுடித்தார். இதற்கான பரிபாலன செலவுகளையும் அவரே செய்து வருகிறார். இப்பள்ளி வாசலும் நீர்கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு உட்பட்டதாகும்.

**காதிரிய்யாத் தக்யா:**

பலகத்துறை ஆற்றுக்கு மறு கரையில் செய்கு சுலைமான் அல் காதிரி என்பவரின் முயற்சியால் இத்தக்யா கட்டப்பட்டது. இத்தக்யா அமைந்திருக்கும் பாதை தக்யாரோட் எனப்படுகிறது. தற்போது உள்ளூர்வாசிகளது உதவியால் இரு மாடி கொண்ட பள்ளிவாசலாக அமைக்கப்பட்டு கட்டிட நிர்மாண வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளது.

**மத்ரஸதுல் மினன் தக்யா:**

இது முன்பு யூசுபியா தக்யா எனப்பட்டது. கொடைவள்ளல் அல் ஹாஜ் பீ. எம். யூசுப் அவர்களால் 1946ல் 80 பேர்ச் நிலத்தில் பள்ளிவாசலும் மத்ரஸாவும் பள்ளியின் வருமானத்திற்காக இரு கடைகளும் கட்டி வக்பு செய்யப்பட்டன. இவர் இந்தியா விலிருந்து அப்துல்லாஹ் ஆலிம் அவர்களை வரவழைத்துப் பேஷ் இமாமாகவும் நியமித்தார். இதில் இயங்கப்பெற்றுவந்த மத்ரஸா இப்பிரதேசத்தில் பிரசித்தம்பெற்றுவிளங்கியது. இத்தக்யாவும் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு உட்பட்டதாகும்.

**மினுவாங்கொடை:**

1. அல் மஸ்ஜிதுஸ்ஸாலிஹாத் பீஇபாததில்லாஹில் காதிர் ஜும்ஆப் பள்ளிவாசல், கள்ளொலுவ
2. மினுவாங்கொடை முஸ்லிம் ஜும்ஆப் பள்ளிவாசல்
3. முஹியத்தீன் தக்யா, கோபிவத்த
4. கோவின்ன முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளி
5. தக்யா வீதித் தக்யா
6. எக்ஸத் ஹந்தித் தக்யா
7. முனாஸ் ஹாஜியார் மாவத்தைத் தக்யா

### கள்ளொலுவ ஜும்ஆப் பள்ளிவாசல்:

கள்ளொலுவ கிராமத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர். அப்போதிருந்தே ஓலையாலான பள்ளிவாசல் இருந்துள்ளது. பின்னர் களி மண்ணால் சுவர் கட்டப்பட்டது.

இப் பிரதேசவாசிகள் நிரந்தரமான பள்ளியொன்றை அமைப்பதற்காக பத்து வருடங்கள் முயன்று கட்டி 1924ம் ஆண்டு மார்ச் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ழுஹர் நேரத்தில் 'மஸ்ஜிதுல் முஸ்லிமீன் பீ இபாதத்தி ரப்பில் ஆலமீன்' என்ற பெயரில் வக்பு செய்யப்பட்டது. அப்போது பள்ளிப் பொறுப்பாளர்களாக பின்வருவோர் இருந்துள்ளனர்.

1. எஸ். எஸ். ஸெய்யது ஹாதி மௌலானா
2. எஸ். எல். ஏ. எம். ஆலிம் ஸாஹிப்
3. கதீப் அப்துர்ரஹ்மான் லெப்பே
4. பாவா ஸாஹிப் மரைக்கார்
5. மீ. ம. முஹம்மது இஸ்மாயீல்

காலப்போக்கில் ஜமாஅத்தார் தொகை அதிகரித்துச் செல்லவே பள்ளிவாசலை மேலும் விஸ்தரிக்க வேண்டிய தேவையேற்பட்டது. பலர் முன் வந்து பள்ளிக்கு காணித் துண்டுகளைஅன்பளிப்புச் செய்தனர். 1980 இல் நிருவாகச் சபைக்குத் தெரிவான அல்ஹாஜ் ஏ. எச். எம். முனாஸ் அவர்கள் முன்வந்து பள்ளிவாசலின் மிஹ்ராப், மின்பர் தவிர்ந்த பகுதிகளை உடைத்து பள்ளிவாசலை விசாலமாக்கி புதிதாகக் கட்டி முடித்தார். ஜமாஅத்தார் நன்கொடையாலும் அவரது சொந்தப் பணத்தாலும் இதனை அவர் செய்து முடித்தார். 1988 முதல் இப்பள்ளிவாசல் கள்ளொலுவ ஜும்ஆப் பள்ளி எனப் பெயர் பெற்றது. 5000 மக்கள் வாழும் கள்ளொலுவ கிராமத்தின் தனிப் பெரும் ஜும்ஆ மஸ்ஜிதாக இப்பள்ளி திகழ்ந்து வருகிறது.

### மினுவாங்கொட ஜும்ஆப் பள்ளிவாசல்:

இப்பள்ளிவாசல் 1875இல் இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த இந்திய முஸ்லிம்களால் கட்டப்பட்டது. பின்னர் இங்கு பலரும் வந்து குடியேறியதால் பள்ளிவாசலை விஸ்தரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இற்றைக்கு 31 வருடங்களுக்கு முன் அரசாங்கத்தால் பெறப்பட்ட காணியில் சுமார் 300 பேர்வரை

தொழக் கூடியவாறு பள்ளிவாசல் விசாலமாக்கப்பட்டது. தற்போதைய பள்ளிவாசல் ஜமாஅத்தார் தொகை 350 ஆகும்.

**கோப்பித்தோட்டம் முஹியத்தீன் தக்யா:**

1950 இல் ஏற்பட்ட இக்குடியேற்றத்தில் 1959இலேயே ஓலைக் குடிசையில் பள்ளிவாசல் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் 15 வருடங்களுக்குப் பின்னரே நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட்டது. இப்பள்ளிவாசலுக்குரிய தற்போதைய ஜமா அத்தார் தொகை 200 ஆகும். இங்கு இப்போது ஜும்ஆத் தொழுகையும் நடைபெறுகிறது.

**கோவின்ன முஹியத்தீன் ஜும்ஆப்பள்ளி:**

இது ஒரு சிறிய கிராமமாகும். இங்கு சுமார் 25 குடும்பங்கள் அளவில் வாழ்கிறார்கள். இவர்களது மார்க்கக் கல்வி வசதிக்காக 5 பேர்ச்சஸ் காணியில் மத்ரஸா கட்டப்பட்டது. பின்னர் ஒரு சிங்கள தனவந்தர் 20 பேர்ச்சஸ் காணியை பள்ளிவாசலுக்காக அன்பளிப்புச் செய்தார். இந்தக் காணியிலேயே புதிய பள்ளிவாசல் கட்டப்பட்டது. மையவாடிக்காக அரை ஏக்கர் காணி அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

**எக்ஸத் ஹந்தித் தக்யா:**

இது இங்கு வாழ்வோரின் ஐங்காலத் தொழுகையின் வசதிக்காகக் கட்டப்பட்டது. மர்ஹூம் எம். எம். இஸ்ஹாக் அவர்கள் ஒரு பெண்ணிடம் காணியை நன்கொடையாகப் பெற்று அதில் தக்யாவை அமைத்தார்.

**முனாஸ் ஹாஜி மாவத்த தக்யா:**

இப்பகுதியில் தொழுகை வசதிக்காக தக்யா ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

**தக்யா வீதித் தக்யா**

1948ம் ஆண்டு மர்ஹூம் எம். எம். ஸாலிஹ் ஹாஜியார் அவர்கள் தமக்குச் சொந்தமான காணியில் தக்யா ஒன்றைக்கட்டி வக்பு செய்தார். இங்கு ஐங்காலத் தொழுகையும் வெள்ளி இரவுகளில் நக்ஷபந்தியா ராதீபும் வெள்ளி காலையில் புர்தாவும் இடம்பெற்று வந்துள்ளன. அவருக்குப் பின் அவரது மகன்

அல்ஹாஜ் எம். எஸ். எம். ஜெமீல் அவர்கள் இப்பொறுப்பை ஏற்றுச் செய்து வந்துள்ளார்.

இட நெருக்கடி காரணமாக அல்ஹாஜ் எம். ஏ. எம். முஸம்மில் அவர்கள் இதனை மாடிக்கட்டடமாக புனர் நிர்மாணம் செய்தார். தற்போது இங்கு ஐவேளைத் தொழுகையுடன் தப்லீக் ஜமாஅத் பணிகளும் நடந்து வருகின்றன.

## மீரிகம

1. அல் மஸ்ஜிதுல் ஸுப்ஹானி, கள்-எலிய
2. நாம்புளுவ ஜும்ஆ மஸ்ஜித், பஸ்யால
3. மஸ்ஜித் ஜாமிஉல் கைராத், அல்லலமுல்ல
4. வேவல்தெனிய ஜும்ஆ மஸ்ஜித்
5. ஸபீலுல் ஹுதா ஸாவியா, ரதாவடுன்ன
6. கள்-எலிய டவுன் பள்ளிவாசல்
7. ஹன்ஸகிரிய பள்ளிவாசல், கள்-எலிய
8. தாஜுதீன் மாவத்தை பள்ளிவாசல்
9. ஸலீம்புர பள்ளிவாசல்
10. பஸ்யால டவுன் பள்ளிவாசல்
11. பொல்கஹதென்ன பள்ளிவாசல்

### அல் மஸ்ஜிதுல் ஸுப்ஹானி:

கி.பி. 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கள் - எலியவில் முஸ்லிம் குடியேற்றம் ஆரம்பித்துள்ளது. சுமார் 1725 ஆம் ஆண்டளவில் மொரகொல்லையில் சேகுக்கானும் வேறு பலரும் குடியேறினர். அவர்கள் தம் பிள்ளைகள் ஓதுவதற்காகவும் தொழுவதற்காகவும் மொரகொல்லையில் இக்காலப் பகுதியில் முதல் பள்ளியைக் கட்டினர். சேகுக்கானின் மறைவின் பின் அவரது குடும்பம் பல்கிப் பெருகவே 1845 இல் தற்போது பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் இரண்டாவது பள்ளிவாசல் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் கல்வி புகட்ட திஹாரிய, கஹட்டோவிட்ட பகுதியில் இருந்து லெப்பைமார் வரவழைக்கப் பட்டனர். 1951ம் ஆண்டு நடுப்பகுதியில் வெள்ளிக்கிழமை தினமொன்றில் மர்ஹூம் மௌலானா மௌலவி செய்கு சுலைமானுல் காதிரி இப்பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தபோது அங்கு இடநெருக்கடி இருப்பதைக் கண்டு பள்ளிவாசல்

விஸ்தரிக்கப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். இதன்படி ஆலோசனை செய்யப்பட்டு ரூபா. 25,000/- செலவில் பள்ளி புனரமைக்கப்பட்டது. ஊரில் 13,000/- ரூபா வசூலானது. போதாத பணத்தை மர்ஹூம் எச். எல். எம். ஏ. காதர், அல்ஹாஜ் ஏ. எச். எல். ஏ. ஸலீம் ஆகியோர் வழங்கினர். 1953 பெப்ரவரி முதலாம் திகதி மஸ்ஜிதுஸ் ஸுப்ஹானி என்ற பெயரில் பள்ளி திறந்து வைக்கப்பட்டது.

இப்பள்ளிவாசலின் கௌரவ நம்பிக்கையாளராக ஹாஜி எச். எல். எம். அப்துல் காதர் 1956 ஜுலை முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டார். 1969ம் ஆண்டு வரை அவரது பணி தொடர்ந்தது. அவருக்குப்பின் 1969.03.25ம் திகதி முதல் ஹாஜி ஏ. எச். எல். ஏ. ஸலீம் அவர்கள் நியமனம் பெற்றார். அவரது பணி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

1956 காலத்தில் 150 ஆக இருந்த ஜமாஅத்தார் தொகை 1984 இல் 450 ஆகவும், 1997 இல் 700 ஆகவும் அதிகரித்துள்ளது.

மீண்டும் பள்ளிவாசலை விஸ்தரிக்க வேண்டிய தேவை 1980 இல் ஏற்பட்டது. அது சற்று தாமதமடைந்து நிர்வாகத் தலைவர் அல்ஹாஜ் ஏ. எச். எம். கலீல் அவர்களது ஆலோசனைப்படி 4 இலட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டிடமாகப் புனரமைக்கப்பட்டு 13.02.1987இல் திறந்து வைக்கப்பட்டது. இக்கிராமத்தில் பைத்துல்மால் நிதியம், வட்டியில்லாக் கடன் சங்கம், அஹதியா முதலான தஃவா இயக்கங்களும் இயங்கிவருகின்றன.

### நாம்புளுவ ஜும்ஆ மஸ்ஜித்:

கி. பி. 1750 இற்குப் பிற்பட்ட காலப்பகுதியிலேயே நாம்புளுவ கிராமத்தில் முஸ்லிம்கள் காலூன்றினர். இங்கு கி.பி. 1830 இலேயே முதற் பள்ளிவாசல் கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. முதன்முதலாக இங்கு வந்து குடியேறிய பெந்தரை மரிக்கார் என்பவர் தற்போது பள்ளிவாசல் உள்ள இடத்தில் தனது வீட்டைக் கட்டியுள்ளார். அவரது மகன் ஜதுருஸ் லெப்பை இந்த வீட்டைப் பள்ளியாக்கிவிட்டு வேறொரு இடத்தில் குடியேறினார். 20' X 30' அளவுடைய இப்பள்ளிவாசல் மண்ணால் கட்டப்பட்டதாகும்.

1902ம் ஆண்டில் ஏற்கனவே இருந்த பள்ளிவாசலை அடுத்து இரண்டாவது பள்ளிவாசல் கட்டப்பட்டது. இது 55' X 35' அடி அளவுடையதாக இருந்தது.

1980 காலப்பகுதியில் இப்பள்ளிவாசல் உடைந்து விழும் நிலையில் இருந்தது. இந்நிலையில் குடிப்பெருக்கத்திற்கு ஏற்ற விதமாக பள்ளிவாசலைக்கட்ட வேண்டிய தேவை உணரப்பட்டது. பள்ளிவாசல் விஸ்தரிப்புக்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. மர்ஹூம் அல்ஹாஜ் ஏ. ஏ. எம். மஸ்ஊத் ஆலிம் அவர்களது ஆலோசனைப்படி 100' X 40' அளவிலான இருமாடிக்கட்டிடமாக மாதிரிப்படம் வரையப்பட்டு அடிக்கல்லும் நாட்டப்பட்டது. இருந்த போதிலும் 1994 காலப்பகுதியில் பிறிதொரு கட்டிடக் குழு சிறப்பாக இயங்கி கட்டிட வேலையை ஆரம்பித்தது. தற்போது அதன் கீழ்மாடி முடிவுற்ற நிலையில் புதிய பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வூரிய தப்லீக், தவ்ஹீத் ஜமாஅத்கள் மூலம் தஃவாப் பணி சிறப்பாக நடந்து வருகிறது.

ஆரம்பத்தில் அல்லலமுல்ல, பஸ்யால, தியல்ல, வேவல்தெணிய, அல்கம வாழ் முஸ்லிம்களும் நாம்புளுவ பள்ளிவாசல் ஜமாஅத்தினராகவே இருந்து வந்துள்ளனர். காலப்போக்கில் இவர்கள் தனித்தனி பள்ளிவாசல்களை அமைத்துக் கொண்டு தனி ஜமாஅத்தினராக மாறியுள்ளனர். தற்போது பஸ்யால, தியஸ்பொகஹதென்ன ஆகிய ஊர்களில் தக்யாக்கள் உள்ளன. அவை இப்பள்ளிவாசலின் பரிபாலனத்தின் கீழ் உள்ளன.

கடந்த பல தசாப்தங்களில் இப்பள்ளிவாசலைப் பரிபாலனம் செய்த நம்பிக்கையாளர் விபரம்:

அல்ஹாஜ் ஏ. எம். சுஹைப் மரிக்கார், ஜனாப் சீ. எம். ஏ. மஜீட், ஜனாப் ஏ. எம். ரஷாட், ஜனாப் ஏ.எம். நூர்தீன், ஜனாப் எம். எல். அப்துல் ஸமது, ஜனாப் ஏ. எல். எம். நூர்தீன், அல்ஹாஜ் எம். என். எம். ஸவாஹிர், ஜனாப் எம். என். எம். அன்வர், ஜனாப் டபிள்யூ. எம். அப்துல் கபூர், ஜனாப் ஓ. எல். எம். சனூன், ஜனாப் எம். எல். அப்துல் மஜீட், ஜனாப் எம். டீ. எம். அஷ்ரப், ஜனாப் ஏ. எம். எம். நிதாம், அல்ஹாஜ் எஸ். ஏ. சீ. சபா சரீப், ஜனாப் எஸ். எம். ரிபாய்.

### ஜாமிஉல் கைராத் ஜும்ஆப் பள்ளிவாசல், அல்லலமுல்ல

அல்லலமுல்ல கிராமம் ஒரு சிறிய முஸ்லிம் கிராமமாகும். இங்கு ஆரம்பத்தில் சிறு தொகை முஸ்லிம்களே இருந்து வந்ததால் அவர்கள் தமது மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற நாம்புளுவ கிராமத்துக்கே சென்று வந்துள்ளனர். காலப்போக்கில் முஸ்லிம் குடியிருப்புக்கள் அதிகரிக்கவே பள்ளிவாசல் ஒன்றின் தேவை அதிகரித்தது.

இவ்வேளை இவ்வூர் பரம்பரைக் குடும்பத்தவராகிய சட்டத்தரணி அப்துர்ரஹ்மானின் மனைவி சுலைஹாபீபிக்குச் சொந்தமான காணி பள்ளிவாசலுக்காக அன்பளிப்புச் செய்யப்பட்டது. இப்பகுதியில் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்த வர்த்தகராகிய மர்ஹூம் அல்ஹாஜ் எஸ். எம். எம். ஸலீம் அவர்கள் தமது அயராத முயற்சியால் நன்கொடைகள் வசூலித்து 1967ம் ஆண்டு இப்போதுள்ள ஜும்ஆப் பள்ளிவாசலைக் கட்டினார். அப்பள்ளிவாசல் இன்று வரையில் சிறப்பாக செயல் பட்டு வருகிறது.

### வேவல்தெனிய ஜும்ஆ மஸ்ஜித்

வேவல்தெனிய கிராமத்தில் 1830 காலப் பகுதியில் ஒரு சில குடும்பங்களே குடியேறி இருந்தன. பின்னர் குடியேற்றங்கள் அதிகரிக்கவே இங்கு ஐங்காலத் தொழுகையினை நிறைவேற்றிக் கொள்ள அஸ்ஸாவிய்யதுல் பாஸியா என்ற பெயரில் ஸாவியாவொன்று கட்டப்பட்டது. 1926ல் பள்ளிவாசல் கட்டப்படும் வரை இங்கேயே இங்குள்ள முஸ்லிம்கள் தமது சமயக் கடமைகளை நிறைவேற்றி வந்தனர். வாராந்த ஜும்ஆத் தொழுகைக்காக அநேகர் வரக்காபொல கிராமத்திற்கும் சிலர் நாம்புளுவ கிராமத்திற்கும் சென்று வந்தனர்.

1926இல் இப்பிரதேசத்தின் முதல் குடியேற்றவாசியான மதார் லெப்பே அவர்களின் இளைய புதல்வர் முஹம்மது ஸாலி பள்ளிவாசலை அமைக்க காணியொன்றை ஒதுக்கிக் கொடுத்துள்ளார். அக்காணியில் அவரது சகோதரர் முஹம்மது அலி முதற் பள்ளிவாசலைக் கட்டினார். 1950 இல் ஆரம்பப் பாடசாலையும் இப்பள்ளிவாசலிலேயே ஆரம்பித்தது.

1989ம் ஆண்டு முன்னைய பள்ளிவாசல் அமையப்பெற்றிருந்த அதே இடத்தில் பொறியியலாளர் ஜே. எம். முபாறக் அவர்களது

வடிவமைப்பில் கொடை வள்ளல் அல்ஹாஜ் எம். முஸ்லிம் ஸலாஹுதீன் அவர்களது சொந்தச் செலவில் இவ்வழகிய தோற்றத்தில் புதிய பள்ளிவாசல் கட்டப்பட்டது. இதற்கு மஸ்ஜிதுத் தக்வா எனப் பெயரிடப்பட்டது.

இப்பள்ளிவாசல் கொழும்பு - கண்டி வீதியில் அமையப் பெற்றிருப்பதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் பெண்கள் தொழுது கொள்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஹஜ்ஜுக்காலத்தில் விமான நிலையம் செல்லும் ஹாஜிகள் தங்கி உடைமாற்றிக் கொள்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கள்-எலிய டவுன் பள்ளிவாசல்:**

1933ம் ஆண்டு காலப்பகுதியில் நகர மக்களின் தொழுகை வசதி கருதி தக்யா ஒன்று கட்டப்பட்டது. கிராம விதானை ஏ. எம். காலித் அவர்களது காணியில் அவரது சொந்தச் செலவில் கட்டப்பட்டது. 1979இல் இத்தக்யா இடம் போதாமையினாலும் இதனை விரிவாக்க அக்காணியில் இடம் போதாமையினாலும் டாக்டர். ஏ. எம். மௌஜூத் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் ஊர் மக்கள் உதவியோடு டவுன் பள்ளிவாசல் என்ற பெயரில் கட்டப்பட்டு பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தாரின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**ஹன்ஸகிரிய பள்ளி வாசல்:**

1959இல் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்க அவர்களால் பிரித்து வழங்கப்பட்டதே ஹன்ஸகிரிய கிராமம். இதில் 84 முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர். இவர்களது வணக்க வசதிக்காக கட்டப்பட்டதே இச்சிறு பள்ளிவாசலாகும். இது பெரிய பள்ளி நிர்வாகத்தால் நிர்வகிக்கப் படுகிறது.

**ஸபீலுல் ஹுதா ஸாவியா, ரதாவடுன்ன:-**

இங்கு ஆரம்பக் குடியேற்றம் 1920 இல் ஏற்பட்டாலும் இங்கு 1978 இலேயே சிறு பள்ளிவாசல் கட்டப்பட்டது. இங்கு ஆரம்பத்தில் குடியேறிய மரிக்கார் விதானை குடும்பத்தினரே பள்ளிவாசலுக்கான காணியை அன்பளிப்புச் செய்து பள்ளியையும் கட்டிக் கொடுத்தனர். இப்பள்ளிவாசல் நாம்புளுவ பள்ளிவாசல்

நிர்வாகத்தின் கீழ் உள்ளது. இது ஸபீலுல் ஹுதா பள்ளிவாசல் எனப்படுகிறது.

**தாஜுதீன் மாவத்தை பள்ளிவாசல்:**

1979 இல் உருவான இக்குடியேற்றத்தில் 35 குடும்பங்கள் குடியேறியுள்ளன. இவர்களின் வணக்க வழிபாட்டு வசதிக்காக அல்ஹாஜ் எஸ். ஏ. எம். தாஜுதீன் அவர்கள் தமது சொந்தக் காணியில் இப்பள்ளிவாசலை அமைத்து வக்பு செய்தார். இப்பள்ளி வாசலும் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. 1995 இல் பள்ளிவாசல் விஸ்தரிக்கப்பட்டது.

**ஸலீம்புர பள்ளிவாசல்:**

1986இல் உருவான இக்குடியேற்றத்தில் 32 குடும்பங்கள் வரையில் உள்ளன. இப்பகுதி மக்களின் தொழுகை வசதிக்காக 1992 இல் கள்-எலிய ஜமாஅத்தவர்களது உதவியுடன் ஸலீம்புர பள்ளிவாசல் கட்டப்பட்டது.

**பஸ்யால டவுன் பள்ளிவாசல்:**

1986 இல் இப்பள்ளிவாசல் கட்டப்பட்டது. இதற்கான காணியை அல்ஹாஜ் என். எம். புஹார்தீன், மர்ஹூம் சாலி மரிக்கார் குடும்பத்தினரும் அன்பளிப்புச் செய்தனர். இப்பள்ளிவாசல் உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள தனவந்தர்களின் உதவியால் இரு மாடி கொண்டதாகக் கட்டப்பட்டுள்ளது. கீழ்மாடியில் மத்ரஸாவும் மேல் மாடியில் பள்ளியும் உள்ளன. இது நாம்புளுவ பள்ளிவாசலின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

**பொல்கஹதென்ன தக்யா:**

பொல்கஹதென்னயில் ஒரு தக்யா அமைக்கப்பட்டு 1991ல் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான காணியை மர்ஹூம் ஏ. ஏ. எம். மஸ்ஊத் ஆலிம் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

## வத்தளை

1. மாபோல ஜும்ஆ மஸ்ஜித்
2. மாபோல ஸுப்ஹானி தக்யா, ஆராய்ச்சிகே வத்த
3. ஸாலிஹீன் தக்யா, தூவத்த, மாபோல
4. தக்வா தக்யா, யார்ட்

**மாபோல ஜும்ஆ மஸ்ஜித்:**

கொழும்பு-நீர்கொழும்பு வீதியில் மாபோல, வத்தளைப் பகுதியில் அமையப் பெற்றிருக்கும் மாபோல ஜும்ஆ மஸ்ஜித், இருநூறு வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்தது. இப்பள்ளிவாசலுக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது. பின்னர் 1916 இல் புதுப்பித்துக் கட்டப்பட்டது. அதன் பின் 1982 இல் மீண்டும் ஜனப்பெருக்கம் காரணமாக பள்ளி விசாலமாக்கப்பட்டது. இப்பள்ளிவாசலுக்கு ஆரம்பத்திலிருந்தே மையவாடியும் இருந்து வந்துள்ளது. தற்போது 1000 பேர் வரையில் ஜும்ஆவுக்குச் சமூகமளிக்கிறார்கள்.

மர்ஹூம் எஸ். எம். எம். இப்ராகீம் என்பார் நீண்ட காலம்கதீபாகவும் விவாகப் பதிவாளராகவும் இருந்து வந்தவராவார். அதேபோல் முஹம்மது லெப்ப என்பாரும் இருந்துள்ளார். தற்போதைய நிர்வாக சபையில் தலைவராக ஜனாப் எம். ஜே. எம். தாஜுதீன் (விவாகப் பதிவாளர்), உபதலைவராக ஜனாப் எச். எம். நௌசாட், செயலாளராக, அல்ஹாஜ் பீ. எம். ஸீ.பங்ஸா ஜாயா அவர்களும், செயற்குழு உறுப்பினராக எஸ். எம். சகாப்தீன் அவர்களும், பொருளாளராக ஏ. எம். ஸஜ்ஜாத் அவர்களும் உள்ளனர்.

**ஸுப்ஹானி தக்யா:**

ஆராச்சிகேவத்த பகுதியில் இது அமையப் பெற்றுள்ளது. இற்றைக்கு ஏழு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. இப்பகுதியிலுள்ளோரின் ஐங்காலத்தொழுகை வசதி கருதி கட்டப்பட்டது.

**ஸாலிஹீன் தக்யா:**

இது மாபோல, தூவத்த பகுதியில் அமைந்துள்ளது. நான்கு வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட சிறு பள்ளிவாசலாகும்.

**தக்வா தக்யா:**

யார்ட் பகுதியில் ஐவேளை தொழுகை வசதிக்காக கட்டப்பட்டது. 2 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது.

**மஹர**

1. அக்பர் டவுன் ஜும்ஆ மஸ்ஜித்
2. கொங்கி தோட்டம்

3. ரோஸ் விலா கார்டன் மஸ்ஜிதுல் பிர்தௌஸ்
4. மஹரப் பள்ளிவாசல்
5. மஹர சிறைப் பள்ளிவாசல்

**அக்பர் டவுன் ஜும்ஆ மஸ்ஜித்:**

வத்தளைக்கும் மஹரைக்கும் இடையில் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் 2000 குடும்பங்கள் வரை உள்ளன. இதன் பிரதான ஊர் அக்பர் டவுன் ஆகும். அக்பர் குடும்பத்தவரால் இப்பிரதேசத்திற்குக் கிட்டியுள்ள பெரும் சேவையைக் கருத்திற் கொண்டு இவ்வூரிற்கு அக்பர் டவுன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் புரொக்டர் அக்பர் அவர்கள், அவரது சகோதர நீதிவான் அக்பர் அவர்களுடனும் கொழும்பு முஸ்லிம்களுடனும் இணைந்து இங்கு முஹியத்தீன் தக்யா என்ற பெயரில் ஒரு தக்யாவை அமைத்தார். இதற்கும் மையவாடிக்கும் தேவையான காணியை இவரே நன்கொடையளித்தார். இப்பள்ளியில் ஆரம்பத்தில் 60 அங்கத்தவர்கள் ஜமாஅத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். ஜனாப். எம். ஆர். அக்பர் அவர்களே முதல் நம்பிக்கையாளராகவும் விளங்கினார்.

1935 இலேயே இங்கு முதல் ஜும்ஆத் தொழுகை இடம் பெற்றது. அப்போது 100 குடும்பத்தவர் வரை இங்கு குடியேறி இருந்தனர். 1942 இல் இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்றதிலிருந்து இன்று வரை இங்கு ஜனப்பெருக்கம் கூடி வருகிறது. தற்போது இது தவிர வெலேகொட பத்ரியாப் பள்ளி, ரோஸ்விலா கார்டன் பிர்தௌஸ் பள்ளி, கொங்கித் தோட்டப்பள்ளி என்பவற்றிலும் ஜும்ஆத் தொழுகை இடம் பெற்று வருகிறது. இது தவிர திப்பிடிகொடையிலும், பாதிரிதுடுவவையிலும் இரு தக்யாக்கள் உள்ளன. இங்கு ஹிப்ழ் மத்ரஸாவுடன் ஆண், பெண்களுக்கான குர்ஆன் மத்ரஸாக்களும் உள்ளன. இப்பள்ளிக்குரிய மையவாடியே களனி, வத்தளை, மஹர தொகுதி முஸ்லிம்களுக்குரிய மையவாடியாகவும் இருந்து வருகிறது.

தற்போதைய பள்ளி பரிபாலன சபையின் தலைவராக பீ. ஜே. முத்தலிப் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), செயலாளராக எம். ஸித்தீக் கௌஸ், பொருளாளராக ஏ. எம். எம். மொஹிடீன் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர்.

**கொங்கித் தோட்டம் மஸ்ஜிதுல் தீனிய்யா:**

1990 இல் 10 பேர்ச் காணியில் கட்டப்பட்டுள்ளது. 1995.05.12ம் திகதி முதல் ஜுமுஆ நடைபெற்றது. இதன் தலைவராக ஜனாப் காமில் ஹஸன் அவர்கள் பணியாற்றுகிறார்கள். இங்கு 200 முஸ்லிம்கள் வரை வாழ்கிறார்கள்.

**மஸ்ஜிதுல் பிர்தௌஸ் ஜுமுஆப் பள்ளிவாசல்:**

1972.05.29இல் அத்திவாரமிடப்பட்டு 1985இல் அல் தக்யா மத்ரசது மன்பஉல் உலூம் என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டில் கொழும்பு மெஸன்ஜர் வீதி திருமதி மதீனா உம்மா அவர்கள் 17.83 பேர்ச் நிலத்தை மஸ்ஜிதுல் பிர்தௌஸ் பள்ளிக்காக வக்பு செய்தார். அன்று முதல் இது ஜுமுஆப்பள்ளியாகியது. முதல் குத்பாவை 1988 ஏப்ரல் 15ம் திகதி மர்ஹூம் மௌலவி ஏ. ஏ. எம். மஸ்ஊத் ஆலிம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

இப்பள்ளிவாசலது தற்போதைய கதீப் மௌலவி அப்துஸ்ஸத்தார் ஆவார். பதிவாகியுள்ள ஜமாஅத்தார் எண்ணிக்கை 1000 ஆகும். 49 இலட்சம் ரூபா செலவிலான புனரமைப்பு வேலையில் தற்போது 23 இலட்சம் ரூபாவுக்கான வேலை முற்றுப் பெற்றுள்ளது. தற்போதைய பரிபாலன சபையின் தலைவராக எம். வை. எல். ஏ. கையூம் அவர்களும், செயலாளராக அல்ஹாஜ் எம். ஐ. எம். றிஸ்வி அவர்களும் பொருளாளராக ஜனாப் இஸட். எம். நயிமுதீன் அவர்களும் பணியாற்றுகின்றனர்.

**மஹரப் பள்ளிவாசல்:**

மஹரப் பிரதேசத்தில் சிதறி வாழும் முஸ்லிம்களின் சமய அனுட்டானங்களை நிறைவேற்றவெனத் தனியான பள்ளிவாசல் ஒன்றும் உள்ளது. இது இப்பிரதேசவாசிகளால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

**மஹர சிறைச்சாலைப் பள்ளிவாசல்:**

இது சிறைச்சாலையிலுள்ள முஸ்லிம் சிறைக்கைதிகள் தமது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்றவென நிர்மாணிக்கப்பட்டதாகும்: இதனை அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் சமய விவகாரக் குழு நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. இதற்கு மதுரை

ஹாஜி எம். எஸ். எம். மர்சூக் அவர்களும் சில கொழும்பு வர்த்தகர்களும் உதவியுள்ளனர்.

இங்கு சமய அனுஷ்டானங்களைச் செய்விப்பதில் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் மார்க்க விவகாரக்குழுச் செயலாளர் மர்ஹூம் மௌலவி அலவி அபுல் ஹசன், எஸ். ஐ. எஸ். ஏ. மௌலானா, மௌலவி ஏ. ஆர். எம். ஸுபைர் ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர். இக்குழுவின் தற்போதைய செயலாளராக அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், பாரளுமன்ற உறுப்பினர் அவர்கள் இப்பணியை நிறைவேற்றி வருகிறார்.

## களனி

1. அல் பத்ரியா தக்யா - வெலேகொட
2. முஹியத்தீன் தக்யா - திப்பிட்டிகொடை
3. பாதிலிதுடுவ தக்யா
4. பைதுல் முகர்ரம் ஜும் ஆப் பள்ளிவாயல், பேலிய கொடை

### அல் பத்ரியா தக்யா, வெலேகொட:

இப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களது சமயக் கடமைகளை நிறைவேற்றவென அமைக்கப்பட்ட சிறுபள்ளிவாசலாகும். இதனுடன் கூடியதாக குர்ஆன் மத்ரஸாவும் அமையப் பெற்றுள்ளது. இங்குள்ளோர் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்ற அக்பர் டவுன் ஜும்ஆப்பள்ளிக்கே செல்கின்றனர்.

### முஹியத்தீன் தக்யா, திப்பிடிகொட:

1962 இல் இது ஓலையால் வேயப்பட்ட சிறு தக்யாவாக இருந்தது. மர்ஹூம் எம். இஸட். எம். பக்கீர் அலி அவர்கள் 20 பேர்ச் நிலத்தை இதற்காக வக்புச் செய்தார். ஜமாஅத்தாரின் வசூல் மூலம் தக்யா கட்டப்பட்டது. ஆரம்பத்தில் ஜமாஅத்தார் தொகை 20ஆக இருந்தது. தற்போது 367 குடும்பங்கள் அளவில் உள்ளனர்.

தற்போதைய பள்ளி பரிபாலன சபைத் தலைவராக டீ. இஸட். பக்கீர் அலியும் செயலாளராக டீ. எம். எம். இஸ்மாயீல் அவர்களும் பொருளாளராக மிஹிளார் அவர்களும் உள்ளனர்.

பாதிலிதுடுவ தக்யா:

தற்போது இது மத்ரஸதுல் இஸ்லாம் பள்ளிவாசல் எனப்படுகிறது. 1990 இல் பள்ளிவாசல் கட்டப்பட்டது. இதற்காக 10 பேர்ச் நிலத்தை அல்ஹாஜ் என். எம். நூர்தீன் அன்பளிப்புச் செய்தார். இங்கு 200 குடும்பங்கள்வரை உள்ளன. குர்ஆன் மத்ரஸா அஹதிய்யா வகுப்பு என்பன நடைபெறுகின்றன. தற்போதைய பள்ளிவாசல் தலைவராக என். எம். முஹம்மது அலி அவர்களும் செயலாளராக டீ. ஜே. ஸாமா அவர்களும் பணியாற்றுநின்றனர்.

பைதுல் முகர்ரம் ஜும்ஆப்-பள்ளிவாசல், பேலியகொடை

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இப்பிரதேசத்தில் சிதறுண்டு வாழும் முஸ்லிம்களின் தொழுகை வசதி கருதி சிறிய அளவிலான பள்ளிவாசல் ஒன்று கட்டப்பட்டிருந்தது. கடந்த சில வருடங்களாக இங்கு ஜும்ஆத் தொழுகையும் இடம் பெற்று வந்தது. நாளுக்கு நாள் ஜமா அத்தார் தொகை பெருகவே பெரிய பள்ளிவாசல் ஒன்றின் தேவை உணரப்பட்டது. தற்போது நீர் கொழும்பு வீதியில் 292 வது இலக்க நிலப்பரப்பில் பெரிய அளவிலான அழகிய மஸ்ஜித் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இது பைதுல் முகர்ரம் ஜும்ஆப்பள்ளிவாசல் எனப்பெயரிடப்பட்டுள்ளது. இங்கு சுமார் 300 குடும்பங்கள் வரை உள்ளனர். ஜும்ஆவில் 1000 பேர் வரை கலந்துகொள்கின்றனர்.

கட்டான

1) முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளிவாசல் - கோவின்ன
2) மஸ்ஜிதுல் கைராத் - மகா ஹுணுப்பிட்டிய
3) ரத்தொழுகம பள்ளிவாசல்

முஹியத்தின் ஜும்ஆப் பள்ளிவாசல்:

இப்பள்ளிவாசல் கட்டான பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்டது. கோவின்னப் பகுதியில் அமையப் பெற்றுள்ளது.

மஸ்ஜிதுல். கைராத்:

கட்டான பிரதேச சபைக்கு உட்பட்ட இப்பள்ளி வாசல் மகா ஹுணுப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் உள்ளது. அல்ஹாஜ் எம். ஏ. எம். சுபியான் என்ற நல்மனம் படைத்தவர் தனக்குச்

சொந்தமான 20 பேர்ச் நிலத்தை அன்பளித்து பொது மக்களது உதவியோடு கட்டி வக்பு செய்தார். இவரே இதன் பரிபாலக ராகவும் இருந்து வந்துள்ளார். இதுவும் நீர்கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பரிபாலனத்தில் உள்ளது.

**ரத்தொழுகம பள்ளிவாசல்:**

ரத்தொழுகம வீடமைப்புத்திட்டத்தில் 350 முஸ்லிம்குடும்பங்கள் வரை உள்ளன. 1984 இல் இக்குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது. இது தவிர ரத்தொழுகம திட்டம் உருவாக்கப்பட முன்னரே அப்பிரதேசத்தில் 350 குடும்பங்கள் வரை இருந்துள்ளன. அவர்களது தொழுகை வசதிக்காக இப்பள்ளிவாசல் உருவாக்கப்பட்டது. இங்கு ஜும்ஆத் தொழுகையும் நடைபெறுகிறது.

## தொம்பே

1. பூகொட ஜும்ஆ மஸ்ஜித்
2. பூகொட நகரப் பள்ளிவாசல்
3. நக்ஷபந்தியா தக்யா குமாரிமுல்ல
4. குமாரிமுல்ல தைக்கா மஸ்ஜித்

**பூகொட ஜும்ஆ மஸ்ஜித்:**

பூகொட நகரம் களனி கங்கைக் கரையில் அமைந்த தொன்றாகும். களனி கங்கை ஊடாக மேற்கொள்ளப்பட்ட வர்த்தகப் போக்குவரத்து இங்கு முஸ்லிம்கள் காலூன்றக் காரணமாய் அமைந்தது எனலாம். இந்த வகையில் பூகொடையில் முஸ்லிம்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வசித்திருக்க வேண்டும். அப்போதே முஸ்லிம்களது ஆரம்பப் பள்ளியும் கட்டப்பட்டுள்ளது. இப்பள்ளி கட்டப்பட்ட காணி மரக்கல கொடல்ல எனப்பட்டது. இக்காணி இன்று பள்ளிவாசலுக்கே சொந்தமாயுள்ளது. ஆரம்பத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசல் அடிக்கடி வெள்ளப் பெருக்கிற்கு உட்பட்டதால் தற்போது பள்ளிவாசல் உள்ள இடத்தில் இரண்டாவது பள்ளிவாசல் கட்டப்பட்டது. 24.09.1972இல் அத்திவாரமிடப்பட்டு 06.09.1974 இல் திறந்த வைக்கப்பட்டது. பள்ளி புனர்நிர்மாணத்திற்கு உள்ளூர், வெளியூர் தனவந்தர்களது உதவி பெறப்பட்டது.

ஆரம்ப காலத்தில் இவ்வூர் பள்ளிவாசல் நிர்வாகம் மிகச் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. பள்ளியை நிர்வகித்தவர்களின் 130 வருடங்களுக்கு முந்திய அரபுத்தமிழ் பதிவேட்டில் இவை பதியப்பட்டுள்ளன. ஆரம்பகால நிர்வாகிகளுள் சம்சு மத்திச்சம், பக்கிருபாவா மத்திச்சம், ஆ. மு. முஹம்மது ஆலிம் மத்திச்சம், தெ. அ. அஹமதலி மத்திச்சம், அ. உ. உமர்தீன் மத்திச்சம் ஆகியோர் அடங்குகின்றனர்.

**பூகொட நகரப் பள்ளிவாசல்:**

இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் மல்வானையைச் சேர்ந்த வர்த்தகர் மர்ஹூம் அப்துல் கரீம் அவர்கள் தமது சொந்த நிலத்தில் 4 பேர்ச்சை பள்ளிவாசலுக்காக அன்பளிப்புச் செய்தார். அதில் நகர வியாபாரிகளும் அங்கு வந்து செல்வோரும் தொழுவதற்கு வசதியாக சிறிய பள்ளிவாசலொன்று கட்டப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசல் பூகொட ஜும்ஆப்பள்ளி வாசல் நிர்வாகத்தினரால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது.

**குமாரிமுல்ல தக்யா:**

இது அண்மையில் கட்டப்பட்டதாகும். பூகொட ஜும்ஆப்பள்ளி வாசலிலிருந்து தொலைவிலுள்ளோர் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதற்காகக் கட்டப்பட்டதாகும்.

**நக்ஷபந்தியா தக்யா:**

இதில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மஃரிப் தொழுகை யின்பின் நக்ஷபந்தியா ராதிப் ஓதப்படுகிறது. வருடந்தோறும் றஜப் பிறை 4 முதல் 14 வரை தினந்தோறும் சுபஹ் தொழுகையின் பின் குர்ஆன் ஓதப்படுகிறது. பகலில் இவ்விறை நேசரின் பெயரால் உள்ள மனாகிப் ஓதப்பட்டு அன்னதானம் வழங்கப்படுகிறது. பிறை 14 இல் குர்ஆன் தமாம் செய்யப்பட்டு பெரிய கந்தூரி நடத்தப்படுகிறது. இக்கந்தூரி கடந்த 98 வருடங்களாக நடைபெற்று வருகிறது.

## குர்ஆன் மத்ரஸாக்கள்:

கம்பஹ மாவட்டமெங்கும் 40 முஸ்லிம் கிராமங்கள் உள்ளன. எல்லாக் கிராமங்களிலும் பள்ளிவாசல்கள் அல்லது தக்யாக்கள் உள்ளன. பெரும்பாலும் பள்ளிவாசல்களோடு இணைந்ததாக குர்ஆன் மத்ரஸாக்கள் அமையப் பெற்றுள்ளன. ஒரு சில

இடங்களிலேயே புறம்பான குர்ஆன் மத்ரஸாக்கள் அமையப் பெற்றுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட குர்ஆன் மத்ரஸாக்கள் இம்மாவட்டத்தில் இருந்தும் அவற்றிற்கிடையே எவ்விதத் தொடர்பும் இல்லை. மத்ரஸாக்கள் எவ்வித மேற்பார்வைக்கும் உட்படுத்தப்படுவதுமில்லை. அவற்றிற்கான பொதுவான பாடத்திட்டமோ அல்லது மாணவரைச் சேர்த்துக் கொள்வதற் கான வயதெல்லையோ இல்லை. என்ன கற்பிக்கப்பட வேண்டும், எவ்வளவு காலத்தில் கற்கை நிறைவு செய்யப்பட வேண்டும், என்பதற்கும் எவ்வித திட்டமுமில்லை. ஆனாலும் பெரும்பாலான மாணவர்கள் ஐந்தாண்டுகளுக்கு மேல் குர்ஆன் மத்ரஸாக்களில் தமது காலத்தைச் செலவிடுகின்றனர்.

அரைகுறையுமான, அசுத்தமான உடைகளோடு அதிகமான மாணவர்கள் குர்ஆன் மத்ரஸாக்களுக்கு அனுப்பப் படுகிறார்கள். மாதாந்தக் கட்டணங்களையும் ஏனோ தானோ என்ற முறையிலேயே பெற்றோர் செலுத்துகிறார்கள். ஆசான்களுக்கு போதிய சம்பளம் வழங்கப்படுவதில்லை. அனேக மத்ரஸாக்கள் முஸ்லிம், சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதியப்பட்டு மில்லை. குறைவான மத்ரஸாக்களே அவ்வாறு பதியப்பட் டுள்ளன. குர்ஆன் மத்ரஸாக்களைப் பொறுத்தவரை இந்நிலை தொடர்வது ஆரோக்கியமானதன்று.

சமுதாய வளர்ச்சியிலும் சமய மேம்பாட்டிலும் அக்கறை கொண்டோர் இதற்கான பொறுப்பை ஏற்று செயற்பட வேண்டும்.

**முன்னேற்றத்திற்கான சில ஆலோசனைகள்:**

1. மாணவர்களைச் சேர்ப்பதற்கு வயதெல்லை நிர்ணயித்தல்
2. பாடத்திட்டமொன்றை வகுத்து நடைமுறைப்படுத்தல்
3. கல்வியாண்டு வரையறுக்கப்படல்
4. மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர்களை நியமித்தல்
5. கல்விசார் நடவடிக்கைகள் மேற்பார்வையும் மதிப்பீடும் செய்யப்படல்
6. மாணவரிடையே போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் ஏற்பாடு செய்தல்
7. கற்கை முடிவில் தராதரப் பத்திரம் வழங்கல்
8. குர்ஆனுடன், தஜ்வீத், அறபு, இஸ்லாம் பாடங்கள் புகட்டல்

9. தகுதியான ஆசிரியர்களை நியமித்து உரிய சம்பளம் வழங்கல்
10. ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சி வழங்கல்

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குர்ஆன் மத்ரஸாக்கள்

1. மத்ரஸதுர் ரஹ்மானிய்யா - உடுகொட, ருக்கஹவில
2. அல் மத்ரஸதுஸ் ஸாலிஹ் பைத்தில்லாஹில் காதிர் கல் லொலுவ, மினுவாங்கொட
3. அல் மத்ரஸதுல் மழ்ஹரிய்யா - ஒகடபொல, கஹட்டோவிட்ட
4. மத்ரஸதுன் நூர்-கம்மல்துறை, கொச்சிக்கடை
5. வள்கம தக்யா மத்ரஸா - வள்கம சந்தி, மல்வானை
6. திஹாரிய இஸ்லாமிய அஹதிய்யா மத்ரஸா, கொரகஹ லேன், திஹாரிய
7. கல்லொலுவ ஜும்ஆப்பள்ளி மத்ரஸா, கல்லொலுவ, மினுவாங்கொட
8. அல் மத்ரஸது நூரராணியா - ஓர்ச்செட் வத்த, நிட்டம்புவ
9. அல் மஸ்ஜிதுல் பத்ரியா குர்ஆன் மத்ரஸா, வெலேகொட, ஹுணுபிட்டிய
10. அல் மத்ரஸதுல் முனவ்வரா, கம்மல்துறை, கொச்சிக்கடை
11. அல் மத்ரஸதுத் தீனிய்யா, என்டேரமுல்ல, வத்தளை
12. மத்ரஸதுல் முபாறக், அஹதிய்யாக் கட்டிடம், மல்வானை
13. மத்ரஸதுல் பத்தாஹ், நாபிரித்த, திஹாரிய
14. மத்ரஸதுல் நூர், பள்ளி வீதி, திஹாரிய
15. ரன்பொகுனுகம மத்ரஸா, முஸ்லிம் மஜ்லிஸ், வீடமைப்புத் திட்டம், நிட்டம்புவ
16. அல் மத்ரஸதுல் பத்ரியா-வெலேகொட, ஹுணுபிட்டிய
17. அல் மத்ரஸதுல் முபாறக் - நீர்கொழும்பு வீதி, பேலியகொட
18. மத்ரஸதுல் நூருல் இஸ்லாம்-பாதிலிதுடுவ வீதி, வத்தளை
19. மஜ்லிஸுல் இக்வதில் முஸ்லிமீன், நாம்புலுவ, பஸ்யால
20. மத்ரஸதுல் ஹிலால் பீதர்பியதில் அத்பால், பெரியமுல்ல, நீர்கொழும்பு
21. அல் மத்ரஸதுல் காதிரியா, தக்யாரோட், கொச்சிக்கடை
22. அல் மத்ரஸதுல் ஸைப்-பெலன்கஹவத்த, மல்வானை
23. மத்ரஸது முஹியத்தீன் - திப்பிடிகொட வீதி, வத்தளை

24. அல் பலாஹ் குர்ஆன் மத்ரஸா - றக்ஸபான, மல்வானை
25. அல் மத்ரஸதுல் பாதிபியா - கஹட்டோவிட்ட
26. அல் மத்ரஸதுத் தக்வா-ஹெந்தல, வத்தளை
27. அல் மத்ரஸதுஸ் ஸுலைமானியா - தக்யா வீதி, கொச்சிக்கடை
28. பாபுஸ்ஸலாம் மத்ரஸா-உடுகொட, ருக்கஹவில

## அஹதிய்யா மத்ரஸாக்கள்

இலங்கையில் அஹதிய்யா மத்ரஸாக்கள் ஆரம்பிக்கப்பட்டு 47 வருடங்களைக் கடந்து விட்டபோதும் கம்பஹ மாவட்டத்தில் அஹதிய்யா மத்ரஸாக்களுக்கு இருபத்தைந்து வருட கால வரலாறே உண்டு. 1956 காலப் பகுதியில் இம்மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் இம்மத்ரஸாக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அவை ஓரிரு வருடங்களில் செயலிழந்துவிட்டன.

இலங்கை அஹதிய்யாப் பாடசாலைகள் மத்திய சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அஹதிய்யாப் பாடசாலைகள் வரிசையில் மிகப் பழமை வாய்ந்ததாகவும் இம்மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்ட முதல் அஹதிய்யாப் பாடசாலையாகவும் விளங்குவது மல்வானை அஹதிய்யாப் பாடசாலையாகும். இப்பாடசாலையை ஆரம்பிப்பதில் மர்ஹூம் மௌலவி எம். ஜே. எம். நுஃமான், மௌலவி எம். எச். எம். லாபிர், அல்ஹாஜ். எம். கே. முபாறக் அலி, காரி அஹ்மது ரிபாய், ஆசிரியர் யூ. எம். ஹாரூன் ஆகியோர் முன்னோடிகளாக இருந்துள்ளனர். 1972.10.25இல் ஆரம்பிக் கப்பட்ட இப்பாட சாலை அல்லாஹ்வின் உதவியால் தொடர்ந்து எவ்வித இடைவெளியுமின்றி இன்று வரை இயங்கி வருகிறது. மேலும் இவ்வஹதிய்யா தனக்கென சொந்த இரு மாடிக்கட்டிடத்தையும் கொண்டு முழு இலங்கையிலுமுள்ள அஹதிய்யாக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

இக்காலப் பகுதியில் மர்ஹூம் மௌலவி நுஃமான் அவர்களும், மௌலவி லாபிர் அவர்களும் இணைந்து இம்மாவட்டத்தில் யடிஹேன, பூகொட, கல்லொலுவ, மாபோல முதலான பல இடங்களில் அஹதிய்யாக்களை ஆரம்பித்தும் அவற்றை ஊக்குவித்தும் வளர்த்து வந்துள்ளார்கள். 1989ம் ஆண்டு கம்பஹ மாவட்ட அஹதிய்யாப் பாடசாலைகள் சம்மேளனம் உருவாக்கப்படும்வரை இவர்களது பணி தொடர்ந்தது.

1988 ஒக்டோபர் 15ம் திகதி என்டேரமுல்ல அக்பர் டவுனில் வைத்து அங்கு நடந்த போட்டியில் பங்கேற்ற மல்வானை அஹதிய்யா, அக்பர் டவுன் அஹதிய்யா, நீர்கொழும்பு காமச்சோடை அஹதிய்யா, குமாரிமுல்ல-பூகொட அஹதிய்யாப் பாடசாலைகள் இணைந்தே முதலாவது சம்மேளனம் ஸ்தாபிதமானது. அதன் தலைவராக மௌலவி எம். எச். எம்.

லாபிர் அவர்களும் செயலாளரர்க டாக்டர். எம். எஸ். முபாறக் அவர்களும் தெரிவாயினர்.

அன்று முதல் கௌரவ செயலாளரின் விடாமுயற்சியாலும் அயராத உழைப்பாலும் சம்மேளனம் வளர்ச்சிகாண ஆரம்பித்தது. அஹதிய்யாப் பாடசாலைகளின் எண்ணிக்கை பெருக ஆரம்பித்தது. நான்காக இருந்த அஹதிய்யாப் பாடசாலைகள் இன்று பத்தாண்டுகளில் இருபத்தேழாக உயர்ந்துள்ளன. இது தவிர கம்பஹ மாவட்டம் மல்வான, திஹாரிய, நீர்கொழும்பு என மூன்று வலயங்களாகப்பிரிக்கப்பட்டு செயற்படத் தொடங்கின. சட்டக்கோவை வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

ஆண்டுதோறும் பரிசளிப்பு விழாக்கள், ஆசிரியர் கருத்தரங்குகள், புத்தூக்க வகுப்புக்கள் தமிழிலும் சிங்களத்திலும் நடத்தப்பட்டன. இதன் வளர்ச்சிக்கு அரச உதவியும் பெறப் பட்டது. முதன் முதலாக மேல் மாகாணக் கல்வி அமைச் சராகவிருந்த சுரணிமல ராஜாபக்ஷ அவர்கள் 50,000 ரூபா நிதியுதவியளித்து அஹதிய்யாப் பாடசாலைகளுக்கு அலுமாரிகளைப் பெற்றுத்தந்தார், கம்பஹ மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் பண்டு பண்டாரநாயக்க 25,000 ரூபா நிதியுதவியளித்துள்ளார். மேல் மாகாண முதலமைச்சர் கௌரவ சுசில் பிரேம் ஜயந்த அவர்கள் 280,000 ரூபா கம்பஹ மாவட்ட சம்மேளனத்திற்கு ஒதுக்கித்தந்து தேவையான தளபாடங்களைப் பெற்றுத் தந்துள்ளார். மேலும் எமக்குத் தேவையான ரோனியோ இயந்திரம், டைப்ரைட்டர் என்பனவும் கிடைக்கப் பெற்றன. எமது பணி தொடருமாயின் எமக்குத் தொடர்ந்தும் உதவிகள் கிட்டும் என்ற நம்பிக்கை உண்டு.

எமது சம்மேளனத்திற்கான காரியாலயம் அமைக்கவென பிரபல தொழிலதிபர் அல்ஹாஜ் எம். ஈ. எம். லாபிர் (ஜே.பி) அவர்கள் திஹாரியில் 20 பேர்ச் நிலத்தை அன்பளிப்பாக வழங்கி அவரது செலவிலேயே அத்திவாரத்தையும் இட்டுத் தந்துள்ளார். இது ஒரு முன்மாதிரியான நடவடிக்கையாகும். தொடர்ந்து இக்கட்டிட வேலைகள் பூர்த்தியாக்கப்படவேண்டியுள்ளன. தற்போதைய சம்மேளன நிர்வாகிகள் இதற்கான முயற்சியில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கத்தாகும். தற்போதைய சம்மேளனத் தலைவராக அல்ஹாஜ் அப்துல் காதர் அவர்கள் விளங்குகிறார்.

மேலும், மாவட்ட சம்மேளனமானது அஹதிய் யாக் களுக்கிடையே கல்வித்தரத்தைப் பேணும் வகையில் பொதுப் பரீட்சைகளையும் நடாத்தி வருகின்றது. பொதுப்பாடத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலை தொடருமானால் அஹதிய்யாக்களின் கல்வித்தரம் மேலோங்கும் என்பதில் ஐயமில்லை.

## கம்பஹ மாவட்டத்தில் இயங்கும் அஹதிய்யாப் பாடசாலைகளின் விபரம்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மல்வானை | அஹதிய்யாப் | பாடசாலை | - மல்வானை |
| 2. | அக்பர் டவுன் | " | " | -ஹுணுப்பிட்டிய, வத்தளை |
| 3. | அல் அஸ்ஹர் | " | " | - திஹாரிய |
| 4. | அல் அஷ்ரப் | " | " | - மாபோல |
| 5. | காமச்சோடை | " | " | - நீர்கொழும்பு |
| 6. | அல் அமான் | " | " | - கல்லொழுவ, மினுவாங்கொட |
| 7. | ரன்பொகுனுகம | " | " | - ரன்பொகுனுகம |
| 8. | ஹொரகொல்ல | " | " | - ஹொரகொல்ல, நிட்டம்புவ |
| 9. | வியாங்கொட | " | " | - வியாங்கொட |
| 10. | குமாரிமுல்ல | " | " | - குமாரிமுல்ல, பூகொட |
| 11. | மதீனா | " | " | - ஜோன் கீல்ஸ், ராகம |
| 12. | றவ்லதுஸ்ஸாலிஹீன் | " | " | - தூவ, மாபோல |
| 13. | நூருல் இஸ்லாம் | " | " | - பாதிலியதுடுவ |
| 14. | அல் பலாஹ் | " | " | - கம்மல்துறை |
| 15. | கல் எலிய | " | " | - கல் எலிய |
| 16. | வாமாஸ் | " | " | - ஜோன் கீல்ஸ், என்டேரமுல்ல |
| 17. | தீனியா | " | " | - அக்பர் டவுன் |
| 18. | கொங்கிதோட்ட | " | " | - என்டேரமுல்ல |
| 19. | அல்பலாஹ் | " | " | - ஹுணுப்பிட்டிய |
| 20. | பாதிமா கார்டன் | " | " | - மாபோல |
| 21. | கோனவல | " | " | - களனிய |
| 22. | அல்ஹிலால் | " | " | - நீர்கொழும்பு |
| 23. | வேவல்தெனிய | " | " | - வேவல்தெனிய |
| 24. | உடுகொட | " | " | - உடுகொட |
| 25. | ரத்தொழுகம | " | " | - ரத்தொழுகம |
| 26. | அத்பால் | " | " | - வெலிசர, ராகம |
| 27. | ரோஸ்விலா கார்டன் | " | " | - என்டேரமுல்ல |

## அறபுக் கல்லூரிகள்

**ஹஸனிய்யா அறபுக் கல்லூரி - உடுகொட :**

1979 ஜூன் 4ம் திகதி இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. மர்ஹூம் மௌலவி பாழில் எம். ஐ. அப்துஸ்ஸமது ஆலிம் அவர்களது வேண்டுகோளின் பேரில் அவரது சகோதரர் அல்ஹாஜ் எம். ஐ. அப்துர் ரஹ்மான் அவர்களால் 40 பேர்ச் நிலம் வாங்கப்பட்டு கட்டிடமும் கட்டிக் கொடுக்கப்பட்டது. இக்கட்டிடம் வகுப்பறை, விடுதி, தொழுகையறை, சமையலறை, குளியலறை, ஆசிரியர் தங்குமறை என்பவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது. நாற்பது மாணவர்கள் தங்கியிருந்து கற்கக்கூடிய வசதி இங்குள்ளது.

அறபு, இஸ்லாமிய கற்கைகள் தொடர்பான முப்பத்தேழு கலைகள் இங்கு போதிக்கப்படுகின்றன. தக்க ஆலிமாக வருவதற்கு இக்கலைகள் பற்றிய அறிவு அவசியமானதாகும். இக்கலாநிலையம் எட்டு வருட பாடத்திட்டத்தினை உள்ளடக்கியதாகும். இக்கல்லூரியில் கல்வி பயின்ற பலர் இன்று நாட்டின் நாலாபக்கங்களிலும் உள்ள அறபுக் கல்லூரிகளில் உஸ்தாதுமார்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இக்கல்லூரியின் ஸ்தாபக அதிபராக மௌலவி பாழில் எம். ஐ. அப்துஸ்ஸமது ஆலிம் அவர்கள் இருந்துள்ளார்கள். அன்னாரின் மறைவையடுத்து அவரது சகோதரர் மௌலவி பாழில் எம். ஐ. அப்துல் லத்தீப் (பஹ்ஜி) அவர்கள் இருந்து வருகிறார்கள்.

இதன் தற்போதைய பரிபாலன சபையில் அதிபர் மௌலவி எம். ஐ. அப்துல் லத்தீப், மௌலவி ஏ. டபிள்யூ. எம். ரியாழ், அல்ஹாஜ் எம். ஆர். எம். அஸ்ஹர், அல்ஹாஜ் ஏ. எச். எம். கலீல், ஜனாப் ஏ. எம். ஜுனைத் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோர் உள்ளனர்.

**அல் அமான் அறபுக் கல்லூரி, நீர்கொழும்பு :**

1983ல் மர்ஹூம் சாஹுல் ஹமீத் (நீர்கொழும்பு ஜுவல்லர்ஸ் உரிமையாளர்) அவர்களது சொந்தச் செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரை ஏக்கர் காணியில் இரு மாடிக் கட்டிடமொன்றில் இது இயங்கி வருகிறது. ஹிப்ழ், அறபு-இஸ்லாமிய கற்கைகள் ஆகிய இரு பிரிவுகளும் இதில் உள்ளன. அறபுப் பாடநெறி ஏழாண்டுக்குரியது. இக்கல்லூரியைத்

தற்போது மர்ஹூம் சாஹுல் ஹமீத் ஹாஜியார் அவர்களின் புத்திரர்கள் பரிபாலித்து வருகின்றனர். இக்கல்லூரியில் இருந்து பல ஹாபிழ்களும், ஆலிம்களும் வெளியாகியுள்ளனர். இதிலிருந்து வெளியேறிய முதலாமவர் நீர்கொழும்பைச் சேர்ந்த மௌலவி அல் ஹாபிழ் எம். என். எம். மாஹிர் ஆவார்.

**நிழாமிய்யா அறபுக் கல்லூரி, மினுவாங்கொட:-**

இக்கல்லூரி மௌலவி மீராலெப்பை அவர்களது ஆலோசனையின் பேரில் கல்லொளுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பகுதி நேர மத்ரஸாவாக நிழாமிய்யா அறபுக்கல்லூரி என்ற பெயரில் 1981.05.01 இல் இருந்து இயங்க ஆரம்பித்தது. பள்ளிவாசல் நிருவாகத்தினர் இதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தினர். ஆரம்பத்தில் பாடசாலை மாணவர்களில் சுமார் 300 பேர் வரை சேர்ந்து படித்தனர்.

பகுதி நேர மத்ரஸாவாக இயங்குவதில் உள்ள சிரமங்களைக் கண்ணுற்ற கல்லூரி நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் ஏ. எச். எம். முனாஸ் தனக்குச் சொந்தமான ஓர் ஏக்கர் நிலத்தை இதற்கு நன்கொடையளித்து தனது சொந்தச் செலவில் கல்லூரிக்குத் தேவையான வகுப்பறைகள், மாணவர் விடுதி உள்ளடங்கிய கட்டிடம், தொழுகையறை, கிணறு, மலசலகூடம் முதலியனவற்றையும் அமைத்துக் கொடுத்தார். 1985.08.31ம் திகதி முதல் இக்கல்லூரி நிரந்தரக் கட்டிடத்தில் முழுநேரக் கலாசாலையாக இயங்க ஆரம்பித்தது.

இக்கல்லூரியில் ஹிப்ழ், ஷரீஆ ஆகிய இரு துறைகளுமுள்ளன. இரு பிரிவுகளிலும் சுமார் அறுபது மாணவர்கள் உள்ளனர். இக்கல்லூரியில் முதல் மொழியாக அறபும் இரண்டாம் மொழியாக உறுதுவும் போதிக்கப்படுகின்றன. உறுது மொழி இந்தியாவில் உயர்கல்வி பெற வாய்ப்பாகவுள்ளது. இதனால்தான் இங்கு கல்வி பெற்றோர் இந்தியா, பாகிஸ்தான் சென்று உயர்கல்வி பெற்று வருகின்றனர். மேலும் இக்கல்லூரியில் அறபுக் கற்கைகளுக்குப் புறம்பாக தமிழ், சிங்களம் ஆகிய சுதேச மொழிகளும் கணிதம், சமூகக் கல்வி முதலான பாடங்களும் போதிக்கப்பட்டு வருகின்றன.

கல்லூரியின் செலவினங்கள் நன்கொடைகள், ஒரு நாள் உணவுத்திட்டம், மாணவர் கட்டணம் என்பன மூலம் ஈடு செய்யப் படுகின்றன. இவை தவிர இதற்கு நிரந்தர வருமானம் எதுவும்

இல்லை. கல்லூரியின் மாதாந்தச் செலவினம் சுமார் 1,15,000 ரூபாவாகும்.

கல்லூரி நிர்வாக சபைத் தலைவராக அல்ஹாஜ் ஏ. எச். எம். முனாஸ் அவர்களும் செயலாளராக ஆசிரியர் எம். எச். எம். ஜப்பார் அவர்களும் பொருளாளராக அல்ஹாஜ் எம். ஜீ. எம். ஸியாத் அவர்களும் பணியாற்றுகின்றனர்.

கல்லூரி அதிபராக மௌலவி அல்ஹாஜ் எஸ். ஏ. எம். ஜவுபர் அவர்கள் விளங்குகிறார்கள். ஐந்து உதவி ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர்.

**அன்வாருல் ஊலூாம் அறபுக்கல்லூரி-மாகொல:**

மாகொல முஸ்லிம் அனாதை நிலையத்தில் முஸ்லிம் அனாதைச் சிறுவர்களுக்காக நடாத்தப்படுகின்ற சன்மார்க்கக் கலைக் கூடமே இதுவாகும். இதில் அநாதை மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். மாகொல முஸ்லிம் அநாதையில்லம் 1962 ஒக்டோபர் மாதம் 14ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அங்கு 'குல்லிய்யது அன்வாரில் உலூாமில் அரபிய்யா' என்ற பெயரில் 1972ம் ஆண்டு 12 மாணவர்களுடன் இவ்வறபுக் கல்லூரி செயற்பட ஆரம்பித்தது. தற்போது இக்கல்லூரியில் 165 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள்.

இக்கல்லூரியின் ஆரம்ப அதிபராக மௌலவி பாழில் ஏ. ஏ. எம். ஸித்தீக் (நூரி) அவர்கள் பணியாற்றினார்கள். இடைக்காலத்தில் வேறு பலரும் அதிபர்களாக இருந்துள்ளனர். தற்போதைய அதிபர் மௌலவி எம். எம். பாயிஸ் (அன்வாரி) பீ. ஏ. (பாகிஸ்தான்) அவர்கள் இந்நிலையத்தின் பழைய மாணவராவார். மொத்தமாக 15 போதனாசிரியர்கள் கல்வி புகட்டி வருகின்றனர்.

இக்கல்விக் கூடத்தின் பாடநெறி எட்டாண்டுகள் கொண்டது. ஆண்டு ஏழு சித்தியடைந்த மாணவர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். இங்கு அறபு மொழி, அறபு இலக்கணம், அரபு இலக்கியம், தப்ஸீர், உலூமுல் குர்ஆன், ஹதீஸ், உஸூலுல் ஹதீஸ், பிக்ஹு, உஸூலுல் பிக்ஹு, அகீதா, இஸ்லாமிய வரலாறு முதலான பல்வேறு கலைகள் போதிக்கப் படுகின்றன. போதனாமொழி அறபாகும். அத்தோடு க. பொ. த(சா/த),

க.பொ. த. (உ/த) பரீட்சைகளை எடுக்கவும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

இதுவரை இங்கிருந்து 42 மௌலவிமார்கள் வெளியேறியுள்ளார்கள். அவர்களில் சிலர் மேல் படிப்புக்காக மதீனா பல்கலைக்கழகத்துக்குச் சென்றுள்ளனர். ஆசிரியத் தொழிலிலும் வேறு தொழிற் துறைகளிலும் சேர்ந்து இவர்கள் சமூகப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கு பெரியதொரு நூல் நிலையமும் உள்ளது. சகல துறைகளும் சார்ந்த அறபு, தமிழ், ஆங்கில மொழி நூல்கள் இங்குள்ளன. மாணவர்கள் எழுத்துத் துறையிலும் பேச்சுத் துறையிலும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். வெளியாரினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் போட்டிகளில் பங்கேற்றுப் பல சாதனைகள் படைத்துள்ளனர் இக்கலையக மாணவர்கள். இங்குள்ளோருக்கு உணவு, உடை, விடுதி மற்றும் சுகாதார வசதிகள் இலவசமாகவும் தாராளமாகவும் செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனத்திற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தாராளமாக உதவிகள் கிடைத்து வருகின்றன. சமுதாயக் கடமையான அனாதையினைப் பராமரிக்கும் பணியினை இந்நிறுவனம் மிகச்சிறப்பாக ஆற்றி வருகின்றது.

தாருல் குர்ஆனில் கரீம், கள் எலிய:

இக்கலா நிலையம் குர்ஆன் மனனம், தஜ்வீத் பாட போதனை மற்றும் அறபு, இஸ்லாமிய கற்கைகளைப் போதிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இதன் ஸ்தாபகர் அல்ஹாபிழ் மௌலவி ஏ. எல். அலியார் (பி. ஏ. மதனி) அவர்களாவார். 1995 ஏப்ரல் 1ம் திகதி பத்து ஹிப்ழு வகுப்புக்குரிய மாணவர்களுடன் இயங்க ஆரம்பித்தது. ஆரம்பத்தில் கள் எலிய அப்துல் காதர் மாவத்தையில் உள்ள வாடகை வீடொன்றில் செயல்பட்டு தனவந்தர்களது உதவியால் 1996ல் தம்பில்லாவையிலுள்ள நிரந்தரக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

தற்போது நாடளாவிய ரீதியில் 35 மாணவர்களையும் இரண்டு ஆசிரியர்களையும் கொண்டு இந்நிலையம் இயங்கி வருகின்றது. ஹிப்ழை முடித்துக் கொண்ட நான்கு மாணவர்கள் அறபுத்துறை கற்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர். 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் ஐவர் கொண்ட சூராக் குழுவும் இக்கல்லூரி பரிபாலனத்திற்கு உதவி வருகிறது.

**கள்-எலிய முஸ்லிம் மகளிர் அறபுக்கல்லூரி:**

தோற்றம்:

இலங்கையில் மகளிருக்காக நிறுவப்பட்ட முதலாவது அறபுக் கல்லூரி இதுவாகும். இது 1959 செப்டம்பர் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கள்-எலிய அலிகார் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பகுதி நேர மத்ரஸாவாக இருபது மாணவியர்களுடன் இயங்க ஆரம்பித்தது. மௌலவி இப்ராஹீம் ஸாஹிப் அவர்கள் வகுப்புக்களை நடாத்தி வந்தார்.

தோற்றத்தின் பின்னணி:

இப்படியானதொரு மகளிர் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணக்கரு யாருடைய உள்ளத்தில் உதித்தது என்பதும் அது எவ்விதம் பரிணாமம் பெற்று வளர்ந்தது என்பதும் முக்கியமாகும். எகிப்திய அல் அஸ்ஹர் சர்வகலாசாலையில் அப்போது கல்வி பயின்று கொண்டிருந்த மர்ஹூம் மௌலவி அலவி அபுல் ஹஸன் அவர்களும் அக்காலை அங்கு சுற்றுலா மேற்கொண்டிருந்த மர்ஹூம் அல்ஹாஜ் எம். ஏ. எம். அபுல் ஹஸன் ஆகிய இருவரும் அல் அஸ்ஹரில் முஸ்லிம் பெண்கள் சன்மார்க்கக் கல்வி பயில்வதைக்கண்ணுற்று எமது நாட்டிலுள்ள முஸ்லிம் பெண்களும் இவ்விதம் சன்மார்க்கக் கல்வி பயில்வதில் ஈடுபடலாமே என்ற எண்ணக்கரு உருப்பெற்றது.

இதற்கு வலுவூட்டும் வகையில் மற்றொரு நிகழ்வும் இடம் பெற்றது. கள்-எலியவைச் சேர்ந்த எச். எல். எம். ஏ. காதர் அவர்களும் அவரது பாரியாரும் 1958ல் ஹஜ்ஜுக்காக மக்கா சென்றிருந்த வேளை ஜித்தாவில் இடம்பெற்ற பயங்கர விபத்தில் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பினார். அப்போது அவர்களுக்கு உதவ வந்த அறபுப் பெண்களிடம் தமக்கு நேர்ந்ததை எடுத்துக் கூற தம் குடும்பத்தவருக்கு அறபு மொழி தெரியாமை தடையாக அமைந்தது. இந்நிகழ்வு அத்தம்பதியர் உள்ளத்தில் அறபுக்கல்விப் போதனை அவசியம் என்ற எண்ணக்கரு உருவாகவும் அது செயலுருப்பெறவும் அடி கோலியது எனலாம்.

வளர்ச்சிப் படிகள்:

கள்-எலிய அலிகார் மகா வித்தியாலயத்தில் பகுதி நேர மத்ரஸாவாக இயங்கிய இக்கல்விக் கூடத்தை நிரந்தரக்

கட்டிடமொன்றில் முழு நேரக் கலா நிலையமாக இயங்க வைப்பதில் இதன் முன்னோடிகள் முழு மூச்சாக ஈடுபட்டனர். இதன் ஆரம்ப கால இயக்குனர்களாக மர்ஹூம் எம். ஏ. எம். அபுல் ஹஸன், அல்ஹாஜ் எச். எல். எம். ஏ. காதர், அல்ஹாஜ் ஏ. எச். எல். ஏ. ஸலீம், அல்ஹாஜ் ஏ. ஆர். எம். ஜுனைத், மௌலவி அலவி அபுல் ஹஸன் (கல்லூரியின் முதல் அதிபர்) ஜனாப் எம். ஏ. எம். ஸபியுத்தீன் (அதிபர்-அலிகார் ம.வி) ஆகியோர் விளங்கினார். தற்போதைய நிர்வாக சபைச் செயலாளர் மௌலவி அல்ஹாஜ் ஏ. ஆர். ஏம். ரூஹுல் ஹக் அவர்களும் இவர்களுடன் இணைந்து பணியாற்றினார். மேற்படி முன்னோடிகளில் ஒருவரான அல்ஹாஜ் ஏ. எச். எல். ஏ. ஸலீம் அவர்களே தற்போதைய முகாமைத்துவ சபைக்குத் தலைமை தாங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

1959ல் ஆரம்பிக்கப்பட்ட இக்கலா நிலையத்திற்கு 1960ல் கள்-எலிய கிராமத்திற்கு மேற்காய் அமைந்த காணி விலைக்கு வாங்கப்பட்டு, அதில் ஒரு விடுதியும் அமைக்கப்பட்டது. இதன் மூலம் அகில இலங்கையிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட இருபத்தாறு மாணவிகள் தங்கியிருந்து கற்பதற்கு வகை செய்யப்பட்டது. 1962ல் இக்கல்லூரி வளவிலேயே பாடசாலைக் கல்வியையும் மத்ரஸாக் கல்வியையும் பெற வசதி செய்யப்பட்டது.

1963ல் இதே கல்லூரி வளவில் மகளிர் அனாதை இல்லம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிலையம் அரசாங்க வர்த்தமானியில் உள்ளூர் இறைவரிமுறி 4ம் இலக்கத்தின் படியும் உப பிரிவு 67/1 இன் படியும் அனுமதிக்கப்பட்ட நன்கொடை நிதியமாக அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் 1980ம் ஆண்டு 31ம் இலக்க சமூக சேவைகள் அமையத்தினால் பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்பாகவும் பதியப்பட்டுள்ளது. மேலும் 1990ம் ஆண்டு 46ம் இலக்க நாடாளுமன்றக்கட்டளைகள் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கூட்டிணைப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இன்று இக்கல்லூரி நாடளாவிய ரீதியில் 810 மாணவிகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. இங்குள்ள 493 அனாதைப் பிள்ளைகளில் 252பேர் குவைத் பைதுல்ஸக்காத் நிதியத்தாலும் ஏனைய 241 பேரும் இலங்கை சிறுவர் நன்னடத்தைப் பிரிவு, சமூக சேவைத்திணைக்களம் என்பவற்றினதும் வேறு வகையான நன்கொடைகள்கொண்டும் போசிக்கப் படுகின்றனர்.

அனாதைகள் தவிர்ந்த ஏனைய மாணவிகளிடம் சாதாரண மாதாந்தக் கட்டணமொன்று விடுதிக்கட்டணமாகப் பெறப்படுகிறது.

வாய்ப்புக்களும் வசதிகளும்:

1. பூரணத்துவம் பெற்ற தையல் பயிற்சி நிலையம்; இதிலேயே மாணவியருக்கான சீருடைகள் தயாரிக்கப்படுகின்றன.
2. சகல வசதிகளைக் கொண்ட மனையியல் கூடம்.
3. 10,000 க்கும் மேற்பட்ட அனைத்துத்துறை சார்ந்த நூல்களை உள்ளடக்கிய நூல்நிலையம்.
4. ஒரே நேரத்தில் 850 மாணவியர் உணவுட்கொள்ளக் கூடிய உணவுச்சாலை.
5. பதினான்கு மாணவியர் விடுதிகள், அவையாவன: காதர், முஸ்தபா, மதார், அன்ஸார், ஜித்தா, புதிய ஜித்தா, பைத்துஸ்ஸகாத், கதீஜா, அருஸ், குவைத், இராக், நழீம், ஜமால் என்பனவாகும்.
6. இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று தொடர்மாடிக்கட்டிடம் அண்மையில் திறந்து வைக்கப்படவுள்ளது.
7. 'காஸ்' வாயுவினால் இயங்கும் நவீன சமயலறை.
8. சகல வசதிகளுடன் கூடிய அனாதைச் சிறுவர் பராமரிப்பு விடுதி.

சமூகப் பங்களிப்பு:

இதுவரை இக்கலையகத்திலிருந்து அண்ணளவாக 1200 மௌலவியாக்கள் மௌலவித்தராதரம் பெற்று வெளியேறியுள்ளனர். அவர்களில் அல் ஆலிம் பரீட்சை, க. பொ. த. (சா/த), க. பொ. த. (உ/த) பரீட்சைகளில் தேர்ந்தோர் அனேகர். இன்று புதிது புதிதாக இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு வரும் மகளிர் அறபுக்கல்லூரிகளில் போதனாசிரியர்களாகத் திகழ்வோரில் அனேகர் இக்கல்லூரியில் இருந்து வெளியேறியோராவர். மேலும் அரசாங்கப் பாடசாலைகளில் அறபு/இஸ்லாம் ஆசிரியைகளாகப் பணிபுரிவோரில் அனேகரும் இக்கல்லூரித் தாயின் சேய்களே. அத்துடன் உயர்கல்வி பெற வெளிநாடு சென்று தம் அறிவுக்கு

வளம் சேர்த்துக் கொண்டோரும் உளர். இங்கிருந்து வெளியான மௌலவியாக்கள் தங்களது குடும்பச் சுமையோடு கல்வி மற்றும் தஃவாப் பணிகளில் ஈடுபட்டும் வருகின்றனர். தற்போதைய இக்கலையகத்தின் அதிபர் மௌலவியா ஜலீலா சபீக் பீ. ஏ. அவர்கள் இக்கலையகத்தில் கற்றுத் தேறியவர் என்பதில் மனம் பூரிப்படைகிறது.

வளர்ச்சிக்கு வளம் சேர்த்த வள்ளல்கள்:

1. மர்ஹூம் எச். எல். எம். அப்துல் காதர் ஹாஜியார். இக்கலையகத்திற்கு காணி வழங்கி அத்திவாரமிட்டு அரும்பணியாற்றியவர்.

2. மர்ஹூம் அல் ஹாஜ் எம். ஏ. எம். அபுல் ஹஸன் ஜே. பி அவர்கள் இக்கலையகத்திற்கு ஊர் சுற்றி உரம் சேர்த்து இந்நிலைக்கு உயர்த்திய வள்ளல். அவரை இக்கலை யகத்தின் தந்தை எனில் மிகையாகாது.

3. தற்போதைய தலைவர் ஹாஜி ஏ. எச். எல். ஏ. ஸலீம் அவர்களும் ஹாஜி அபுல் ஹஸனுடன் இணைந்து இக்கலையகத்தின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அரும் பணியாற்றியவராவார்.

4. இக்கலையகத்தின் வளர்ச்சியில் பங்கேற்ற ஏனையோர்: ஓய்வு பெற்ற நீதியரசர் அல்ஹாஜ் எம். ஜமீல், மௌலவி அலவி அபுல் ஹஸன் (அஸ்ஹறி) மௌலவி ஏ. ஆர். எம். ரூஹுல் ஹக் (கபூரி), அல்ஹாஜ் ஏ. எச். எம். கலீல், ஜனாதிபதி சட்டத்தரணி எம். பாயிஸ் முஸ்தபா, அல்ஹாஜ் எம். ஸுபைர், அல்ஹாஜ் றஹ்மான் ஹஸன், மர்ஹூம் அல்ஹாஜ் அஷ்ரப் மன்சூர், அல் ஹாஜ் முஸ்தபா ஹஸன், ஜனாப் எம். இஸட். எம். பாழில், ஜனாப் பயாஸ் ஸரூக், ஜனாப் எம். எஸ். எம். ஸியாத், டாக்டர் ஹுஸ்னி காதர், செய்க் காலீத் பாதாவீ, செய்க் அல் அமூதி, அல்ஹாஜ் எம். கே. எம். பிஷ்ருல் ஹாபி, அல்ஹாஜ் ஏ. எஸ். எம். பசீர், கல்லூரி அதிபர் ஜலீலா சபீக், தற்போதைய பணிப்பாளர் எம். ஏ. றஹீம், மற்றும் கள்-எலிய கிராமத்து நலன் விரும்பிகள், கலையக ஆசிரிய ஆசிரியைகள் பெற்றோர், பாதுகாவலர்.

மகளிரின் சமயப் பொதுக் கல்வி வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட முதற் கல்லூரியாக அதன் பெயரை வரலாற்றில் மிக உயர்ந்த இடத்தில் பதித்துள்ளது. இதனால் இக்கலையகத்தின் உயர்ச்சிக்காக உழைத்த அனைவரும் வரலாற்றில் என்றும் நினைவுகூரத்தக்கவர்களாவர்.

## மகான்கள்

### அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாதிப் (றஹ்):

ஆரம்ப கால இலங்கை முஸ்லிம்களது வரலாற்றில் இஸ்லாமிய தஃவாப் பணியில் ஈடுபட்டோர் வரிசையில் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாதிப் (ரஹ்) அவர்கள் உயர் இடம் வகிக்கிறார்கள். அன்னார் யமன் நாட்டின் முதாவா எனும் ஊரைச் சேர்ந்தவர். அரச பரம்பரையைச் சார்ந்தவர். எகிப்தில் உள்ள அல் - அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். தமது சொந்த சுகங்களைத் துறந்து தஃவாப் பணிக்காக இங்கு வந்து சேர்ந்தார்.

யமனிலிருந்து வந்த அவர் இந்திய மலபார் பகுதியிலிருந்து தமது குடும்ப உவினர்களுடன் சில காலம் தங்கி பின் இலங்கை வந்தார். 27.05.1940ஆம் ஆண்டில் கொழும்பு நகரில் புதிய சோனகத் தெரு 154ம் இலக்க ஏ. சீ. எம். அப்துல் பாரி இல்லத்தில் வசித்து வந்துள்ளார். சில காலம் மட்டக்குளியிலும் வாழ்ந்து வந்துள்ளார். அதன் பிறகு திஹாரியிலும் இருந்துள்ளார். திஹாரியில் இருந்தபோது அங்கு சமய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

திஹாரியிலிருந்து கஹட்டோவிட்ட, மாவனல்ல, ஹெம்மாதகம பகுதிகளுக்குச் சென்றுள்ளார். மாவனல்லைப் பகுதியில் ஐந்து ஜும்ஆப் பள்ளிவாசல்களை நிர்மாணித்து தஃவாப் பணியிலும் ஈடுபட்டார். இன்றும் ஹெம்மாதகம, மடுல் போவ, ஓலான கிராமத்தில் அன்னாருக்குச் சொந்தமான 25 ஏக்கர் காணியுள்ளது. அதில் பாதிப் மௌலானா தக்யாவும் உள்ளது.

தமது அந்திம காலத்தைக் கஹட்டோவிட்டவிலேயே கழித்தார். அங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவிலும் ராதிப், திக்ரு, உபதேச மஜ்லிஸுக்களை நடத்துவார். அதன் மூலம் மக்களை நன்னெறிப்படுத்தியும் வந்துள்ளார். இதே காலத்தில் கம்பளை, பதுளை, தல்துவை, நாப்பாவல முதலான வேறு பகுதிகளுக்கும் சென்று தஃவாப்பணிபில் ஈடுபட்டுள்ளார்.

ஆத்மஞானி பாதிப் மௌலானா கஹடோவிட்டவில் வபாத்தானார்கள். அன்னாரது ஜனாஸா அவர்களது தக்யாவுக்கு பக்கமாக நல்லடக்கம் செய்யப்பட்டது. பாதிப் மௌலானா விட்டுச் சென்ற பணியைத் தொடரவென ஊர்மக்கள் பாதிபியா சங்கத்தை அமைத்தனர்.

**செய்குல் இஸ்லாம் அல்லாமா அப்துஸ்ஸமது ஆலிம்:**

இந்நூற்றாண்டில் இந்நாட்டு முஸ்லிம்கள் கண்ட தலைசிறந்த மார்க்க அறிஞர், வானியல் துறை விற்பன்னர், அறபு இலக்கண இலக்கிய மேதை, பன்னூலாசிரியர் அல்லாமா அப்துஸ்ஸமது ஆலிமாவார். அன்னார் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக அறிவுலகில் ஜோதியாகப் பிரகாசித்தார். உலமாக்களை உருவாக்குவதிலும் அவர்களை வழி நடத்துவதிலும் தமது காலத்தைச் செலவிட்டார். இதன் மூலம் இஸ்லாமிய உம்மத்தார் நேர்வழி நடக்க அடிகோலினார். நூல்கள் பல எழுதி இஸ்லாமிய உம்மத்தார் வழி கெடாமல் பாதுகாத்தார்.

மர்ஹூம் அப்துஸ்ஸமது ஆலிம் அவர்கள் கஹடோவிட்ட, ஒகடபொல எனும் ஊரில் 1911 இல் முஹம்மது இப்ராஹீமுக்கு மகனாகப் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை தமது ஊரிலேயே பெற்றுக் கொண்டார். காலி பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யாவில் சன்மார்க்கக் கல்வி பெற்று மௌலவிப்பட்டம் பெற்றார். அதே கல்லூரியில் 17 வருடம் உஸ்தாதாகப் பணியாற்றினார். அதன் பின் அட்டாளைச்சேனை அல்குல்லிய்யதுச் ஷர்கிய்யா, பாணந்துறை அல் மத்ரஸதுத் தீனிய்யா, கல்ஹின்ன ஜாமிஉல் பத்தாஹ் ஆகிய கல்லூரிகளில் அதிபராகப் பணியாற்றினார். பின்னர் தமது சொந்த ஊரான உடுகொடையில் தமது சகோதரனின் உதவி கொண்டு ஹஸனிய்யா அறபுக் கல்லூரியை நிறுவி இறுதிவரை அதன் அதிபராக விளங்கினார். மாணவப் பருவத்திலிருந்து இறுதிமூச்சுவரை அறிவுத்துறைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்துச் செயலாற்றியுள்ளார். அன்னாரை அறிவுலகம் நல்லாசானாக, பன்னூலாசிரியராக, கவிஞராக, வானியல் மேதையாக, மார்க்கத் தீர்ப்பாளராக, நெஞ்சுறுதிமிகு தலைவராக நோக்குகிறது.

அன்னார் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றிய போதெல்லாம் மாணவர்களுடன் மிக அன்போடும் பண்போடும் நடந்து கொள்வார். ஒவ்வொரு மாணவரையும் தம் புதல்வராக

ஏற்றுப் பாட போதனை நடாத்துவார். மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கப் பண்புகள் மீறப்படும்போது கண்டிப்பாக நடந்து கொள்வார். நல்லன செய்யும் போது பாராட்டத் தவறமாட்டார். இந்த வகையில் அன்னாரைப் பல அறிஞர்களை உருவாக்கிய நல்லாசானாகக் காண்கிறோம். இன்றைய அறபுக் கல்லூரிகளில் உஸ்தாதுமார்களாக விளங்குவோரில் பலர் அன்னாரின் மாணவர்களேயாவர்.

அறிவுத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அறிஞர் அப்துஸ்ஸமது அவர்கள் பன்னூலா சிரியருமாவார். அன்னார் அறபு மொழியில் 54 நூல்களையும் தமிழ் மொழியில் 20 நூல்களையும் எழுதியுள்ளார். அறபு மொழியில் எழுதப்பட்ட நூல்கள் வரிசையில் அறபு இலக்கணம், இலக்கியம், வானியல், பிக்ஹு கலை, வைத்தியம், வரலாறு தொடர்பான நூல்கள் அநேகமுள்ளன. இவர்கள் எழுதிய நூல்களில் நேரசூசி கணிப்பு முறை எனும் அறபு நூல் மிகப் பெரிதாகும். இது இதுவரை அச்சேறவில்லை. அறபு இலக்கணம் கற்கும் மாணவர்களுக்கு உதவக்கூடிய பல நூல்களையும் எழுதியுள்ளார்.

தனது அறிவுப்பணி சாதாரண மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தமிழ் மொழியில் 20 நூல்கள்வரை எழுதியுள்ளார். மஹ்ரின் சுருக்க விளக்கம் இவர் எழுதிய முதல் தமிழ் நூலாகும். வணக்க நேர விளக்கம் எனும் நூல் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பாராட்டுப் பெற்ற நூலாகும். மத்ஹபுகள் ஏன் என்பது தொடர்பாக இவர் எழுதிய நூல் மிகப் பயனுடையதாகும்.

அப்துஸ்ஸமது ஹஸ்ரத் அவர்கள் ஒரு கவிஞராகவும் விளங்கினார். அறபு யாப்பு இலக்கணத்தைக் கற்றுத் தேர்ந்த இவர் அறபுக் கவிதை இயற்றுவதில் வல்லவரானார். அவரால் இயற்றப்பட்ட கவிதைகள் சமுதாய தேவைக்கும் ரசனைக்கும் ஏற்றதாயிருந்தன. அறபுலகக் கல்விமான்கள் கூட இவரது கவிதைகளைப் பாராட்டியுள்ளனர். வானசாஸ்திரம், வைத்தியம் தொடர்பான இரு நூல்களைக் கவிதையாகப் பாடியுள்ளார்.

அப்துஸ்ஸமது ஆலிம் அவர்கள் காலி பஹ்ஜதுல் இப்ரா ஹிமிய்யாவில் உஸ்தாதாக இருந்தபோது அல்லாமா

அப்துல்லாஹ் ஆலிம் அவர்களிடம் வானியல் கற்க ஆரம்பித்தார். இவரது விவேகம், திறமை, நுண்ணறிவு என்பவற்றைக் கண்ணுற்ற ஆசிரியர் இவரை ஆசீர்வதித்து வானியல் அறிஞராக வர வேண்டுமென பிரார்த்தித்தார். ஆசிரியரிடம் அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொண்ட இவர் சுய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பல்வேறு நூல்களை ஆராய்ந்தார். பலவிடயங்களைக் கண்டுபிடித்தார். வானியல் துறை சார்ந்த அவரது சில ஆராய்ச்சி முடிவுகளும் கண்டுபிடிப்புக்களும் வருமாறு:

1. கஃபாவுக்கு நேராக சூரியன் செல்லும் இரு தினங்களைக் கண்டறிந்து அதன் மூலம் கஃபாவின் திசை அறிய வழி காட்டல். (கிப்லா)

2. சரியான வடக்கு தெற்குத் திசைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு (SUN DIAL) சூரிய கடிகாரத்தை நிர்மாணித்தார். இதன் மூலம் லுஹர், அஸர் நேரங்களை அறிய முடிந்தது.

3. செம்பிலான பூகோள உருண்டையைச் செய்து அதில் நீள, அகல, மகர, கடகக் கோடுகளை வரைந்து சூரிய ஓட்டப் பாதையைத் தெளிவுபடுத்தினார்.

4. கால் வட்டக் கருவி, நேரத்தை அறியவும் சூரியனின் சாய்வை அளக்கவும் உதவுகிறது.

5. இன்று நடைமுறையில் உள்ள தொழுகை நேரசூசியை தயார் செய்ததோடு மார்க்கத் தீர்ப்புகள் (பத்வா) வழங்குவதிலும் வல்லவராக இருந்தார். அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த அன்னார் அக்கால கட்டத்தில் எழுந்த பல சிக்கலான பிரச்சினைகளுக்குத் துணிச்சலான, உறுதியான தீர்ப்புக்களை வழங்கி யாவரது பாராட்டையும் பெற்றார்.

இவை தவிர தனிப்பட்ட முறையில் நூற்றுக்கும் மேற்பட்ட பிரச்சினைகளுக்கு ஆதார பூர்வமான தீர்ப்புக்களை வழங்கியுள்ளார். இலங்கை நீதிமன்றங்களிலிருந்து வரும் சொத்துப் பங்கீடு, விவாகம், விவாகரத்து தொடர்பான பிரச்சினைகளுக்கும் சரியான தீர்ப்பினை வழங்கி சரீஅத்தை நிலைநாட்டியுமுள்ளார். 1980 காலப் பகுதியில் எகிப்து அல்

அஸ்ஹர் கலாசாலையின் மத்திய நிர்வாகக் குழுவின் பிரதிநிதிகள் அன்னாரின் கலா சாலையையும் அவரது ஆய்வு நூல்களையும் மதிப்பீடு செய்து விட்டு அவற்றின் கருத்துக்களில் லயித்துப் போனார்கள். அறிவும் திறனும் தக்வாவும் நிறையப் பெற்ற அன்னார் இலங்கையில் நூற்றுக்கு மேற்பட்ட உலமாக்களை உருவாக்கிவிட்டு 1996. 07. 06 அன்று தமது 85வது வயதில் வபாத்தானார்கள். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.)

**மார்க்க மேதை மஸ்ஊத் ஆலிம்:**

சன்மார்க்க மேதை மஸ்ஊத் ஆலிம் அவர்கள் கம்பஹ மாவட்டத்தில் உள்ள நாம்புலுவ கிராமத்தில் அஹ்மது அலி என்பவருக்கு மகனாக 1926ம் ஆண்டு ஜுன் மாதத்தில் பிறந்தார். அவர் தமது ஆரம்பக் கல்வியை கஹட்டோவிட்ட கிராமத்தில் பெற்று சன்மார்க்கக் கல்வி பெற காலி பஹ்ஜதுல் இப்ராஹிமிய்யா அறபுக்கல்லூரியில் சேர்ந்தார்கள். அங்கிருந்து பட்டம்பெற்று வெளியேறிய அன்னார் சன்மார்க்க, சமூகப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

திஹாரிய அமீனிய்யா மஸ்ஜிதில் கதீபாகச் சேர்ந்தார். 1954 காலப்பகுதியில் தப்லீக் ஜமாஅத் செயலிழந்து காணப்பட்ட காலப்பகுதியில் அவ்வமைப்பில் சேர்ந்து அதன் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினார். இதற்காக நாட்டிலுள்ள சக உலமாக்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொண்ட மஸ்ஊத் ஆலிம் அவர்கள் தப்லீக் இயக்கத்தில் பங்கேற்குமாறு விடுத்த வேண்டுகோள் அடங்கிய உரை நாடாவில் பதியப்பட்டு நாடெங்கும் ஒலிபரப்பப் பட்டது. நாடு பூராவும் தப்லீக் மகாநாடுகள் நடாத்தப் பட்டன. தப்லீக் ஜமாஅத்தின் வளர்ச்சியில் மஸ்ஊத் ஆலிம் அவர்களின் பங்களிப்பு மகத்தானதாகும்.

1961இல் மஊனத்துர்ரஹ்மான் எனும் குர்ஆன் மத்ரஸா அமைப்பில் சேர்ந்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

1967ம் ஆண்டில் மஸ்ஜிதுல் அக்ஸாப் பள்ளிவாசல் யூதர்களால் தீமூட்டி எரிக்கப்பட்டபோது இலங்கை முஸ்லிம்கள் கொதித்தெழுந்தனர். அவ்வேளை மருதானை ஸாஹிராக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற கண்டனக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உணர்வு பூர்வமான உரை ஒன்றை நிகழ்த்தினார்.

ஜாமிய்யா நளீமிய்யாவை ஸ்தாபிப்பதில் ஈடுபட்ட நளீம் ஹாஜியார் அவர்கள் அதற்கு மஸ்ஊத் ஆலிம் அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளத் தவறவில்லை. அன்னாரையும் ஸ்தாபக அங்கத்தவராகச் சேர்த்து அவரது அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டார். மஸ்ஊத் ஆலிம் அவர்கள் நளீம் ஹாஜியாருடன் இணைந்து சமூகப் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்துள்ளார்.

1983 காலப் பகுதியில் இலங்கையில் இனவாத வன்செயல்கள் தலைதூக்கியிருந்த வேளையில் முஸ்லிம் அமைப்புக்கள் யாவும் சகல பேதங்களையும் மறந்து இத்திஹாதுல் முஸ்லிமீன் என்ற அமைப்பின் கீழ் ஒன்று திரண்ட போது அதன் தலைமைத்துவத்தை ஏற்குமாறு அனைவராலும் அன்போடு வேண்டப்பட்டார். அதனை மறுக்காது ஏற்ற மஸ்ஊத் ஆலிம் அவர்கள் முஸ்லிம்களது ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்குமாக ஏதுவானவற்றையெல்லாம் செய்தார்.

சமூக ஒற்றுமைக்காக அயராது குரல் கொடுத்து வந்தார். குறிப்பாக உலமாக்கள் ஒன்றுபட வேண்டும், ஒருமித்துக் கருமமாற்ற வேண்டும் என்பதில் விடாப்பிடியாய் இருந்தார். இளைய தலைமுறையினரான உலமாக்களுக்கு முன் மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் நடந்து கொண்ட அன்னார் அவர்களுக்குத் தமது அனுபவ வாயிலாக அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வந்தார்.

சமூக சீர்திருத்தத்திற்கும் மேம்பாட்டிற்குமாக மிம்பர் மேடையைப் பயன்படுத்தினார். வெள்ளிக்கிழமைகளில் மஸ்ஊத் ஆலிம் அவர்களின் குத்பா உரைகளைக் கேட்க மக்கள் ஆவலோடு கூடுவார்கள். உள்ளத்தைத் தொடும் விதமாக இதமான கருத்துக்களை எளிமையாக கம்பீரமான தொனியில் எடுத்துக் கூறுவார். தலை நகரிலிருந்து குக்கிராமங்கள் வரை அவரது குத்பாக்கள் சென்றடைந்தன. பள்ளிவாசல் திறப்பு விழாக்களின் போது முதல் குத்பாவிற்காக அவரையே அழைப்பார்கள். 1974ம் ஆண்டு அணிசேரா நாட்டுத் தலைவர்கள் வந்திருந்த சமயம் மருதானைப்பள்ளியில் அன்னாரே குத்பாப் பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

இஸ்லாமிய தஃவாப் பணிக்காக மின்பரை மட்டுமல்லாமல் வானொலியையும் பயன் படுத்தத் தவறவில்லை. அவ்வப்போது

தொடர் நிகழ்ச்சிகளையும் ஏனைய மார்க்க விளக்க நிகழ்ச்சிகளையும் நடாத்தி நேயர்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். அவர் மறைந்தும் கூட அன்னாரது வானொலி நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை மறு ஒலிபரப்புச் செய்து வருகிறது.

இவ்விதம் சமூகத்தோடு ஒட்டி உறவாடி வாழ்ந்து வந்த அன்னார், 1988. 10. 04 அன்று வபாத்தாகி அல்லலமுல்ல ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப் பட்டது. அன்னாரது ஜனாஸாவில் கலந்து கொண்ட ஜன சமுத்திரம் சமூகத்தில் அன்னாருக்கிருந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் தக்க சான்றாகும்.

**யூஸுப் ஆலிம்:**

திஹாரியைச் சேர்ந்த அலி லெப்பே, ஆமினா உம்மா தம்பதியினருக்கு மகனாக 1901.01. 01 இல் இவர் பிறந்தார். இவரது பரம்பரையினர் தஃவாப் பணியில் ஈடுபட்டு வந்தோராவர். தமது ஆரம்பக் கல்வியை திஹாரிய நூருஸ்ஸாஹிராவில் பெற்ற அன்னார் காலி பஹ்ஜத்துல் இப்ராஹிமிய்யாவில் சேர்ந்து கற்று 1922ம் ஆண்டு பட்டம் பெற்று வெளியேறினார். பின் வர்த்தகத் துறையில் ஈடுபட்ட அவர்கள் 1934இல் கள் - எலியவில் குர்ஆன் மத்ரஸாவொன்றை நிறுவி அதில் குர்ஆன்,இஸ்லாம், தமிழ், அறபு முதலான பாடங்களைப் போதித்தார். இதனால் மார்க்க அறிவும், மொழி அறிவும் விருத்தியடைந்தன. 1938ம் ஆண்டு கள் - எலிய முஸ்லிம் பாடசாலை அமைக்கப்பட்ட போது அதில் இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் நல்ல திறமைசாலிகளாக விளங்கினர். தற்போதுகூட அவரிடம் பயின்றவர்கள் நல்ல மார்க்க பத்தர்களாகவுள்ளனர்.

பின்னர் திப்பிட்டிய அறபு மத்ரஸாவில் சேர்ந்து கற்பித்தல் பணியில் ஈடுபட்டார். மூதூர், பறகஹதெனிய முதலான இடங்களில் இடம் பெற்ற வஹாபிய்யத் எதிர்ப்பு மேடைகளிற் பங்கேற்றார். கல்ஹின்ன மத்ரஸதுல் பத்தாஹ் அறபுக் கல்லூரியில் சேர்ந்து அதிபராகப் பணிபுரிந்தார். அவர் இந்நாட்டில் பல உலமாக்களை உருவாக்கவும் காரணமாக இருந்துள்ளார். இதுதவிர மஸ்ஊத் ஆலிம் அவர்களின் தப்லீக் ஜமாஅத் புத்துயிர்ப்புப் பணியிலும் பங்கேற்றார். இரண்டு

ஆலிம்களைத் தம் அறிவின் வாரிசுகளாக விட்டு விட்டு 1972 ஜனவரி 22 இல் வபாத்தாகி கள்-எலியவில் நல்லடக்கம் செய்யப் பட்டார். அன்னார் 1969 முதல் இறக்கும்வரை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் உபதலைவராக இருந்து அரும்பணி யாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அறிஞர் மௌலவி தாஸீன்:

1932 ஜூன் 27இல் உதுமா மரிக்காரின் மகனாக முஹம்மது தாஸீன் பிறந்தார். 5ம் வகுப்பு வரை ஆரம்பக் கல்வி கற்ற இவர் சரீஅத் துறையில் தேர்ச்சிபெற மகரகம கபூரிய்யா அரபுக் கல்லூரியில் சேர்ந்தார். பேரறிஞர் உமர் ஹஸரத்தின் மாணவனாகிய தாஸீன் தம் ஆசிரியரிடம் அறபு மற்றும் இஸ்லாமியக் கற்கைகளுடன் தமிழ் இலக்கணத்தையும் கற்றுக் கொண்டார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். கபூரியாவிலிருந்து விலகி சில காலம் கல்ஹின்னையிலும் பின் காலி பஹ்ஜதுல் இப்ராஹிமிய்யாவிலும் கற்று மௌலவி ஆனார்.

உயர் கல்வி பெற 1954இல் லக்னோ நத்வதுல் உலமா சர்வகலாசாலையில் சேர்ந்தார். அங்கு மார்க்கக் கலையில் சிறப்புறத் தேர்ச்சி பெற்றார். உறுது மொழியிலும் பாண்டித்தியம் பெற்றார். மௌலவி தாஸீனின் திறமைகள் அறிஞர் அபுல் ஹஸன் அலி நத்வியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அங்கு மௌலவிப் பட்டம் பெற்று ஊர் திரும்பினார்.

பின், ஹமீத் அல் ஹுஸைனியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு மாணவர்களுக்கு அறபுமொழி, மார்க்கக் கல்வியுடன் ஓய்வு நேரங்களில் ஆங்கிலத்தையும் போதித்தார். அவர் தங்கியிருந்த அறை உயர் வகுப்பு மாணவர்களாலும் பல்கலைக்கழக மாணவர்களாலும் எப்போதும் நிரம்பியிருந்தது. அவர் எப்போதும் கற்போருக்குத் தமது கல்விச் செல்வத்தை அள்ளி வழங்குபவராக இருந்தார். சிறந்த வாசிப்புப் பழக்கமுடைய இவரது சொந்த நூல் நிலையத்தில் ஆங்கிலம், தமிழ், உருது, அறபு நூல்கள் நிறைந்து காணப்பட்டன. இவற்றால் பலரும் பயனடைந்தனர்.

சமூக சீர்திருத்தத்தை நோக்காகக் கொண்டு கதை, கவிதை, கட்டுரை என்பன வரைந்தார். அவை உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகளில் சிறப்பிடம் பிடித்தன. அவரது மேடைப் பேச்சுக்களைக் கேட்க மக்கள் ஆயிரக்கணக்கில் கூடினர். அல்லாமா

இக்பாலின் கவிதைகளால் கவரப்பட்ட இவர் ‘குர்ஆனே கூறாயோ’ என்ற தலைப்பில் விருத்தப்பாக்களைப் பாடினார். பதிற் பாக்களைப் பாட அவருக்கு காலம் இடம் கொடுக்கவில்லை.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையூடாகவும் தனது சீர்திருத்த தஃவாப் பணியைத் தொடர்ந்தார். ‘தித்திக்கும் திருமறை கதை கேளீர்’ நேயர்களின் நெஞ்சை நெகிழ வைத்த ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். மேலும் வேற்றுமொழி நூல்கள் பலவற்றை எழுதினார். அறிஞர் அஸீஸுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இலங்கை ஜமா அத்தே இஸ்லாமியின் தலைவராகவும் சில காலம் கடமையாற்றினார்.

அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்திற்கு புலமைப் பரிசில் பெற்றுச் சென்ற அவர் நேரடியாக எம். ஏ. வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். எம். ஏ. பரீட்சையிலும் சிறப்பாகத் தேறினார். இது எமது நாட்டிற்கு அன்னார் மூலம் கிடைத்த கௌரவமாகும். அவரது அறபுமொழிப் புலமையாலும், ஆழ்ந்த அறிவாலும் கவரப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் அன்னாரைத் தம் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அங்குள்ள மாபெரும் நூல் நிலையத்தின் மூலம் தம் அறிவுத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டார். அப்போதைய செய்குல் அஸ்ஹர் கலாநிதி அப்துல் ஹலீம் மஹ்மூத் உட்பட எல்லா ஆசான்களுடனும் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். எகிப்திலிருக்கும்போதே பாரசீக மொழியிலும் வல்லவரானார். எகிப்திலுள்ள இஃவானுல் முஸ்லிமீன் இயக்கக் கொள்கைகளால் கவரப்பட்ட இவர் சிறைப்பட்டிருந்த அதன் தலைவர் ஷஹீத் செய்யத் குதுப் அவர்களையும் சந்தித்தார். ஏழு நிமிடங்கள் நிகழ்ந்த இச்சந்திப்பு ஏழு யுகங்களாக இருந்ததென மௌலவி தாஸீம் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் இலங்கை திரும்பிய அவர் ஹமீத் அல் ஹுசைனியில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். சமூகப் பணியையும் தொடர்ந்தார்.

ஜாமியா நளீமிய்யாவை உருவாக்கி சன்மார்க்கக் கல்வியையும் நவீன கல்வியையும் இணைத்து வழங்க வேண்டும் என்ற கனவை நனவாக்குவதில் அதன் ஆரம்ப முன்னோடிகளுடன் சேர்ந்து உழைத்தார். 1973 இல் ஜாமியா நளீமிய்யா ஸ்தாபிக்கப்பட்ட

போது பலரது வேண்டுகோளுக்கிணங்க அரசாங்க சேவையிலிருந்து விலகி அதன் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றார். முன்னுதாரண மற்ற ஒரு பொது ஸ்தாபனத்தைக் கட்டி எழுப்பி வளர்ப்பதில் பெரும் பாடுபட்டார். ஜாமிஆவின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றினார். ஜாமியா அன்னாரின் சேவையை குறுகிய காலத்திற்கே பெற முடிந்தது. மாபெரும் கல்விமானை, சீர்திருத்தவாதியை, சிந்தனையாளரை சமுதாயம் இழந்து விட்டது. 1977 செப்டெம்பர் 1ம் திகதி அறிஞர் தாஸீன் வபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி ராஜிஊன்.

### ஸியாரங்கள்

#### அஷ்ஷெய்கு அஹ்மது ரிபாய் மௌலானா ஸியாரம்:

மல்வானையிலும் கொழும்பிலும் மார்க்க சேவையில் ஈடுபட்ட அன்னார் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்தவர். பாம்பு மௌலானா என அழைக்கப்படும் இவர் மல்வான றக்ஸபானையிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் அடங்கப் பெற்றுள்ளார்கள். வருடாந்தம் அன்னார் பேரில் கத்தமுல் குர்ஆன் செய்யப்பட்டு அன்னதானம் வழங்கப்படுகிறது.

#### செய்குனாஅப்பா முஹம்மது ஹுஸைன் இப்னு முஹம்மத் ஸியாரம்:

இவர்கள் காதிரிய்யதுன்னபவிய்யா தரீக்காவின் கலீபாவாக இருந்தவர். அவர்கள் பேருவளை சேகு முஹம்மத் ஹாஜியார் அப்பாவின் அனுமதியுடன் கொழும்பு கிராண்ட்பாஸில் அவ்வல் ஸாவியாவை நிறுவி சாதுலியாத் தரீக்காவின் கலீபாவாகவும் ஏக காலத்தில் திகழ்ந்தவராவார். இவர்கள் மல்வான தளுக்கள தக்யா ஜும்ஆப்பள்ளி வாசலுக்குப் பக்கமாக அடங்கப் பெற்றுள்ளார்கள். வருடாந்த ஷாதுலிய்யா ஹழரா மஜ்லிஸில் கலந்து கொள்ள வரும் நூற்றுக்கணக்கான ஷாதுலிய்யா இக்வான்கள் இவர்களது ஸியாரத்தை தரிசிக்காமல் செல்வதில்லை.

#### கல்லுக்குழி ஸியாரம்:

திஹாரியில் அமையப் பெற்றிருக்கும் கல்லுக்குழி ஸியாரம் தென் இந்தியாவைச் சேர்ந்த செய்கு முஹம்மது வலியுல்லாஹ் அவர்களுடையதாகும். சுமார் 200 வருடங்களுக்கு முன்பு

கண்டியில் இருந்து இவர்கள் கொழும்பு திரும்பிக் கொண்டு இருக்கும்போது இடையில் வபாத்தாகி இங்கு அடங்கப்பெற்றார்கள். புளியமரத்தடியைச்சேர்ந்த மர்ஹூம் அப்துல் றஹ்மான் அவர்களின் காணியிலேயே அடங்கப் பெற்றுள்ளார்கள். அருகாமையில் அரச கல்லுடைக்குமிடம் இருந்ததால் இவ்விடம் கல்லுக்குழி எனப்படலாயிற்று. இங்கு கடந்த 150 வருடங்களாக வருடாந்தக் கந்தூரியும் நடைபெற்றுவருகின்றது.

**ஊர்மனை ஸியாரம்:**

செய்கு அபூபக்கர் ஸிந்துனி அவர்களது ஸியாரமே இதுவாகும். இந்த ஸியாரம் 200 வருடங்கள் பழமைவாய்ந்தது. திஹாரிய மஸ்ஜிதுர் ரவ்ழா பள்ளிவாசல் மையவாடியில் அடங்கப் பெற்றிருக்கும் இப்பெரியாரின் பெயரால் 150 வருடங்களுக்கு மேலாக கந்தூரி வழங்கப்பட்டு வருகிறது. 1960ம் ஆண்டு வரை தனிப்பட்டவர்கள் கந்தூரி கொடுத்து வந்தனர். 1960 முதல் பள்ளி நிருவாகிகளே கந்தூரி கொடுத்து வருகிறார்கள்.

**செய்கு அப்துல் காதிரி வலி ஸியாரம்:**

அத்தனகல்ல உடுவன்கல்லையில் வாழ்ந்து வந்த இவர்கள் 1621இல் இங்கு அடங்கப் பெற்றார்கள். இவர்கள் கல்வியிலும் வீரத்திலும் சிறந்தவர்களாக இருந்தார்கள் என அறியப்படுகிறது.

**செய்கு அபூபக்ர் பா ஹாசீம் பா அலவி மௌலானாவின் ஸியாரம்:**

ஹிஜ்ரி 13ம் நூற்றாண்டில் வெலிகமையைச் சேர்ந்த அஸ்ஸெய்யித் பா ஹாசீம் மௌலானா அவர்களின் புதல்வர் பா ஹாசீம் பா அலவி மௌலானா பூகொட குமாரிமுல்லைப் பகுதிக்கு வந்து அங்கு தஃவாப் பணியில் ஈடுபட்டார். பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் சமுதாயத்தைச் சீர்படுத்தும் சிரமமான பணியில் அன்னார் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். ஊரின் தலைமைத்துவத்தை ஏற்று மக்களை வழி நடாத்தினார்கள். அன்னார் ஹிஜ்ரி 1320இல் ஷஃபான் மாதம் மூன்றாவது திங்கட்கிழமை வபாத்தாகி பூகொட குமாரிமுல்லை ஜும்ஆப்பள்ளிவாசலுக்கருகாமையில் அன்னாரின் சொந்தக் காணியில் அடங்கப் பெற்றார்கள். அன்னாரின் பெயரில் கடந்த 95 வருடமாகக் கந்தூரி நடைபெற்று வருகிறது.

ஹாஜா செய்கு அலாஉத்தீன் ஜிஸ்தி (ரஹ்) ஸியாரம்:

இவர்கள் நீர்கொழும்பு பலகத்துறை பகுதியில் வாழ்ந்தவர். இந்தியாவைச் சேர்ந்தவர். இவர்கள் வருகை, மறைவு பற்றிய சரியான ஆண்டு பதிவாகியில்லை. சமாதி கட்டப்பட்டுள்ளது. இவர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்றுள்ளதாகவும் அறியப்படுகிறது. ஊர் மக்களால் இவர் பேரில் கந்தூரி நடத்தப்படுகிறது.

செய்யத் அபூபக்ர் (வலி) ஸியாரம்:

காமச்சோடை ஜும்ஆப்பள்ளிவாசலுக்குப் பக்கமாக அடங்கப் பெற்றுள்ள இவர் யமன் தேசத்தைச் சேர்ந்தவர். இம்மகானின் பேரால் கடந்த 150 வருடங்களுக்கு மேலாக கந்தூரி வழங்கப் பட்டு வருகிறது.

செய்யித் அபுல் காஸீம் (வலி) ஸியாரம்:

இவர்கள் கள்ளொலுவ மினுவாங்கொட ஜும்ஆப்பள்ளி வாசலுக்கருகாமையில் அடங்கப் பெற்றுள்ளார்கள். 300 வருடங்களுக்கு முன்பு வந்ததாக நம்பப்படும் அபுல் காஸீம் (வலி) பேரால் வருடாந்தம் கந்தூரி நடாத்தப்படுகிறது.

செய்கு அஷ்ரப் (வலி) ஸியாரம்:

மாபோல ஜும்ஆ மஸ்ஜிதுக்கு முன்பாக பாதையோரமாக இவர்களது ஸியாரம் அமைந்துள்ளது. இவர்கள் பெயராலும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஸியாரம் பற்றிய தகவல்களைத்தந்துதவியவர் பத்திரிகையாளர் எம். யாஸீன் ஹனீபா - திஹாரிய)

## உசாத்துணை நூல்களும் தகவல் தந்தோரும்


நூல்கள்:

1. கம்பஹ மாவட்ட அஹதிய்யா ஐந்தாண்டு நினைவு மலர்
2. இதயத்தில் வாழ்வோர் - ஏ. எல். எம். ராஸீக்
3. நபவிய்யா வழி வகுத்த நல்லவர்கள் - ஏ. டபிள்யூ. எம். மஃரூபு
4. ஆய்வுக்கட்டுரை - 'மல்வானை முஸ்லிம்களின் கலாச்சார, பண்பாட்டு வளர்ச்சியில் தரீக்காக்களின் பங்கு' எம். எம். ஏ. ஸாபிர்
5. நாம்புளுவ முஸ்லிம்களின் பாரம்பரியம் - எம். எம். எம். முபாறக்
6. அல் முபாறக் 65ம் ஆண்டு நினைவு மலர்
7. மத்ரஸதுல் பாரி அறபுக்கல்லூரி நூற்றாண்டு மலர்
8. தினகரன் பத்திரிகையில் வெளியான கட்டுரைகள்


### தகவல் தந்துதவியோர்:

| | |
|---|---|
| அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் | பாராளுமன்ற உறுப்பினர் |
| எம். வை. எம். நஸீர் (ஜே.பீ) | மு. ச. ப. அ. திணைக்களம் |
| எஸ். எம். ஜாபீர் ஆசிரியர். | நீர்கொழும்பு |
| எம். யாஸீன் ஹனீபா | திஹாரிய |
| ஜனாப். எஸ். ஏ. எம். ஸாஹிர் | ஓய்வு பெற்ற அதிபர் |
| மௌலவி எம். எம். பாயிஸ் - அதிபர் | அன்வாருல் உலூம் அறபுக்கல்லூரி |
| எம். ஏ. றஹீம் - பணிப்பாளர் | முஸ்லிம் மகளிர் அறபுக்கல்லூரி, கள் எலிய |
| அல்ஹாஜ். சரீப் (ஜே. பீ.) | கல்லொலுவ |
| எம். எஸ். எம். ஜப்பார் ஆசிரியர். | கல்லொலுவ |
| எம். என். எம். ஸவாஹிர் ஆசிரியர். | நாம்புளுவ |
| டாக்டர் எம். எஸ். முபாறக் | செயலாளர், கம்பஹ மாவட்ட அஹதிய்யா சம்மேளனம் |
| அல்ஹாஜ் எம். எஸ். எம். நுஃமான் | உடுகொட |
| எம். வை. நூர் முஹம்மட் ஜனாப். | கள் எலிய |
| அல்ஹாஜ் எச். எல். முஹமட் | மள்வானை |
| அல்ஹாஜ் எம். எச். ஏ. ஸஊத் | முன்னாள் ஆசிரியர், மல்வானை |
| எம். எச். எம். ஏ. றஹ்மான் | உதவி அதிபர், மள்வானை |
| அல்ஹாஜ். எம். எம். அஹ்மத் | ஓய்வுபெற்ற சுங்க ஆணையாளர் மல்வானை |
| ஏ. எம். எம். நயீம் | ஓய்வுபெற்ற அதிபர் - பூகொட |
| அல்ஹாஜ். எம். யூ. எம். ஜிப்ரி | மாகொல |

# 5

# வாழ்வியலும் பண்பாடும்

எம். வை. ஏ. அப்துல் காதர்

உலக நாகரீகப் பரம்பல் எவ்வாறு யூப்பிரடீஸ், டைகிரீஸ் நதிகளோடு சம்பந்தமுடைத்தோ, அதேபோல் இலங்கையில் ஆரம்பகாலக் குடியேற்றம், நாகரீகம் என்பவற்றோடு மல்வத்து ஓயா, களனி கங்கை நதிதீரங்கள் சம்பந்தமாகின்றன.

கொழும்பு மாவட்டத்தின் வடக்கெல்லையாகவும், கம்பஹ மாவட்டத்தின் தெற்கு, கிழக்கு எல்லைகளாகவும் களனி நதி அமைகின்றது. அதேபோல் கம்பஹ மாவட்ட மேற்கு எல்லையாக இந்து சமுத்திரமும், வடக்கெல்லையாக மகாஓயாவும் அமைகின்றன. மேல் மாகாணத்தினுள் அடங்கும் கம்பஹ மாவட்டம், கொழும்பு நகரோடு இணைந்துள்ளமையால், இங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை, பழக்கவழக்கங்கள், தொழில்துறைகள் யாவும் கொழும்பை மையமாகக் கொண்டு மாற்றமடைகின்றன.

அரேபியரின் வருகையினாலும், அதனைத் தொடர்ந்த போர்த்துக்கீசரின் வருகையினாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலும், நதிதீரங்களிலும் வியாபாரஞ் செய்த அரேபியர்கள், தம்மோடு போட்டிக்கு வந்த போர்த்துக்கீசரின் வருகையின் பின் உள்நாட்டுக்கு இடம்பெயர்ந்தனர். இதன் மூலம் அரேபியர்கள் சுதேசிகளோடு தமது சம்பந்தங்களை மேலும் அதிகரித்துக் கொண்டனர்.

கொழும்பிலிருந்து கரையோரப் பாதையில் வடக்கு நோக்கிப் போகும்போது பேலியகொட, வத்தளை, மாபோல, ஹுனுப்பிட்டி ஊடாக நீர்கொழும்பு, கொச்சிக்கடை, கம்மல்துறை - பெரியமுல்லை ஆகிய இடங்களை உள்ளடக்கி மினுவாங்கொடை வரைக்கும், கண்டிப் பிரதான வழியாகப் போகும்போது திஹாரி, கஹட்டோவிட்ட, கல்எலிய, நாம்புளுவ, பஸ்யால,

வேவல்தெனிய வரைக்கும், களனி நதியூடாகப் போகும்போது மல்வானை, பூகொடை என்ற இடங்களில் முஸ்லிம்களின் குடிப்பரம்பல் செறிந்திருப்பதை நாம் காணலாம்.

வியாபாரத்தை மையமாக வைத்தே இக்குடிப்பரம்பல் விரிவடைந்தது என்பதைப் புரிந்துகொள்ளலாம். பொதுவாக இன்றுவரை இலங்கைச் சோனகர்கள் வியாபார சமுதாயத்தினராகவே கருதப்படுகின்றனர்.

களனி நதிக்கூடாக தெப்பங்களில் அரேபியர்கள் வியாபாரஞ் செய்தபோது, சிங்கள மன்னர்களினதும் சிங்கள மக்களினதும் பேராதரவு அவர்களுக்குக் கிடைத்தது. அரேபியர்கள் பிரதான நகரான கொழும்பை நோக்கியே ஆற்றில் பிரயாணம் செய்தனர். பிரயாணக் களைப்பின்போதும், இரவு காலங்களிலும் அவர்களுக்கு தங்குமிடங்கள் தேவைப்பட்டன. அவ்வாறு தங்கிக் களைப்பாறிச் சென்ற இடங்களாக மல்வானையையும் பூகொடையையும் கொள்ளலாம்.

இத்தகைய பூர்வீகத்தைக் கொண்ட கம்பஹ மாவட்ட முஸ்லிம்களிடையே பல கலாச்சாரப் பண்பாடுகள் வளர்ந்து, நிலைபெற்று, வழக்கத்திலிருந்து வந்துள்ளன.

**கர்ப்ப காலம்**

தாய்க்கு முதல் குழந்தை எனின், தாயை மிகவும் கவனமாகப் பராமரிப்பர். தகப்பன் வீட்டார்களான தாய், சகோதரர்கள், உறவினர்கள் கர்ப்பவதிக்குப் பிடித்தமான பல்வேறு வகையான உணவுப் பதார்த்தங்களை - இனிப்பு, உறைப்பு, புளிப்பு - தயாரித்து பல பெட்டிகளில் போட்டு கர்ப்பவதியின் வீட்டுக்கு அனுப்புவார்கள். இதனை 'சூழ்த்தீன்' என்றழைப்பர். கர்ப்பத்தாய் சாப்பிடாவிட்டாலும் இப்பண்டங்களை "கண்ணால் பார்த்து மனநிறைவு அடைய வேண்டும்" என்பதே தாற்பரியமாகும். பின்னர் அவை உறவினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

குழந்தை பிறந்ததும் அதன் காதுகளில் அதானும், இக்காமத்தும் கூறப்பட்ட பின் ஒரு முதியவரைக் கொண்டோ, ஆலிமைக் கொண்டோ பிஸ்மில் சொல்லி - ஸம்ஸம் நீர், தேன் பாணி, பேரீச்சம்பழம் ஏதாவது ஒன்றைக்கொண்டு சிறுதுளி வாயில் வைப்பார்கள். இது 'எச்சில் வாய்' வைத்தல் எனப்படும்.

குழந்தை பிறந்தபின் தொடர்ந்து உறவினர்கள் குழந்தையைப் பார்ப்பதற்காக வரத் தொடங்குவர். வெறுங்கையோடு வராமல் மோதிரம், காதணி, வளையல்கள் , உடைகள் என்பவற்றோடு வருவர். ஏழு நாட்களுள் தலைமுடி இறக்கி, அதன் பாரத்துக்கு தானதருமம் செய்தல் சுன்னத்தான செயலாகும். அது மாத்திரமல்ல, ஆட்டையோ அல்லது மாட்டையோ அறுத்துக் குர்பானும் கொடுப்பார்கள். தமது உறவினர் யாரும் குழந்தையைப் பார்க்க வராவிட்டால் அது குடும்பத்துக்குள் பெருங்குறையாகவே இருந்து வரும். ஏதும் பிரச்சினைகள் வரும்போது இக்குறை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தப்படும்.

### பெயர் சூட்டுதல்

'குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்' குடும்பத்தில் முதல் வைபவமாகக் கருதப்படும். இம்மாவட்ட முஸ்லிம்கள் பெரும்பாலும் 'காதிரிய்யா' தரீக்காவைப் பின்பற்றுபவர்களாக இருக்கின்றமையால், பெயர் சூட்டு வைபவத்தில் 'முஹியத்தீன் மௌலூது' தான் ஓதப்படும். ஓதி முடிந்ததும் குழந்தைக்குப் புத்தாடை, ஆபரணங்கள் அணியப்பட்டு, குடும்பத்திலுள்ள பெரியவர் ஒருவர் - தகப்பன், தகப்பனின் தகப்பன், மாமா யாராவது ஒருவர் கையில் வைத்து சபைக்குக் கொண்டுவரப்படும். சூட்டப்பட வேண்டிய பெயர் அறபியில் ஒரு துண்டில் எழுதப்பட்டு பிள்ளையின் சட்டையில் பின்னப்பட்டிருக்கும். கதீப் அல்லது ஆலிம் குறிப்பிட்ட ஓதல்கள், அதான், இகாமத்து என்பவற்றை ஓதி அந்தப் பெயரைப் பலரும் அறிய உரத்துச் சொல்லுவார். பிறகு களறியில் பலபேரும் மாறிமாறி குழந்தையை மடியில் எடுப்பர். குழந்தைக்கு அன்பளிப்புக்களும் வழங்கப்படும்.

ஆண்கள் மௌலூது ஓதி பெயர் சூட்டியதன் பின், பெண்கள் இவ்வாறே தாமும் 'தலைப்பாத்திஹா' ஓதுவார்கள். அத்துடன் தாலாட்டும் பாடுவார்கள். (ஒரு பாடல் இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பு I) பின்னர் விருந்து நடைபெறும். வசதி படைத்தவர்கள் இவ்விருந்தில் அன்பளிப்புக்கள் வழங்குவார்கள். குழந்தையின் பெயர் பொறிக்கப்பட்ட பீங்கான் பொருட்கள் பெண்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும்.

குழந்தைக்குப் பொருத்தமான ஒரு பெயரைத் தேடுவதில் தகப்பன் பல மார்க்கப் பெரியார்களையும் தேடி அலைவது வழக்கம். தமது தரீக்காத் தலைவர், செய்கு, கலீபா - அவர்களிடம்

சென்று பெயரைக் கேட்டறிந்து கொள்வார். நாற்பது நாட்கள் குழந்தையையும், தாயையும் தனியே இருக்கவிடாது, மிகவும் கவனமாக துணையாக இருப்பர். நாற்பதாவது நாளில் தாயும் குழந்தையும் குளிப்பாட்டப்படுவர். புத்தாடை அணிவிப்பர். அதிகாலையில் ரொட்டியும், பல்வேறு பலகாரங்களும் தயாரிக்கப்பட்டு வாழைப்பழத்துடன் சேர்த்து எல்லோர் வீடுகளுக்கும் பகிர்வர். பெரும்பாலும் மேற்கூறப்பட்ட 'பெயர்சூட்டு' வைபவம் நாற்பதாம் நாளில் நடைபெறும். நாற்பதாம் நாள் மாலையில் அல்லது அடுத்தநாள் மாலையில், தங்கள் ஊர்ப்பள்ளிவாசலுக்கு அநேகமாக ஸியாரத்துக்கு உறவினர்களோடு பெண்கள் மாத்திரம் ரொட்டியும் முட்டைக் கறியும் சமைத்து எடுத்துக்கொண்டு பாத்திஹா ஓதச் செல்வர். அது முடிந்து வீடுவரும்போது பள்ளிவாசலுக்குக் கிட்ட உள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வர். இதற்கு 'பிள்ளை இடுக்கி வருதல்' என்று சொல்லப்படும்.

பிள்ளை வளரும் பருவத்தில் பல்வேறு நேர்ச்சைகள், தான தருமங்கள் கொடுப்பது வழக்கம். இதில் 'நிய்யத்துப் பணியாரம்' என்பது விசேஷ பலகாரமாகும். இது சுமார் பத்து அங்குல வட்டத்தில் மா, கருப்பட்டி, சீனி என்பவற்றினால் செய்யப்படுவதாகும். இதனோடு வெற்றிலைச் சுருளையும் இணைத்து, ஒவ்வொரு வீட்டுக்கும் பகிர்ந்தளிப்பர்.

ஓதல் பருவம்

வயது மூன்று நிறையப்பெற்றபின் பிள்ளைக்கு 'முதல் பாடஞ் சொல்லிக் கொடுத்தல்' நடைபெறும் இது பெரும்பாலும் - முஹர்ரம் மாதத்தில் நடைபெறும். ஊர் கதீப் அல்லது மௌலவி ஒருவர் பெரும்பாலும் வீட்டிற்கு வந்தே இதனை நடத்துவார். 'பாற்சோறு தயாரிக்கப்பட்டு' மற்றும் பணியாரம் முதலிய பலகாரங்களோடு இவ்வைபவம் நடைபெறும். முஹர்ரம் மாதத்தின் முதல் புதன்கிழமை இது நடைபெறுதல் உண்டு. சுமார் இரண்டடி நீளம் ஓரடி அகலத்தில் 'பலகை' செய்யப்பட்டு, ஒரு வகை சுண்ணாம்பு மண்ணால் 'மாலா' பூசப்பட்டு பலகை வெள்ளை நிறமாக்கப்பட்டிருக்கும். மூங்கில் மரக்குச்சியினால் செய்யப்பட்ட எழுதுகருவியினால், அரிசிமா வறுத்துச் செய்யப்பட்ட மை மூலம் 'ஸாஹின் குறிப்பிட்ட 'பலகையில்' முதல் பாடம் எழுதப்படும். கதீப் பல முறை சொல்லிக் கொடுப்பார்.

பிள்ளை ஒரு சொல் ஓதினாலும் 'போதும்' என்று சொல்வார். தொடர்ந்து ஓதுவதற்காக 'குர்ஆன்' பள்ளிக்கூடத்திற் சேர்க்கப்படுவர். 'குர்ஆன்' பள்ளிக்கூடத்தில் பிள்ளை 'குர்ஆனை' ஓதக் கற்றுக்கொள்ளும். முப்பது ஜுஸுக்களும் ஓதி முடிந்தபின் மேலதிகமாக மௌலிதுகள், கஸீதாக்கள், புர்தா உட்பட தொழுகைக்கான ஓதல்களையும், வேறுமுக்கியமான ஓதல்களையயும் மனப்பாடஞ் செய்வர். குர்ஆன் பள்ளிக்கூடம் நடைபெறும்போதே அரசாங்கப் பாடசாலையில் சேர்ந்து படிக்கக்கூடிய வயதாகிவிடும். ஆரம்பத்தில் காலையும் மாலையும் குர்ஆன் பள்ளிக்கூடம் சென்ற பிள்ளை, அரசாங்கப் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்ததும், பின்னேர குர்ஆன் வகுப்புக்கு மாத்திரமே செல்லும்.

குர்ஆன் பள்ளிக்கூட வாழ்க்கையில் சில விசேட சந்தர்ப்பங்கள் வருகின்றன. ஆரம்பத்தில் சேரும்போது பாற்சோறு பலகாரங்களோடு பிள்ளை பள்ளிக்குப் போகும். ஆலிமுக்கு அன்பளிப்புக்களும் கொடுக்கப்படும். பின் ஒவ்வொரு ஜுஸுவும் ஓதி முடிந்தபின், ஆலிமுக்கு அன்பளிப்புக்கள் வழங்குவதோடு, ஏனைய சக மாணவர்களுக்கும் உணவுப் பதார்த்தங்களும் வழங்கப்படும். புனித நோன்பு காலத்தில் முஅல்லிம் அவர்கள், தமது மாணவர்களை தயார்செய்து, பைத்துக்கள் மனப்பாடஞ் செய்து, ஊர்வலமாக ஓதவரும் எல்லா மாணவர்களினதும் வீடுகளுக்கு அனுப்புவார். இது 'கமிசு' போதல் எனப்படும். வீடுகளில் 'முஅல்லிமுக்கு' பண அன்பளிப்புக்கள் கொடுக்கப்படும். மலேசியா நாட்டிலும் இவ்வழக்கம் நடைமுறையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொழில் வாய்ப்புக்கள்

தனியே வியாபாரத்தை மாத்திரம் மேற்கொண்டிருந்த இம்மாவட்ட முஸ்லிம் மக்கள், நாளடைவில் வேறும் பல தொழில்களில் பிரவேசிக்க முனைந்தனர்.

i. வியாபாரம் - கடைச் சிப்பந்தி
ii. மேசன் தொழில் - கட்டிட நிருமாணம்
iii. குடிசைக் கைத்தொழில்
   1. சுருட்டு, பீடி சுற்றல்
   2. கைத்தறி நெசவு

iv. மாணிக்க வியாபாரமும், கல் தோண்டலும்

v. அரசாங்க சேவைகள்

இம்மாவட்ட மக்கள் கொழும்போடு மிக நெருங்கிய தொடர்புள்ளவர்களாக இருந்தனர்; இருந்தும் வருகின்றனர். கொழும்பு வாழ் முஸ்லிம்களோடு இணைந்து தமது வியாபார முயற்சிகளை மேற்கொண்டனர். உள்ளூரில் சில்லறை வியாபாரிகளாகவும் கொள்முதல் வியாபாரிகளாகவும் இருந்தனர். கொழும்பின் சில பகுதிகளில் கடைத்தொகுதிகளை வைத்துள்ளனர். உதாரணமாக, கொழும்பு கிறேன்பாஸ் பகுதியில் மல்வானை முஸ்லிம்கள் ஆரம்ப காலந்தொட்டே இறப்பர் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதேபோல் மேல் மாகாணத்தின் இரண்டாவது பெரிய நகரான நீர்கொழும்பில் கூடுதலான கடைத்தொகுதிகள் முஸ்லிம்கள் வசமே இருந்தன.

உள்நாட்டில் சிறு நகரங்கள் முதல் கிராமங்கள் வரை வியாபாரம் முஸ்லிம்கள் வசமே இருந்தது. ஒரு கடையை எடுத்துக் கொண்டால் அங்கே வாடிக்கையாளனுக்கு, வாங்க வருபவர்களுக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்கள், ஆடை வகைகள், விவசாய உபகரணங்கள், ஏனைய வீட்டு உபயோகப் பொருட்கள், பாத்திர வகைகள் அத்தனையும் பெறக்கூடியதாக இருந்தது.

இறப்பர், பாக்கு, கோப்பி, மிளகு போன்ற உற்பத்திப் பொருட்களுக்கான புறம்பான கடைகளும் இருந்தன. இங்கே பெரும்பாலும் 'பண்டமாற்று' வியாபார முறையே நடந்தது. கடையின் ஒருபுறம் அமைந்துள்ள கொள்முதல் கடையில் தமக்குத் தேவையான உணவுப் பொருட்கள், விவசாயக் கருவிகள் உட்பட தேவையானவற்றை பெற்றுச் சென்றனர். முஸ்லிம் வியாபாரிகள் மிகவும் கௌரவத்தோடும் நாணயத்தோடும் பெரும்பான்மை மக்களோடு நடந்துகொண்டனர். எனவேதான் கௌரவமான 'முதலாளி' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர். தங்களின் பொருட்களுக்கு எவ்வளவு விலை போட்டீர்கள் என்று கேட்க மாட்டார்கள். வாங்கும் சாமான்கள் போக மீதியாக எவ்வளவு கொடுத்தாலும் அதனைப் பெற்றுக்கொண்டு செல்லும் வழக்கம் பெரும்பான்மை மக்களிடம் இருந்தது. முதலாளியும் அவர்களது சகல இன்பதுன்பங்களிலும் கலந்துகொள்ளும் பாங்கோடு நடந்துகொள்வார். சில வேளைகளில் கடுமையான குடும்பப்

பிணக்குகளைத் தீர்க்கும் நீதிபதியாகவும் முதலாளிமார் கருதப்பட்டனர். தங்களது கஷ்ட காலங்களில் நகைகள், சொத்துக்கள் என்பவற்றை இம்முதலாளிமார்களிடமே ஒப்படைத்து தேவையான பணத்தைப் பெற்றுக்கொண்டனர்.

கடைகளில் வேலைக்குரிய சிப்பந்திகள், குறிப்பிட்ட கிராமத்தவர்களாகவோ அல்லது பக்கத்துக் கிராமத்தவர்களாகவோ தானிருந்தனர். தமது குடும்ப உறவினர்களாகவே பெரும்பாலும் இருந்தனர். வீடுகளுக்கண்மையிலுள்ள ஊர்களில் கடைகள் இருந்தாலும், தமது வீடுகளுக்குப்போகும் வழக்கம் இருக்கவில்லை. பெருநாள், ஊர்ப்பள்ளிக் கந்தூரி, மற்றும் முக்கிய திருமணங்கள் என்பவற்றுக்கே சிப்பந்திகள் வீடு சென்றனர். கடைகளில் தொழுகை அறைகளும் இருந்தன. சிறு நகரமெனில் அங்கே சிறு பள்ளிவாசல் இருந்தது.

தமிழில் பேசும்போது விலைகளை கானாச்சதம், ரூனாச்சதம், ஊனரூனா (ஒருசதம், ஐந்து சதம், இருபத்தைந்து சதம்) என்று குறிப்பிட்டுப் பேசினர். பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்புவரை மாத்திரம் கற்றிருந்தாலும், கடையிலே 'தமிழ்ப்புள்ளி' களை கட, கடவெனச் சொல்வதோடு மாத்திரமல்லாமல், மனப்பாடமாகவே கூட்டல், கழித்தல் கணக்குகளைச் செய்தனர். முதலாளியும் சிப்பந்திகளும் தங்களுக்குள் குறியீடுகள் மூலமே கதைத்துக் கொள்வர். உதாரணமாக 'முடுவான்', மேல்த்தாட்டன், வடுவஸ்காளம் போன்ற சொற்களைக் கூறலாம்.

கொழும்பைச் சேர்ந்த முகத்துவாரப் பகுதியில்தான் முஸ்லிம் மேசன்மார் அதிகமாகக் குடியிருந்தனர். இங்கிருந்து குடிபெயர்ந்து இம்மாவட்டத்தில் நீர்கொழும்பு பலகைத்துறைப் பகுதியில் குடியேறிய முஸ்லிம்களில் அதிகமானோர் இங்கு இத்தொழிலைச் செய்தனர். இம்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் கொழும்புப் பகுதியிலிருந்துதான் பரவலாக மேசன் தொழில்செய்பவர்கள் குடியேறியுள்ளனர். வியாபார சமுதாயமாக விளங்கிய முஸ்லிம்கள் சுதந்திரத்தின் பின் சிறிது சிறிதாக தமது நிலைமையை மாற்றிக் கொள்ள முன்வந்தனர். 'பெண்கள் கற்பது ஹறாம்' என்றிருந்த நிலையும் மாறத் தொடங்கியது.

தேசிய ரீதியில் குடிசைக் கைத்தொழிலுக்கு ஊக்கமளிக்கப்பட்டதால் கைத்தறி நெசவு, பீடிக் கைத்தொழில்,

சுருட்டுக் கைத்தொழில் (நீர்கொழும்பு, பூகொடை, பஸ்யாலை, கஹடோவிட்ட) என்பன ஆரம்பமாயின. சுமாரான பெண்பிள்ளைகளும் தொழில்செய்ய ஆரம்பித்தனர். கல்வியில் ஊக்கஞ் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதும் முஸ்லிம் பாடசாலைகளுக்குத் தேவையான வசதிகள் கிடைத்தன. எனவே அரசாங்க உத்தியோகத்திலும் இம்மாவட்ட முஸ்லிம்கள் கவனஞ் செலுத்த முற்பட்டனர். எனவே ஒருவர் உழைத்து ஒன்பது பேர் வாழ்ந்த நிலை மாறி, ஒன்பது பேருமே உழைத்து வாழும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

### திருமணச் சடங்குகள்

ஆரம்ப காலத்தில் திருமணங்கள், தமது உறவினரிடையேயும் உள்ளூரிலுமே நடந்தன. வியாபாரத் தொடர்புகளும், போக்குவரத்து வசதிகளும் ஏற்பட, பிற கிராமத்தவர்களோடும் திருமணத்தொடர்புகள் ஏற்படலாயின.

தரகர் மூலமோ அல்லது உறவினர், நண்பர்கள் மூலமோ ஒரு திருமணப்பேச்சு ஆரம்பமானதும், மாப்பிள்ளையைப் பற்றி பெண்வீட்டாரும், பெண்ணைப்பற்றி மாப்பிள்ளை வீட்டாரும் இரகசியமாக ஆராய்வர். தமக்குப் பிடித்தமான இடம், பொருத்தமான இடம் என்ற முடிவுக்கு வந்தபின், மாப்பிள்ளை வீட்டாரின் நெருங்கிய உறவினர் பெண் பார்க்கச் செல்வர். பெண்ணுக்கு அடையாளம் போட்டதும் பேச்சு உறுதி பெறும். பின்னர் விடயத்தை உலகறியச் செய்வதற்காக வேண்டி குறிப்பிட்ட ஒரு தினம் மாலை வேளையில் - பெண் வீட்டிலிருந்து, ஊர்ப் பெரியார்கள், உறவினர்கள், நண்பர்கள் ஒன்று கூடி மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்வர். இதனைக் "கல்யாணத் தீர்ப்பு" அல்லது "சம்பந்தம்" என்றழைப்பர்.

மாப்பிள்ளை வீட்டுக்குப் போனதும், அன்புடன் வரவேற்கப்படுவர். மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த ஒருவர், அல்லது அவர்கள் சார்பாக ஓர் ஆலிம் - நன்றாகப் பேசக்கூடிய ஒருவர் கையிலே பன்னீர் செம்பைத் தாங்கி, சபையோரை விளித்து "இந்த மாலை நேரத்தில், ஊரிலே உள்ள பெரியவர்கள், உலமாக்கள்,வியாபாரிகள் மற்றும் எல்லோரும் இங்கு வரக் காரணம் என்ன" என்று விசாரிப்பபார். இடையிடையே பன்னீரும் தெளிக்கப்படும்.

வினாவுக்கு விடையாக, சபையிலிருந்து ஏற்கனவே பேசுவதற்காக கூட்டிவந்தவர் "நாங்கள் ஒரு நன்மையான காரியத்திற்காக வந்துள்ளோம்" என்பார்.

"உலகத்திலே நன்மையான காரியங்கள் பல உண்டு. அவற்றில் எதுவென்று அறியலாமா" என மற்றவர் வினவுவார்.

"நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு பலமிக்க ஸுன்னத்தான கருமத்தை நிலை நாட்டுவதற்காக வந்துள்ளோம்" என்று பதிலளிப்பார்.

"நாயகம் (ஸல்) அவர்களின் எல்லா நடைமுறைகளும் ஸுன்னத்தானவை: அதில் நீங்கள் எந்த சுன்னத்தை ஹயாத்தாக்க வந்துள்ளீர்கள்" என்று மற்றவர் கேட்பார்.

இரு பக்கத்திலிருப்பவர்களும் பேச்சு வன்மை உள்ளவரெனில் உரையாடல் நீண்டதாகவும் கேட்பதற்குச் சுவையானதாகவும் அமையும்.

கடைசியில், இன்னாருடைய மகள் இன்னாருக்கும், இன்னாருடைய மகன் இன்னாருக்கும் திருமணம் பேசி, அதனைப் பலரும் அறியப் பகிரங்கப்படுத்தி, பாத்திஹா ஓதி முடிவெடுக்க வந்துள்ளோம். என்று கூறப்பட்டதும், மாப்பிள்ளை வீட்டார் சரி, சந்தோஷம் என்று சொன்னதும், ஆலிமால், அல்லது கதீப் அவர்களால் பாத்திஹா ஓதப்படும். ஆரம்பகாலத்தில் இச் 'சம்பந்த வைபவத்தில்' மாப்பிள்ளைக்குக் கொடுக்க உத்தேசித்துள்ள அன்பளிப்புக்கள் - சீதனம் - வீடு - நகை என்பன பற்றியும் பகிரங்கப்படுத்தப் பட்டன. நாளடைவில் அப்பேச்சுக்கள் சேர்த்துக் கொள்ளப்படாமல், பொதுவாக "ஏற்கனவே பேசிக்கொண்ட பிரகாரம்" அன்பளிப்புக்கள் தரப்படும் என்று மாத்திரம் சொல்லப்படும் வழக்கம் ஏற்பட்டது.

திருமண வைபவங்கள் பெரும்பாலும் ஷவ்வால், ரபிய்யுல் ஆகிர், ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆகிர், ரஜப் ஆகிய மாதங்களிலேயே நடைபெற்றன. இப்பொழுது புனித ரமழானைத் தவிர, ஏனைய எல்லா மாதங்களிலும் திருமணங்கள் நடக்கின்றன.

திருமண நாள் நெருங்கியதும், ஊர்மக்களை அழைப்பதற்கு இரு பக்கத்தாரும் சேர்ந்து அழைக்கச் செல்வர். சில ஊர்களில் பெண்களை அழைக்க பெண்கள் சென்றனர். விருந்துகள்

வெவ்வேறாகவே நடைபெற்றன. 'அழைப்பிதழ்' அடிக்கும் முறை வந்ததும், தமிழ் மொழியிலேயே அவை அச்சிடப்பட்டன. இப்பொழுது ஆங்கில மொழியில் அச்சிடப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் இப்பொழுது ஒரே அழைப்பிதழ் அச்சிடப்பட்டு இரு பக்கத்தவரும் ஒரே விருந்தோடு திருமணத்தை முடித்துக் கொள்கின்றனர்.

சில ஊர்களில், அழைப்பிதழ் கொடுக்கப்பட்டாலும் ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து அழைக்காவிட்டால், எந்த ஒரு விருந்து வைபவத்துக்கும் செல்லமாட்டார்கள். 'ஏன் கல்யாண வீட்டுக்குச் செல்லவில்லையா?' என்று வினவினால், 'என்னைக் கண்டு சொல்லவில்லை' என்றோ, அல்லது அவர் என்னைக் கண்டும் சொல்லவில்லை என்றோ பதில் வரும்.

திருமணத் தினத்திற்கு முதல்நாள், பெண்வீட்டில் பெண்ணுக்கு 'மருதோன்றி' இடும் வைபவம் நடைபெறும். இதனை 'மருதோன்றிக் கல்யாணம்' என்று சொல்வர். இத்தினத்தில் பெண்ணை உட்கார வைக்கும், மேடை - ஸ்டேஜ் - (நாளடைவில் இஸ்தாது என்று மருவியது) அமைக்கப்படும்.

பெண்வீட்டாரைப்போல் மாப்பிள்ளை வீட்டிலும் இத்தினத்தில் விருந்து நடைபெறும். இரு வீட்டிலுமுள்ள உறவினர்கள், பெண்கள், பிள்ளைகள் தமது கைகளில் மருதோன்றி போட்டுக் கொள்வார்கள். ஏற்கனவே இவ்வீடுகளில் ஒன்று கூடியுள்ள உறவினர்கள் ஓய்வு கிடைக்கும் நேரமெல்லாம் 'ரபான்' ஒலி எழுப்பத் தவறுவதில்லை.

திருமணங்கள் மிகச் சமீபகாலம் வரை இரவிலேயே நடைபெற்றன. அதுவும் மாதமும் பிறையும் முக்கியமாக கவனிக்கப்பட்டன. மாப்பிள்ளை புறப்பட முன், இராச்சாப்பாட்டினைத் தாய் வீட்டில் சாப்பிடுவார். இது தாயாரின் கையால் இறுதிச் சாப்பாடு எனப்பட்டது. அதற்குப் பிறகு, மாப்பிள்ளையின் பெற்றோரும் சகோதர சகோதரிகளும் - மாப்பிள்ளையை மேடையில் உட்கார வைத்து சலாம் சொல்லிக் கொள்வர். நெருங்கிய - உறவுப் பிள்ளைகள் இரு பக்கத்திலும் விசிறி கொண்டு மாப்பிள்ளைக்கு காற்றுவீசுவர். பாத்திஹா ஓதப்பட்டதும் மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் முதலில் செல்வர். மாப்பிள்ளை நடந்தே ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். நேரே பள்ளிவாசல் அல்லது ஸியாரத்துக்குப் போய் பாத்திஹா

ஓதப்படும். பெரும்பாலும் இஷாத் தொழுகைக்கு மாப்பிள்ளை அழைத்து வரப்படுவார். பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் தொழுகையின் பின் அனைவருக்கும் கோப்பி பானம் வழங்குவர். ஊர்வலத்தில் 'யானபி' பைத், அஸ்ஸுபுஹுபதா பைத் என்பன ஓதப்படும். மாப்பிள்ளை ஊர்வலம் மிகவும் விசேஷமாக இருக்கும். மாப்பிள்ளைக்கு கூந்தல் குடை பிடிக்கப்படும். பல வகையான வானவெடிகளும் கொளுத்தப்படும். கல்யாணத் தினத்தில் வானவேடிக்கை பார்ப்பதற்காக பல மைல்களுக்கப்பால் இருந்தும் சிங்கள மக்கள் வருவார்கள்.

பெண் வீட்டு வாசலில், மாப்பிள்ளை, வெள்ளைப் பிடவை விரிக்கப்பட்டு வரவேற்கப்படுவார். பன்னீர் தெளிக்கப்படும். மைத்துனர் முறையான ஒருவர் மாப்பிள்ளையின் பாதணிகளைக் கழற்றி மணம் பூசி வரவேற்பார். இதனைக் 'கால் கழுவுதல்' எனப்படும். மாப்பிள்ளை மைத்துனருக்கும் மோதிரம் பரிசாக அணிவிப்பார். மாப்பிள்ளையை பெண்ணின் மைத்துனர் முறையானவர்கள் பிடித்துக் கொண்டு போய் உட்கார வைப்பர். ஆரம்ப காலத்தில் உட்கார்ந்தவுடன் அனைவருக்கும் தாம்பூலம் (வெற்றிலை) வழங்கப்பட்டது.

பெண்வீட்டார், இன்னும் பலரும் வரவேண்டியுள்ளனரா என மாப்பிள்ளை வீட்டாரிடம் விசாரிப்பர். எல்லோரும் வந்துவிட்டார்கள் என்றதும் 'திருமணப் பதிவு' நடைபெறும். ஆரம்ப காலத்தில் திருமணப்பதிவு, அறபியிலும், அறபுத் தமிழிலும் நடைபெற்றது. (மாதிரிக்கு திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன. இணைப்பு II) வெவ்வேறான வகையில் மஹர் தொகைகள் குறிக்கப்பட்டன.

### கைக்கூலியும் (சீதனமும்) - மஹரும்:

பின் இணைக்கப்பட்டுள்ள, திருமணப் பதிவுப் பிரதிகளின் மூலம், மணவாளருக்கு ஒரு தொகைப் பணமும், ஏனைய வீட்டுப் பொருட்களும், பெண்ணுக்குரிய வீடு, நகைகள் என்பனவும் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளதென்பதோடு மாப்பிள்ளைக்குக் கொடுக்கும் தொகை, குறிப்பிட்ட காலத்துக்கு முன் கொடுக்கப்பட்டு, கல்யாண வைபவத்தன்று, பதிவுப் புத்தகத்தில் 'ஏற்கனவே கொடுக்கப்பட்ட ரொக்கப் பணம் போக மீதி' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதையும் அவதானிக்கலாம்.

கட்டாயப்படுத்தப்பட்டுள்ள 'மஹர்' தொகை, ரூபாயி லல்லாமல் '$19\,^1/_2$ களஞ்சி' பொன் மஹருக்கு எனக் குறிக்கப் பட்டுள்ளது. இதன் பெறுமானம் ரூபாயில் எவ்வளவு என்பது குறிக்கப்படவில்லை. மேலும் 'மஹர்' கொடுக்கப்பட்டதா? இல்லையா? வென்பதும் பதியப்படவில்லை. இக்காலத்தில் 'மஹர்' தொகை கொடுக்கப்பட்டதா? இல்லையா? வெனப் பதியப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

வெள்ளி நாணயப் புழக்கம் இருந்த காலகட்டத்தில், மஹர்தொகை, '133 வெள்ளி ரூபாய் மஹருக்கு' எனப் பதியப்பட்டது. நாளடைவில் 'வெள்ளி' என்பது விடுபட்டு, ரூபாய் என மாத்திரம் குறிக்கப்படுகிறது.

உண்மையில் பொன், தங்கம், வெள்ளி என்பவற்றில் மஹர் தொகை கொடுக்கப்பட்டமை, பெண்ணுக்குரிய உயர்ந்த அந்தஸ்தையே எடுத்துக் காட்டுகிறது. எனவே, தான் தற்காலத்தில் 'மஹர்' தொகை ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலாக கொடுக்கப்படும் வழக்கம் பின்பற்றப்படுகிற தெனலாம்.

மல்வானையில் ஆரம்பத்தில் '$19\,^1/_2$ களஞ்சி' பொன் மகராகக் குறிக்கப்பட்டது. பின்னர் 133 வெள்ளி ரூபாவானது. இப்போது 133 ரூபாவாகக் குறிக்கப்படுகிறது. இவ்வாறே ஏனைய கிராமங்களிலும் குறிப்பிட்ட ஒரு தொகை குறிக்கப்பட்டது. திருமணப் பதிவில் அதனை நடத்திய உலமாவும், ஊர்மத்திச்சம்மார்களும் இன்னும் இரு பக்கத்தாலும் இருவருமாக சாட்சிகளாக ஒப்பமிடுவர். பதிவு முடிந்ததும் மாப்பிள்ளை எழுந்து நிற்பார். அனைவருடனும் சலாம் சொல்லிக் கொள்வார். உறவினர், நண்பர்கள் சலாம் சொல்லி அன்பளிப்புக்களும் வழங்குவர். பெண்ணின் தகப்பன், சகோதரர்கள் சலாம் சொல்லிக் கொண்டு, தங்க மோதிரம் அணிவிப்பர்.

இது முடிந்ததும் மைத்துனர் மாப்பிள்ளையை உள்ளே அழைத்துச் செல்வார். அங்கு பெண்ணிண் அறையில் ஆராத்தி முதலான மரியாதைகள் நடைபெற்றபின் 'தாலிகட்டும்' வைபவம் நடைபெறும். இங்கு மாப்பிள்ளைக்கு உதவியாக அவரின் சகோதரி இருப்பார். இருவருக்கும் 'பால்' குடிப்பதற்குக் கொடுக்கப்படும். உட்கார வைத்து இருவரையும் ஒன்று சேர்த்து ஆரத்தி எடுக்கப்படும். மோதிரங்கள் பரிமாறப்படும். மாப்பிள்ளையின் சகோதரிக்கும், பெண்ணின் சகோதரிக்கும் மோதிரங்கள்

அணியப்படும். பின்னர் மாப்பிள்ளை சபையில் வந்து உட்கார்ந்ததும் உணவு பரிமாறப்படும். மாப்பிள்ளைக்கு விசேட கவனிப்புக்கள் இடம்பெறும். விசேட கம்பளி விரிப்பில்- உட்கார வைத்தல் - விசேட உணவு வகைகள் வழங்கல் என்பன இடம் பெறும்.

பெண்வீட்டில், மாப்பிள்ளை வருவதற்கு முன், பெண்ணை மேடையில் உட்கார வைத்து, நெருங்கிய உறவினர்கள் பெண்ணின் கைகளில் மணம்பூசி அன்பளிப்புக்கள் வழங்குவர். இதனை 'மருதோன்றிக்கு வைத்தல்' எனப்படும்.

பெண்வீட்டில் ஏதும் குறைபாடுகள் நடப்பின் அவற்றை மாப்பிள்ளை வீட்டார் நுணுக்கமாக அவதானிப்பர். விசேடமாக பெண்கள் குறைபிடிப்பதிலேயே முன்நிற்பர். காரணம் மறுநாள் 'பெண் கூட்டி வரப்படும்' போது அவர்களும் அவ்வாறே நடந்து கொள்வதற்காக மிகவும் கவனமாக இருப்பர்.

திருமணம் முடிந்த மறுநாள் காலை பெண்வீட்டில் 'காலைச் சாப்பாடு' விசேடமாக இருக்கும். இவ்விருந்தில் பங்குபெற மாப்பிள்ளை வீட்டாருக்கும் அழைப்பு விடுக்கப்படும். இதனை 'பிட்டுக்கு அழைத்தல்' எனப்படும். இவ்வைபவத்தில் 'பகிடி' நிகழ்ச்சிகளும் இடம்பெறும். மாப்பிள்ளை தமக்குரிய கம்பளி விரிப்பில் உட்காருவார். விரிப்புக்குக் கீழ் வேடிக்கைக்காக குண்டூசி, அல்லது சத்தம் கேட்பதற்காக பொரிக்கப்பட்ட பப்படம் என்பன வைக்கப்படும். இல்லாவிட்டால் ஏதாவது றப்பர் பொருட்களால் இனிப்புப் பண்டங்கள் செய்து வைக்கப் பட்டிருக்கும். மாப்பிள்ளை வாயில் போட்டு சப்பிச் சப்பி இருக்கவேண்டியதுதான். சில வேளைகளில் கோப்பியில் உப்பு கலக்கப்பட்டிருக்கும். எனவே எல்லா நடவடிக்கைகளிலும் மாப்பிள்ளை கவனமாக நடக்க முயற்சிப்பார். பகிடிகள் இருதரப்பிலும் மச்சான் மச்சாள், முறையினருக்குள்ளேயே நடைபெறும். மஞ்சல் கலந்த சாயத் தண்ணீரைத் தெளித்துக் கொள்வது ஆரம்பகாலத்தில் வழக்கமாகவே இருந்துவந்துள்ளது.

மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண் வருதல் பெரும்பாலும் இரவு காலத்திலேயே நடக்கும். முதல் நாள் பெண் வீட்டில் நடந்த குறைகளுக்கு, உதாரணமாக மாப்பிள்ளை வீட்டாருக்கு உணவு வழங்கத் தாமதமாயிருந்தால், பதிலுக்குப் பதிலாக மாப்பிள்ளை வீட்டிலும் தாமதஞ் செய்யப்படும்.

அடுத்த நாள் முதல், ஐந்து நாட்களுக்கு பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை தமது மைத்துனருடன், தனது வீட்டுக்கு வந்து போவார். அவ்வாறு போகும்போது பெண்ணுக்கு சாரிகள் கொண்டு போகப்படும்.

ஐந்தாம் அல்லது ஏழாம் நாள் மாப்பிள்ளை தமதுதொழிலுக்குப் புறப்படுவார். இரண்டு நாட்களில் அல்லது ஒரு வாரத்துள் திரும்பி வருவார்.வரும்போது பெண்ணின் உறவினர்களுட்பட பெண்வீட்டாருக்கு உடைகள் மற்றும் உணவுப் பொருட்கள், பழ வகைகள் என்பவற்றோடு திரும்புவார். இதனை 'மடிமாங்கா' என்றழைக்கப்படும். தனது முழுச் செலவில் விருந்து வைப்பார். இதனையே 'வொலிமா' அல்லது 'பிலால்' சாப்பாடு என்று சொல்லப்படும். மறுநாள் மாப்பிள்ளை வீட்டிலும் விருந்து நடைபெறும். இம்முறை பெண், மாப்பிள்ளை வீட்டில் மூன்று நாட்கள் தங்குவார்.மாப்பிள்ளை வீட்டிலிருந்து போகும்போது பள்ளிவாசலுக்கோ ஸியாரத்தடிக்கோ போய்வருதல் வழக்கமாகும். இத்துடன் கல்யாண வைபவங்கள் நிறைவுபெறும். தொடர்ந்து உறவினர் வீடுகளில் இருவருக்கும் விருந்துகள் கொடுக்கப்படும். உறவினர் வீடுகளில் நடைபெறும் வைபவங்களில் புதுமணத் தம்பதிகளுக்கு விசேட கவனிப்புக்கள் இடம்பெறும்.

மிகச் சமீபகாலம் வரை திருமணச் சம்பிரதாயங்கள் இவ்வாறே நடைபெற்று வந்தன. சில கிராமங்களில் இன்றும் இவ்வாறே நடைபெறுகின்றன. சனத்தொகைப் பெருக்கம், நேரமின்மை, பொருளாதாரத் தாக்கம் என்பனவற்றினால் சம்பிரதாயங்கள் சுருங்கி இருசாராரும் ஒரே விருந்துடன் திருமணச் சடங்குகளை முடித்துக் கொள்ளும் நிலைக்கு இப்போது ஆளாகியுள்ளனர்.

### வீடும், குடும்பமும்

இம்மாவட்ட வீடுகள் பெரிய கல்வீடுகளாகவும் இடையிடையே குடிசை வீடுகளாகவும் இருப்பதை அவதானிக்கலாம். கருங்கல், செங்கல், கபுக்கல் என்பன இம்மாவட்டத்தில் தாராளமாகக் கிடைக்கின்றன. களிமண், மணல், சுண்ணாம்பு என்பனவும் இலேசாகப் பெறக்கூடியனவாக இருக்கின்றன. தென்னை மரம், பலாமரம் உட்பட வீடுகளுக்கான கம்புத் தேவைகளையும் எளிதாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளன. வீடுகள்

அமைக்கப்படும் போது முக்கியமாக இரண்டு நோக்கங்களை மனதிலே கொண்டனர்.

1. கூட்டுக் குடும்பம்
2. பலபேர் உட்கார்ந்து விருந்து சாப்பிடக்கூடிய வசதி

இவ்விரு தேவைகளுக்காகவே வீடுகள் பெரிதாக அமைக்கப்பட்டன. திருமணத்தின் பின் பெண்வீட்டிலேயே மாப்பிள்ளை தங்குவார். தமது பெண் மக்களுக்கே வீடுகளை அல்லது வீட்டின் பங்குகளைக் கொடுப்பர். மாப்பிள்ளை தனது வீட்டுக்குப் பெண்ணைக் கூட்டிச் சென்று குடும்பம் நடத்த பெண்ணின் தகப்பன் விரும்பமாட்டார். இன்றும் ஒரு வீட்டில் மூன்று நான்கு குடும்பங்கள் சேர்ந்திருப்பதைக் காணலாம். சீதனத்தோடு வீடு கொடுக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

ஒருவர் வீடுகட்டும்போது வெளிவராந்தாவை அடுத்துவரும் சாலையை மிகவும் விசாலமானதாகவே அமைப்பார். பலபேர் ஒரே நேரத்தில் உட்கார்ந்து உணவருந்தக்கூடியவாறு இருக்க வேண்டுமென்பதே காரணமாகும். சிலவேளைகளில் போட்டிக்கும் வீடுகள் அமையும். ஒருவர் முன்னூறு பேருக்கு - 50 சஹனுக்கு - வசதியாக அமைத்தால், மற்றவர் தனது வீட்டை அறுநூறு பேருக்கு - 100 சஹனுக்கு வசதியாக அமைக்கும் மனப்பாங்கு இருந்து வந்தது. இது அவர்களின் விருந்தோம்பும் பண்பைக் காட்டுகிறது.

சில வீடுகளில் தனித்தனி மரங்களைச் சீராக்கி 'கீழ்கம்புகளாக' போடப்பட்டுள்ளதையும், மரவேலைப்பாடுகள், தகர வேலைப்பாடுகள் என்பன செதுக்கப்பட்டுள்ளதையும் காணலாம். வீட்டுக் கூரையின் மத்திய பகுதி உயர்ந்ததாகவும் மேல் வீடு ஒரே கூரையின் கீழ் உள்ளே அமைந்திருப்பதையும் காணலாம். கரையோர வீடுகள் போர்த்துக்கீக, ஒல்லாந்தர்கால வடிவமைப்புக்களோடிருப்பதையும் காணலாம். குறைந்த வருமானமுள்ளவர்களின் கிடுகு வீடுகள், சிறுகற்கள், மண், வரிச்சு என்பவற்றால் அமைக்கப்பட்டதாக இருக்கின்றன.

குடும்பப் பெயர்களைக் கொண்டு வீடுகள் அறிமுகஞ் செய்யப்படுகின்றன. கிராமத்திலே ஒருவர் வகித்த பதவிகளைக் கொண்டும், தொழில்களைக் கொண்டும் சுருக்கமான விலாசங்களைக் கொண்டும் இவைகள் 'பட்டப்பெயர்களாயின'.

"சானானக் கானா வீடு", "சூனா ஈனா வீடு", "ஈனமானா வீடு" "ஒபிஸர் வீடு", "லெப்பை வீடு", "மத்திச்சம் வீடு", "குழி வீடு" "மலைவீடு" என்பவற்றை உதாரணத்துக்கு இங்கு குறிக்கலாம். இவ்வாறு அழைக்கும் முறை இன்று வரை இருந்து வருகிறது.

**மஸ்ஜிதுகளின் முக்கியத்துவம்:-** நோன்பு, பித்ரா, பெருநாள்கள், கந்தூரி வைபவங்கள்.

கிராமத்தின் சகல பொதுக் கிரியைகளும் மஸ்ஜித்களை மையமாக வைத்தே நடைபெறுகின்றன. அங்கே ஐவேளைத் தொழுகையின்போதும், வாராந்த ஜும்ஆ தினங்களிலும், விசேட மாதங்களிலும் மக்கள் சந்தித்துக் கொள்ள வாய்ப்பேற்படுகிறது.

சில கிராமங்களில் ஒரு ஜும்ஆ பள்ளியும், பல ஊர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஜும்ஆக்களும் நடைபெறுகின்றன. ஐவேளைத் தொழுகைகளுக்கும், தராவீஹ் முதலான தொழுகைகளுக்கும் வசதியாக ஏனைய தக்கியாக்கள் அமைந்துள்ளன. அரசாங்கப் பள்ளிக் கூடங்களில் கூட தொழுகைக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஓதல் பள்ளிக் கூடங்கள் மாத்திரமல்லாது, அறபு மத்ரஸாக்களும் இருக்கின்றன. மேல் மாகாணத்திலே முதன் முதல் அமையப்பெற்ற மதரஸா இன்று வரை மல்வானையில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இது ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு மேலானது.

ஊர் நிர்வாகிகளை 'மத்திச்சம்மார்கள்' என்றழைப்பர். இவர்கள் ஊரின் சகல கருமங்களிலும் பங்கெடுப்பர். ஏதும் பிரச்சினைகள் வரும்போது இவர்கள் கூடி முடிவெடுப்பர். இவர்களின் தீர்ப்புப் படி நடந்து கொள்ள ஊர்மக்கள் சித்தமாயிருப்பர். பள்ளிவாசலை மையமாக வைத்தே மக்கள் வாழ்ந்தனர். யாரும் சரீஅத்துக்கு மாறாக நடந்து கொள்ளும் போது பள்ளிவாசலில் விசாரிக்கப்பட்டனர். மேலும் குடும்பப் பிணக்குகள், கொடுக்கல் வாங்கல்கள், காணிப்பிரச்சினைகளும் விசாரிக்கப்பட்டு சமாதானப்படுத்தப்பட்டனர். சிறு குற்றங்களுக்கு எண்ணெய் வழங்குதல், துப்பரவு செய்தல், காணிக்கைசெலுத்துதல் போன்ற தண்டனைகளும் வழங்கப்பட்டன. விபசாரம், சூதாடுதல், மதுபானப் பாவனை என்ற பாரிய குற்றங்கள் புரிபவர்களை சமுதாயத்திலிருந்து குறிப்பிட்ட காலத்துக்கு ஒதுக்கிவைக்கும்

தண்டனையும் வழங்கப்படுகிறது. சில ஊர்களில் தொழாதவர்களுக்கும் தண்டனை வழங்கப்படுகிறது.

சில ஊர்களில் கல்யாண சம்பந்தங்களையும் கல்யாணத் தினத்தையும் ஒரு மாதத்துக்கு முன் ஊர் பள்ளிவாசலுக்கு அறிவிக்கப்பட்டு, அங்கே உரிய அறிவித்தல் பலகையில் எழுதி ஒட்டப்படும். இதன் மூலம் ஒரே தினத்தில் பல திருமணங்கள் நடைபெறுவதையும், ஏற்கனவே மாப்பிள்ளை பிரச்சினைகளுக்குட்பட்டவரா? இல்லையா என்பதையும் அறியக்கூடியதாக இருக்கும். ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு திருமணச் சம்பந்தம் நடைபெறுவதாயின், விசேஷமாக, மணமகன் தன்னைப்பற்றிய சுய விபரத்தை பெண் வீட்டுக்குரிய பள்ளிவாசலுக்கு அறிவிக்க வேண்டும் என்ற நியதியும் இருந்து வருகிறது.

ஆரம்ப காலத்தில், ஜும்ஆ தினத்துக்கு முதல் நாள் வியாழக்கிழமை அஸர் தொழுகையோடு தமது வியாபாரத் தலங்கள் மூடப்பட்டு, ஜும்ஆ தினத்தின் அஸருக்குப் பின் மீண்டும் திறக்கப்பட்டது. இப்போது ஜும்ஆ தினத்தில் மாத்திரம் மூடப்படுகிறது.

வருடத்தின் எல்லா மாதங்களிலும் இரவு காலத்தில் பள்ளிவாசல்களில் விசேஷங்கள் நடைபெறும். குறிப்பாக றபியுல் அவ்வல், றபியுல் ஆகிர், முஹர்ரம் மாதங்களை விசேடமாகக் கூறலாம். முதல் பத்து நாட்களிலும் அல்லது பன்னிரண்டு தினங்களிலும் மௌலுதுகள் ஓதப்படும். இறுதித் தினத்தில் பகலில் கந்தூரிகளும் இடம்பெறும். சில ஊர்களில் ஜும்ஆ தினத்தில் காலை வேளையில் திக்ரு மஜ்லிசு நடைபெறும். வெள்ளிக்கிழமை இரவுகளில் மௌலூது ஓதல் கிரமமாக நடைபெறும். ஊர் மட்டக் கந்தூரிகளுக்குப் புறம்பாக, இம்மாவட்டத்தில், பல பெரிய கந்தூரி வைபவங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

i. பூகொடை
ii. கஹட்டோவிட்ட
iii. பலஹத்துறை

ஆகிய ஊர்களில் இலங்கையின் பல ஊர்களிலிருந்தும் மக்கள் கலந்து கொள்ளும் கந்தூரி வைபவங்கள் நடைபெறுகின்றன. இவ்வைபவங்களுக்கு மக்கள் தமது சுக துக்கங்களுக்காக

நேர்ச்சைகள் வைத்து ஆடு, கோழி, அரிசி, பணம் என்பன அன்பளிப்புச் செய்வர்.

இப்பொழுது எல்லா ஊர்களிலும் றபியுல் அவ்வல் மாதம் மீலாத் விழாக்கள் சிறப்பாக நடைபெறுவதைக்காணக்கூடியதாக இருக்கிறது. பல்வேறு வகைப் போட்டிகளும் மார்க்கப் பிரசங்கங்களும், சிரமதானங்களும், இலவச கத்னா வைபவங்களும் பரிசுகள் வழங்கலும் இவ்வைபவங்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

நோன்பு காலம் விசேஷமாக அனுட்டிக்கப்படுகிறது. பள்ளிவாசல்களில் மக்கள் நிரம்பிவழியும்; எந்நேரமும் குர்ஆன் ஓதும் சத்தம் கேட்டவண்ணமிருக்கும். நோன்பு பத்தாம் நாள் ரொட்டி சுட்டுக் கொடுக்கப்படும். தராவீஹ் தொழுகையின் பின் ஹிஸ்பு, வித்ரியா ஓதல் என்பன இடம்பெறும். நோன்பு 15ஆம் நாள் பெண்கள் தலைப்பாத்திஹா ஓதி 'மஞ்சள்' சோறு சமைப்பர். இதேபோல் 27ம் நாளிலும் பலகாரங்கள் சுடப்பட்டு பள்ளிவாசலுக்கும் உறவினர்களுக்கும் வழங்கப்படும்.

'பித்ரா' க் கொடுப்பது வசதியுள்ள ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடமையாகும். பெருநாள் இரவிலும், பெருநாள் தினத்திலும், தானும் தனது குடும்பத்தவர்களும் சாப்பிட்டு மீதமுள்ளதை தருமஞ் செய்தல் என்பது கட்டாயமாகும். இங்குள்ள சில ஊர்களில் இத்தர்மம் மிகவும் சிறப்பாக நிறை வேற்றப்படுகிறது.

நோன்பு 27ஆம் நாள் முதல், தலைக்கு இரண்டு 'முத்து' - இப்போது இரண்டு கொத்துக்கள் நிறைத்து ஒவ்வொருவரும் கொடுக்கலாம். குடும்பத்திலுள்ளவர்கள் இவ்வாறு பள்ளிவாசலுக்கு கொடுத்து விடுவர். இறுதி நாளன்று பெருநாள் இரவு, பள்ளிவாசலில் ஊர்மக்களுக்கு 3 கொத்து வீதம் இந்த அரிசியை பள்ளிவாசலில் திருப்பி பெறலாம். ஆனால் பித்ராக் கொடுப்பவர்கள்தான் அதிகமாக இருக்கும். எடுப்பவர்கள் குறைவாயிருப்பர். வசதியற்றவர்கள் தமது குடும்பத்தவர்களின் எண்ணிக்கைக்கு அரிசியைப் பெற்றுக்கொள்வர். அவ்வாறு பெறும்போது, தமக்கும் பித்ரா கடமையாகிறது. எனவே அவரும் இரண்டு கொத்து வீதம் தமது கடமையை நிறைவேற்றிவிட்டு, மீதி அரிசியைக் கொண்டு செல்வர்.

தொடர்ந்து வரும் பெருநாள் இரவும், பெருநாள் தினமும் சந்தோஷமாக இருக்கும். இரவு பூராவும் மக்கள் பள்ளிவாசலில் நன்மையான கருமங்களில் ஈடுபடுவர். சுபஹுத் தொழுகையின் பின் வழங்கப்படுகின்ற ஈச்சம்பழத்தைச் சாப்பிடுவதன் மூலம் நோன்பை நிறைவு செய்து கொள்வர். பெருநாள் தொழுகையின் பின், ஒருவரை ஒருவர் முஸாபுஹாச் செய்தல், மையவாடிகளைத் தரிசித்தல், உறவினர்களைக் காணச் செல்லல் என்பவற்றோடு பெருநாள் நிறைவு பெறும். சிறுபிள்ளைகளுக்கு பெருநாள் காசு கொடுத்தல் எல்லா ஊர்களிலும் இருந்து வருகிறது. இவ்வாறே ஹஜ்ஜுப் பெருநாளும் கொண்டாடப்படுகிறது. ஆடு, மாடுகள் அறுக்கப்பட்டு குர்பான் கொடுக்கப்படும். இது ஹஜ்ஜுப் பெருநாளில் விசேட இடம் வகிக்கிறது. ஊர்மக்கள் அனைவருக்கும் பங்கீடு செய்தல் சிறப்பானது.

### பெண்களின் வாழ்க்கை

பர்தா உடையின்றிப் பெண்கள் எவரும் வெளியில் செல்வதில்லை. வாகனங்களில் போகும் போது கூட கார்களை மறைத்துச் செல்வது வழக்கமாக இருந்தது. இப்போது பர்தா உடை பேணப்படுகிறது. தமது கணவர் மௌத்தானபோது 'இத்தா' காலத்தில் தனியே மறைத்து வைக்கப்படுகிறார்கள். நெருங்கிய உறவினரான ஆண்களைத் தவிர, பிற ஆண்களைப் பார்க்கக் கூடாது எனும் பண்பு உறுதியாக கடைப்பிடிக்கப்படுகிறது.

பெண்கள் மிகச் சமீபகாலமாகத்தான் வீட்டுக்கு வெளியே கல்வி கற்கச் செல்கின்றனர். இலங்கையின் பெண்களுக்கான முதலாவது அறபிக் கலாசாலை. இம்மாவட்டத்திலேதான் கல்எலிய எனுமிடத்தில் உருவானது. இங்கு கல்வி கற்ற நூற்றுக்கணக்கான மௌலவியாக்கள் நாட்டின் பல பாகங்களிலும் சேவையாற்றுகின்றனர்.

'ஆசூறா' மாதத்தில் முற்று முழுக்க பெண்கள் தமது சொந்த விழாவாக மஞ்சற் சோறு வைபவத்தைக் கொண்டாடுவார்கள். தலைப்பாத்திஹா ஓதப்பட்டு பூப்பந்தல் அமைக்கப்பட்டு - மஞ்சற்சோறு விருந்து நடைபெறும். பூப்பந்தல் தலைக்கு மேல் கட்டப்பட்டிருக்கும். பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் அதிற் தொங்கவிடப்பட்டிருக்கும். குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், உட்கார்ந்திருக்கும் பெண்கள் உயரப் பாய்ந்து, தமக்கு நேரே

உள்ள பொருட்களை பறித்தெடுப்பர். அது அவர்களுக்கே சொந்தமாகும். ஊரில் ஏற்படும் மரண வீடுகளுக்கு 40 நாட்களுள் தவறாது ஸலாம் சொல்லப் போவது பெண்களின் முக்கிய வழக்கமாகும்.

### மரணச் சடங்குகள்

மரணித்தவர்களை காலந்தாழ்த்தாது நல்லடக்கஞ் செய்தல் கட்டாயமாகும். மரண வேளையில் சுற்றத்தவர் சூழ இருந்து குர்ஆன் ஓதல், கலிமா மொழிதல் நடைபெறும். அடுத்தநாள் இறுதிக் கிரியை நடைபெறுவதானால், அன்றிரவு பூராவும் உறவினர்களும், பக்கத்தில் வாழ்பவர்களும் விழித்திருப்பர். சில வீடுகளில் 'மய்யத்துப் புலம்பல்' காவியங்கள் வாசிக்கப்படும். சில ஊர்களில் குடும்ப மையவாடிகளுமிருக்கும்.

மரண வீட்டில் மூன்று நாட்களுக்கு சமையல் வேலை இருக்காது. தேனீர் தயாரிப்பினும் வீட்டுக்கு வெளியேதான் செய்வர். தமது உறவினர்கள் வீட்டிலிருந்தும், பக்கத்து வீடுகளிலிருந்தும் குறிப்பிட்ட நாட்களுக்கான உணவு வசதிகள் தயாரித்துக் கொடுக்கப்படும். மூன்றாம் நாள் முதல் 40ம் நாள் வரை இறந்தவருக்கான பிராத்தனைகள் நடைபெறும். வீட்டில் காலையும் மாலையும் தவறாது யாஸீன் ஓதப்படும்.

### பொழுது போக்குகள்

அதிகமானோர் வியாபாரத்திலீடுபட்டுள்ளமையால் இவ்வாறான பொழுது போக்குவதற்கான நேரமில்லாமலிருக்கும். சிறு பராயத்தில் விளையாடப்படுகின்ற கிளித்தட்டுப் பாய்தல், சடுகுடு அடித்தல், எல்லே விளையாட்டுக்கள் இவற்றுள் அடங்கும். ஊர்க் கந்தூரி நாட்களும், பெருநாள் தினங்களும் தான் பெரும்பான்மையோருக்கு ஓய்வு நாட்களாக இருக்கும். இங்கு நடைபெறும் கருமங்களில் முக்கிய பங்கு கொள்வதும், சீனடி விளையாட்டு, பதம் படித்தல் என்பவற்றோடு தொடர்பு கொள்வதும்பொழுதுபோக்காகக் கருதினர். ஒரு காலத்தில் கொடி ஏற்றல், கூடு கொண்டு செல்லல், புலி வேஷம் போடுதல் என்பனவும் பொழுது போக்காக இருந்தன.

### மறைந்தாலும், மறந்து போகா மரபுகள்

- பட்டுச் சாரமும், மரீனா பட்டியும்
- மறுமணஞ் செய்தலும் சூரத்துத் தொப்பியும்

- ஒடுக்கத்துப் புதனும் கடைக் கந்தூரியும்
- பக்கிக் கரத்தையும் ஈரோட்டு வியாபாரமும்
- குருத்தோலைத்தோரணமும் துருக்கித் தொப்பியும்
- காலையில் குளித்தலும் கடைகளைத் திறத்தலும்
  காணாவிடினும் கண்டவர் உண்டு.
- பலநாள் பட்டினி, பசியோடிருப்பினும்
  'என்ன செய்திகள்' என்று கேட்பின் ஸலாத்துடன்
  எல்லாம் நல்ல செய்திகள் என்றே சொல்லும் மரபினர்
  எங்கும் இருப்பதை இங்கே காணலாம்.

*தகவல்:* ஜனாப் எம். எச். எம். யாஸீன் - திஹாரிய
டாக்டர் எம். எம். ஏ. மன்ஸூர் - மல்வானை
ஜனாப் ஏ. எம். எம். நயீம் - ஓய்வு பெற்ற அதிபர்,
குமாரிமுல்ல, பூகொட..
ஹாஜியானி, முபீதா உம்மா அகமது அப்துல் காதர்
- ஓய்வு பெற்ற ஆசிரியை, மல்வானை

## தாலாட்டுப் பாடல்கள்

ஆராரோ, ஆராரோ, ஆராரோ, ஆராரோ
கூடப்பிறந்த குடி தலைக்கு வந்த கண்ணே
செல்ல மவளுக்கு கண்ணே நீ கண்மணியே நித்திரை செய்
பேரால் பெரிய மவள் பேர் வழங்க வந்த மவள்
செல்ல மவளுக்கு என் கண்ணே கண்மணியே நீ உறங்கு.

ஆராரோ, ஆராரோ, ஆராரோ, ஆராரோ
அள்ளாட காவலிலே வாப்பா ஒரு ஆபத்தும் வராமல்
முத்தேர் முழிப் பொருள வையாணி முத்து மாணிக்கம்
செல்ல மவளுக்கு என் கண்ணே நீ கண்மணியே
பேரால் பெரிய மவளே கண்ணே நீ பேர் வழங்க வந்த மவள்.

அட்டலங்கா புட்டலங்கா
சாதிக்கோட மாதளங்கா
நெல்லரிசி குத்தி குத்தி
தரணி மேலே ஏத்தியேத்தி
எல்லாந் திண்ட கள்ளமாமி
அன்னத்தா பொன்னத்தா

பூவத்தா பொருளத்தா
ஆளத்தா அடிமையத்தா
அள்ளா நாயனே உன்னுடைய
வாழ்வையும் பறக்கத்தையும் தா.

ஆராரோ ஆரிவரோ ஆரு பெத்த பாலகனோ
ஆரடித்து நீ அழுதாய் அடித்தாரைச் சொல்லியழு
மாமியடித்தாரோ மருதோன்றிக் கொப்பாலே
சாச்சி அடித்தாவோ சண்டித் தடியாலே
தாயார் அடித்தாவோ தயவுள்ள கையாலே
பேத்தி அடித்தாவோ பெலப்பப்பழம் கொப்பாலே
பேரன் அடித்தாரோ பேரமரக் கொப்பாலே
மச்சான் அடித்தாரோ மாதுளம் கொப்பாலே
மாமன் அடித்தாரோ மாங்கப்பழக் கொப்பாலே
ஆரடித்து நீயழுதாய் அடித்தாரைச் சொல்லியழு.

بسم الله الرحمن الرحيم . هجرة ايرة ير نوت تنوت انفنام اند

سوال ماسم فنالام تلك شينا كور صي اتكار تتل جينت
ومكا متلركم قاسيم لعتي اليمر كار ما فضلك ميلا فد يوزل
اركم . سليما لوتي ادي ملكض بنمف ناجيا وي فننفتر كضنج
فن مهراك نكاح مد ير عليا نكضريل فن دي مشان شيخ منصر
ادي ملن شيخ عبد عرب صاحب اور كض كد ك فرنتي
شيتنما وت حكم روفاي يضنج نافت كد ير كر ويد لم
حتو د تاليم ار وا اش فن وض نكيال روفاي مفتي ضد

انت شينتم كضل مافضني فت كنب ركم روفاي

يضنج نيل متم شيلنم كض مافضنم فنم كيد فوي

كبرقي نالوم امين . اثرك ارحيم شاضيج شن تمف وداني
قاسيم لبي متشم مبل فد شاضيج فقير لبي حسن لبي
مبل فد شاضيج اوسنالبي قادر صاحب

شيخ عبد الرب ابن محمد عمر ين صاحب

قاسم لبي


[illegible]

[illegible]


انت نكاح سيد ميرالبي شن مركاري
وكيلاك يضنني ميكا افد حلم اوسنالبي
حسن محمد لبي

1882 [illegible]

[illegible] 7



✤ குறியீடுகளுடன் கூடிய, அறபுத் தமிழ் - விவாகப்பதிவின் பிரதி. தற்காலத்தில் 'காவின்' எனச்சொல்லப்படும் சொல், அக்காலத்தில் 'கடுத்தம்' எனச் சொல்லப்பட்டது.




B. [illegible] 8 No. 10

بسم الله الرحمن الرحيم [illegible]

[illegible]

احمد علي [illegible]

[illegible]



இப்பிரதி, 1928.01.09 ந் தேதி பதியப்பெற்ற, குறியீடுகளற்ற அறபுத் தமிழ் விவாகப் பதிவுப் பிரதியாகும்.

அவிசாவளைக்கடுத்த, நாபாவளையிலிருந்து, களனியாற்று வழியால், கட்டுமரத் தெப்பத்தில், மள்வானைக்கு மணவாளராகவந்த, மர்ஹூம் ஜனாப் என். எம். மஹ்றூம் ஆலிம் அவர்களது விவாகப் பதிவுப் பிரதியாகும்.

# 6

# கல்வியும், கலாசார நிலையங்களும்

எம். எச். எம். அமீன்
எம். எச். எம். புஹாரி

## ஆரம்ப காலக் கல்வி வரலாறு

இறைதூதரின் காலத்திலேயே இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமாகியிருக்கிறது என்பதற்கு இப்னு ஷஹ்ரயாரின் அஜாயிபுல் ஹிந்த் என்ற நூல் சான்றுபகர்கின்றது. இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒருவனுக்கு கல்வி அறிவு மிக அவசியமானதாகும் என்ற வகையில் அன்றிருந்தே இங்கிருந்த முஸ்லிம்கள் கல்வியறிவுடையோராக இருந்திருத்தல் வேண்டும். "என்னைப்பற்றி ஒரு வசனம் தெரிந்திருப்பினும் அதனைப் பிறருக்கு கற்றுக்கொடுங்கள்" என்ற நபிமொழியை மிக ஆழமாகப் புரிந்திருந்த ஆரம்பகால முஸ்லிம்கள் கண்டிப்பாக இஸ்லாத்தின் கருத்துக்களை இங்கிருந்தோருக்கு போதித்துக்கொடுத்திருக்க முடியும் என ஊகிக்கலாம். எனவே செவி வழியிலான கல்விப் போதனை முறைகள் கி.பி. 7,8 ஆம் நூற்றாண்டில் இருந்தே இலங்கை முஸ்லிம்களிடம் இருந்திருக்க முடியும். குறித்த பாடத்திட்ட முறையொன்று இல்லாவிடினும், ஒரு முஸ்லிமின் அன்றாட பொதுக் கடமையினை நிறைவேற்றுவதற்குப் போதுமான அடிப்படை அறிவும், ஈமான், இஸ்லாம், சுத்தம் பற்றிய அறிவு செவி வழி மூலமும், மனனமிடல் மூலமும் இக்காலத்தில் இடம்பெற்றிருக்க முடியும். இப்போதைய கம்பஹ மாவட்டம் 1979 வரை அன்றைய கொழும்பு மாவட்டத்தின் ஒரு பகுதி என்ற வகையிலும் இம்மாவட்டத்திலும் இதே கல்வி நிலையும், முறையுமே இடம் பெற்றிருக்க முடியும்.

உமையாக்காலமான கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் உமையாக் கலீபா மர்வான் போன்றோரின் துன்பங்களால் கொடுமைப்

படுத்தப் பட்ட பனூ ஹாசிம்களான நபியின் பரம்பரையினர் அரபு தீபகற்பத்தை விட்டு வெளியேறிச் சென்றனர். அவர்களுள் சிலர் இலங்கையின் பல பாகங்களுக்கும், கொழும்பிற்கும் வந்ததாக டெனன்ட் என்பவர் தனது 'இலங்கை' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வந்தோர் மௌலானாக்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் தாம் இருந்த பகுதிகளில் மதச் சார்பான இஸ்லாமியப் போதனைகளை நடாத்தி வந்திருக்கின்றனர். எனவே கம்பஹ மாவட்டம் உள்டங்கிய பழைய கொழும்பு மாவட்டத்தில் மௌலானமார்களின் மதக்கல்விப் போதனைகள் இடம் பெற்றிருக்க முடியும்.

கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் பக்தாதில் இருந்து மத போதனைக்கு என அனுப்பப்பட்ட காலித் இப்னு அபூ பகாயா என்பவரின் ஹிஜ்ரி 317 என கூபி எழுத்தில் பொறிக்கப்பட்ட ஞாபகார்தக் கல்லொன்று கொழும்பு மையவாடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இத்தகவலை சேர் அலக்சான்டர் ஜோன்ஸ்ரன் பக்தாத்தில் பெற்றதாக குறிப்பிடுகிறார். கி. பி. 877ல் கதீபுல் பஃதாதி என்பவர் அப்துர் ரஹ்மான் பின் ஹாதிம் மூஸா அஸ்ஸைலானி என்ற அறிஞரை சந்தித்ததாக குறிப்பிடுகிறார். ஸைலானி என அவருடைய பெயருக்கு பின்னால் இணைக்கப்பட்டிருப்பதால் அவர் இலங்கையில் நீண்ட காலம் இருந்திருக்கக் கூடும். ஓர் அறிஞர் என்ற வ்கையில் அவர் இங்கு போதனைகள் நடாத்தியிருக்க முடியும். இங்கு அப்பாஸியாக் காலத்தில் (கி. பி. 813) இப்னு ஸீனாவின் மருத்துவம் மற்றும் அரிஸ்டோட்டில், பிளாட்டோ, ஈக்குளிட், கௌன் போன்றோரின் நூல்களின் அரபு மொழி பெயர்ப்புக்கள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததாக அலக்ஸாண்டர் ஜொான்ஸ்ரன் குறிப்பிடுகிறார். ஆகவே கி. பி. 09 லும் இப்பகுதியில் மதக் கல்வி முஸ்லிம்களிடம் போதிக்கப்படும் நிலை காணப்பட்டுள்ளது. அப்பாசியரின் அறிவுப் பொற்காலத்தில் இவர் இங்கு வந்தமையால் மார்க்கக் கல்வி ஞானம் மட்டுமன்றி பிற அறிவுக் கருவூலங்களையும் அவர் இங்கு கொண்டு வந்து போதித்திருக்க முடியும்.

1505 ல் போர்த்துக்கீசர் இலங்கை வரும் போது முஸ்லிம்கள் கொழும்புத் துறைமுகத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் தம் கையில் வைத்திருந்தமை மட்டுமன்றி இஸ்லாமிய அறிவும்,

தீவிர மார்க்க உணர்வும் கொண்டவர்களாக இருந்தனர். மார்க்க அறிவு பெற்றிருந்தமையால் இலங்கை முஸ்லிம்களுள் ஒருவரைக் கூட அவர்களால் மதமாற்றம் செய்ய முடியவில்லை. இதுபற்றி ஹோவ் என்பவர் 'இலங்கையில் கிறிஸ்தவ மதம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இது தவிர இங்கு அரபுத்தமிழ் காணப்பட்டதாக போர்த்துக்கீசப் படைத் தளபதி ஒட்ராடோ பர்பாஸா என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கீசர் இலங்கைவரும்போது கொழும்பு நீதிமன்றங்களில் இஸ்லாமிய சட்டங்கள் பல நடைமுறையில் இருந்திருக்கின்றன. இதுவானது அன்றைய காலத்தில் இஸ்லாமிய சட்டம் பற்றிய அறிவு காணப்பட்டிருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. போர்த்துக்கீசர் முஸ்லிம்களுக்கு கடும் நெருக்கடிகளை உண்டாக்கி, சொத்துக்களைப் பறிமுதல் செய்து, முஸ்லிம்களின் கடற்படையை சிதறியடிக்கச் செய்து மேலும் அன்று நீதிமன்றங்களில் காணப்பட்ட இஸ்லாமிய சட்டங்களையும் நீக்கிவிட்டனர். முஸ்லிம்களுக்கான கல்விவாய்ப்பும், மத்ரஸாக் கல்வி முறையும் இல்லாமல் செய்யப்பட்டன. சீ. ஏ. சந்திரபிரேம தனது "கொலபாட சமாஜய" என்ற நூலில் "16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கீசர் இலங்கையை ஆக்கிரமித்திராவிட்டால் பொருளாதார பலம் பெற்றிருந்த முஸ்லிம்களுக்கு இந்த நாடு சொந்தமாகி ஒரு சிங்களவன் கூட இல்லாத நிலைக்குச் சென்றிருக்கும்" எனக் குறிப்பிடுகிறார்.

டச்சுக்காரர் (கி. பி. 1658) தம் ஆட்சியில் முஸ்லிம்களுக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமையால் இஸ்லாமிய சட்டங்களையும் நடைமுறைகளையும் மீண்டும் அமுல்படுத்த வாய்ப்பேற்பட்டது. இதனால் முஸ்லிம்களிடம் மீண்டும் இஸ்லாமிய சட்டம் பற்றிய அறிவும் கல்விவாய்ப்பும் வளர வாய்ப்பேற்பட்டது.

ஆங்கிலேயர்கள் 1795 முதல் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தினர். முஸ்லிம்கள் மீதான தடைகளை இவர்கள் தளர்த்தி மத உரிமையைக் கொடுத்து நடந்தமையால் இஸ்லாமிய மதம் சார்ந்த கல்வி மேலும் வளர வாய்ப்பு ஏற்பட்டது. தென்னிந்திய முஸ்லிம்களுடனான தொடர்பு இக்காலத்தில் வலுப்

பெற்றமையால் அங்கிருந்த முறைகளைத் தழுவிய மத்ரஸாக் கல்வியும், நூல்களும், பாடத்திட்டங்களும் இங்கு வர ஆரம்பித்தன. ஆங்கிலேயர் கிறிஸ்தவ மத மாற்றத்தை நோக்கமாகக் கொண்டு ஆங்கிலக் கல்வியைத் திணிக்க முற்பட்ட வேளையில் முஸ்லிம்கள் அதனைக் கடுமையாக எதிர்த்து நின்றமையால் அவர்களது கல்லூரிகளில் இணைந்து கற்ற முஸ்லிம்கள் மிக அரிதாகவே காணப்பட்டனர்.

## கம்பஹ மாவட்ட கல்வி வரலாற்றின் பொதுத் தன்மை

மிகத் தொன்மைவாய்ந்த வரலாற்றையுடைய இம்மா வட்டத்தில் 20 ஆம் நூற்றாண்டில் பாடசாலைகள் தோன்றும்வரை காணப்பட்ட கல்வி நடவடிக்கைகளில் ஒரு பொதுத் தன்மை எல்லாக் கிராமங்களிலும் காணப்படுகிறது.

இங்குள்ள எல்லாக் கிராமங்களிலும் இஸ்லாத்தின் அடிப்படைகளும், குர்ஆனும் போதிக்கப்பட்டு வந்துள்ளன. பெரும்பாலும் அவை வாய்வழியாக மட்டும் போதிக்கப்படும் நிலையே காணப்பட்டிருக்கிறது. அறபு நாடுகளிலிருந்து வந்த சூபீக்கள், மௌலானாக்கள்: தென்னிந்திய லெப்பைகளே கற்பிப்பவர்களாக இருந்திருக்கின்றனர். குர்ஆன் ஓதலுடன் சேர்த்துச் சில இடங்களில் அரபுத் தமிழும், தமிழ் மொழியும் கற்பிக்கப்பட்டுள்ளன. புராணங்கள், கதைகள், ஸீரா என்பனவும் சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளன.

அரபு எழுத்துக் கற்பித்தலின் போது ரைகால் பலகையும், அரிசியைக்காய்ச்சிப் பெறப்பட்ட ஸாஹின் மையும், மெல்லிய மரக்குச்சியால் அல்லது மூங்கிலால் செய்யப்பட்ட கலம் என்ற எழுதுகோலும் கற்பித்தல் சாதனமாகப் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. குர்ஆன் பிரதிகள் மிகக்குறைவாகக் காணப்பட்ட அக்காலங்களில் சுமார் மூன்று அல்லது மூன்றரை ஜுஸ்உ வரையும் றைஹால் பலகையில் எழுதிக் கொடுத்துப் பாடமிடச் செய்யும் முறை காணப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலிருந்து வந்த சில லெப்பைகள் தாளில் அரபு எழுத்துக்களை எழுதி ஒரு பெட்டியிலும், மாணவன் அவ்வெழுத்துக்களை மனன மிட்டபின்பு இன்னொரு பெட்டியிலும் இட்டு வைத்துக் கற்றுக் கொடுக்கும் முறையைக் கையாண்டுள்ளனர் என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

பெண்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு அவசியமான மார்க்க அடிப்படைகளும், குர்ஆன் ஓதுதலும் வீடுகளில் வைத்துப் பெற்றோரால் அல்லது மூத்த பெண்களால் அல்லது லெப்பைமார்களால் கற்பிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்களில் பெண்கள் கல்வி பற்றிய விழிப்புணர்வு 1950 களுக்குப் பின்பே ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகள் 1900 ஆண்டுக்குப் பின் தோன்றினாலும் அதற்கு முன்பிருந்தே எழுத வாசிக்கக்கூடியவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். பெரும்பாலும் எல்லா முஸ்லிம்களும் அரபு வாசிக்கக்கூடியவர்களாக இருந்து வந்துள்ளமையால் முஸ்லிம் சமூகத்தின் எழுத்தறிவு 99% என்றே குறிப்பிடவும் முடியும். இந்தியரின் கடைகளில் சிப்பந்திகளாக இருந்தவர்கள் அங்கிருந்தோரிடமிருந்து தமிழ் எழுதக் கற்றிருக்கிறார்கள். பூகொடைக் கிராமத்தில் பாடசாலை 1922ல் ஆரம்பிக் கப்பட்டிருக்கிறது. ஆனால் 1860 களில் திருமணப் பதிவுகள் அழகிய அரபுத் தமிழில் எழுதப்பட்டுவந்துள்ளன. அதன் பிரதிகள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1938ல் கல்-எலியாவில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அவ்வூரைச் சேர்ந்த ஒருவரின் 5563 இலக்கம் கொண்ட 1883ல் எழுதப்பட்ட ஒரு காணி உறுதியில் தமிழ் மொழியில் கைச்சாத்திடப்பட்டிருக் கிறது. 1900ல் எழுதப்பட்ட 18,412 இலக்கமுடைய மற்றொரு காணி உறுதியில் எட்டுப் பேர் தமிழில் கைச்சாத்திட்டிருக்கின்றனர். எனவே இம்மாவட்டத்தின் பல இடங்களில் பாடசாலைகள் தோன்ற முன்னரே எழுதக் கற்றுக் கொடுக்கும் மரபு காணப்பட்டிருக்கிறது.

## கம்பஹ மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் சுருக்க வரலாறு

கம்பஹ மாவட்டக் கல்வி வரலாற்றினைத் தெரிந்து கொள்வதற்கு, இம் மாவட்டப் பாடசாலைகளின் வரலாறு பயனளிக்கும் என்பதால் பாடசாலைப் பதிவேட்டுப் புத்தகங்களில் இருந்தும், நேர்காணல் மூலமும் பெறப்பட்ட தகவல்களை மையமாக வைத்து இப்பகுதி எழுதப்பட்டுள்ளது.

சில இடங்களில் பாடசாலை வரலாற்றோடு இணைத்து ஊரின் கல்வி வரலாறும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## மினுவாங்கொடை கல்வி வலயம்

### 1. கல்லொழுவ அல்-அமான் முஸ்லிம் மஹா வித்தியாலயம்

18ம் நூற்றாண்டிலிருந்து முஸ்லிம்கள் வாழும் இக்கிராமத்தில் குர்ஆன் ஓதல், மார்க்க அடிப்படைகளை சொல்லிக் கொடுத்தல் என்பன மட்டுமே ஆரம்ப காலங்களில் இடம்பெற்று வந்திருக்கின்றன.

1920.06.01ல் கல்லொழுவ அரசினர் முஸ்லிம் வித்தியாலயம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 1989.01.25 இல் இப்பாடசாலை கல்லொழுவ முஸ்லிம் மஹா வித்தியாலயம் என தரமுயர்த்தப்பட்டது. 1997ல் கல்லொழுவ அல்-அமான் முஸ்லிம் மஹா வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. க.பொ.த. உயர்தரக் கலைப் பிரிவு வரை வகுப்புக்கள் உள்ளன.

இங்கு சுமார் 800 மாணவர்களும், 25 ஆசியர்களும் உள்ளனர்.

### 2. கல்-எலிய அலிகார் மஹா வித்தியாலயம்

சுமார் 18ஆம் நூற்றாண்டிலிருந்து முஸ்லிம்கள் வாழும் இக்கிராமத்தில் 1938 வரை ஒரு பாடசாலை காணப்படாவிடினும் மார்க்க போதனைகள் மட்டும் இடம்பெற்று வந்திருக்கின்றன. அதே நேரம் 1850 களில் தமிழ் மொழியில் எழுதக் கூடியவர்கள் இருந்திருக்கின்றனர் என்பதற்கு சான்றாக தமிழில் கையொப்பமிடப்பட்ட காணி உறுதிகள் காணப்படுகின்றன.

இவ்வூரில் 1800 களில் வாழ்ந்த அகமது லெப்பை என்ற விஷக்கடி வைத்தியர் மிகப் பிரபல்யம் பெற்றவராவார். அவர்

தனது வைத்தியக் கலையை சந்ததியினருக்குக் கற்றுக் கொடுத்துச் சென்றமையால் இன்று அவரது நான்காவது தலைமுறையினர் அவ் வைத்தியக் கலையை ஒரு சேவையாகச் செய்து வருகின்றனர். அகமது லெப்பை என்பவரிடமிருந்து அலிமரிக்காரும், அவரிடமிருந்து மொம்மதீன் என்பவரும் அவரது பிள்ளைகளான தாஹா, தௌபீக் போன்றோரும் அதனைக் கற்று வந்தனர்.

இவ்வூரில் பாடசாலை தோன்ற முன் வசதிபடைத்தோர் வெயாங்கொட சென்மேரிஸ் கல்லூரியிலும் வேறு பல கல்லூரிகளிலும் சென்று கற்று வந்துள்ளனர். அப்படிக் கற்றவர்களுள் இவ்வூரின் முதல் வைத்தியராக A. M. மௌஜூட் (D. I. C. H, D. I. P. M. ) அவர்களும் முதல் சட்டத்தரணியாக A. H. L. A. ஸலீம அவர்களும் காணப்படுகின்றனர்.

1934ல் மர்ஹூம் ஏ. எம். காலித் ராலஹாமி அவர்களின் தலைமையில் "கல்-எலிய முஸ்லிம் சங்கம்" உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பே 1938ல் கல்-எலிய அரசினர் தமிழ் வித்தியாலயம் உருவாகக் காரணமாக அமைந்தது. அ. த. அமீர் லெப்பையின் பாரியார் ஜெய்னம்பு நாச்சியாருக்குச் சொந்தமான காணியில் 1938. மே. 02ம் திகதி முஸ்லிம் சங்கத் தலைவர் ஏ. எம். காலித் விதானையின் தலைமையில் பாடசாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. முதல் நாளன்று 70 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். முதல் மாணவன் மர்ஹூம் எம். எஸ். எம். றியால் ஆவார். முதலாவது தலைமை ஆசிரியர் நீர்கொழும்பு முன்னக்கரையைச் சேர்ந்த திரு ஜோன் ஸ்டீவன் பெர்னாண்டோ ஆவார். 1944ம் ஆண்டு அவர் ஓய்வு பெறும் வரையில் இங்கு கடமையாற்றினார். பாடசாலை ஆரம்பித்து ஓரிரு நாட்களுள் நாம்புளுவ, பஸ்யால, கஹடோவிட்ட ஆகிய இடங்களிலிருந்து வந்த மாணவர்களையும் சேர்த்து மொத்தம் 92 மாணவர்கள் காணப்பட்டனர்.

1951 - 56 காலப்பகுதியில் ஐ. எம். எஸ். எம். பழீல் மௌலானா தலைமையாசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் இப்பாடசாலை பல துறைகளிலும் அபிவிருத்தி கண்டது. 1961ல் இப்பாடசாலை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு 1967ல் ஜனாப். வெபா அதிபராக இருக்கும்போது அலிகார் மஹா வித்தியாலயம் எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1959ல் மாத்தறையைச் சேர்ந்த எம். ஏ. எம். ஸபீயுத்தீன் அவர்கள் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் 1959 செப்டம்பர் 01ம் திகதி 13 மாணவிகளைக் கொண்டு மௌலவி இப்றாஹிம் ஸாஹிப் மூலம் ஆரம்பிக்கப் பட்ட பெண்களுக்கான மகளிர் அரபுக் கல்லூரி இப்பாடசலைக்குப் பக்கத்தில் மிளிர்கின்றது.

இதுவரையில் சுமார் 30 பட்டதாரிகளை உருவாக்கிய அலிகார் மஹா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுள் ஒருவரான லுக்மான் தாலிப் பிரித்தானியா பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தை விவசாயத்துறையில் பெற்று தற்போது அவுஸ்திரேலிய குயின்ஸ்லான்ட "கிரபெத்" பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுவது இம் மகாவித்தி யாலயத்திற்கு பெருமை தருவதாக இருக்கின்றது. இங்கு 560 மாணவர்களும் 20 ஆசிரியர்களும் உள்ளனர்.

3. நாம்புளுவ பாபுஸ் ஸலாம் முஸ்லிம் வித்தியாலயம்

1760 களிலிருந்தே முஸ்லிம்கள் வாழும் இக்கிராமத்தில் ஆரம்ப காலங்களில் குர்ஆன் ஓதத் தெரிந்தோரும் அறபுத் தமிழ் வாசிக்கத் தெரிந்தோருமே காணப்பட்டனர். பிள்ளைகளுக்கு வீடுகளில் வைத்தே மார்க்கக் கல்வி புகட்டப்பட்டது. கி. பி. 1850 களுக்குப்பின் இவ்வறிவு புகட்டும் பணியை காலி, கஹடோவிட்ட முதலான வெளியூரைச் சேர்ந்த லெப்பைமார்களே செய்துவந்தனர்.

1905 - 1910 வரை தற்போதிருக்கும் பள்ளிக்கு முன்னால் சிறு கட்டடம் ஒன்றில் மார்க்க, குர்ஆன் ஓதற்கல்வி புகட்டப்பட்டு வந்துள்ளது. இது தவிர வீடுகளில் பெண்களுக்கான ஓதல், அறபுத் தமிழ் வாசித்தல் என்பன போதிக்கப்பட்டன.

1915ற்குப் பின் கல்வியின் அவசியத்தை உணர்ந்த சிலர் தமது பிள்ளைகளை வெளியூர்களுக்குப் படிக்க அனுப்பினர். பின் ஊரில் பாடசாலையொன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சில பெரியோர்களின் முயற்சியால் 1944.11.13ல் 47 மாணவர்களுடன் அரசினர் தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் ஓலைக் கட்டடமொன்றில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் அதிபராக வி. கதிரவேலு என்பவர் நியமிக்கப்பட்டார். பாடசாலை ஆரம்பித்து 07 நாட்களுள் வளர்ந்தோருக்கான

பின்னேர, இரவு வகுப்புக்கள் அதிபரால் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டன.

1949ல் சிரேஷ்ட வகுப்பான எஸ். எஸ். சி. ஆரம்பிக்கும் வரை முஸ்லிம் ஆசிரியர்கள் எவரும் இங்கு நியமனம் பெறவில்லை. 1949.08.05ல் திஹாரியைச் சேர்ந்த ஏ.எஸ் அபுல் ஹஸன் இங்கு ஆசிரிய நியமனம் பெற்றார். இவரின் காலத்தில் மதக்கல்வி, கலாச்சார விவகாரங்களில் இப்பாடசாலையில் பெரும் மறுமலர்ச்சி ஏற்படலாயிற்று. 1950 களில் சிங்களத்தை தாய் மொழியாகக் கொண்ட இரு யுவதிகள் இப்பாடசாலையில் தமிழ் மொழி மூலம் கற்று ஆசிரிய நியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு 12 ஆசிரியர்களும் 344 மாணவர்களும் காணப்படுகின்றனர்.

4. வேவல்தெனிய அல் ஹஸன் வித்தியாலயம்

இவ்வூர்வாசிகள் 1949றகு முன்னர் அயலில் காணப்பட்ட சிங்களப் பாடசாலைக்கே கற்கச் சென்றனர். வசதிபடைத்தோர் வரகாப்பொல, கல்-எலிய போன்ற இடங்களுக்கும் கல்வி கற்கச் சென்றனர். சேர் ராசிக் பரீதின் தலைமையில் இயங்கிய "சோனகர் சங்கத்தின்" கிளையொன்று இங்கு ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இதன் பயனாகத் தற்போது பள்ளிவாயில் அமைந்துள்ள இடத்தில் M.S.M. ஹம்தூன் ஸாஹிர் (கடுகன்கொல்ல) ஆசிரியர் என்பவர் 1949ல் ஓலைக் கட்டிடமொன்றில் இலவசமாகக் கற்பித்து வந்தார்.

பின்னர் மர்ஹூம் அல்ஹாஜ் M.A.M. அபுல் ஹஸன் J.P. அவர்கள் அன்பளிப்புச் செய்த காணியில் 1950.03.01ல் அரசினர் தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கொடவெல, ஹொரகஸ்மங்கட, தித்தவல்மங்கட, பெனிகல, அருக்கொட, தங்கோவிட போன்ற இடங்களில் வசித்த பிள்ளைகளையெல்லாம் அழைத்து முதல் நாளன்று 31 ஆண்களும் 21 பெண்களும் தம் பெயர்களைப் பதிந்து கொண்டனர்.

முதல் அதிபராக ஜனாப் ஸகரிய்யா என்பவர் கடமையாற்றி னார். 1976.09.03 முதல் அல்-ஹஸன் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது. க.பொ.த. (சா.த) வரை காணப்பட்ட இப்பாடசாலையில் தற்போது ஆண்டு 8 வரையே

காணப்படுகிறது. இதற்குப் பிரதான காரணம் தற்போதுள்ள போக்குவரத்து வசதிகள் காரணமாக பிள்ளைகள் அயலில் உள்ள பெரிய பாடசாலைக்குச் செல்கின்றமையாகும்.

இங்கு 06 ஆசிரியர்களும் 73 மாணவர்களும் உள்ளனர்.

5. அல்லலமுல்ல ஸாகிரா முஸ்லிம் வித்தியாலயம்.

இங்கு பாடசாலை ஆரம்பிக்க முன்னர் முஸ்லிம் மாணவர்கள், கிராமத்தில் இருந்த சிங்களப் பாடசாலைக்கும், பஸ்யால சிங்களப் பாடசாலக்கும், மற்றும் சிலர் கல்-எலிய, நாம்புளுவ முஸ்லிம் பாடசாலைகளுக்கும் சென்றனர். சிங்களமொழிப் பாடசாலையில் கல்வி கற்க விருப்பமின்மை, அயல் கிராமங்களுக்குச் செல்வதிலுள்ள போக்குவரத்துச் சிரமம், பாதுகாப்பின்மை என்பவற்றின் காரணமாக இவ்வூரில் தமிழ்மொழிப் பாடசாலையொன்றின் அவசியம் உணரப்பட்டது. இதன் பயனாக அல்ஹாஜ் மர்ஹூம் A.M.M. மஸ்ஊத் ஆலிம், மர்ஹூம் அல்ஹாஜ் M.N.M. ஸலீம், அல்ஹாஜ் A.R.M. பைஸர், ஜனாப் A.R.M. இஸ்மாயில், ஓய்வு பெற்ற அதிபர் ஜனாப் U.H. கரீம் (கல்-எலிய) ஆகியோரின் அயராத முயற்சியினால் அல்லலமுல்ல முஸ்லிம் வித்தியாலயம் 1980.01.16 இல் ஆரம்பிக்கப்பட்டது. மூன்று றூட் பள்ளிவாயில் அன்பளிப்புக் காணியில் ஓலைவேயப்பட்டு பலகையால் அடைக்கப்பட்ட கட்டிடத்திலேயே பாடசாலை சுமார் 10 வருடங்கள் இயங்கி வந்தது. 43 மாணவர்களுடன் 3 வகுப்புக்களை உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் முதல் அதிபராக A.L.A ஸமத் கடமையாற்றினார். தற்பொழுது க. பொ.த. (சா.த.) வகுப்புக்கள் வரை காணப்படுகின்றன. இதன் பெயர் 1995.03.01ம் திகதி அல்லலமுல்ல ஸாகிரா முஸ்லிம் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இங்கு 69 ஆசிரியர்களும் 179 மாணவர்களும உள்ளனர்.

## கம்பஹா கல்வி வலயம்

1. கஹடோவிட்ட அல் பத்ரியா மஹா வித்தியாலயம்
2. கஹடோவிட்ட பாலிகா வித்தியாலயம்

1650 களில் அத்தனகல்லையில் வசித்த மலையாளத்தைச் சேர்ந்த சேகு அப்துல் காதிர் லெப்பை என்பவர் கல்வியில் சிறந்து விளங்கினார். அவரது புத்திரரான தாயிமா லெப்பை என்பவரை அழைத்து கஹடோவிட்ட மக்கள் சன்மார்க்கக் கல்வி கற்றனர்

எனக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. 17ம் நூற்றாண்டில் அரபு நாடுகளிலிருந்து வந்த சேகுமார்களும், மௌலானாக்களும் இப்பகுதி மக்களுக்கு சமயக் கல்வி போதித்து வந்துள்ளனர். 1860ல் யமன் தேசத்திலிருந்து வந்த அப்துல்லாஹ் இப்னு உமர் பாதிப் மௌலானா அவர்கள் இங்கு தங்கி மக்களுக்கு சமயக் கல்வி புகட்டியுள்ளார். கையால் எழுதப்பட்ட அரபு நூல்களும் அவரிடம் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. கி.பி. 1857ல் ஷெய்கு முபாரக் மௌளலானா நாயகமவர்கள் அப்போதைய மடமையை நீக்கி கல்விக்கு முக்கியமளித்தார்.

1881ல் சேகு பாதிப் மௌலானா அவர்களால் பாதிபிய்யா தக்கியா கட்டப்பட்டு சன்மார்க்கப் போதனைகளுடன் பாடசாலைக் கல்விக்கான சில முயற்சிகளும் அன்னாரால்மேற் கொள்ளப்பட்டன. பின்னர் 1903ல் மஃதூரம் என்பவரின் அயராத முயற்சியால் கல்விக் கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் வஹபுத்தீன் ஆசிரியர் போதனை நடாத்தினார். பின்பு முஸ்தபா லெப்பை, நூஹு லெப்பை, யாழ்ப்பாணக் கந்தையா ஆசிரியர் என்பவர்களும் இங்கு போதித்தனர்.

அடுத்த கட்டமாக 1920ம் ஆண்டு மஃதூரம் ஹாஜியார், அ.லெ.மு. சஹீது லெப்பை ஆகியோரின் பெருமுயற்சியால் பாதிபிய்யா தக்கியாவோடு இணைந்த நத்ர் கந்தூரி மண்டபத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அரச பொறுப்பில் நடைபெற ஏற்பாடாயின. 1933 வரை ஆண்களுக்கு மட்டுமான பாடசாலையாக காணப்பட்டு 1933ல் கலவன் பாடசாலையாக மாற்றம் பெற்றது. அத்தோடு 1933ல் ஆங்கிலமும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. இவ்வாறு உருவான பாடசாலையே இன்று அல்-பத்ரியா மகா வித்தியாலயமாக திகழ்கின்றது. கலவன் பாடசாலை சம்பந்தமாக எழுந்த கருத்து முரண்பாட்டினால் ஆண் பாடசாலையாக மட்டுமே அது மாற்றம் பெற்றது.

1946ல் பெண்களுக்கான தனியான ஒரு பாடசாலை அவசியம் என உணரப்பட்டு பெண்களுக்கான தனியான பாடசாலை ஒன்றும் உருவாக்கப்பட்டது. இதன் முதல் அதிபராக மர்ஹூம் அல்ஹாஜ் கே. கே. காஸிம் காணப்பட்டார். இப்பாடசாலை இன்று கஹடோவிட்ட பாலிக்கா என அழைக்கப்படுகிறது.

1-13 வகுப்புக்களையுடைய அல்-பத்ரியாவில் இன்று 711 மாணவர்களும் 32 ஆசிரியர்களும் உள்ளனர். கஹடோவிட்ட

பாலிக்கா வித்தியாலயத்தில் 05 ஆசிரியர்களும் 224 மாணவிகளும் உள்ளனர்.

03. திஹாரிய அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கு "திஹாரிய முஸ்லிம் கல்விச் சங்கம்" ஒன்று காணப்பட்டது. நூர் ஸாஹிரா பாடசாலை என்ற பெயரில் 1902 ஆம் ஆண்டில் இச்சங்கம் பாடசாலை ஒன்றை நடாத்தி வந்துள்ளது. செ.ம. ஆவுலெப்பை மரைக்கார் மத்திச்சம் அவர்கள் வழங்கிய காணியில் 1902 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ம் திகதி இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது குர்ஆன், தமிழ், கணிதம், சிறுமியர்களுக்கு தையல், எல்லாப் பிள்ளைகளுக்கும் ஈமான், இஸ்லாம் என்பன கற்பிக்கப்பட்டன. 1904 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இச்சங்கத்தின் அறிக்கையொன்று இவ்வாறு காணப்படுகிறது: "இவ்வருடம் சோதனைக்கு விடப்பட்டவர்கள் 100 பேர். அவர்களில் பரீட்சைக்கு வந்தவர்கள் 94 பேர். குர்ஆன் ஓதி முடித்தவர்கள் 23 பேர். வருங்காலத்தில் இங்கிலிஷ் கற்றுக் கொடுத்தற்கும் உத்தேசித்திருக்கிறோம்". அதே அறிக்கையில் "இவ்வித்தியாசாலை 1904ம் ஆண்டு ஜனவரி மாதம் எமது இலங்கை அரசாங்க கலாவிருத்திப் பகுதியால் அரசாட்சி நன்கொடைப் பாடசாலையாக ஏற்றுப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது" எனவும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 1902 இலிருந்து இப்பாடசாலை இயங்கி வந்தது. 1915ல் நிகழ்ந்த கலவரத்தினால் இப்பாடசாலை இயங்கி வந்த இடத்தை விட்டுவிட நேர்ந்தது. புதிய இடம் தேடிக் கொண்டிருந்த வேளையில் சேகு லெப்பை முஹம்மது லெப்பை என்பவர் தற்போது பாடசாலை இருக்கும் நிலத்தை அன்பளிப்புச் செய்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இப்பாடசாலைக்கு கட்டிடங்களும், ஆசிரியர்களும் போதியளவு கிடைக்கப் பெற்றன என்று முன்னோர்கள் கூறுகிறார்கள்.

1947.02.15 இல் இலவசக் கல்வியின் தந்தை, அன்றைய கல்வி அமைச்சர் சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர இப்பாடசாலையைத் தரிசித்தார். அன்று பெண்களுக்கான திவிபாஷா ஸ்கூலை சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர அவர்களும் அதே தினம் ஆண்களுக்கான திவிபாஷா ஸ்கூலை அமரர் எஸ். டப்ளியு. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்களும் ஆரம்பித்து வைத்ததாக பாடசாலைக் குறிப்பேடு பதிந்து வைத்திருக்கிறது.

1962ல் மௌலவி அலவி அபுல்ஹசன் (அஸ்ஹரி) அதிபராக இருக்கும் போது ஆண்கள் பிரிவு மஹா வித்தியாலயமாக மாற்றப்பட்டதோடு தாருஸ்ஸலாம் மஹா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டது.

1967ல் பீ. இப்ராஹிம் லெப்பை அதிபராக இருக்கும் பொழுது உயர்தர வகுப்புக்கள் கலைப்பிரிவில் ஆரம்பிக்கப்பட்டன.

1978ல் இப்பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்று கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆண்கள் பிரிவு தாருஸ்ஸலாம் மஹா வித்தியாலயம் எனவும் பெண்கள் பிரிவு திஹாரிய பாலிகா முஸ்லிம் மஹா வித்தியாலயம் எனவும் தனித்தனியாக இயங்கி வந்த இரு பாடசாலைகளையும் ஒன்றிணைத்து மத்திய கல்லூரியாக மாற்றப்பட்டு அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி எனப் பெயர்மாற்றப்பட்ட நிகழ்வு 1989ல் இடம் பெற்றது.

மத்திய கல்லூரியாக இருந்தும், உயர்தர விஞ்ஞானப்பிரிவு இங்கு காணப்படவில்லை. ஆனால் 1960களில் மஹா வித்தியாலயமாக இருக்கும் பொழுது இம்மாவட்டத்திலேயே உயர்தர விஞ்ஞானப் பிரிவு இங்கு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கு 1800 மாணவர்களும் 60 ஆசிரியர்களும் உள்ளனர்.

4. உடுகொட அரபா வித்தியாலயம்

கி. பி. 1500ம் ஆண்டுப் பகுதியில் அத்தனகல்லைப் பகுதியில் இருந்து 6 குடும்பத்தினர் வந்து உடுகொட பகுதியில் குடியேறினர். இவர்களுள் சிலர் நாட்டு வைத்தியம் பற்றிய அறிவுடையவர்களாக இருந்தனர். இங்கிருந்தவர்களுக்கு கி.பி. 1800 களில் வாவா லெப்பை என்பவர் குர்ஆன் மத்ரஸா ஒன்றை நடாத்தி வந்துள்ளார். அது தற்போதைய காஸி நீதிமன்றத் திற்குப் பக்கத்தில் இயங்கி வந்துள்ளது. அதே சமயம் நெய்னா லெப்பை என்பவரின் குர்ஆன் மத்ரஸா தற்போதைய பள்ளிக்குப் பக்கத்தில் இயங்கிவந்துள்ளது. இவ்விரு குர்ஆன் மத்ரஸாக்களுக்கும் பக்கத்து கிராமங்களுக்கு வந்த அறபு நாட்டு செய்யதுமார்களும், வெலிகாமத்து மௌலானாமார்களும் வந்து சென்றுள்ளனர்.

குர்ஆன் ஓதல், சமய அறிவு தவிர்ந்தவற்றைக் கற்றுக்கொள்வதற்கு 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் இவ்வூரவர்கள் கஹடோவிட்ட, திஹாரி போன்ற இடங்களுக்கே சென்றனர். தொகையான மாணவர்கள் வெளியூர்களுக்குச் சென்று கற்பதிலுள்ள சிரமத்தை உணர்ந்த ஊரவர்கள் இங்கு ஒரு பாடசாலையை அமைக்க முயற்சித்தனர். ஜனாப் எம். எம். ஷரீப் தஸ்லீம், எம். ஐ. எம். முபாரக், எம். ஏ. எம். தாலிபு, மர்ஹூம்களான ஏ. ஏ. அப்துல் அஸீஸ், எம். எம். ஆரிபு ஆகியோர்களை நிருவாக உறுப்பினர்களாக கொண்டு இயங்கிய "இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கம்" எஸ். டப்ளியூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவுடன் தொடர்பு கொண்டு அன்றைய கல்வி அமைச்சர் தகநாயக்காவிடம் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றனர்.

மர்ஹூம்களான ஏ. எல். எம். ஸாலி, எம். எஸ். எம். மூஸின் புஹாரி, ஜனாப் எம். எஸ். எம். பாரூக் ஆகியோர் வழங்கிய நிலத்தில் தற்காலிக கட்டடம் ஒன்று கட்டப்பட்டு 1962ல் உடுகொட முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலை 75 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. முதல் அதிபராக மர்ஹூம் ஏ. எல். எம். ஸகரிய்யா காணப்பட்டார்.

1965 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ.த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு முதற்தடவையாக 100% சித்தி பெற்றனர். ஆனால் இப்போது உயர்தர வகுப்புக்கள் இடம்பெறுவதில்லை. இங்கு 362 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் உள்ளனர்.

5. ஒசட்வத்த முஸ்லிம் வித்தியாலயம்

1950ல் மேதகு எஸ். டப்ளியூ. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்கள் தமது சொந்தக் காணியில் ஒரு பகுதியை திஹாரிய, கஹடோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வறிய குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்தார். அன்று முதல் இங்கு குடியேறிய மக்கள் தமது வறுமை காரணமாக கல்வியில் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை. ஒரு சிலர் தமது பிள்ளைகளுக்கு வீட்டில் குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்தனர்.

நோன்பு காலங்களில் சமய அனுட்டானத்திற்காகக் கட்டப்பட்ட ஓலைக் கட்டடத்தில் பிள்ளைகளுக்கு குர்ஆன் ஓதவும், மார்க்க அறிவும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இதனால் பிள்ளைகளுக்குத்

தொடர்ந்து ஓதக் கற்றுக்கொள்ள வாய்ப்பேற்படவில்லை. சிலகாலங்களின் பின் நிரந்தரமான கட்டடம் ஒன்று பள்ளிவாயலுக்கென அமைக்கப்பட்ட பின்பு ஓரளவு ஓதவும் சமயக் கல்வி கற்கவும் வாய்ப்பேற்பட்டது.

கல்வியைப் பொறுத்த மட்டில் பெரும்பாலானோர் திஹாரிக்கே சென்றனர். தூர இடம் 'செல்ல வேண்டியிருந்ததாலும், பொருளாதார வசதியின்மையாலும் கல்வியை இடைவிடுவோர் மிக அதிகமாகக் காணப்பட்டனர்.

கிராமத்தின் கல்வித் தேவையை உணர்ந்த நலன்புரி இயக்கத்தினர், பள்ளி வாயல் அமைந்துள்ள காணியிலே 33 x 18 விஸ்தீரணமுள்ள கட்டடம் ஒன்றைக் கட்டிப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு அரசிடம் ஒப்படைத்தனர். 1992.01.02ல் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் 05 மாணவர்களுடன் முதலாம் வகுப்பும், திஹாரியில் கல்வி கற்ற இரண்டாம் வகுப்பு மாணவர்கள் 10 பேரையும் இணைத்து ஒரேயொரு ஆசிரியை திருமதி ஜனுல் பாய்ஸா அமீன் கடமை புரிந்தார். தற்போது 8ம் வகுப்பு வரையும் நடைபெறுகிறது. ஆரம்ப ஆசிரியை தற்போது இங்கு அதிபராகப் பணிபுரிகிறார்.

6. பூகொட குமாரிமுல்ல முஸ்லிம் வித்தியாலயம்

1922.10.04ல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன் திண்ணைப் பள்ளிகளில் போதனைகள் நடைபெற்று வந்துள்ளன. 1850 களில் அரபுத் தமிழில் எழுதக்கூடியவர்கள் இங்கு காணப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு சான்றுகள் காணப்படுகின்றன. இதே காலப்பகுதியில் ஹஜ்ஜி லெப்பை என்பவர் சீவகசிந்தாமணி, சீறாப்புராணம் என்பவற்றை மனனமிட்டுப் பாடுபவராகக் காணப்பட்டார்.

1922ல் தற்போது பள்ளிவாயில் அமைந்திருக்கும் இடத்தில் "அரசினர் தமிழ் வித்தியாலயம்" என்ற பெயரில் பாடசாலை ஓலைக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1946ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் அக்கட்டடம் அடித்துச் செல்லப்பட்டது. பின் பள்ளிவாயில் விறாந்தையில் பாடசாலை நடாத்தப்பட்டு வந்தது. அதைத் தொடர்ந்து வாடகை வீடுகளுக்கு இடமாற்றப்பட்டுக் கடைசியாக 1949ல் தற்போது பாடசாலை உள்ள இடத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1942.10.27 வரை 08 தமிழ் ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளனர். 1942ல் நியமனம்பெற்ற ஐ.எம். ஸனூன்

என்பவரே முதல் முஸ்லிம் ஆசிரியராவார். 1954 முதல் க.பொ.த. சாதாரண வகுப்புக்கள் வரை நடைபெற்று வருகின்றன. 46 மாணவர்களுடன் 01 ஆசிரியரைக் கொண்டு ஆரம்பித்த இப்பாடசாலையில் முதல் அதிபராக எஸ். பூவையா என்பவர் கடமையாற்றினார். தற்போது இங்கு 287 மாணவர்களும் 13 ஆசிரியர்களும் உள்ளனர்.

## களனிய கல்வி வலயம்

### 1. மல்வான அல் முபாரக் தேசியக் கல்லூரி

கி. பி. 14ம் நூற்றாண்டு முதல் முஸ்லிம்கள் வாழ்ந்து வரும் இக்கிராமத்தில் திண்ணை வழி மார்க்கக் கல்வியே இடம் பெற்று வந்துள்ளது. ஆத்மீகக் கல்வி மூலம் ஒழுக்க வாழ்விற்கு வழிகாட்டி வந்த சேகுமார்களும், மௌலானாக்களும் இங்கு வந்து போதனை நடாத்தியுள்ளனர். 1832 ல் யெமன் தேசத்திலிருந்து வந்த குத்தூஸ் மௌலானா (குத்ஸி மௌலானா) இங்கிருந்த மக்களுக்கு ஆத்மீகக் கல்வியைப் புகட்டியதோடு இவ்வூர் மக்களுள் 64 குடும்பத் தலைவர்கள் அன்னாரின் வழிகாட்டலை ஏற்று நடப்பதாக பைஅத்-உறுதிப் பிரமாணம் வழங்கிக் கைச்சாத்திட்டனர்.

1866ல் யெமன் தேசத்திலிருந்து வந்த ஆத்மீக ஞானி அஸ் ஸெய்யிதுஸ் ஸாதாத் அஹ்மத் இப்னு முபாரக் மௌலானாவின் வருகையால் இவ்வூரின் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அறிவு, ஆத்மீக, ஒழுக்கத் துறைகளில் பாரிய திருப்பம் ஏற்பட்டது.

1884ல் அறபுத்-தமிழ் அறிஞர் அஷ் செய்கு முஸ்தபா வலியுல்லாஹ் மௌலானாவிற்கும் இவ்வூருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டமையால் இக்காலங்களில் அரபுத் தமிழ் தெரிந்தோர் இங்கு கணிசமானோர் இருந்திருக்க முடியும்.

முபாரக் மௌலானா அவர்கள் தளுக்கல்ல என்ற இடத்தில் தனது தக்கியாவைக் கட்டிப் போதனைகள் நடாத்தி வந்துள்ளார். அவர் கற்றுக் கொடுத்த சட்ட திட்டங்கள் "முபாரக் மௌலா னாவின் சட்டங்கள்" என்ற பெயரில் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

மர்ஹூம் அல்ஹாஜ் ஏ. எல். எம். ஸாலி என்பவரினதும் ஊர் மக்களினதும் அயராத முயற்சியால் 1922.01.01ல் "வல்கம

அரசாங்க தமிழ் வித்தியாலயம்" என்ற பெயரில் அன்றைய மேல் மாகாண அரசாங்க அதிபர் திரு. ஜே. பிரேஸரினால் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. முதல் அதிபராக முல்லைத்தீவைச் சேர்ந்த ஏ. எட்வர்ட் என்பவர் நியமிக்கப்பட்டார். முதலாவது உதவி ஆசிரியராக 1.3.22ல் என். எம். பேதுருப் பிள்ளை நியமனம் பெற்றார். பாடசாலையில் முதல் முஸ்லிம் ஆசிரியராக 1931.07.31ல் ஏ. டபிள்யூ. மகரூபு நியமிக்கப்பட்டார்.

1928 வரையில் 8 ஆம் வகுப்பு மட்டுமே காணப்பட்டது. 1928 ல் "திவிபாஷ" பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. 1950.01.16 முதல் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது. பெண்கள் கல்விக்கு எதுவித அக்கறையும் காட்டப்படாத அக்காலத்தில் "பழைய மாணவர் சமாஜம்" என்ற அமைப்பின் முயற்சியாலேயே பெண்களுக்கான கல்வி வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. 1922 - 1949 வரை காணப்பட்ட கல்வியின் உதாசீனப்போக்கை மக்களிடமிருந்து நீக்கி கல்விக்கு ஊக்கமளிக்கும் பணியை இச் சமாஜமே செய்தது. 1955ல் முதியோருக்கான வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது.

1963ல் பாடசாலை மஹா வித்தியாலயமாகத் தரமுயர்த் தப்பட்டது. 1967ல் க. பொ. த. உயர்தர கலைப்பிரிவும், 1987ல் விஞ்ஞானப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன. கம்பஹ மாவட்டத்தில் விஞ்ஞானப்பிரிவுள்ள இரண்டு பாடசாலைகளில் ஒன்றான இது 1997ல் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

மல்வான மக்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்த ஆத்மீக வழிகாட்டி அஹ்மத் இப்னு முபாரக் மௌலானாவின் பெயரை இப்பாடசாலை தாங்கியிருக்கிறது.

2. யடிஹேன அல் முஸ்தபா வித்தியாலயம்

மல்வானையோடு இணைந்து அமைந்த இக்கிராம மக்கள் ஆரம்ப காலங்களில் கல்விக்காக மல்வானையை நாடிச்சென்றனர். அஹ்மத் முபாரக் மௌலானாவின் சீடனாகிய முஸ்தபா வலியுல்லாஹ் மௌலானா இப்பகுதி மக்களின் ஆன்மீக, அறிவு முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தவராவார்.

கல்விக்காக மல்வானைக்குச் செல்வதில் இருந்த சிரமத்தை உணர்ந்த யடி ஹேன பள்ளிவாசல் முகாமைக்காரர்கள் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஜனாப் எம். ஏ. எல். எம். ஜவ்பர் தலைமையிலான குழுவும், ஊர்மக்களும் ஒன்று சேர்ந்து அல் முஸ்தபா தைக்கியா வளவில் பாடசாலையை ஆரம்பித்தனர். 81 மாணவ மாணவிகளைக் கொண்டு 15.9.1961ல் யடிஹேன அரசினர் கலவன் வித்தியாலயம் என ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் கஹட்டோவிட்டையைச் சேர்ந்த ஜனாப் எம். ரி. எம். அன்ஸாரி முதல் ஆசிரியராகக் கடமையாற்றினார். திருமதி எம். ஜே. றொட்றிகோவும் அரச நியமனம் பெற்று அங்கு வந்து கடமைபுரிந்தார். 1974ல் தற்போது பாடசாலை அமைந்துள்ள காணியை அரசு சுவீகாரம் செய்தது. 1977 ஜூலை 10ம் திகதி புதிய காணியில் நிரந்தரக் கட்டடத்திற்குப் பாடசாலை மாற்றப்பட்டது. 30.08.1974 முதல் அல் முஸ்தபா வித்தியாலயம் எனப் புதுப் பெயர் சூட்டப்பட்டது. 1995ல் 6ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஆண்டு 08 வரை காணப்படுகின்றது. இங்கு 170 மாணவர்களும், 10 ஆசிரியர்களும் உள்ளனர்.

3. ஹுணுப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயம்

1915ற்குப் பின்னரே முஸ்லிம்கள் இப்பகுதியில் குடியேறினர். அக்காலங்களில் ஜைனம்பு நாச்சியார் என்ற மூதாட்டி தன்னுடைய வீட்டில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பவராக இருந்தார். 1940களில் விஜயபா மாவத்தையிலுள்ள இந்துக் கோயிலொன்றில் இந்து சமய மாணவர்கள் கல்வி கற்று வரத் தொடங்கினார்கள். முஸ்லிம் மாணவர்களையும் அங்கு சேர்த்துக் கொண்டார்கள் நாளடைவில் தமிழ், முஸ்லிம் மாணவர்களின் வருகை அதிகரித்தபடியால் அக் கல்விக்கூடம் 1950ஆம் ஆண்டில் தமிழ் அரசினர் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கான நிலத்தை நல்லம்மாள் என்ற பெண்மணி அன்பளிப்புச் செய்தார்.

அதன் பின் 1965ஆம் ஆண்டு திரு. சிதம்பரப்பிள்ளை என்பவர் அதிபராகக் கடமையாற்றிய காலகட்டத்தில் முஸ்லிம் மாணவர்களின் தொகை அதிகரிக்க அப்பாடசாலையிலேயே "முஸ்லிம் பிரிவு" "தமிழ்ப் பிரிவு" என இருபிரிவுகள் முறையே காலை, பின்னேர வகுப்புக்களாக நடைபெற்றன.

1968இல் முஸ்லிம் பிரிவுக்குப் பொறுப்பாக திருமதி யூ. இசட். ஏ. மொஹிதீன் நியமிக்கப்பட்டார். அப்போது 08 ஆசிரியர்களும் 225 மாணவர்களும் இருந்தனர்.

முஸ்லிம் மாணவர்களுக்கும் வேறாகக் கல்விக்கூடம் அமைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு நல்லம்மாள் அம்மையார் என்பவர் தனது சொந்தக் காணியை அன்பளிப்பாக வழங்கினார். அக்காணியில் ஹ ணுப்பிட்டி முஸ்லிம் வித்தியாலயத்திற்குக் கட்டடம் ஒன்று நிருமாணிக்கப்பட்டு 1972ம் ஆண்டிலிருந்து முஸ்லிம் மாணவர்கள் அக்கல்விக் கூடத்திலே கற்று வருகின்றனர். தற்போது 500 மாணவர்களும் 16 ஆசிரியர்களும் உள்ளனர்.

4. மாபொல அல் அஷ்ரப் மஹா வித்தியாலயம்

அல்-அஷ்ரபிய்யா பள்ளிவாசலோடு இணைந்த கட்டடமொன்றில் நடைபெற்று வந்த பாடசாலையை 1920.06.01 இல் ஜீ. சுப்பிரமணியம் என்ற அதிபர் பள்ளி லெப்பையிடமிருந்து பொறுப்பேற்றதாகக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. 27 மாணவர்களுடன் ஆரம்பமான இப்பாடசாலையில் 1925 வரை ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே காணப்பட்டது. 1936.11.17ல் ஆர். சின்னத்தம்பி அதிபராக இருக்கும்போது ஜே.எஸ்.ஸீ. வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிவாசலுக்குப் பக்கத்திலிருந்த பாடசாலை இட நெருக்கடி காரணமாகத் தற்போதுள்ள 02 ஏக்கர் விஸ்தீரணமுடைய பங்களாவத்த காணிக்கு மாற்றப்பட்டது. 1973.11.26ல் அல்-அஷ்ரப் மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது. 1988 முதல் உயர்தரக் கலை வகுப்புக்கள் இங்கு நடைபெற்று வருகின்றன. இங்கு 817 மாணவர்களும் 24 ஆசிரியர்களும் உள்ளனர்.

5. வெலேகொட முஸ்லிம் வித்தியாலயம், வத்தளை

1946 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1969 ஆம் ஆண்டு தீ விபத்திற்குள்ளான போது சகல ஆவணங்களும் எரிந்து சாம்பலாகியதால் தகவல்கள் எதுவும் இல்லை. தற்போது 157 மாணவர்களுடன் 8 ஆந் தரம்வரை வகுப்புக்கள் நடந்து வருகின்றன.

## நீர்கொழும்பு கல்வி வலயம்

1. நீர்கொழும்பு அல்-ஹிலால் மத்திய கல்லூரி

ஆரம்பகால முஸ்லிம் கிராமங்களுள் ஒன்றான இங்கு இந்தியாவிலிருந்து வந்த லெப்பைமார்கள் மார்க்கக் கல்வி புகட்டி

வந்துள்ளனர். அரபுத் தமிழ் எழுத்தறிவும் சிலரால் போதிக்கப்பட்டு வந்துள்ளது.

1929.02.02 இல் சுன்னாபிட்டிய பள்ளிவாசலாகிய பெரிய முல்ல பெரிய பள்ளிவாசலில் காசில மரிக்கார் என்பவரின் முயற்சியால் 42 மாணவர்களுடன் பெரியமுல்ல அரசினர் கலவன் பாடசாலை என்ற பெயரிலேயே இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிவாசலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் முஸ்லிம் மாணவர்கள் மட்டுமன்றித் தமிழ் மாணவர்களும் கற்று வந்தனர். முதல் அதிபராக கே. மாராம்பிள்ளை கடமையாற்றினார்.

1929ல் இங்கிருந்து தற்போது பாடசாலை இருக்கும் இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. 1920-1960 வரை கனிஷ்ட வித்தியாலயமாகவும் 1961-1990 வரை மஹா வித்தியாலயமாகவும் 1991 முதல் மத்திய கல்லூரியாகவும் தரமுயர்த்தப்பட்டது. 1961ல் இளம்பிறை என்ற கருத்தைத் தரும் அல்-ஹிலால் எனும் நாமம் இடப்பட்டது.

கம்பஹா மாவட்டத்தில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிப் பாடசாலையாக இது மட்டுமே காணப்படுகிறது. இம் மாவட்டத்தில் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவு வகுப்புக்கள் உள்ள இரண்டு பாடசாலைகளுள் இதுவும் ஒன்றாகும்.

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட மாணவர்களின் நலன் கருதி கணனி, தையல், தட்டச்சுச் பயிற்சி வகுப்புக்கள் இங்கு இடம்பெற்று வருகின்றன.

தமிழ் மொழி மூலம் 51 ஆசிரியர்களும் 1716 மாணவர்களும் சிங்கள மொழி மூலப் பிரிவில் 09 ஆசிரியர்களும் 137 மாணவர்களும் உள்ளனர்.

2. காமச்சோடை முஸ்லிம் வித்தியாலயம்

இப்பாடசாலை ஆரம்பிக்க முன் இப்பிரதேசப் பிள்ளைகள் சென் மேரிஸ் கல்லூரிக்கே சென்றனர். இங்கு ஆங்கில, தமிழ் மொழி மூலம் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது. முஸ்லிம் பிள்ளைகள் தமிழ் மொழி மூலமே கல்விபெற்று வந்தனர். 1961 இல் அரசாங்கம் தனியார் பாடசாலைகளை அரசுடமையாக்க முனைந்த சந்தர்ப்பத்தில் அதை விரும்பாத அப்பாடசாலை நிருவாகம்

பிள்ளைகளை கிறிஸ்தவ ஆலயத்திற்குள் வைத்து கற்பிக்கத் தீர்மானம் எடுத்தது. இந்த நேரத்தில் முஸ்லிம் பிள்ளைகள் ஆலயத்திற்குள் இருந்து கற்பதும், அவர்களது ஆராதனைகளில் கலந்துகொள்வதும் ஒரு ஷரீஅத் பிரச்சினையாக மாறிவிட்டது. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பொதுச் செயலாளர் எம்.ஜே.எம். ரியாழ் மௌலவி அவர்கள் இந்த நிலையில்; ஆலயம் சென்று கற்பது எமது பிள்ளைகளுக்கு ஆகுமானதல்ல எனவே, உடனடியாக இதற்குத் தீர்வுகாண வேண்டுமென செயலில் இறங்கினார். அவரும், மர்ஹூம் ஸகி ஹாஜியாரும் பள்ளி நிருவாகமும் சேர்ந்து காமச்சோடை பள்ளி மத்ரஸா கட்டடத்தில் பாடசாலையைத் தற்காலிகமாக நடத்துவது என்று தீர்மானத்திற்கு வந்தனர். இதன்படி 1961.01.20 இல் மத்ரஸா கட்டடத்தில் தற்காலிக அதிபர் எச். எம். ஹவாஸின் நிருவாகத்தின் கீழ் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கும்போது 6 ஆசிரியர்களும் 150 மாணவர்களும் காணப்பட்டனர். ஆரம்பிக்கும் போதே 1 தொடக்கம் 10 வரை வகுப்புக்கள் காணப்பட்டன. ஆனால் இடையில் ஏற்பட்ட வீழ்ச்சியால் 1968 இல் எட்டாம் ஆண்டு வரை மட்டும் காணப்பட்டது. பின் 1984 ஆகும்போது 5 வகுப்பு வரை மட்டுமே காணப்பட்டது. 1984 இல் அதிபராக வந்த அல்ஹாஜ் எம். எல். தாஹிர் லெப்பை ஜே.பி. அவர்களின் முயற்சியால் 1985முதல் மீண்டும் 8 ஆம் வகுப்பு வரை நடாத்தப்பட்டு வருகின்றது. தற்போது குர்ஆன் மத்ரஸா வேறு ஒரு கட்டடத்திற்கு மாற்றப்பட்டமையினால் பாடசாலை தனித்து இயங்கிவருகிறது. பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணியில் இயங்கிவரும் இப்பாடசாலைக்கு இடநெருக்கடி பெரும் பிரச்சினைகளில் ஒன்றாகும். முஸ்லிம், இந்து மாணவர்களை உள்ளடக்கி மொத்தமாக இங்கு 151 மாணவர்களும் 7 ஆசிரியர்களும் உள்ளனர்.

### 3. கம்மல்துறை அல்-பலாஹ் மஹா வித்தியாலயம்

கம்மல்துறைப் பாடசாலை 1920.05.17 இல் கம்மல்துறைப் பள்ளிக்குப் பக்கத்தில் 29 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பிக்கப் பாடுபட்டவர்களில் அகமது லெப்பை முதன்மை வாய்ந்தவராவார். முதல் அதிபராக வீ. தாமோதரம் காணப்பட்டார். 1955ல் எம்.ஐ.எம். அஸனூன் அதிபராகப் பதவியேற்கும் வரை தமிழ் அதிபர்களே இங்கு சேவையாற்றி

வந்துள்ளனர். "கம்மல்துறை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்" என ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1990.10.24ல் மஹா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. 1991.01.01 முதல் அல் பலாஹ் மஹா வித்தியாலம் எனப் பெயர் மாற்றப்பட்டது. 11.03.1930 இல் இது கலவன் பாடசாலையாக்கப்பட்டது. 1990 முதல் இங்கு க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் உள்ளன. பிரபல மார்க்க அறிஞரும், கவிஞருமாகிய மர்ஹூம் யூ. எம். தாஸிம் (அஸ்ஹரி, நத்வி) இதன் பழைய மாணவர்களுள் ஒருவராவார். 34 ஆசிரியர்களும் 1346 மாணவர்களும் உள்ளனர்.

## கலாச்சார நிலையங்கள்

கல்வி, கலாச்சாரத்தோடு தொடர்பான பல நிறுவனங்களும் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன.

### மாகொல அநாதை இல்லம்

அநாதைகளைக் கவனிப்பதும், அவர்களுக்குக் கல்வி, தொழில் வழிகாட்டல்களை வழங்கி சமூகத்திற்குப் பயனுடையவர்களாக அவர்களை உருவாக்குவதும் இஸ்லாம் கூறும் சிறந்த தர்மங்களில் ஒன்றாகும். இதனை மாகொல முஸ்லிம் அநாதை இல்லம் நிறைவேற்றி வருகின்றது. ஹாஜி பாத்திமாவின் அன்பளிப்புக் காணியில் 1962 ஒக்டோபர் 17ல் மர்ஹூம் உமர் ஹஸ்ரத் இந்நிறுவனத்தைத் திறந்து வைத்தார். ஆரம்ப ஸ்தாபகரும் ஆயுட்காலத் தலைவருமான அல்ஹாஜ் ஜப்பார் முஹம்மத் ஜாபிரின் நிர்வாக முகாமைத்துவத்தின் கீழ் இன்றும் சீராக இயங்கி வருகின்றது. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட முதற் காலங்களில் அநாதைச் சிறார்கள் மல்வான அல் முபாறக் மத்திய கல்லூரி, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, யடிஹேன முஸ்லிம் வித்தியாலயம் போன்ற இடங்களுக்கு கல்வி கற்க நிறுவனத்தால் அனுப்பப்பட்டனர்.

1978ல் குல்லியது அன்வாரில் உலூம் அல் இஸ்லாமிய்யா என்ற பெயரில் 12 மாணவர்களைக் கொண்டு மௌலவி முஹம்மது சித்தீக் (பாரி) அவர்களை அதிபராகக் கொண்டு ஒரு மத்ரஸாவும் ஆரம்பிக்கப்பட்டது. குர்ஆன் மனனம் இடல், இஸ்லாமிய ஷரீஅத், அறபு மொழி என்பன போதிக்கப்படும் இக்கல்லூரியில் இன்று 126 அநாதை மாணவர்கள் கற்கின்றனர். 14 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

இதன் மற்றொரு கிளை உலஹிட்டிவல, மல்வானையில் 17 ஏக்கர் காணியில் சகல வசதிகளுடன் மாகொல யதாமா பாடசாலை என்ற பெயரில் 1991ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆண்டு 1 முதல் க.பொ.த. சா/த வரை கற்பிக்கப்படும் இங்கு, 300 மாணவர்களும் 13 ஆசிரியர்களும் உள்ளனர். இப்பாடசாலையில் மாகொல அநாதை இல்லத்தால் நிருவகிக்கப்படும், விடுதியில் தங்கியுள்ள அநாதைப் பிள்ளைகளுக்கு மட்டுமே கற்பிக்கப்படுகிறது.

தற்போது இந்நிறுவனம் மொத்தமாக 426 அநாதைப் பிள்ளைகளைப் பராமரித்து வருகிறது.

அநாதைகளுக்கான கல்வி வழிகாட்டல் மட்டுமன்றித் தொழிற் துறைகளுக்கான வழிகாட்டல்களையும் இந்நிறுவனம் வழங்கி வருகிறது. தையல், மரவேலை, மின்னியல், மாணிக்கக்கல் வெட்டுதல், தட்டச்சு, உருக்கு ஒட்டுதல் போன்ற துறைகளுக்கான வழிகாட்டல்கள் இங்கு வழங்கப்பட்டு வருகின்றன.

## மாகொல லேடி பரீத் முஸ்லிம் வயோதியர் இல்லம்

முதியோரை மதித்து நடப்பதும், வயதானோரைக் கண்காணிப்பதும் சுவர்க்கம் கொண்டு சேர்க்கக் கூடிய உயர்ந்த நற்செயல்களாகும். இப்பணியை கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக லேடி பரீத் முஸ்லிம் வயோதிபர் இல்லம் ஆரவாரம் இன்றி, அமைதியாக செய்து வருவதானது பலருக்குத் தெரியாத ஒன்றாகும்.

பிள்ளைகளோ, உறவினரோ அற்ற விருத்தாப்பியர்கள் தம்மைக் கவனிக்க யாரும் இல்லாத நேரத்தில் பிறமத வயோதிபர் இல்லங்களுக்குச் சென்று தங்களது ஈமானை இழந்து, மார்க்கக் கடமைகளைக் கூட நிறைவேற்றாத நிலையில் அந்திம காலங்களைக் கழிக்க நேரிடுவது மிகவும் அபாயகரமானதாகும். அத்தகு நிலையிலிருந்து அவர்களைப் பாதுகாத்து, நல்லதொரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற சேர் ராசிக் பரீதின் எண்ணக்கருவில் உதயமானதே இந்த லேடி பரீத் வயோதிபர் இல்லமாகும். சேர் ராஸிக் பரீதின் மனைவி திருமதி ஆமினா ராஸிக் பரீத் அவர்கள், கட்டிடத்தோடு கூடிய 196 பேர்ச் காணியை இந்நிறுவனத்திற்கு அன்பளிப்புச் செய்தார். 1957 செப்டம்பர் 22ம் திகதி இலங்கையின் கவர்னராக இருந்த சேர் ஒலிவர்

குணதிலக்க மூலம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. 6 வயோதிபர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வோரு ஆண்டிலும் பல வயோதிபர்களுக்கு புகலிடம் அளித்து தற்போது 15 ஆண், பெண் வயோதிபர்களை இந்நிறுவனம் பராமரித்து வருகின்றது. இலங்கைச் சோனக இஸ்லாமிய கலாசார நிறுவனத்தின் கண்காணிப்பில் இயங்கும் இந்நிறுவனத்தின் நிருவாகத் தலைவராக நீண்ட காலம் சமூக சேவையில் அனுபவம் பெற்ற அல்ஹாஜ் புவாத் மொஹிடீன் ஜே. பீ. அவர்கள் பணியாற்றுகிறார். இலக்கம் 27, பமுனுவில வீதி, மாகொலையில் இயங்கி வரும் இந்நிறுவனத்தை 300 வயோதிபர்களைப் பராமரிக்கக் கூடியளவிற்கு விஸ்தரிப்பதற்கான எதிர்காலத் திட்டமொன்று வரையப்பட்டிருக்கின்றது.

## கள்-எலிய மகளிர் அநாதை இல்லம்

1959ல் மர்ஹூம் அல்ஹாஜ் ஏ. எச். எல். ஏ. காதர், அல்ஹாஜ் எம். ஏ. எம். அபுல்ஹஸன் ஆகியோரின் பெருமுயற்சியினால் உருவாக்கப்பட்ட கள்-எலிய முஸ்லிம் மகளிர் அரபிக் கல்லூரியில் 1963 இல் 10 பிள்ளைகளுடன் மகளிருக்கான ஓர் அநாதை இல்லம் தோற்றுவிக்கப்பட்டது. இன்று இங்கு 241 அநாதைப் பெண்பிள்ளைகள் பராமரிக்கப்படுகிறார்கள். மகளிர் அரபுக்கல்லூரி வளாகத்திற்குள் முழுமையாக அதன் நிருவாகத்தின் கீழ் இயங்கும் இவ்வில்லத்திலுள்ள சகல மாணவிகளும் கல்லூரியில் இஸ்லாமியக் கற்கை நெறிகளையும், ஏனைய கற்கை நெறிகளையும் பூரணப்படுத்தி வருகின்றனர்.

மேலும், நாடளாவிய நிலையில் 252 வெளிக்கள அநாதைப் பிள்ளைகளுக்கு இவ்வநாதை இல்லம் குவைத்திலுள்ள பைதுல் ஸகாதின் அனுசரணையுடன் இல்ல நன்கொடை வழங்கி வருகிறது. இதுதவிர, திறமை அடிப்படையில் அநாதைகளுக்கு தொழிற் பயிற்சிக்கான வசதிகளையும் செய்து வருகிறது. அத்துடன் இங்கு ஆண், பெண் இரு பாலாரையும் கொண்ட அநாதைக் குழந்தைப் பராமரிப்பு நிலையமொன்றும் நடாத்தப்பட்டு வருகின்றது. தற்போது இங்கு பத்துக் குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றனர்.

## திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம்

நம் நாட்டில் அங்கவீனர் நிலையங்கள் பல காணப்பட்டாலும், இஸ்லாமிய கலாசார விழுமியங்களைப் பேணக்கூடிய விதத்தில்

முஸ்லிம்களுக்கென தனியான ஒரு நிலையம் காணப்படாமையால் பிற மதத்தவர்களால், அவர்களது கலாசாரத்தைத் தழுவியமைந்த நிலைங்களையே முஸ்லிம்கள் இதுவரை காலமும் நாடி வந்தனர். இந்நிலையில் 1983இல் திஹாரிய தூல்மலையில் இலக்கம் 400/1 என்ற இடத்தில் ஒன்றுகூடிய இளைஞர் குழுவொன்றின் கலந்துரையாடலின் பிரதி பலனாக முஸ்லிம்களுக்கெனத் தனியான ஓர் அங்கவீனர் நிலையம் உருவாக்கப்படுவதன் அவசியம் உணரப்பட்டது.

இதற்கமைய 1984 மே 03ம் திகதி ஊர்மனை, திஹாரிய ஏ. எம். நயீம் ஆசிரியரின் 343ஆம் இலக்க வீட்டில் ஐந்து அங்கவீன மாணவர்களுடனும், ஒரேயொரு ஆசிரியையுடனும் இவ் அங்கவீனர் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. சம்மாங்கோட்டை ஜும்மாப் பள்ளிவாசல் கதீப் அல்ஹாஜ் எம். கே. எம். அபுல்ஹஸன் (காஹிரி) அவர்களின் பிரார்த்தனையோடு மிக எளிமையான முறையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இந்நிறுவனம் 1986 ஆம் ஆண்டு தற்போது இயங்கிவரும் இடத்தில் நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு அங்கு கொண்டு செல்லப்பட்டது. 1991இல் இந்நிறுவனம் கல்வி, உயர் கல்வி அமைச்சின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. 1988இல் சமூக சேவைகள் அமைச்சின் கீழும் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது சுமார் 250 அங்கவீன மாணவ, மாணவிகளையும் 35 ஆசிரியர்களையும் கொண்ட ஒரு முன்னணி நிலையமாக இயங்கிவருகிறது. அச்சுத்தொழில், தையல், மரவேலை, மாணிக்கக் கல் வெட்டுதல் போன்ற துறைகளில் ஆண் மாணவர்களுக்கும், ஜுக்கி மெசின் தையல், சமையல், ஆபரணம் செய்தல் போன்ற துறைகளில் பெண் மாணவிகளுக்கும் பயிற்சிகள் இங்கு வழங்கப்பட்டு வருகின்றன.

சாதி, மத பேதமின்றி சகல இன மாணவர்களும், ஆசிரியர்களும் இவ் இஸ்லாமிய நிலையத்தில் இன்று காணப்படுகின்றனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகளால் இந்நிறுவனம் சிறப்புற வளர்ச்சியடைந்து வருகின்றது.

## இந்தோனிசியா ஹாஜிகள் நினைவு மண்டபம்

1974ஆம் ஆண்டில் இந்தோனிசிய நாட்டைச் சேர்ந்த புனித ஹாஜிகளைச் சுமந்து வந்த விமானம் திடீரென விபத்துக்

குள்ளானமையால் பல நூறு ஹாஜிகள் ஷஹீதாக்கப்பட்டனர். அவ்விமான விபத்து தற்போதைய கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதிக்கு அருகில் சீதுவ என்ற இடத்தில் இடம் பெற்றமையால் அவ்விடத்தில் இந்தோனிசிய அரசாங்கம் ஷஹீதான ஹாஜிகள் ஞாபகர்த்தமாக "இந்தோனிசிய ஹாஜிகள் நினைவு மண்டபம்" என்ற பெயரில் ஒரு கலாசார நிலையத்தை அமைத்தனர். ஒரு தொழுகை மண்டபத்தையும் உள்ளடக்கி அமைந்த இந்நிலையத்தின் ஒரு பகுதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கிளையொன்றும், அஸ்-ஸைலான் சர்வதேசப் பாடசாலையும் இன்று இயங்கி வருகின்றன.

## பாடசாலை இல்லாத முஸ்லிம் கிராமங்கள் -ஒரு நோக்கு

கம்பஹ மாவட்டத்தில் சுமார் 42 ஊர்களில் முஸ்லிம் கிராமங்கள் காணப்பட்டாலும் 19 முஸ்லிம் பாடசாலைகளே காணப் படுகின்றன. பாடசாலை இல்லாத கிராமங்களின் நிலையை நோக்குவதும் இம்மாவட்ட கல்விநிலைபற்றிய ஆய்வுக் குட்பட்டதாகும்.

**அத்தனகல்ல**

மிகவும் பழமை வாய்ந்த முஸ்லிம் கிராமங்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு மிக ஆரம்பகால முதல் மார்க்கக் கல்வி, குர்ஆன் ஓதல் மட்டுமே இடம் பெற்று வந்துள்ளன. 1650 களில் மலையாளத்தைச் சேர்ந்த சேகு அப்துல் காதிர் லெப்பை என்பவர் இங்கு வசித்து வந்திருக்கிறார். கல்வியில் அவர் சிறந்து விளங்கியமையால் மார்க்கக் கல்விப் போதனை நடத்தியிருக்க றார். இக்கிராமத்தில் இருந்தோருள் அதிகமானோர் வேறு இடங்களுக்குச் சென்று குடியேறியமையால் இக்கிராமம் இன்னும் வளர்ச்சியடையாமலேயே இருப்பதானது இங்கு பாடசா லையொன்று உருவாகாமைகக் காரணமாகும்.

மிகவும் வறிய குடும்பங்களாக இவர்கள் இருப்பதால் கல்வியில் நாட்டம் மிகமிகக் குறைவாகக் காணப்படுகிறது. ஒருசிலர் சிங்கள மொழிக் கல்வியை நாடிச் செல்கின்றனர். வேறு சிலர் அயல் கிராமங்களில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். ஆனால் அவர்களுள் 99 வீதத்தினர் 8ம் ஆண்டுக் கல்வியைக் கூட பூரணப்படுத்தாத நிலையில் கல்வியைக் கைவிட்டு

விடுகின்றனர். மிகப் பழமை வாய்ந்த ஒரு கிராமமான இங்கு இதுவரையில் குறைந்தது ஒரு ஆசிரியர் கூட உருவாகாமை இக்கிராமத்தின் கல்விச் சூன்யநிலைக்குச் சிறந்த சான்றாகும்.

**அள்கம**

கம்பஹ மாவட்டத்தின் எல்லைப் புறமொன்றில் அமைந்துள்ள இக்கிராமத்தின் ஒரு பகுதி கேகாலை மாவட்டத்திற்குச் சொந்தமானதாகும். கம்பஹ மாவட்டத்திற்குச் சொந்தமான பகுதியில் 10 முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இங்கிருந்த மாணவர்கள் 1940 களில் இருந்து 1960 வரை வீரசூரிகந்த சிங்களப் பாடசாலைக்கே சென்றனர். அங்கு அப்போது தமிழ்மொழிப் பிரிவு ஒன்றும் காணப்பட்டது. அப்பாடசாலையில் ஏற்பட்ட கடும் இடநெருக்கடி காரணமாக தமிழ் பிரிவை அள்கம சிங்கள மகா வித்தியாலயத்திற்கு மாற்றி விட்டனர். சில காலங்களின் பின்பு அதுவும் மூடப்பட்டுவிட்டது. இந்நிலையில் சிலர் பாடசாலையொன்றின் அவசியம் பற்றி சிந்தித்து, அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தனர். அள்கம பள்ளிவாசல் காணியில் பாடசாலைக்கான தற்காலிக கட்டிடத்தையும் கட்டி முடித்து திறப்புவிழா நாடாத்த இருந்த சமயத்தில் ஏற்பட்ட இழுபறி நிலையால் அம்முயற்சிகள் அனைத்தும் இதுவரையில் கூட நிறைவேற வாய்ப்பு ஏற்படவில்லை.

இங்கிருந்து வரக்காப்பொல, கள்-எலிய, நாம்புளுவ ஆகிய இடங்களுக்கே மாணவர்கள் சென்று வந்தனர்.

கம்பஹ மாவட்டத்திற்கு உட்பட்ட இவ்வூரின் தனியான சிறப்பம்சம் யாதெனில், 10 குடும்பங்களுக்கு 5 பட்டதாரிகளும் 1 மௌலவியாவும் 9 அரச உத்தியோகத்தர்களும் காணப் படுகின்றமையாகும்.

வெயாங்கொடை

இக்கிராமம் பழமை வாய்ந்ததாயினும்கூட இன்று இங்கு விரல்விட்டு எண்ணக் கூடியளவிற்கே முஸ்லிம் குடும்பங்கள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் குடும்பங்களின் இடப்பெயர்வாகும். 1900 களில் இந்திய லெப்பைகள் இங்கு குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்துள்ளனர். இங்கிருக்கும் முஸ்லிம் மாணவர்கள் அனைவரும் சிங்கள மொழியிலேயே கற்கின்றனர்.

இங்கு கல்வியை இடைவிடுவோர் வீதம் மிகக் குறைவாகும். சமயக் கல்வியைப் பொறுத்த வரையில் குர்ஆன் மத்ரஸா மட்டுமே இதுவரை காலமும் காணப்பட்டது. ஆனால் இவ்வாண்டு முதல் வெயங்கொட சிங்கள மஹா வித்தியாலயத்தில் அஹதிய்யா வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

ரன்பொகுனகம

சுமார் 180 முஸ்லிம் குடும்பங்கள் வரை வாழும் இக்குடியேற்றத்திட்டத்தில் குர்ஆன், மார்க்கக்கல்வி வாய்ப்புக் காணப்படுகிறது. அநேகமான பெற்றோர் படித்த இளம் தலைமுறையினராகக் காணப்படுகின்றமையால் இங்கு இருப்போரிடையே கல்வி வேட்கை ஏனைய கிராமத்தவர்களை விடப் பன்மடங்கு அதிகமாகும். இங்கு சுமார் 90 வீதத்தினர் சூழவுள்ள சிங்கள மொழிக் கல்லூரிகளில் கற்று வருகின்றனர். மீதி 10 வீதத்தினரும் தமிழ் மொழிமூலம் திஹாரிய அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியிலும் கற்று வருகின்றனர்.

ரத்தொழுகம

ரத்தொழுகம குடியேற்றத்திட்டத்தில் வசித்து வரும் குடும்பங்களிலுள்ள முஸ்லிம் மாணவர்களுள் சுமார் 90 வீதத்தினர் சிங்கள மொழிமூலமே கற்றுவருகின்றனர்.

என்டேரமுல்ல

இங்குள்ள முஸ்லிம் மாணவர்களுள் 10 வீதத்தினர் ஹுனுப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயத்திற்கு செல்கின்றனர். ஏனைய 90 வீதத்தினர் சிங்கள மொழி மூலமே கற்று வருகின்றனர்.

பேலியகொட

சுமார் 350 குடும்பங்கள் சிதறி வாழும் இப்பகுதியில் உள்ள முஸ்லிம் மாணவர்களுள் சிலர் பேலியகொட தமிழ் வித்தியாலயத்திற்குச் செல்கின்றனர். வேறு சிலர் கொழும்புக்கே செல்கின்றனர். சுமார் 30 வீதத்தினர் சிங்கள மொழி மூலமே கற்கின்றனர். கல்வியைத் தொடராத மாணவ பருவத்தினரும், கல்வியை இடைநிறுத்துவோர் பலரும் இங்கு சற்று அதிகமாகவே காணப்படுகின்றனர். இதற்குப் பிரதான காரணம் வறுமையும், சேரிப்புற வாழ்க்கையும் ஆகும்.

## ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும்

இம் மாவட்டத்தில் பாடசாலைகளின் தோற்றத்திற்கு முன் முஸ்லிம்களிடம் சமயக் கல்விப் போதனைகள் மட்டுமே மிகக் கூடுதலாக இடம்பெற்று வந்திருக்கின்றன. எல்லா முஸ்லிம் பாடசாலைகளும் கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் தோன்றியவைகளாகும். அதற்கு முன்பு நிறுவன அமைப்பற்ற கல்விப் போதனா முறைகள் இடம் பெற்று வந்திருக்கின்றன.

அநேகமான பாடசாலைகள் குர்ஆன் மத்ரஸாவிலிருந்து அல்லது பள்ளியோடு இணைந்திருந்த கட்டிடத்திலிருந்து அல்லது விறாந்தையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்த பாடசாலைகளாகவே காணப்படுகின்றன. இதுவானது இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியத்தின் தனித்துவமான ஓர் அம்சம் இங்கும் இடம்பெற்று வந்திருக்கிறது என்பதனைக் காட்டுகின்றது.

இம்மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் வளப்பற்றாக்குறை மிக அதிகமாகக் காணப்படுகின்றது. கம்பஹா மாவட்டம் மேற்கு மாகாணத்தில் அமைந்துள்ள போதிலும் மேற்கு மாகாணப் பாடசாலைகளில் இருக்க வேண்டிய பல வசதிகள் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் காணப்படுவதில்லை. 19 பாடசாலைகளிலும் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்ற எண்ணிக்கையளவிற்கே குறித்த வளங்கள் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர அதிபர் | 17 |
| 2. | மலசலகூட வசதி | 14 |
| 3. | நீர் வசதி | 17 |
| 4. | வாசிகசாலை | 05 |
| 5. | மனையியல் ஆய்வுகூடம் | 03 |
| 6. | விஞ்ஞான ஆய்வுகூடம் | 05 |
| 7. | விளையாட்டு மைதானம் | 06 |
| 8. | மின்சாரம் | 15 |
| 9. | ஆசிரியர் விடுதி வசதி | 08 |
| 10. | போதிய வகுப்பறை இடவசதி | 05 |

ஆய்விலே கண்ட மற்றொரு அம்சம் யாதெனில் இம் மாவட்டத் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் கல்வி அடைவு மட்டம் மிகக் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு ஒரு காரணம் யாதெனில் இப்பாடசாலைகளில் நீண்ட காலமாக நிலவி

வரும் ஆசிரியர் பற்றாக்குறையாகும். விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பப் பாடங்கள், நுண்கலை போன்றவற்றிற்கான ஆசிரியர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். விஞ்ஞான, கணித பாடங்களுக்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றாக்குறையால் உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் கற்கத் தகுதியான மாணவர்களும் இம் மாவட்டத்தில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். 44/90 சுற்றுநிரூபத்தின்படி அனுபவமும், பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் திடீரென ஓய்வு பெற்றமையால் இன்றுவரை ஈடுசெய்ய முடியாதளவிற்குத் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் கல்வி அடைவு மட்டம் பாதிப்புக்குள்ளாகியது.

இம்மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தமிழ்மொழிப் பாடசாலைகளில் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் நீண்ட காலம் தமிழ் ஆசிரியர்களே ஆரம்பக் காலங்களில் கடமையாற்றி வந்துள்ளனர் என்பது ஆய்விலிருந்து கண்ட ஓர் அம்சம் என்றவகையில் நன்றியோடு அவர்களை நோக்க வேண்டி யிருக்கிறது.

இம்மாவட்டத் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் மொத்த மாணவர் படலத்தை நோக்கும் போது ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை ஆண், பெண் சமனாகக் காணப்படுகிறது. பின் ஆண்டு 06 தொடக்கம் ஆண்டு 11ஐ நோக்கும் போது ஆண் மாணவர்கள் குறைந்து செல்கின்றனர். குறிப்பாக ஆண்டு 08 தொடக்கம் ஆண்கள் வீதம் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. ஏனெனில் ஆண்டு 08 தொடக்கம் கல்வியை இடைவிடுவோரில் ஆண்கள் கூடுதலாக இருக்கின்றனர் என்பதை இது காட்டுகின்றது.

உயர்தர வகுப்புக்களை எடுத்து நோக்கும் போது 75% மாணவிகளும் 25% மாணவர்களும் காணப்படுகின்றனர். மற்றொரு அம்சம் யாதெனில் உயர்கல்வி பெறுவோரது எண்ணிக்கை மிகக் குறைவாகும். வேறுவகையில் கூறின் உயர்தரப் பரீட்சைக்குத் தமிழ்மொழி முலம் தோற்றும் கம்பஹ மாவட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைவிட அதிகமான மாணவர்கள் சிங்கள மொழிப் பாடசாலையில் ஒரு வகுப்பில் காணப்படுகின்றனர். இது தவிர உயர்தர விஞ்ஞானப் பிரிவில் தமிழ்மொழி மூலம் கற்பதற்குரிய வசதி வாய்ப்புக்கள் இம் மாவட்டத்தில் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

இம் மாவட்ட தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் 75% ஆசிரியைகள் காணப்படுகின்றனர். அனுபவமும் ஆற்றலும் கொண்ட ஆண் ஆசிரியர்களின் குறைவால் மாணவ கட்டுப்பாடு, ஒழுக்க நிலை என்பவற்றின் வளர்ச்சியில் மந்தநிலை காணப்படுகிறது.

பொதுவாக இம்மாவட்டத்தில் உயர்கல்வி மிகவும் ஆரோக்கியமற்ற ஒரு நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. நீண்ட வரலாற்றையுடைய, கணிசமான சனத்தொகையுடைய இம்மாவட்டத்தில் உயர்கல்வியில் கலாநிதிப் பட்டம் வரை சென்றவர்கள் இருவர் மட்டுமே ஆவர். 05ற்கும் குறைவாகவே எம். பீ. பீ. எஸ் பட்டம் பெற்ற வைத்தியர்கள் காணப்படுகின்றனர். இதுவரையில் எம். பீ. பீ. எஸ். பட்டத்தை ஒரே ஒரு முஸ்லிம் பெண் மட்டுமே பெற்றுள்ளார். இது தவிர தாதித் தொழிலில் ஈடுபடுவோர், அல்லது பயிற்றப்பட்டோர் எவரையுமே இம் மாவட்ட முஸ்லிம்களிடையே காணக் கிடைக்கவில்லை. முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் பர்ளு கிபாயாவான இத்துறைகளில் இம்மாவட்ட முஸ்லிம்கள் மிக அவசரமாகக் கரிசனை காட்டுவது காலத்தின் தேவைமட்டுமல்ல, ஒரு வரலாற்றுத் தேவையுமாகும்.

பரிந்துரைகள்:

1. இம்மாவட்டத் தமிழ்மொழிப் பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை மிக அவசரமாக நிவர்த்திக்கப்பட்டாலே கல்வி அடைவு மட்டத்தைக் கூட்ட முடியும்.

2. ஆசிரிய பற்றாக்குறை நிவர்த்திக்கப்படுவதோடு, சேவையிலிருப்போர் உரிய காலத்திற்கு முன் ஓய்வு பெறுவதை விடுத்து சேவை நீடிப்புச் செய்து இம் மாவட்டக் கல்விக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

3. மாணவர்களுக்குக் கல்வி ஆர்வத்தைத் தூண்ட வேண்டியிருப்பதோடு, கல்வியை இடைவிடுவோர் தொகையைக் குறைப்பதற்கான வழி முறைகள்பற்றி ஆராய வேண்டியிருக்கிறது.

4. சிங்கள மொழி மூலம் கற்பிப்போரைத் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் கற்பிக்க அனுமதிக்கக் கூடாது.

5. உயர்கல்வி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படல் வேண்டும். உயர்தர விஞ்ஞானப் பிரிவுக் கல்விக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும்.

6. உயர் கல்வித்துறைகளில் ஈடுபடுவதும், சமூக சேவைத் தொழில்களை மேற்கொள்வதும் பர்ளு கிபாயா என எண்ணி அத்துறைகளில் கூடுதலான ஆர்வம் காட்டப்படல் வேண்டும்.

# கம்பஹ மாவட்ட முஸ்லிம் பாடசாலைகள் – 1998

| வலயம் | இல. | பாடசாலை பெயர் | விலாசம் | தரம் | வகுப்பு | பால் | மாணவர் | ஆசிரியர் | அதிபர் தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மினுவாங்கொட | 1. | கல்லொளுவ அல் அமான் ம.வி. | மினுவாங்கொட | 1சீ | 1-13 | கலவன் | 753 | 25 | அதிபர் சேவை 11 |
| | 2. | கல்-எலிய அலிகார் ம.வி. | கல்-எலிய | 1சீ | 1-13 | ” | 560 | 20 | 1 |
| | 3. | நாம்புளுவ பாபுஸ்ஸலாம் வி. | பஸ்யால | 2 | 1-11 | ” | 344 | 11 | ” 11 |
| | 4. | வேவல்தெனிய அல் ஹஸன் வி. | வேவல்தெனிய | 3 | 1-8 | ” | 73 | 06 | ” 111 |
| | 5. | அல்லாமுல்ல ஸாஹிரா வி. | பஸ்யால | | 2 1-11 | ” | 179 | 09 | - |
| கம்பஹ | 6. | கஹடோவிட அல் பத்ரியா ம. வி. | கஹடோவிட | 1சீ | 1-13 | ” | 711 | 32 | ” 1 |
| | 7. | திஹாரிய அல் அஸ்ஹர் ம. ம. வி. | கலஹெடிஹேன | 1சீ | 1-13 | ” | 1589 | 60 | ” 11 |
| | 8. | உடுகொட அறபா வி. | றுக்கஹவெல | 1சீ | 1-11 | ” | 358 | 15 | ” 111 |
| | 9. | ஓசாட்வத்த க. வி. | நிட்டம்புவ | 3 | 1-8 | ” | 85 | 05 | ” 111 |
| | 10. | குமாரிமுல்ல வி. | பூகொட | 2 | 1-11 | ” | 290 | 14 | 11 |
| | 11. | கஹடோவிட மு. பாலிகா வி. | கஹடோவிட | 3 | 1-5 | பெண்கள் | 224 | 08 | ” 11 |
| களனிய | 12. | மல்வான அல் முபாறக் தே. பா. | மல்வான | 1ஏ | 1-13 | கலவன் | 1636 | 54 | 1 |
| | 13. | யடிஹேன அல் முஸ்தபா வி. | மல்வான | 2 | 1-8 | ” | 170 | 08 | ” 11 |
| | 14. | ஹுனுபிட்டிய மு. வி. | வத்தளை | 2 | 1-11 | ” | 491 | 16 | ” 1 |
| | 15. | மாபொல அல் அஷ்ரப் ம. வி. | வத்தளை | 1சீ | 1-13 | ” | 817 | 24 | ” 1 |
| | 16. | வெலேகொட மு. வி. | வத்தளை | 3 | 1-8 | ” | 157 | 07 | ” 111 |
| நீர்கொழும்பு | 17. | அல் ஹிலால் ம. ம. வி. | நீர்கொழும்பு | 1ஏபீ | 1-13 | ” | 1884 | 60 | 111 |
| | 18. | கம்மல்துறை அல் பலாஹ் ம. வி. | கொச்சிக்கடை | 1சீ | 1-13 | ” | 1346 | 34 | ” - |
| | 19. | காமச்சோடை மு. வி. | நீர்கொழும்பு | 3 | 1-8 | ” | 151 | 08 | ” 11 |

# மாணவர் தொகை

| இல. | பாடசாலையின் பெயர் | 1 — 5 ஆ | 1 — 5 பெ | 6 — 11 ஆ | 6 — 11 பெ | உயர்தரம் ஆ | உயர்தரம் பெ | தொகை ஆ | தொகை பெ | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கல்லொளுவ அல் அமான் மகா வித்தியாலயம் | 198 | 210 | 173 | 161 | - | 11 | 371 | 382 | 753 |
| 2. | கல்-எலிய அலிகார் மகா வித்தியாலயம் | 128 | 140 | 142 | 145 | 03 | 02 | 273 | 287 | 560 |
| 3. | நாம்புளுவ பாபுஸ்ஸலாம் வித்தியாலயம் | 97 | 73 | 73 | 101 | - | - | 170 | 174 | 344 |
| 4. | வேவல்தேனிய அல்ஹஸன் வித்தியாலயம் | 27 | 22 | 10 | 14 | - | - | 37 | 36 | 73 |
| 5. | அல்லலாமுல்ல ஸாஹிரா வித்தியாலயம் | 41 | 45 | 48 | 45 | - | - | 89 | 90 | 179 |
| 6. | கஹடோவிட அல் பத்ரியா மகா வித்தியாலயம் | 217 | - | 214 | 229 | 22 | 29 | 453 | 258 | 711 |
| 7. | திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய மகா வித்தியாலயம் | 437 | 361 | 340 | 413 | 26 | 12 | 803 | 786 | 1589 |
| 8. | உடுகொட அறபா வித்தியாலயம் | 90 | 91 | 90 | 87 | - | - | 180 | 178 | 358 |
| 9. | ஓசட்வத்த கனிஷ்ட வித்தியாலயம் | 31 | 33 | 10 | 11 | - | - | 41 | 44 | 85 |
| 10. | குமாரிமுல்ல முஸ்லிம் வித்தியாலயம் | 59 | 58 | 81 | 92 | - | - | 140 | 150 | 290 |
| 11. | கஹடோவிட பெண்கள் கனிஷ்ட வித்தியாலயம் | - | 224 | | | | | | 224 | 224 |
| 12. | மல்வான அல் முபாறக் தேசிய பாடசாலை | 375 | 401 | 497 | 303 | 33 | 27 | 905 | 731 | 1636 |
| 13. | யடிஹேன அல் முஸ்தபா வித்தியாலயம் | 69 | 57 | 29 | 15 | | | 98 | 72 | 170 |
| 14. | ஹுனுபிட்டிய முஸ்லிம் வித்தியாலயம் | 110 | 167 | 108 | 106 | | | 218 | 273 | 491 |
| 15. | மாபொல அல் அஷ்ரப் மகா வித்தியாலயம் | 179 | 183 | 252 | 194 | | 09 | 431 | 386 | 817 |
| 16. | வெலேகொட முஸ்லிம் வித்தியாலயம் | 54 | 46 | 29 | 28 | | | 83 | 74 | 157 |
| 17. | அல் ஹிலால் மத்திய மகா வித்தியாலயம் | 442 | 491 | 469 | 431 | 22 | 29 | 933 | 951 | 1884 |
| 18. | அல் பலாஹ் மகா வித்தியாலயம் | 395 | 323 | 307 | 298 | 09 | 14 | 711 | 635 | 1346 |
| 19. | காமச்சோடை முஸ்லிம் வித்தியாலயம் | 50 | 27 | 43 | 31 | | | 93 | 58 | 151 |
| | | 2999 | 2952 | 2915 | 2704 | 115 | 133 | 6029 | 5789 | 11818 |

# ஆசிரியர்கள் தொகை

| இல. | பாடசாலையின் பெயர் | பட்டதாரி விஞ்ஞா. | பட்டதாரி வர்த். | கலை | பயிற்றப் பட்ட | பயிற்றப் படாத | மற்றைய | தொகை | சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அல் அமான் ம. வி. | - | 01 | 03 | 18 | 02 | 01 | 25 | 05 |
| 2. | அலிகார் ம. வி. | - | - | 04 | 15 | 01 | - | 20 | 04 |
| 3. | பாபுஸ்ஸலாம் வி. | - | - | 02 | 07 | 02 | - | 11 | 03 |
| 4. | அல் ஹஸன் வி. | - | - | - | 05 | 01 | - | 06 | 03 |
| 5. | ஸாஹிரா வி. | - | - | 01 | 07 | 01 | - | 09 | 03 |
| 6. | அல் பத்ரியா ம. வி. | | | 09 | 14 | 09 | - | 32 | 03 |
| 7. | அல் அஸ்ஹர் ம. ம. வி. | | 02 | 14 | 20 | 16 | 05 | 57 | 07 |
| 8. | அறபா வி. | | | 01 | 11 | 03 | | 15 | 03 |
| 9. | ஓசட்வத்த க. வி. | | | | 03 | 02 | | 05 | 01 |
| 10. | குமாரிமுல்ல வி. | | | 03 | 09 | 02 | | 14 | 02 |
| 11. | கஹடோவிட பெ. வி. | | | 01 | 01 | 06 | | 08 | - |
| 12. | அல் முபாறக் தே. பா. | 04 | 03 | 10 | 32 | 05 | - | 54 | 07 |
| 13. | அல் முஸ்தபா வி. | | | 02 | 04 | 02 | | 08 | - |
| 14. | ஹாஹுணுபிட்டிய வி. | | | 01 | 08 | 06 | - | 15 | - |
| 15. | அல் அஷ்ரப் ம. வி. | | | | 10 | 03 | 22 | 02 | |
| 16. | வெலேகொட வி. | | | | 04 | 03 | 07 | 01 | |
| 17. | அல் ஹிலால் ம. ம. வி. | 02 | 02 | 12 | 33 | 11 | | 60 | 05 |
| 18. | அல் பலாஹ் ம. வி. | | | 11 | 14 | 09 | | 34 | 01 |
| 19. | காமச்சோடை வி. | | | | 03 | 05 | | 08 | |
| | மொத்தம் | 06 | 08 | 83 | 218 | 89 | 06 | 410 | 50 |

# பரீட்சைப் பெறுபேறுகள்

| இல. | பரீட்சையின் பெயர் | வருடம் | எழுதிய மாணவர் | சித்தி | விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| 1. | 5ம் வகுப்பு புலமைப்பரிசில் | 1993 | 656 | 40 | 6.09 |
| | | 1994 | 651 | 33 | 5.06 |
| | | 1995 | 683 | 49 | 7.17 |
| | | 1996 | 708 | 53 | 7.48 |
| | | 1997 | 660 | 51 | 7.72 |
| 2. | ஜீ. சீ. ஈ. சா/த | 1992 | 340 | 132 | 38.82 |
| | | 1993 | 357 | 146 | 40.89 |
| | | 1994 | 392 | 163 | 41.58 |
| | | 1995 | 455 | 194 | 42.63 |
| | | 1996 | 480 | 211 | 43.95 |
| 3. | ஜீ. சீ. ஈ. உ/த கலை/வர்த்தகம் | 1993 | 54 | 44 | 81.48 |
| | | 1994 | 66 | 49 | 74.24 |
| | | 1995 | 88 | 54 | 61.36 |
| | | 1996 | 100 | 74 | 74.00 |
| | | 1997 | 76 | 54 | 71.05 |
| 4. | ஜீ. சீ. ஈ. உ/த விஞ்ஞானம் | 1993 | 05 | 04 | 80.00 |
| | | 1994 | 11 | 05 | 45.45 |
| | | 1995 | 02 | 01 | 50.00 |
| | | 1996 | 06 | 02 | 33.33 |
| | | 1997 | 09 | 03 | 33.33 |

# முஸ்லிம் பாடசாலைகளின் பொது வசதிகள்

| | பாடசாலையின் பெயர் | நிரந்தர அதிபர் | மலசல கூடவசதி | நீர் வசதி | வாசிக சாலை | மனையியல்ஆய்வுகூடம் | விஞ்ஞான ஆய்வு கூடம் | மைதானம் | மின் வசதி | இட வசதி | விடுதி வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கல்லொளுவ அல் அமான் மகா வித்தியாலயம் | √ | × | √ | √ | × | × | × | √ | √ | √ |
| 2. | கல்-எலிய அலிகார் மகா வித்தியாயலயம் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | × |
| 3. | நாம்புளுவ பாபுஸ்ஸலாம் வித்தியாலயம் | √ | √ | √ | × | × | × | × | √ | × | √ |
| 4. | வெவல்தெனிய அல் ஹஸன் வித்தியாலயம் | √ | × | √ | × | × | × | × | √ | | |
| 5. | அல்லலாமுள்ள ஸாஹிரா வித்தியாலயம் | × | √ | √ | × | × | × | × | × | √ | × |
| 6. | கஹடோவிட அல் பத்ரியா மகா வித்தியாலயம் | √ | √ | √ | × | × | × | × | √ | × | √ |
| 7. | திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி | √ | √ | √ | × | × | √ | √ | √ | × | × |
| 8. | உடுகொட அறபா வித்தியாலயம் | √ | √ | √ | √ | × | × | × | √ | × | × |
| 9. | ஓசட்வத்த கனிஷ்ட வித்தியாலயம் | √ | × | × | × | × | × | × | × | × | × |
| 10. | குமாரிமுல்ல முஸ்லிம் வித்தியாலயம் | √ | √ | √ | × | × | × | × | √ | × | √ |
| 11. | கஹடோவிட பெண்கள் கனிஷ்ட வித்தியாலயம் | √ | × | × | × | × | × | × | × | × | × |
| 12. | மல்வான அல் முபாறக் தேசிய பாடசாலை | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 13. | யடிஹேன அல் முஸ்தபா வித்தியாலயம் | √ | √ | √ | × | × | × | × | √ | × | × |
| 14. | உறுணுபிட்டிய முஸ்லிம் வித்தியாலயம் | √ | √ | √ | × | × | × | × | √ | × | × |
| 15. | மாபொல அல் அஷ்ரப் மகா வித்தியாலயம் | √ | √ | √ | × | × | × | × | √ | × | × |
| 16. | வெலேகொட முஸ்லிம் வித்தியாலயம் | √ | × | √ | × | × | × | × | √ | × | × |
| 17. | அல் ஹிலால் மத்திய மகா வித்தியாலயம் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | × | √ |
| 18. | அல் பலாஹ் மகா வித்தியாலயம் | × | √ | √ | × | × | √ | √ | √ | × | √ |
| 19. | காமச்சோடை முஸ்லிம் வித்தியாலயம் | √ | √ | √ | × | × | × | × | × | × | × |

## உசாத்துணைகள்


1. MUSLIMS OF SRI LANKA - DR. M. A. M. SHUKRI
2. கஹடோவிட்ட வரலாறு (கையெழுத்துப் பிரதி)
3. நாம்புளுவையின் வரலாற்றுப் பாரம்பரியம் - எம். எஸ். எம். முபாறக்
4. 1992 வருடாந்தக் கலை விழா சிறப்பு மலர், கஹடோவிட
5. 65th YEAR AL-MUBARAK 1998
6. කොළ පාට සමාජය - සී. ඒ. චන්ද්‍රප්‍රේම
7. தொழிலதிபர் லாபிர் ஹாஜியார் - எம். ரி. எம். அன்ஸார்
8. පාසල් පැති කඩ - අල්-අෂ්හර් ම. ම. වි. - පූජ්‍ය රළුවේ රාහුල හිමි
9. CURRICULUM MANAGEMENT IN G.C.E. A/L CLASSES OF TAMIL MEDIUM SCHOOLS IN GAMPAHA DISTRICT,
   BY M. J. M. ASHAR B. A. (Hons.)


## தகவல் தந்துதவியோர்:-

| | | |
|---|---|---|
| 1. | புவாத் மொஹிடீன் ஜே. பி. | மாகொல |
| 2. | எம். எவ். எம். மொஹமட் | ” |
| 3. | ஏ. எஸ். எல். எம். மூஸின் | யடிஹேன |
| 4. | எம். எச். எம். லாபிர் மௌலவி | மல்வான |
| 5. | எம். ஏ. எம். சில்மி | கஹடோவிட |
| 6. | அல்ஹாஜ் எம். எஸ். எம். ஸாஹிர் | திஹாரிய |
| 7. | எம். எஸ். எம். தாஹா | வெயன்கொட |
| 8. | கமர்ஜான் நூருல்ஹக் | ஹாவுணுப்பிட்டிய |
| 9. | அல்ஹாஜ் எம். எச். எம். காசிம் | அல்கம |
| 10. | அல்ஹாஜ் எம். வை. எம். நஸீர் | கல்-எலிய |
| 11. | எம். டீ. எம். ஜாபிர் | நீர்கொழும்பு |
| 12. | கம்பஹ மாவட்டப் பாடசாலை அதிபர்கள். | |

# 7

# கலை, இலக்கியம்

மு. பஷீர்

## இலக்கியம்

நவீனத் தமிழ் இலக்கியத்துறை, தேசிய ரீதியில் பரிணாமம் பெற்று, வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்கிறது. கம்பஹ மாவட்டத்திலும் பல்வேறு நூல்கள் வெளியாகியிருக்கின்றன. கருத்தரங்கு, கவியரங்கு, உரையரங்கு என்பனவும் நடைபெற்ற வண்ணமாக இருக்கின்றன. சில பிரதேசங்களில் இலக்கிய அமைப்புக்கள் முனைப்போடு செயல்படுவதையும் அவதானிக்கிறோம். இளம் பரம்பரை எழுத்தாளர்களின் வருகையும், கரிசனையும் அவதாணிப்புக்குரியதாகிறது. குறிப்பாக இளம் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் ஆர்வமும், ஆக்கங்களும் வரவேற்கத் தக்கவைதான்.

முஸ்லிம் இளம் பெண்கள் சமூகப் பொருளாதாரக் கட்டு மானங்களுக்குள், தங்களை நிலை நிறுத்தியவாறு, ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆக்க இலக்கியத்துறையில் ஆற்றலும் ஆளுமையுமுள்ளவர்களும் மிகச் சிலரே. தொடர்ந்து கலையாக்கங்களில் முதிர்வு நிலையடையுமுன்பே சிலர் இத்துறையிலிருந்து படிப்படியாக ஒதுங்கியும் விடுகிறார்கள். தொடர்ந்து தங்கள் ஆளுமைகளை சிருஷ்டி இலக்கியத்தில் முத்திரை பதித்தவர்கள் எனக் கணிப்பீடு செய்யும் பொழுது விரல் விட்டு எண்ணக் கூடியவர்களையே அடையாளமிட முடிகிறது. இளம் எழுத்தாளர்களை சரியான திசையில் வழி நடத்தும் வாய்ப்புக்கள் அரிதாக இருக்கின்றன. புதிய எழுத்தாளர்களின் வாசிப்புத்திறன் போதாமை ஒரு காரணம். நல்ல படைப்பிலக்கிய நூல்கள் அவர்களை சென்றடையாதது மற்றுமொரு குறை.

பத்திரிகைகள் வெளியிடும் வாரமலர்களைத் தாண்டி நல்ல நூல்களை தேடித்தேடிப் படிக்கும் ஆர்வமின்மை பிறிதொரு காரணம். ஒரு சிறந்த வாசகனால்தான் ஒரு பக்குவமுள்ள எழுத்தாளனாய் பரிணமிக்க முடியும்.

சமூகவியலின் பல்வேறு அடித்தளங்களை ஆதாரமாகக் கொண்டு பல நூல்கள் வெளியாகின. கல்வி, வரலாறு, மார்க்கம், விஞ்ஞானம் போன்ற பல்வேறு பகைப்புலத்தில் நூல்கள் பிரசுரம் கண்டன. 1960க்குப் பின் நவீன இலக்கியத்தின் போக்குகளை ஆராயுமிடத்து இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எழுத்தினூடாக மார்க்க சிந்தனையையும், இலக்கிய தாகத்தையும் வளர்த்த முன்னோடிகள் வரிசையில் உலமாக்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

மௌலவிகள் யு. எம். தாஸீம், ஏ. எம். மசூத் ஆலிம், ரூஹுல் ஹக், எம். ஜே. எம். றியாழ் போன்ற சமய அறிஞர்களும் வேறு சிலரும் புதிய தலைமுறையினரின் சிந்தனா வளர்ச்சிக்கு எழுத்தினாலும், அழகு தமிழ் பேச்சினாலும் தொடர்ந்து வித்திட்டார்கள் எனலாம்.

மர்ஹூம் பாஸில் மௌலவி யு. எம். தாஸீம் இத்துறைகளில் விதந்துரைக்கத் தக்க சிறந்த பங்களிப்புக்கள் பல செய்துள்ளார். அவர் மார்க்க சிந்தனையாளர், நூலாசிரியர், பல்கலைக்கழக விரிவுரையாளர், பேச்சாளர், இலக்கியவாதி என பல தடங்களைப் பதித்தவராவார். 1964ல் மௌலவி யு. எம். தாஸீம் அவர்கள் எழுதிய 'செத்துவிடு, சமுதாயம் சீரழிந்தால்....' என்ற கவிதையிலிருந்து சில வரிகள்:

வாள் எடுக்கும் திறனுண்டு என் கரத்தில்
வழி சொல்லிக் காட்டத்தான் மக்கள் தேவை
தோள் கொடுத்து தாங்கிடுவேன் தயங்கமாட்டேன்
தட்டியெனை ஊக்கத்தான் யாருமில்லை.

வாழ் வளிப்பேன் சமுதாயம் வளம்பெற்றோங்க
வருகவென எனையழைக்கும் மாந்தரெங்கே?
கூழ் குடிக்கத் திண்டாடும் என் குடும்பம்
கடமைகளை செய்வதெவ்வாறு சொல்வீரே!

குழந்தை (சிறுகதை), அன்புள்ள தம்பி (கவிதை), பேரொளிப் பிழம்பு, சிலநாட்கள், மொழி பற்றி இஸ்லாம், குர்ஆனைக் கேளாய், சத்திய வாக்கு (1957), இருபதாம் நூற்றாண்டுக்கு இஸ்லாம் பொருந்தும் போன்ற அவரது கருத்தோவியங்கள் அவர்தம் ஆளுமைக்கு கட்டியம் கூறுபவை.

கம்பஹா மாவட்டக் கலை, இலக்கிய வளர்ச்சியை சில ஊர்களின் அடிப்படையில் ஆய்வு செய்தல் பொருத்தமாயிருக்கும்.

## கஹட்டோவிட்ட

கஹட்டோவிட்டவில் பிறந்து, மல்வானையை வசிப்பிடமாகக் கொண்டிருந்த, அல்ஹாஜ் ஏ. எம். முஸ்தக்கீம் சிறந்த கல்விமான், இஸ்லாமிய வரலாற்று ஆய்வாளர். கவிமேதை சேகு முஸ்தபா ஒலியுள்ளாஹ் அவர்கள் பற்றி விரிவான ஆய்வொன்றை 1966 களில் செய்துள்ளார். வானொலியில் கல்வி தொடர்பான தொடர் நிகழ்ச்சி, மற்றும் இலக்கிய பங்களிப்புக்கள் பல செய்து வந்துள்ளார். இவர் தம் சேவையைப் பாராட்டி முஸ்லிம் கலாசார அமைச்சு விருது வழங்கிக் கௌரவித்தது. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக உயர்பதவியும் வகித்தவராவார். சிறு நூல்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார்.

அல்ஹாஜ் எம். இஸட். அகமட் முனவ்வர் நீண்ட காலமாக வானொலி அறிவிப்பாளர். நிகழ்ச்சித் தயாரிப்பாளர். பிஞ்சுமனம் (1983) யூசுப் இஸ்லாம் சில நினைவுகள் (1985) வெளிச்சம் (1995) முஸ்லிம் எழுத்தாளர் முன்னுள்ள பொறுப்புக்கள் (தொகுப்பு) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். பேச்சுத்துறைக்கு தேசிய ரீதியில் தங்கப்பதக்கமும் பட்டமும் பெற்றவர். வானொலியில் சவுத்துல் அவ்ழா சிறுவர் நிகழ்ச்சியினையும் வழங்கி வருகின்றார். முஸ்லிம் கலாசார அருமச்சின் விருது பெற்றவராவார்.

## மல்வானை

மர்ஹூம் ஏ. எல். எம். கியாஸ் ஜே. பீ. அவர்கள் முப்பது ஆண்டுகளாகத் தினகரன் பத்திரிகையில் ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர். பயனுள்ள பல கட்டுரையாக்கங்களைத் தந்து இலக்கிய உலகிற்குக் கணிசமான சேவை செய்தவர். நாடளாவியரீதியில் பல எழுத்தாளர்களை வளர்த்துவிட்டவர்.

மர்ஹூம் மவ்லவி எம். எச். அஹ்மத் பளீல் தனது சொந்தப் பெயரிலும் அயாதுல்லாஹ் அஹ்மத் மல்வானி எனும் புனை பெயரிலும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

ஹில்மி மொஹமட் பத்திரிகையாளர், எழுத்தாளர். சிறு பத்திரிகைகள் பலவற்றின் ஆசிரியர், வானொலி, பத்திரிகை, சஞ்சிகைகளில் சிறந்த இலக்கியப் பங்களிப்புச் செய்துள்ளார்.

## திஹாரிய:

கவிஞர் நயீம் ஷரிபுதீன், கிழக்கிலங்கை புலவர் ஆ. மு. ஷரிபுதீன் அவர்களின் புதல்வர். கவிஞர் டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுதீன்

அவர்களின் சகோதரரும் ஆவர். மரபுக் கவிதை, எழுதுவதில் வல்லவர், நூலாசிரியர்; தேசிய இதழ்களில் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகி உள்ளன.

எம். ஏ. எம். கமான்: 1975 தொடக்கம் புதுக்கவிதைகள் படைத்து வருகிறார். சிந்தனை என்ற ரோணியோ இதழ்கள் பத்தை வெளியிட்டுள்ளார்.

எம். எச். எம். யாஸீன்: பத்திரிகையாளர். புனைப் பெயர் மலைமகன். தினபதி, சிந்தாமணி, தினகரன், வீரகேசரியில் சிறுகதைகள், விமர்சனம் என்பன தொடர்ந்து எழுதியுள்ளார்.

எம். எம். தாஹிர்: 1970 களில் தினகரன், சிந்தாமணி, மித்திரன் போன்ற பத்திரிகைகளில் சிறுகதைகளும் இஸ்லாமிய ஆய்வுக் கட்டுரைகளும் எழுதி உள்ளார். முஹம்மட் தாரிக், தஸ்னிமி என்பன இவரது புனைப் பெயர்கள்.

ஸீ. எம். ஏ. அமீன்: பத்திரிகையாளர், பன்னூலாசிரியர், சமூக விஞ்ஞான வரலாற்று ஆய்வாளர். அவரது நூல்கள் வருமாறு:

| | |
|---|---|
| அல் குர்ஆனும், நவீனவியலும் | 1981 |
| உணவுப்பொருளில் ஹராமானவை | 1987 |
| இந்திய கிராமியக் கதைகள் | |
| வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் ஹராமும் | |
| ஹலாலும் முயலாரின் சாகஸங்கள் | 1987 |
| சமூகப் புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்களிப்பு | |
| இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள் (1) | 1990 |
| புவியியல் துறைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு | 1992 |
| முஸ்லிம்கள் வளர்த்த அழகியற் கலைகள் | 1996 |
| ஹாத்திம் தாயி | 1997 |

கம்பஹ மாவட்டத்தில் கூடுதலான நூல்கள் வெளியிட்ட எழுத்தாளர் வரிசையில் இவர் முன்னணி வகிக்கிறார்.

மஹபாகே - வத்தளை:

அல்ஹாஜ் அல் அசூமத்: கால் நூற்றாண்டுகளாகக் கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு செய்துவரும் பலதுறை விற்பன்னர். வானொலியில் கவிதைச் சரம் என்ற நிகழ்ச்சியினை பல ஆண்டுகள் நடத்தி இளம் தலைமுறைக் கவிஞர்கள் பலரை உருவாக்கியவர். தேசிய ரீதியில் நடைபெற்ற பல போட்டிகளில் கவிதை, சிறுகதைகளுக்கு பரிசில்கள் பல பெற்றவர். எழுத்தாளுமையும்,

கவித்திறனும் மிக்க சிருஷ்டிகர்த்தாவான இவர் படைப்பிலக்கியப் பரப்பிற்கு சீரிய பங்காற்றி வருபவர். இவரது நூல்கள் வருமாறு:-

| | |
|---|---|
| புலராத பொழுதுகள் | 1982 |
| மலைக் குயில் | 1987 |
| பிழால் (ரழி) | 1988 |
| கவிதைச் சரம் | 1996 |

கவியரங்குகளில் கணீரென்ற குரலில் கவிபாடுவதில் வல்லவர்.

போர்வை - பாயிஸ் ஜிப்ரி: நீண்டகால எழுத்துத்துறை ஈடுபாடு. வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் பல ஆக்கங்கள் வெளி வந்தன. மித்திரன் வாரமலரில் இஸ்லாமிய நீதிக்கதைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். ஸவ்துல் அஹதியா பத்திரிகை யின் ஆசிரியர்.

கல்லொளுவ:

ஜெஸ்மினா கலீல்: பீ. ஏ., 1981 ஆம் ஆண்டு இலக்கியப் பிரவேசம். உருவகக்கதை, சிறுகதை, கவிதை, கட்டுரை எழுதி சஞ்சிகை, பத்திரிகைகளில் வெளியாகி உள்ளன. வானொலி முஸ்லிம் சேவை. இலக்கிய மஞ்சரி, கவியரங்குகள் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். வானொலி நாடகங்கள் எழுதியுள்ளார்.

பாரிஸ்: நீண்ட காலமாக கவிதை, கட்டுரை, ஆய்வு எழுதியுள்ளார். பத்திரிகை, சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் பிரசுரமாயின. தற்போது மொழிபெயர்ப்புத் துறையிலும் விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

எம். ஏ. எம். நிலாம் (ஈழத்து நூன்): நீண்ட காலப் பத்திரிகையாளர்; கவிதை, சிறுகதை, இலக்கிய ஆய்வு என்று 1963 ஆம் ஆண்டு முதல் எழுதி வருகிறார். சிறுகதைகள் பத்து, கவிதைகள் முப்பது, ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகள் இதுவரை படைத்துள்ளார். 1975ல் "நூன் கவிதைகள்" என்ற சிறு நூலை வெளியிட்டுள்ளார். 1987ல் மலேசியா, 1993ல் தமிழ் நாடு இலக்கிய மகாநாடுகளில் பத்திரிகையாளராகக் கலந்து கொண்டுள்ளார். மினுவாங்கொடை கலை, இலக்கிய வட்டத்தின் செயலாளராகப் பணி புரிகிறார்.

மௌலவி காதிர்கான்: பத்திரிகையாளர்; பண்டுவஸ்நுவர காதிர்கான் என்ற பெயரில் சிறுகதைகள், கவிதைகள் படைத்துள்ளார். அல் உஸ்ரா என்ற பெயரில் 1992ல் நான்கு இதழ்கள் வெளியிட்டுள்ளார்.

கலைமதி என். அகமது யாஸீன்: கவிதை, இசை, நாடகம், ஆய்வு ஆகிய துறைகளில் பங்களிப்புச் செய்துள்ளார். மஞ்சள் குங்குமம், உறவின் நிழலில், ஜீவமணி, பொற்கிளி போன்ற பத்து நாடகங்களில் நடித்துள்ளார். வானொலி இலக்கிய மஞ்சரி, கவிதைச் சரம், மாணவர் மன்றம், முஸ்லிம் நிகழ்ச்சி கவியரங்கம் நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றியுள்ளார். பத்திரிகை, சஞ்சிகைகளில் பதினைந்துக்கு மேற்பட்ட கவிதைகள் எழுதியுள்ளார்.

ருவைதா மதீன்: பத்துவருடங்களாக எழுதி வருகிறார். வானொலி, சஞ்சிகை, பத்திரிகை ஆகியவற்றில் இவரது கவிதைகள், சிறுகதைகள் வெளியாகியுள்ளன. 1989 இல் பெரிய மடு மீலாத் போட்டியில் கவிதை, சிறுகதையில் முதலாம் இடத்தைப் பெற்றார்.

ஏ. ஆர். எம். ஷாஜஹான்: தினகரன், வீரகேசரி இதழ்களில் கவிதைகள், பலவற்றைப் படைத்துள்ளார்.

மு. பஷீர்: கடந்த முப்பது ஆண்டுகளாக சிறுகதை, கவிதை, ஆய்வு,நாடகம் போன்ற துறைகளில் சீரிய பங்களிப்புச் செய்து வருகிறவர். வானொலி முஸ்லிம் சேவையில் 'வாழும் கதைகள்' என்ற நிகழ்ச்சித் தொடரை கடந்த மூன்றாண்டுகளாக வழங்கி வருகிறார். நீர்கொழும்பு கலை, இலக்கிய வட்டம், மினுவாங்கொடை கலை, இலக்கிய வட்டம் ஆகிய அமைப்புக்களில் நீண்டகாலமாக தலைவராக இலக்கியப் பணி புரிகிறார். இவரது ஊக்குவிப்பினால் எழுத்தாளராகப் பலர் உருவானார்கள். படைப்பாற்றல் மிக்கவர், சிறந்த பேச்சாளர், தேசிய ரீதியிலான கலை, இலக்கிய அமைப்புக்களிலும் அங்கம் வகிக்கிறார். இவரது 'மீறல்கள்' சிறுகதைத் தொகுப்பு 1996ல் வெளியானது. வாசகர் மட்டத்திலும், விமர்சன மட்டத்திலும் அந்நூல் சிறந்த வரவேற்பைப் பெற்றது.

நீர்கொழும்பு

மர்ஹூம் சுபைர் இளங்கீரன்: நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மூத்த இலக்கியவாதி. படைப்பிலக்கிய உலகிற்கு அளப்பரிய

பங்களிப்புக்கள் செய்தவர். இதழாசிரியர், பத்திரிகையாளர், நாவலாசிரியர், சிறுகதையாளர், நூலாசிரியர், முற்போக்கு இலக்கிய முன்னோடி, தமிழ் கூறும் உலகெங்கும் புகழ் பெற்றவர். நீர்கொழும்பு,பெரியமுல்லையில் சில காலம் வாழ்ந்து மறைந்தார். பல்வேறு மட்டங்களிலும் விருதுகள், கௌரவம் அளிக்கப்பட்டன. முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

**கள்-எலிய**

ஓட்டமாவடி அரபாத்: கவிதை, சிறுகதை, ஆய்வு போன்ற துறைகளில் நிறையப் பங்களிப்புச் செய்து வருகிறார். தேசியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் கருத்தாழமிக்க படைப்புக்களை அளித்து வருகிறார். முஸ்லிம் அகதிகள் வாழ்வின் அவலங்களை நேர்த்தியாகத் தருவதில் சிறந்து விளங்குகிறார். எரிநெருப்பிலிருந்து (கவிதை) தப்லீக் இயக்கம் அன்றும் இன்றும் (ஆய்வு) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

எம். வை. மொஹமட் நஸீர்: 1977ம் ஆண்டு முதல் தினகரன் பத்திரிகையாளராக இருந்துவருவதோடு கட்டுரை பலவற்றையும் எழுதியுள்ளார்.

எம். எம். ஸஹருன் நிஷா: மௌலவியா மாணவி; கவிதைத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டு, நல்ல கவிதைகள் பலவற்றைப் படைத்துள்ளார்.

**கம்மல்துறை**

ஏ. எல். எம். சரீப்: பத்திரிகையாளர், எழுத்தாளர். 1964 முதல் எழுத்துத்துறை ஈடுபாடு; ஐம்பது கட்டுரைகள், இருபது கவிதைகள் வரை எழுதியுள்ளார். ஈழமணி, எழுச்சிக்குரல், ஜும்மா, தினபதி இதழ்களில் இவரது ஆக்கங்கள் பிரசுரமாயின. நூருல் இஸ்லாம் (1968) கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியர்.

தாஜுதீன்: தினபதி இஸ்லாமிய பூங்கா, தினகரன் ஆலமுன் இஸ்லாம் பகுதிகளை நடத்தியவர், பத்திரிகையாளர், எழுத்தாளர், தேசிய இதழ்களில் பல்வேறு சமூக, சமய கட்டுரைகளை வடித்துள்ளார். தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் கடமையாற்றுகிறார்.

பூகொட, குமாரிமுல்ல

எம். என். ஸபியுல் அமீர்: 1983 தொடக்கம் பூகொடையூரான் என்ற பெயரில் எழுதி வருகிறார். சுமார் பத்துவருடங்களுக்கு மேலாகக் கவிதை, கட்டுரை பலவற்றைத் தேசிய இதழ்களில் படைத்துள்ளார்.

## மேலும் நூலாசிரியர்கள் விபரம்

- ✳ எம். எஸ். முனீர் - இஸ்லாமும் விளக்கமும் - நீர்கொழும்பு (1955)
- ✳ எஸ். காதர் ஹஸன் - இஸ்லாமிய உலகியல் போதினி- நீர்கொழும்பு (1955)
- ✳ ஓ. அப்துல் மஜீத் - நீர்கொழும்பு - நல்ல தாய்; உண்மையும் உலமாவும், தொழுகை அடவு (1956)
- ✳ எம். ஷல்தூக் - ஜாமியுல் அஸ்ஹர் பத்வா - நீர்கொழும்பு (1957)
- ✳ ஏ. எம். எஸ். முபாரக் அஹமத் - நீர்கொழும்பு - ஒரு நிவாரணம் (1959)
- ✳ எம். எம். எம். நூருல் ஹக், ஹுணுப்பிட்டி, வத்தளை - தீவும் தீர்வுகளும் (1998)
- ✳ எம். எஸ். அப்துஸ் ஸமது ஆலிம் - வணக்க நேர விளக்கம் (1985)
- ✳ ரஷீத் எம். இம்தியாஸ் - கன்னிமொட்டுக்கள் (1985)
- ✳ மௌலவி எம். ஜே. எம். றியாழ் - காதியானிகள் காபிர்களே (1989)

  தல்கீனும் பொருளும்
- ✳ எம். எஸ். எம். முபாரக் - நாம்புளுவையின் வரலாற்றுப் பாரம்பரியம் (1996)
- ✳ மௌலவி அப்துல் ஜலால் ஆலிம் - தஜ்வீத் (1989)
- ✳ அஷ்ஷேக் ஐயூப் அலி-நளீமி; எம். ஏ. - இஸ்லாமிய ஆய்வுக் கட்டுரைகள்
- ✳ ஹொரகொல்ல ஐ. ஏ. ரஹ்மான் - நேசக் கரங்கள்

கஹட்டோவிட்ட சிராஜ் எம். ஷாஜஹான்: பத்திரிகையாளர், எழுத்தாளர், கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார்.

பிஸ்ஸியா ஹமீத் - கல்லொளுவ; ஹெந்தல ஸீனியா ரசாக்; பாதிமா நஸ்வா - வத்தளை; ராஹிலா தௌபீக்-மாபொல; எஸ். கமர்ஜான் பீபீ - ஹுணுப்பிட்டி; மெஹருன் நிஸா, ரிபாத் - மாபொல, ஆகிய எழுத்தாளர்களும் இலக்கியப் பங்காற்றி வருகிறார்கள்.

**இளம் எழுத்தாளர், கவிஞர்கள்**

| | | |
|---|---|---|
| பூகொட | - | ஸீனத் ரஹ்மா<br>பர்சானா ஹனிபா<br>ருமையா அகமட் |
| பஸ்யால | - | ரம்ஸா பேகம் |
| கஹட்டோவிட்ட | - | மொஹமட் நிஸார்<br>ஸாலி பிர்தௌஸ்<br>முஹ்ஸீன் ஹுசைன்<br>எம். ஆர். அஸ்மா |
| மினுவன்கொட | - | எம். எச். ஸரீனா<br>பாத்திமா ரிஸ்வியா<br>எஸ். எஸ். பருசா<br>முஹம்மது ரிலா<br>சித்தி நிஸா ஐயூப் |
| நீர்கொழும்பு | - | ரம்ஸா மொஹிதீன்<br>பாத்திமா பியாஸா இம்ரான் |
| மல்வானை | - | எப். எம். ஆயிசா<br>ஏ. பி. ஹபீபா |
| கொச்சிக்கடை | - | எம். எல். எம். சர்ஹான் |
| உடுகொட | - | மஸ்யா நூருல் ஹம்ஸா |

முஸ்லிம் எழுத்தாளர்களின் ஆக்க முயற்சிகளையும் அவர்தம் குறிப்புக்களையும் இதுவரை அறிந்தோம். இது ஒரு முற்று முழுதான ஆய்வல்ல. ஆய்வின் ஆரம்பமே. இதுவரை முழு மாவட்டத்தின் கலை, இலக்கிய பங்களிப்புகள் பற்றிய பதிவுகள் துர்அதிர்ஷ்டவசமாக இன்னும் வரவில்லை.

வெளிவந்துள்ள படைப்புகளின் ஆழம், செழுமை, நேர்த்தி பற்றிய சரியான விமர்சனங்கள் தேவை. ஆய்வாளர்கள் படைப்பாக்கங்களின் உருவ, உள்ளடக்க சிறப்புப்பற்றி அல்லது அவற்றின் சாதக பாதக நிலைபற்றி விமர்சிக்க முன்வரவேண்டும்.

## கலை

எந்தவோர் இனத்தினதும், கலாச்சார, வரலாற்று விழுமியங்களை கலை, இலக்கியத்தினூடே தரிசிக்கலாம். ஒரு நாட்டினது வரலாற்றுப் பாரம்பரியத்திற்குச் செழுமை சேர்ப்பது, அந்த மண்ணின் கலை, இலக்கியங்களே. மக்களின் பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல் நீரோட்டம், எழுச்சி, போராட்டம், சமூக நடைமுறை, சித்தாந்தம் என்பனவற்றைக் கலை இலக்கியத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கம்பஹ மாவட்டத்தில் வாழுகின்ற முஸ்லிம்கள் சிங்களப் பிரதேசங்களைச் சூழ, பிரதேச வாரியாகச் சிறு சிறு குழுக்களாகக் கூட்டாகவே வாழ்கின்றனர். பிற மாவட்ட முஸ்லிம் கிராமங்களைப் போலவே, இங்கும் முஸ்லிம்களின் பாரம்பரியக் கலைகள் என்று கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்:

1. கழிகம்பு
2. சீனடி
3. சிலம்படி
4. மேடை நாடகம்
5. பதம்பாடுதல்
6. பைத் ஓதுதல்
7. ரபான் இசை

இப் பாரம்பரியக் கலைகளின் வெளிப்பாடும், பிரவாகமும், அணையுடைத்த வெள்ளமாய், பள்ளிக் கந்தூரி வைபவங்களிலும், திருமண ஊர்வலங்களிலும், வீட்டுக் கந்தூரி மஜ்லிஸ்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளாய் அரங்கேறின. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை, இக்கலைகள் கிராம மக்களின் வரவேற்பைப் பெற்றன. இதில் ஈடுபாடு கொண்டவர்களை வாத்தியார், மாஸ்டர், ஒஸ்தாத், லெவ்வை என்று சிறப்பு நாமங்களிட்டு மக்கள் விளித்தனர். அந்நாட்களில் கழிகம்பு, சீனடி, சிலம்பு, மேடை நாடகம், பக்கீர்பைத் போன்ற நிகழ்ச்சிகளை கிராமத்து மக்கள் உவகையுடன் வரவேற்றனர்.

கந்தூரி வீட்டுச் சபையில் பதம்பாடும் நிகழ்ச்சிக்காகச் சாப்பாடு பரிமாறும் நேரத்தைக் கூடத் தாமதப்படுத்துவார்கள். இந்தத் தாமதம் சாப்பிட வந்தவர்களைச் சலிப்படையச் செய்வதில்லை.

பதம்பாடுதல் கந்தூரி நிகழ்ச்சிகளில் முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது. ஒருவரையொருவர் வெல்லும் வகையில், உச்சஸ்தாயியில் குரலெடுத்துப் போட்டிக்குப் படிப்பார்கள். கேட்பவர்க்கு இவை ரசனையாயிருக்கும். சிலம்படி, சீனடி விளை யாட்டில் வெவ்வேறு பிரிவுகளின் தலைவர்கள் போட்டியில் குதித்து மோதிக் கொள்வார்கள். வேகமாய்ச் சுழன்று விளையாடித் தங்கள் தங்கள் வித்தகத் தன்மைகளைச் சபைக்குக் காட்டுவார்கள்.

கழிகம்பு விளையாடுபவர்கள் குழுக்களாகப் பிரிந்து பம்பரமாய்ச் சுழன்று, மீண்டும் இணைந்து பாடல், பைத்து மொழிந்தவாறு கழிகம்பின் தாளலயத்தோடு வேகமாக இக்கலையைச் செய்து காட்டும்போது பார்ப்பவர்கள் மனதில் குதூகலம் பொங்கும். இந்தக் கலைகள் அனைத்தும் (மேடைநாடகங்கள் உட்பட) வடக்கு, கிழக்குக்கு வெளியே முஸ்லிம் கிராமங்களில் இன்று படிப்படியாக மங்கி மறைந்து போன நிலைதான்.

இக்கலைகளுக்கு வயதாகிப் போயினவா? அல்லது இவற்றைச் செய்து வந்த கலைஞர்கள், மூப்பு, வறுமை-வாழ்வுப் போராட்டம் ஆகியவற்றில் உழன்று மூச்சடைத்து அன்னியமாகிப் போயினரா? என்பது இன்றையக் கேள்வி. மேடை நாடகங்களை சமூகப் பிரக்ஞையோடு செய்துவந்த பல முஸ்லிம் கலைஞர்கள், மார்க்கப் பிரச்சார எதிர்ப்புகள் காரணமாக நமக்கேன் வம்பு என்று ஓரம் கட்டிவிட்டார்கள்.

கலாசார ரீதியாக, அறிவு பூர்வமாகச் சிந்தித்தால்- நமக்கெனத் தொடர்ந்து வந்த, நமது தனித்துவத்தைப் பறைசாற்றி நின்ற, இப் பாரம்பரியக் கலைகளின் வீழ்ச்சி, ஆரோக்கியமான விஷயங்களல்ல. மேடை நாடகங்களை பள்ளிக்கூட மட்டங்களில் மாணவர்கள் கலை விழாக்களில் அடிக்கடி அரங்கேற்றி வருகிறார்கள். சில குக்கிராமங்களில், அபூர்வமாக இக்கலைகளில் சிலவற்றை அவ்வப்போது செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் நடைபெறும் தேசிய மீலாத் விழாக்களில் முஸ்லிம் பாரம்பரிய கலைகளுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிகள் நடைபெற்று வந்தாலும் கூட, இந்தப் பாரம்பரியக் கலைகள் வளர்ச்சியின்றி, உயிர்த்துவமின்றி ஷீணித்துப் போவது, கவலைக்குரிய உண்மை யாகும். நமது பாரம்பரியக்கலைகளை பின்தள்ளிக் கொண்டு, ஜப்பானிய சீனக் கலைகள் முன்னேறி வருகின்றன. கராட்டி, ஜூடோ, குங்பூ போன்ற கலைகள் முன்னேறி வருகின்றன. கராட்டி, ஜூடோ, குங்பூ போன்ற கலைகளும் பயிற்சிகளும்

இளைஞர் குழாத்தை ஈர்த்து வருகின்றன. இக்கலைகளின் நுட்பத்திறனில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள் திருப்திகரமானதாய் இல்லை.

பழையன கழிதலும் புதியன புகுதலும் கால மாற்றத்தின் அசுர சுழற்சியில் சாதாரணமாய்ப் போயின. மாற்றங்களும், மாறுதல்களும் மாறி மாறி வரும் சமூக அமைப்பில் தவிர்க்க முடியாதவை ஆயின.

சினிமாவும், நாடகங்களும், திரையரங்குகளிலும், மேடைகளிலும் களை கட்டியிருந்த காலங்கள் போய், அவற்றை மக்கள் இல்லங்களில் இருந்தவாறு தொலைக்காட்சியில் பார்த்து இரசிக்கின்ற மாற்றங்கள் நிகழ்ந்தன. கிராமங்களின் தனித்துவமும் எழிலும் விலகியோடி, படிப்படியாக நகரமயமாகலில், மரங்களின் குளிர்மையும், கிராமிய இயல்பும் போய், கட்டிடக் காடும், இயந்திரத் தனங்களும் பிரவேசிக்கத் தொடங்கி விட்டன.

இந்த மாற்றங்கள் நமது சமூக, பௌதீக, பொருளாதார வாழ்வில் புதிய கோணங்களைத் தோற்றுவிக்கும் காரணிகளாயின. இந்தப் பின்னணியில் தான், நமது முஸ்லிம் பாரம்பரியக் கலைகளின் பின்னடைவு குறித்து நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்தக் கலைகளை மீண்டும் கட்டியெழுப்புவது எவ்வாறு? நமது மூதாதையர்களின் இந்தக் கலைச் சொத்துக்களை, இளம் தலைமுறையினருக்கு எவ்வாறு ஊட்டலாம், பயிற்றுவிக்கலாம், ஊக்குவிக்கலாம் என்பதைப் பற்றிய சிந்தனை, வரையறைகளை முஸ்லிம் அறிஞர் உலகம், கரிசனையோடும், கடப்பாடோடும் ஆழமாய் ஆராய வேண்டும் என்பது நமது தேவையாகிறது. இந்தக் கலைகளின் ஜீவித நியாயங்களுக்கு அரசின் ஒத்துழைப்பை வேண்டி நிர்ப்பந்திப்பது கலைத்துறை சார்ந்த அனைவரினதும் கடமையாகும்.

இம்மாவட்டத்தில் பல்வேறு கலைத் துறைகளுக்கும் பங்களிப்புச் செய்த பல முஸ்லிம் கலைஞர்கள் இருக்கின்றார்கள். ஆற்றலும், ஆளுமையும் மிக்கவர்களாகப் பலர் திகழ்ந்திருக்கிறார்கள். ஆனாலும், எல்லாப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு, தங்கள் தங்கள் துறைகளில் சளைக்காமல் தொடர்ந்து நின்று தாக்குப் பிடித்தவர்கள் மிகச் சிலரே. ஒவ்வொரு கலைத்துறையையும், தொட்டவர்கள், தொட்டு விட்டவர்கள், சில கால பங்களிப்புக்குப் பின், பலகால அஞ்ஞாத வாசம், இப்படிப் பலரை ஆராயலாம்.

மொத்தத்தில் இந்தக் காரண காரியங்களோடு, இப்பிரச்சினை களை ஆராயும்போது, முஸ்லிம் கலை, இலக்கியப் பங்களிப்புக்கள் தூரத்து வெளிச்சங்களாகவே கண் சிமிட்டுகின்றன.

**கலைத்துறையில் பங்காற்றியவர்கள் பற்றிய சில குறிப்புக்கள்:-**

கம்மல்துறை

எம். எம். தாஸீம்: 1970 களில் தய்யார் சுல்தான், யார் செய்த கொலை, தம்பியின் கொடுமை போன்ற பல மேடை நாடகங்களை உருவாக்கி நடித்துள்ளார். கொட்டாரமுல்ல, கம்மல்துறை ஆகிய பிரதேசங்களில் இந் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

இப்பகுதியில் 1950 களில் நெய்னா முஹம்மது, சேகு முகைதீன், அப்துல் ஹமீத், சுலைமான், சின்ன சுலைமான், தாஹிர் ஆகியோர் சிலம்படி வித்தையில் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தனர்.

ஏ. எம். இக்பால்: கம்பு, சிலம்படி, வாட்சண்டை, சுருட்டுவாள் வீசுதல், சீனடி, மடுவிளையாட்டு, தீப்பந்தம் சுழற்றுதல் ஆகிய கலைகளில் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகள் முன்னணி வீரராகத் திகழ்ந்துள்ளார். தென்னிந்திய நெய்னா முஹம்மது வாத்தியாரிடம் வித்தைகள் பயின்ற இவர், கொப்பலு ஹன்ட சிங்களத் திரைப்படம், தம்பியின் கொடுமை மேடை நாடகம் ஆகியவற்றில் நடிப்பு, சண்டைக் காட்சி ஆகியவற்றைத் திறன்படச் செய்துள்ளார். இவரோடு இத்துறைகளில் இணைந்து பணியாற்றியவர் எம். எம். தாஸீம் ஆவர்.

திஹாரிய

கே. எம். ஏ. மொஹிதீன்: மூத்த வானொலிக் கலைஞர்; ஏராளமான முஸ்லிம் நாடகங்களில் நடிப்பு, எழுத்துப் பிரதிகள் என்று சீரிய பங்களிப்புக்கள் செய்துள்ளார்.

நீர்கொழும்பு

எஸ். ஐ. எம். கலீல் பீ. ஏ.: நாடகம், நடிப்பு, பேச்சு, எழுத்து ஆகிய துறைகளில் பாடசாலையில், கல்லூரிகளில் திறமையான கலைப்பணி செய்தவர்.

கல்லொளுவ

ஏ. சீ. எம். யாஸீன், ஜே. எம். சாதிக்கீன், மீரஸா, ஏ. எம். மஸாகிர், நிலார் ஆகியோர் மேடை நாடகத்துறையில் ஊக்கம் காட்டி வந்துள்ளனர். ஒலி நாடாவில் இவர்களது முயற்சிகள் பதியப்பட்டுள்ளன.

எம். ரி. முஹம்மது ரபீக் சிங்கள இசை மேடைகளில் தமிழ், சிங்களம், ஹிந்தி பாடல்கள் பலவற்றைப் பாடிப் புகழ் பெற்றவர்.

மினுவாங்கொடை

எம். ஜே. எம். அன்ஸார்: கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக மெல்லிசை, இஸ்லாமிய கீதம், பொப் பாடகர் எனத் திகழ்கின்றார். 150 பாடல்கள் வரை வானொலி, தொலைக்காட்சிகளில் பாடியுள்ளார். இனிமையான குரல்வளம் வாய்க்கப் பெற்றவர். சகல துறைகளிலும் ஈடுபாடுடையவர். பதினேழு ஆண்டுகளாகத் தொடர்ந்து மினுவாங்கொடை பட்டினசபை உறுப்பினராகக் கடமையாற்றியுள்ளார். மினுவாங்கொடை கலை, இலக்கிய வட்டத்தின் பொருளாளர்.

குடியைக் கெடுக்கும் குடியைத் தொடாதே!
உன்னைக் கண்ட நாள் முதலாய் முத்தம்மா!
வருக நீ இளைஞனே!
இந்து சமுத்திரத்தின் முத்து ஸ்ரீலங்கா!
இரு முனையும் கூர்மையான பிறை நிலாவே!
இதயமெங்கும் நிறைகிறாயே பிறை நிலாவே!

போன்ற பல பாடல்கள் மூலம் பிரக்கியாதி பெற்றவர்.

மர்ஹூம் ஹஸன் தீன், சாலிஹ், பொஃட்டலெவ்வை, ஹம்துன் லெவ்வை ஆகியோர் இப்பிரதேசத்தில் அந்நாட்களில் பதம்பாடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.

பூகொட-குமாரிமுல்ல

ஏ. எம். எம். நயீம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்): பாரம்பரியக் கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பல்துறைகளிலும் பங்களிப்புக்கள் செய்துள்ளார். இவர், பத்திரிகைகளில் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

**கள்-எலிய**

மூசின் மரைக்கார் (ஓய்வு பெற்ற ஆசிரியர்): 1946ஆம் ஆண்டு முதல் பல நாடகங்களை மேடையேற்றியும் நடித்தும் உள்ளார். மூத்த கலைஞரான இவர், கழிகம்பு, பாடல் போன்ற கலைகளில், விழாக்கள், மேடைகள் பலவற்றில் கலைப்பணி புரிந்துள்ளார். நீண்ட காலமாக இத்துறைகளோடு தொடர்புடையவர். பிரதேசத்தின் முதல் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**திஹாரிய**

எம். எம். தாஹிர்: இவர் மேடை நாடகங்கள் பலவற்றை எழுதியுள்ளார். நிலம்-நெருப்பு (மேடை நாடகம்), விதி அலைகள் (தொலைக்காட்சி நாடகம்) என்பன இவரது நாடகங்களாகும். நலவுரியன், தாஹிர்ஜி போன்ற புனைப் பெயர்களில் கவிதைகள் பலவற்றைப் பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.

எம். ரி. எம். முனாஸ்: மேடை நாடக இயக்குனர்; பிரதியாக்கம், நடிப்பு ஆகிய துறைகளில் சிறந்த பங்காற்றி யுள்ளார். தங்கமனசு, இப்படியும் சில மனிதர்கள் (1976), எனும் நாடகங்கள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை. சிறுகதை, கவிதை நிறையவே எழுதியுள்ளார். அதிர்ஷ்டம், கைக்கடிகாரம், யார் நீ போன்றசிறுகதைகள் வெளிவந்தன. 1970களில் சிறந்த மேடை அறிவிப்பாளர். நிபாஹிரா மணவாளர், முக்தானா என்பன இவரது புனைப் பெயர்கள்.

**ஹுணுப்பிட்டி-வத்தளை**

எம். எச். பௌசுல் அமீர்: ஒரு பல்துறைக் கலைஞர். கடந்த முப்பது ஆண்டுகளாக வானொலியில் பல்வேறு கலைச்சாதனைகள் புரிந்தவர். நடிப்பு, பிரதியாக்கம், தயாரிப்பு, வானொலி சேவையில் புகழ் பெற்றவர்.சிறந்த இஸ்லாமிய கீதப் பாடகர், திறமையுள்ள எழுத்தாளர்.

**கம்மல்துறை**

எம். எஸ். எம். சலாகுத்தீன்: சுருதி பிசகாமல் பதம் பாடுவதில் வல்லவர். தென்பாண்டி மண்டலம், செல்வில் நகரம், தமிழ் சாஸ்திர நிபுணர் ஏ. எம். ஏ. நெய்னார் முஹம்மது பாவலர் அவர்களால் கொழும்பில் அச்சிடப்பட்ட ஆசிக் அவதார மாலை

1947ல் மட்டக்களப்பு ஒலுவில், த. மா. செய்யது இப்ராஹிம் மௌலானா அவர்களால் இயற்றப் பெற்றது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஆசிக் அவதார மாலையை (பைத்) மனனம் செய்து, பல இடங்களில் சுருதி சுத்தமாகப் பாடி வருபவர் - கம்மல்துறை எம். எஸ். எம். சலாகுத்தீன்.

நீக்க வேண்டும் காண் பெருந்துடக்கை
நீக்காமல் அமலொன்றும் கூடாதென்று
ஆக்கும் வகை, முழுக்கானது
அறியாதிருப்போர் ஹறாமாவது,
நோக்கமுடன் குர்ஆன், தொழுகை
நன்மைக்காக அதை ஓதுவதும்
ஊக்கமுடன் தொழுகை தொழுவதும்
ஓர்மையாய் பள்ளியில் புகுவதும்.....!

(ஆசிக் அவதார மாலை)

# 8

# பொருளாதார அமைப்பும் தொழில்களும்

எம். எச். ஏ. ஸல்மான்

1. பூர்வீக, போர்த்துக்கீய, ஒல்லாந்தர் காலத் தொழில்கள்.
2. ஆங்கிலேயர் காலத் தொழில்கள்.
3. சுதந்திரத்தின் பின் விவசாயம், வர்த்தகம், பழச்செய்கை, சிறு கைத்தொழில்கள், பாரிய தொழில் முயற்சிகள் என்பன.
4. எதிர்காலத்தொழில் வாய்ப்புகள் - வர்த்தகம், கைத்தொழில்கள், பிறநாட்டு தொழில் வாயப்புக்கள்.

## கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் பொருளாதாரமும் தொழில்களும்

"சமூக வரலாற்றை அறியாத பொருளாதார வரலாறு வெறுமையானது-அரசியல் வரலாறு விளங்கிக் கொள்ள முடியாதது" - ஜே. எம். ரவிலியன், வரலாற்றாசிரியர்.

கம்பஹ மாவட்டம் சுமார் 712 சதுர மைல்களைக் கொண்டது. இலங்கையில் இரண்டாவது அதிக சனத்தொகையைக் கொண்டது. மாவட்ட மொத்த சனத்தொகையில் 1981ன் சனத் தொகைக் கணிப்பின்படி 2.7% முஸ்லிம்கள். பதின்மூன்று தேர்தல் தொகுதிகளைக் கொண்ட இம் மாவட்டத்தில் நீர்கொழும்பு தேர்தல் தொகுதியிலேயே அதிக சனத்தொகையும், வாக்காளர்களும் உள்ளனர்.

கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் பொருளாதார, தொழில் முறை அமைப்பைப் பற்றி அறிய முன்னர் கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் ஆரம்பக்குடியேற்ற வரலாற்றை அறிவது அவசியம். கி.பி 12ம், 13ம் நூற்றாண்டுகளில் பிற நாட்டார் படையெடுப்புகளின் பின்னர் உலர் வலயத்திலிருந்கு ஈர

வலயத்திற்கு குடியேற்றங்கள் புலம் பெயர்ந்தன. குருநாகல், தம்பதெனிய, யாப்பாகுவ என்பனவும் இறுதியாக கோட்டையிலும் தலைநகர் அமைந்ததோடு அநுராதபுர, பொலன்னறுவை இராச்சிய காலத்தில் வர்த்தக நோக்கங்களுக்காக இலங்கை வந்த அரேபியர், மாதோட்டம் போன்ற இடங்களில் பலமான வர்த்தகக் குழுக்களாக குடியேறி இருந்தனர்.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது கோட்டை இராச்சியத்தில் ஒரு சிறிய முஸ்லிம் வர்த்தக சமூகம், புத்தளம், கல்பிட்டி, சிலாபம், கொழும்பு, நீர்கொழும்பு, பேருவளை, காலி, வெலிகம துறைமுகங்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் கறுவா, மாணிக்கக்கற்கள், பாக்கு, யானைகள் போன்று ஏற்றுமதியில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

(ஆதாரம்: இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி 1617-1638, கலாநிதி சீ. ஆர். டி. சில்வா-கலாநிதிப் பட்டத்திற்காக இலண்டன் பல்கலைக்கழகத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.)

போர்த்துக்கேயர் கால முஸ்லிம்களின் வர்த்தக, பொருளாதார நடவடிக்கைகளை ஆராயப் பல்வேறு மூல நூல்களும், பிற சான்றுகளும் உள்ளன. குவெய்ரோஸ் சுவாமிகளின் இலங்கையை ஆன்மீக, லோகாதாய கைப்பற்றல் (SPIRITUAL ANDTEMPORAL CONQUEST OF CEYLON - FATHER QUYEROZ) ரிவேரோவின் சிலாவோ (CEILAVO)என்ற நூலும் போர்த்துக்கேய நில உறுதிகளும் - தோம்பு (TOMBOS) இந்நடவடிக்கைகளைப்பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன. வர்த்தகத்திற்காகவும் (வாசனைத் திரவியம்) கிறிஸ்தவ மத மாற்றத்திற்காகவும் கீழைத் தேயங்களுக்கு வந்த போர்த்துக்கேயர் இவ்விரு விடயங்களிலும் முஸ்லிம்களின் எதிரிகளாக விளங்கினர். போர்த்துக்கேய தளபதிகளின் நடவடிக்கைகளில் இப் போக்கே காணப்படுகிறது. சீதாவக்கை இராச்சியத்தின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் பங்கு கொண்ட முஸ்லிம்கள் வர்த்தகம், ஆயுதப்படை இரண்டிலும் பங்காற்றியிருப்பதுபற்றி அக்காலச் சிங்கள இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

போர்த்துக்கேயர் காலத்தில் பல்வேறு காலங்களில் அவர்களது பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுள்ளன. முதலில் கொழும்புத் துறைமுகத்திற்குச் சூழவுள்ள பகுதியிலிருந்து உட்பகுதிக்கு இடம்

பெயர்ந்தனர். இக்காலப் பகுதியில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்ச்சி மல்வானையில் களனி கங்கைக் கரையில் ரக்ஸபான பகுதியில் கோட்டையொன்று அமைக்கப்பட்டு தலை நகராக்கப்பட்டமை. இது 1594 முதல் 1612 வரை அசிவிடோ என்ற தளபதி அவிஸ்ஸாவளையில் அமைந்த சீதாவக்கை இராச்சியத்தையும், களனி நதி மூலம் கண்டிய ராச்சியத்தையும் கட்டுப்படுத்துவதற்காகும். சுமார் இருபது வருடங்களுக்கு மேல் மல்வானை அசிவிடோ, கொன்ஸ்டன் டிசூஸா என்ற இரு முக்கிய தளபதிகளின் தலைநகராக அமைந்தது. இக் காலப்பகுதியை இலங்கை வரலாற்றில் மல்வானைக் காலப் பகுதிக்காலம் என்றும் குறிப்பிடலாம், களனி ஆற்று வழியாகவும் ருவான்வல்லைக்கு ஊடாகவும் கண்டி இராச்சியத்திற்கும் கரையோரப் பகுதிகளுக்கும் இடையில் நடைபெற்ற வர்த்தகம் பற்றிய குறிப்புகள் போர்த்துக்கேய மூல ஆதாரங்களில் காணப்படுகின்றன.

1626ம் ஆண்டில் முஸ்லிம்களின் குடியேற்றங்களிலும், தொழில் முறையிலும் ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது. கொன்ஸ்டன் டி சூஸா முஸ்லிம்களை போர்த்துக்கேயரின் பிரதேசங்களிலிருந்து விரட்டியடித்தான். இவர்களுக்கு அப்போது கண்டி மன்னன் அடைக்கலம் கொடுத்ததோடு சுமார் நாலாயிரம் பேரை மட்டக்களப்புப் பகுதியில் குடியேற்றினான். வேறு'சிலர் கண்டிக் கிராமங்களில் குடியேறி தமது வர்த்தக முயற்சிகளை பெருக்கத் தொடங்கினர். ஏற்கனவே இவர்கள் போர்த்துக்கேயப்பகுதியில் வர்த்தக முயற்சியில் ஈடுபட்டிருந்த அனுபவம் இவர்களின் தொழில் முயற்சியினை விஸ்தரிப்பதற்குப் பெரிதும் உதவியது. போர்த்துக் கேயர் ஆரம்ப காலங்களில் முஸ்லிம்களும், ஏனைய சமூகத்தவர்களும் கண்டியுடன் தொடர்புகள் வைத்திருப்பதைத் தடை செய்திருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி பெறவில்லை.

### டச்சுக்காரர் காலம்

மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் 1658ல் டச்சுக்காரர்கள், பிரதான வர்த்தகத்தைக் குறிக்கோளாகக் கொண்டு தமது ஆட்சியை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். டச்சுக்காரர் காலத்தில் முஸ்லிம் குடியேற்றங்களும் வர்த்தகம் என்பனவும் விருத்தியுற்றன. நாட்டின் உட்புறங்களுக்கும் செல்வாக்கை ஏற்படுத்தத் தொடங்கியது. கண்டி கொழும்பு தரை வழிப்

போக்குவரத்துப் பாதையில் திஹாரிய, பஸ்யாலை, வறக்காப்பொல என்பனவும் களனி ஆற்று நீர் வழிப் போக்குவரத்தை மையமாகக் கொண்ட மல்வானை, பூகொடை என்பனவும் நிரந்தர வர்த்தகக் குடியேற்றங்களாக மாறியிருந்தன. 1712ம் ஆண்டு இலங்கையில் பிரயாணம் செய்த (Winter Gest) என்ற பிரயாணி தனது நூலில் களனி ஆற்று வழியே முகத்துவாரத்திலிருந்து மல்வானைக்குச் சென்றதாகவும் அங்கு வாழ்ந்த முஸ்லிம்களின் வீட்டுக்கு முன் உள்ள மரங்களை வெட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். மல்வானையில் ஒரு வியாபார சமூகம் இருந்தமையும் ஓட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட "ஓட்டு மீராலெப்பை" என்பவர் ஒரு பள்ளிவாசல் கட்டியமை பற்றியும் குறிப்பிடப்படுகிறது. 1750ல் பஸ்யாலையில் தென்னிலங்கையில் "பெந்தர" பகுதி முஸ்லிம்கள் வர்த்தக நோக்கில் குடியேறினர். இக் குடியிருப்புக்கள் பற்றியும் தொழில்கள் பற்றியும் சில வரலாற்றுக் குறிப்புகளை நாம்புளுவையின் வரலாற்றுப் பாரம்பரியம் என்ற நூல் குறிப்பிடுகிறது.

இந்நூலின் 13ம் பக்கத்தில் கி.பி 1760-1765க்கு இடைப்பட்ட காலத்தில் பெந்தர மரிக்கார் தலைமையில் ஒரு குடும்பமும் அம்பை முகாந்திரம் தலைமையில் ஒரு குடும்பமுமாக வந்தமையும் 1850-1900க்கு இடைப்பட்ட காலத்தில் அண்மைக் கிராமங்களான அல்லலமுல்ல கொடாம்ப, வேவல்தெனிய, ஹொரகஸ்மங்கட, அத்தனகல்ல, கள்-எலிய, வறக்காபொல, தியல்ல, அல்கம போன்ற பகுதிகளுக்கும் தொழில் வாய்ப்புக்களுக்கும் திருமணத் தொடர்புகளுக்கும் சென்றமையும் குறிப்பிடப்படுகிறது.

வர்த்தகம் பெரும்பாலும் கோப்பி, மிளகு, கறுவா, பாக்கு என்பனவற்றைக் கொழும்புப் பகுதிக்கு அனுப்பும் நோக்கத்தை கொண்டிருந்தது. தனியாகவும் குழுக்களாகவும் இவர்கள் ஈடுபட்டிருந்தனர். கண்டிக்கு உப்பு, கருவாடு, உடுதுணிகள், வீட்டுப்பாவனைப் பொருட்கள் எடுத்துச் செல்லும் பொட்டணி வியாபாரிகள் ஒரு தனி வியாபார சமூகமாக ஒவ்வொரு கிராமத்திலும் இயங்கி வந்தனர். களனி ஆற்றுப் போக்குவரத்தில் தெப்பம், தோணி இயக்குபவர்கள் மல்வானை, பூகொடைப் பகுதியில் தற்போதும் "தண்டல்" என்ற குடும்பப் பெயரால் அழைக்கப்படுகின்றனர். அத்தோடு "தவளம்" முறையில் தங்குமிடங்கள் அமைந்த பகுதிகளுக்கு உணவு, எருதுகளுக்கான வைக்கோல் என்பன விற்பதற்கு மல்வானை, கஹடோவிட்ட

பகுதி முஸ்லிம்கள் சென்று பின்னர் அங்கு நிரந்தர வர்த்தகக் குடிகளான ஆதாரங்கள் உண்டு.

பிரித்தானியர் காலம்

போக்குவரத்து வசதிகள் குறைந்த அக் காலத்தில் பல்வேறு நாள் நீடிக்கும் தவளம் முறையில் அமைந்த போக்குவரத்து ஏற்பாட்டில் பொதி சுமக்கும் எருதுகளுக்கு உணவு, தண்ணீர், ஓய்வு என்பன தேவைப்பட்டன. அத்தோடு இத்தோடு செல்லும் வர்த்தகர்களுக்கு உணவு சமைத்தல், ஓய்வு என்பனவற்றிற்கும் இடங்கள் தேவைப்பட்டன. இந்த ஓய்விடங்களே பின்னர் ஏற்படவுள்ள குடியிருப்புகளுக்குக் கருவாக அமைந்தன. (ஆதாரம்: இலங்கையில் முஸ்லிம்கள் கி.பி 900 - 1900 - லோர்னா தேவராஜர்).

1818ம் ஆண்டு கண்டி பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர் ஒழுங்குபட்ட வர்த்தக சமூகமாக மாறும் போக்கை அவதானிக்கலாம். பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை விருத்தி, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, தபால் விநியோக முறை வர்த்தக விருத்திக்கு உதவின. பிரித்தானியர் கால வர்த்தக விருத்தி பற்றிக் கலாநிதி காமில் அஸாத் தனது 'பிரிட்டிஷ் காலத்தில் முஸ்லிம்கள்' என்ற நூலில் 110-113 ம் பக்கங்களில் முஸ்லிம்களின் வர்த்தக அமைப்புகள் பற்றியும் அதன் எழுச்சி பற்றியும் அட்டவணைப் படுத்திக் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் சில -

1. ஏ. எல். எம். ஆலிம் நிறுவனம் 1820 - 1920
   கட்டிட தளபாடம்.
2. ஏ. எம். அஸ்ஸன மரிக்கார் நிறுவனம் 1840
   கட்டிட தளபாடம்.
3. ஐ. எல். எம். நூர்தீன் ஹாஜியார் நிறுவனம் 1840
   தோட்டாக்கள், வெடி பொருட்கள்.
4. எம். சி. ஜுனுஸ் நிறுவனம் 1855
   நகைகள், மாணிக்கக்கற்கள்.
5. எஸ். எல். நெய்னா மரிக்கார் 1859-1930
   புடவை வர்த்தகம்.

6. சி.எல். மரிக்கார் பாவா 1869 - வைரக்கற்கள், மாணிக்கம்

7. ஓ. எல். எம். மாக்கன் மாக்கார் 1860 - நகை, மாணிக்கம்

8. அப்துல் ரகீம் நிறுவனம் 1872 - வீட்டுப் பாவனைப் பொருட்கள்

9. ஏ. எச். ஜபர்ஜீ 1870 - தரகர்கள்

10. அப்துல் லத்தீப் நிறுவனம் 1887 - 1983 - வீட்டுப்பாவனைப் பொருட்கள்

11. ஏ. எச். ஹமீத் நிறுவனம் 1886 - 1983 - நகை, மாணிக்கம்

12. என். டி. எச். அப்துல் கபூர் 1895 -நகை, மாணிக்கக்கற்கள்

இந்நூலில் கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் நிறுவனங்கள் பற்றிய குறிப்புக்கள் ஏதுமில்லை. மல்வானையைச் சேர்ந்த எஸ். ஏ. ஹமீதலி மரிக்கார் நிறுவனம் 1852ல் ஸ்தாபிக் கப்பட்டமையும், பின்னர் மல்வானை முஸ்லிம்கள் கிராண்ட்பாஸ் பகுதியில் கொப்பரா, ரப்பர், பாக்கு மற்றும் ஏனைய இலங்கை விளைபொருட்கள் வியாபாரங்கள் காரணமாக அமைந்த ஏ. எல். எம். ஸாலி ஹாஜியார் நிறுவனம், ஏ. எல். எம். ஜலீல் நிறுவனங்கள், எஸ். ஏ. ஹமீதலி நிறுவனத்தை அடியொற்றி நிறுவப்பட்டன. 1854ம் ஆண்டு விக்டோரியா பாலம் அமைக்கப்பட முன்னர் பொருட்கள் களனி ஆற்று வழியே எடுத்துச் செல்லப்பட்டு அப்போது நாகலகம் வீதியில் அமைந்த தெப்பங்கள் மூலம் அமைக்கப்பட்ட பாலம் (Bridge of Boats) வழியே கிராண்ட்பாஸிலுள்ள களஞ்சிய சாலைகளில் பொதி செய்யப்பட்டு கொழும்புத் துறைமுகம் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை விருத்தியினால் கம்பஹ மாவட்டத்தில் பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய பிரதான பட்டினங்களிலும் தமது வர்த்தக முயற்சியில் ஈடுபட வழி வகுத்தது. பஸ்யால, கள்-எலிய கிராம வாசிகள் கேகாலை, வறக்காப்பொலையிலும், மல்வானை முஸ்லிம்கள் கிராண்ட்பாஸ், கிரிந்திவல, தம்பதெனியா, ஹன்வல்லையிலும், நீர்கொழும்பு வாசிகள் கொழும்பிலும் தமது வர்த்தக முயற்சியில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து வசதிகள் குறைந்த அக்காலத்தில் பொட்டணி வியாபாரிகள், அங்காடி வியாபாரிகள் என்ற தனிநபர் வர்த்தக சமூகம் ஒன்று அமைந்திருப்பதைக் காணலாம். கிழமைக்கு ஒரு

நாள் கூடும் சந்தைகளிலும் வீடு வீடாகச் சென்றும் வர்த்தகம் செய்தனர். இவர்களது செல்வாக்குப் பற்றி இலங்கை - கிழக்கின் முத்து என்ற நூலில் (CEYLON - PEARL IN THE EAST) எடுத்துரைப்பதோடு இவர்களை "நாடோடி முஸ்லிம்கள்" ( THE WANDERING MOOR) என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ் வர்த்தக அமைப்புகள் சிங்களவர்களின் பண்டிகைக் காலங்களில் ஏற்படுத்திய சேவைகள் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். மாவட்டத்தினுள்ளும், வெளியேயும் கிராமங்களுக்கிடையிலான தொடர்புகள், விசேடமாகத் திருமணத் தொடர்புகள் ஏற்படுத்திப் புதிய குடியேற்றங்களுக்கும் உதவினர்.

## விவசாயம் - பழச் செய்கை, வீட்டுத்தோட்டம்

ஈரவலயத்தில் மழையை நம்பி விவசாயம் செய்யக்கூடிய ஒரு பகுதியிலேயே கம்பஹ மாவட்டம் அமைந்துள்ளது. சிறிய துண்டுகளாகவே நெல் விவசாயம் அமைந்துள்ளது. முஸ்லிம்கள் நேரடியாக விவசாயத்தில் ஈடுபடாமல் குத்தகைக்கு நிலங்களைக் கொடுத்து வருமானம் பெறும் போக்கே முழு கம்பஹ மாவட்டத்திலும் காணப்படுகிறது. நிலத்தின் மூலம் உச்ச வருமானம் பெற முடியாததனால், விவசாயத்தில் ஈடுபடும் ஆர்வம் குறைவாகவே இருந்துள்ளது. மலேரியா ஒழிப்பு, சுகாதார வசதிகள் பெருகியமையினால் ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கம் விவசாயக் காணிகள் துண்டாடப்பட்டு வேறு தேவைகளுக்குப் பாவிக்கப்படும் போக்கு ஆரம்பமாகியது.

பெருந்தோட்டப் பயிராகத் தென்னை, தேயிலை, இரப்பர் பயிர்ச் செய்கையில் பாரிய அளவில் ஈடுபட்டவர்கள் மிகவும் அரிது. பெருத் தோட்டப் பயிர்ச்செய்கைக்கான "பெர்கூசன் கை நூல்" ( FERGUSON DIRECTORY) ஐநூறு ஏக்கருக்கு மேல் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் ஒருவரையாவது குறிப்பிடவில்லை. நீர்கொழும்பு, மினுவாங்கொடை, மல்வானைப் பகுதிகளில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் வருமானம் பெறுபவர்கள் மிகவும் குறைவாகவும், ஈடுபட்ட ஒரு சிலர் சுமார் 150 ஏக்கருக்குக் குறைவான காணிகளையே உரித்துடையவர்களாக இருந்தனர். 1972ம் ஆண்டு நில உச்சவரம்பு சட்டத்தின் மூலம் இக்குறிப்பிட்ட ஒரு சிலரும் இல்லாது ஒழிந்தனர்.

தோட்டப் பயிர்ச்செய்கையில் நேரடியாக ஈடுபட்டவர்களும் குறைவு. ஆறுகள், குளங்களுக்கு அண்மையில் கத்தரி, பீர்க்கு போன்ற நாட்டு மரக்கறிகளை முஸ்லிம்களுக்கு உரிய காணிகளில் செய்கை பண்று வதில் சிங்களவர்கள், பூகொடை மல்வானைப் பகுதியில் சிறிய அளவில் ஈடுபட்டுள்ளனர். இவ்விடங்களில் வெள்ள அபாயம், காணி விலைகள் அதிகரித்தமை, மாகாணத்தில் வளர்ந்து வரும் கைத்தொழில் விருத்தியினால் அருகி வருவதையும் அவ தானிக்கக்கூடியதாக உள்ளது.

றம்புட்டான், தூரியன், மங்குஸ்தான் பழங்கள் டச்சுக் குடியேற்றக்காரர்களினால் இந்தோநேஷியா, மலேயா போன்ற நாடுகளிலிருந்து கம்பஹ மாவட்டத்திற்கு அறிமு கப்படுத்தப்பட்டன. இவற்றில் தூரியன் பழம் இரத்தினபுரி மாவட்டத்திலும், கேகாலை மாவட்டத்திலும், மங்குஸ்தான் களுத்துறை மாவட்டத்திலும் வெற்றிகரமாகப் பயிர் செய்யப்பட, றம்புட்டான் சியன கோறளையில் மல்வானையில் பாரிய அளவில் ஆரம்பத்தில் பயிரிடப்பட்டது. றம்புட்டான் சுதேச இனமே ஆரம்பத்தில் பயிரிடப்பட்டாலும் தற்போது மலேசிய திருத்திய இனம் பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் மூன்று ரூபா முதல் ஐந்து ரூபா வரை இப்பழம் விற்பனை செய்யப்பட்டு மல்வானைப் பகுதியில் வீட்டுத் தோட்டங்களிலும், சிறிய காணிகளிலும் பயிரிடப்படுகிறது. மல்வானையில் காலஞ் சென்ற பிரதமர் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயகாவின் பிதாவே றம்புட்டான் செய்கையில் பாரியஅளவில் தனது காணிகளில் பயிரிட்டு முன்னோடியாக விளங்கியவர். வருடத்திற்கு ஒரு முறை வருமானம் தரும் பயிர்ச் செய்கையில் நேரடியாக ஈடுபடுபவர்கள் ஒரு சிலரே தமது றம்புட்டான் பயிர்ச் செய்கைத் தனிமரங்களாகவும் காணிகளாகவும் ஏனையவர்களுக்குப் பழச் செய்கைப் பருவத்தில் விற்று வருமானம் பெறுகின்றனர். தகரத்திலடைத்து பிற நாடுகளுக்குப் பழ ஏற்றுமதியில் ஒருசில சிங்களவர்கள் ஈடுபட்டுள்ளனர். எனினும் முஸ்லிம்கள் யாருமிலர். கைத்தொழில் அபிவிருத்தி, காணிகள் விலை அதிகரிப்பு, நிலங்கள் வீடு கட்டுதல் போன்ற தேவைகளுக்குப் பாவிக்கப்பட்டமையினால் மிகவும் குறைவான நிலப்பகுதியே றம்புட்டான் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

## பிற தொழில்கள்

### குடிசைக் கைத்தொழில், பாரிய கைத்தொழில்கள்

மேசன் வேலை, தச்சுவேலை என்பனவற்றிலும் ஒரு சிறிய தொகையினராகவே கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் ஈடுபட்டுள்ளனர். தச்சுவேலை, மேசன் வேலையில் ஈடுபட்டு சமூகத்தில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட குழுவாக நீர்கொழும்பு, பலகத்துறை முஸ்லிம் குடும்பங்கள் சில உள்ளனர். இவர்கள் தமது தொழிற் பெயரால் "பாஸ் வீட்டார்" என அழைக்கப்படுகின்றனர். ஆரம்பத்தில் சிறிய அளவில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்ட நீர்கொழும்பு முஸ்லிம்கள் தற்போது பெரிய அளவில் அரசாங்க ஒப்பந்தக்காரர்களாகவும் தனியார் துறை நிர்மாண முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

சிறிய குடிசைக் கைத்தொழில்களான பீடிசுற்றுதல், கயிறு திரித்தல், ஓலை இழைத்தல், பாய் இழைத்தல் என்பன ஓரளவு ஏழைக் குடும்பங்களினால் கஹடோவிட்ட, திஹாரிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கயிறு திரித்தல், ஓலை இழைத்தல், பாய் இழைத்தல் என்பன பிளாஸ்டிக், நைலோன் என்பன அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் வழக்கொழிந்து வருகின்றன.

1960ம் ஆண்டு வரை பாரிய கைத்தொழில்கள் எதுவும் அமையாத மாவட்டமாகவே கம்பஹ மாவட்டம் இருந்தது. பூகொடை, மீரிகமப் பகுதியில் நெசவாலை பிறநாட்டு அரசாங்கங்களின் ஆதரவுடன் தொடங்கப்பட்டதெனினும் இதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெற்ற முஸ்லிம்கள் ஒரு சிலரே. 1977ம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இரு சுதந்திர கைத்தொழில் வலயங்கள் மல்வானைக்கு அண்மையில் பியகமையிலும், நீர்கொழும்புக்கு அண்மையில் கட்டுநாயகாவிலும் ஏற்படுத்தப்பட்டன. பிறநாட்டு மூலதனம், தொழில் நுட்பம், உள்ளூர் மூலப் பொருட்கள், தொழிலாளர்கள் இக் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தப்படுவது முக்கிய நோக்காக இருந்தது. வட அயர்லாந்திலுள்ள சனோன் (SHANNON), மலேஷியாவின் பெடலிங் ஜாயாவில் அமைந்துள்ள இரு சுதந்திர வர்த்தக அமைப்புக்களை முன் மாதிரியாகக் கொண்டு இம் முயற்சிகள்

தொடங்கப்பட்டன. உள்கட்டமைப்பு வசதிகளான நெடுஞ்சாலை வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள், நீர் விநியோகம், வடிகாலமைப்பு, மின் வசதிகள் பாரிய அளவில் ஏற்படுத்தப்பட்டன. பியகமையில் சுமார் நானூறு ஏக்கர் பெருந்தோட்டக் காணிகள் இத்தேவைக்காகச் சுவீகரிக்கப்பட்டன. தென்கொரியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, யப்பான் போன்ற நாடுகள் பல்வேறு தொழில்களில் மூலதனமிட்டன. இரப்பர், நெசவு, இரும்பு, விளையாட்டு உபகரணங்கள், கையுறைகள் போன்ற கைத்தொழில்கள் தொடங்கப்பட்டு பல்லாயிரக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்பினைப் பெற்றனர். இக் கைத்தொழில் வலயங்கள் இரண்டிலும் தொழில் பெற்ற முஸ்லிம்கள் மிகவும் குறைவானவர்களே. இதற்கு முக்கிய காரணங்களிலொன்று பெண்கள் ஈடுபடுத்தப்படும் தொழில் முயற்சிகளே அதிகம். விசேடமாக ஆடையுற்பத்தித் தொழில்களே தொடங்கப்பட்டமையாகும். பியகமையில் சுமார் 35,000 பேரும் கட்டுநாயகாவில் 40,000 பேரும் தொழில்களில் ஈடுபட்டள்ளனர்களெனினும், இவை இரண்டிலும் சுமார் ஆயிரம் பேர்களுக்குக் குறைவாகவே முஸ்லிம்கள் தொழில் பெற்றுள்ளனர். ஆனால் கட்டிட ஒப்பந்தக்காரராகவும் வேறு பல்வேறு சேவைகள் போன்றவற்றினால் மறைமுக வருமானம் பெறுபவர்கள் அதிகம் உள்ளனர். மல்வானைப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்த பலரின் வாழ்க்கைநிலை பெருமளவில் முன்னேற்றம் அடைந்தது. ஆனால் உயர் தொழில் நுட்பம், உயர் கல்வி தேவைப்படும் தொழில்களான கணக்காளர், பொறியியலாளர், கணனித்துறை, உற்பத்தித் துறைகளில் தொழில் பெற்றவர்கள் ஒரு சிலரே. அத்தோடு பிறநாட்டு மூலதனத்துடன் உள்ளூர் பங்குதாரர்களாகத் தொழில் முயற்சியில் ஈடுபட்டவர்கள் கம்பஹ மாவட்டத்தில் யாருமிலர். இரப்பர், தெங்குப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கைத்தொழில் முயற்சிகள் தொடங்கப்பட்டு இருப்பினும் இவ்விரு பயிர்களின் வர்த்தகம், ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள கம்பஹ மாவட்ட முஸ்லிம்கள் இவற்றில் அக்கறை காட்டாமல் இருப்பது வருந்தத்தக்க விடயமாகும்.

விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில பாரிய வர்த்தக முயற்சிகளே முஸ்லிம்களினால் கம்பஹ மாவட்டத்தில் இயங்கி

வருகின்றன. இவற்றில் இரு நிறுவனங்களைக் குறிப்பிடலாம். ஒன்று அல்லி ஸ்தாபனம், மற்றது தன்சர் நிறுவனம். அல்லி ஸ்தாபனம் உணவுப் பொருள் பதனிடும் தொழில்களிலும், வீட்டுப் பாவனைப் பொருள்களை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகம் செய்து வருகிறது. தகரத்திலடைக்கப்பட்ட மீன், நூடில்ஸ், பப்படம், சோப் போன்ற பொருட்கள் இவர் களால் தயாரிக்கப்படுகின்றன. நாம்புளுவ, பஸ்யால கிராமங்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்நிறுவனம் பல நூற்றுக் கணக்கானவர்களுக்குத் தொழில் வாய்ப்பினை வழங்கியுள்ளது. இந்நிறுவனத்தினால் இக் கிராம மக்களின் வாழ்க்கைத் தரம், கணிசமான முன்னேற்றத்தினைப் பெற்றுள்ளது. அத்தோடு இந் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் மத்ரஸாக்கள், மற்றும் கல்வி வகுப்புக்கள், சிறந்த சேவையினை ஆற்றி வருகின்றன.

இந்தியாவில் உறையூர் சுருட்டுக்கு இணையாக இலங்கையில் திஹாரியில் அமைந்துள்ள தன்சர் நிறுவனம் சுருட்டுக் கைத்தொழிலை குடிசைக் கைத்தொழிலாகவும் நவீனமுறையிலும் உற்பத்தி செய்து வருகிறது. அண்மையில் நவீன இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, ஏற்றுமதியிலும் ஈடுபடத்தொடங்கியுள்ளது. இந்நிறுவனத்தினால் கல்வி, பள்ளிவாசல் என்பனவற்றுக்கும் இஸ்லாமிய மதக்கல்வி என்பனவற்றிற்கும் பெரும் தொண்டு ஆற்றப்பட்டு வருகிறது. அண்மையில் திஹாரியில் இந்நிறுவனத்தினால் கல்யாண மண்டபமொன்று அமைக்கப்பட்டு இப்பகுதி மக்களின் நீண்ட காலத் தேவையொன்றைப் பூர்த்தி செய்துள்ளது.

## எதிர்காலத் தொழில் வாய்ப்புகளும் வர்த்தகம், கைத்தொழில் பற்றிய ஒரு சிறிய குறிப்பும்

1997ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட வெளிநாட்டுத்தொழில் வாய்ப்புகள் அடிமட்ட வருமானம் பெறும் முஸ்லிம் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது. மத்திய கிழக்கிற்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுச் சென்றவர்களில் அதிகமானோர் குறைந்த நுட்பத் தொழில்களில் குறைந்த சம்பளத்திற்கே தொழில் பெற்றனர். அங்கு உழைத்த பணம் திருமணங்கள், கடன் திருப்பிக் கொடுத்தல், வீடுகட்டுதல், வீட்டு உபகரணங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கே பெரும்பாலும் பயன்படுத்

தப்பட்டது. ஒரு சிலர் சிறிய வியாபாரங்களிலும், ஆட்டோ ரிக்ஷா போன்ற சுயதொழில் முயற்சிகளிலும் மூலதனமிட்டனர். பெரும்பாலானவர்கள் வீட்டுப் பணிப்பெண்கள், தோட்டவேலை, ஹோட்டல் பணியாளர்கள், பொது உதவியாளர்கள் போன்ற குறைந்த சம்பளம் பெறும் தொழில் வாய்ப்பினைப் பெற்றமையினால் இவர்கள் நாடு திரும்பியதும் தமது பழைய நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். கணக்காளர்கள், பொறியியலாளர்கள், வைத்தியத்துறை போன்றவற்றில் தொழில் பெற்றவர்கள் கம்பஹ மாவட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிறிய தொகையினரே.

முஸ்லிம்கள் எதிர்காலத்தில் கம்பஹ மாவட்டத்தில் கைத்தொழில், ஏனைய வர்த்தக முயற்சியில் ஈடுபடும் வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆடையுற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இரு நிறுவனங்களே உள்ளன. இவை சுமார் முன்னூறு பேர்வரை தொழிலில் அமர்த்தியுள்ளது. இவ்விரு நிறுவனத்திலும் முஸ்லிம் பெண்கள் தமது மதச் சூழ்நிலையில் தொழில் பார்ப்பது ஒரு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

**உதவிய நூல்கள்**


போர்த்துக்கேயர் காலம்

1. Spiritual and Temporal eonquest of Ceylon - Father Queyroz
2. Portuguese Rule in Ceylon - 1594 - 1612 - T. B. Abayasingha
3. Portuguese Rule in Ceylon - 1612 - 1638

டச்சுக்காரர் காலம்

1. Travels in Ceylon - Winter Gest 1712
2. Foundation of Dutch Power in Ceylon - 1636 - 1658
   Karl Goonawardane.
3. Dutch Power in Ceylon - 1658 - 1687. S. Arasaratnam
4. Muslims in Sri Lanka - 900 A.D. - 1915 A. D. -
   Dr. Lorna Dewarajah

ஆங்கிலேயர் காலம்

1. Muslims in Sri Lanka during British period - Dr. Kamil Azad
2. Ceylon under British rule - Dr. Colvin R. De. Silva

# கம்பஹா மாவட்ட தேர்தல் தொகுதிகள்
## (பிரதேச செயலகப் பிரிவுகளும் இவையே)

1. வத்தளை
2. ஜா-எல
3. நீர்கொழும்பு
4. கடான
5. மினுவங்கொட
6. திவுலபிட்டிய
7. மீரிகம
8. அத்தனகல
9. கம்பஹா
10. மஹர
11. களனி
12. பியகம
13. தொம்பே (வேக்க)

## முஸ்லிம்கள் வாழும் ஊர்கள்

1. பேலியகொட
2. மாபோல
3. நீர்கொழும்பு
4. காமச்சோடை
5. பெரியமுல்ல
6. கொச்சிகட
7. கம்மல்துறை (பலகத்துறை)
8. ரத்தொழுகம
9. மினுவங்கொட
10. கல்லொழுவ
11. கோப்பிவத்த
12. கோவின்ன
13. வல்பிட்ட
14. கள்-எலிய
15. ஹன்சகிரிய
16. பஸ்யால
17. நாம்புளுவ
18. அல்லலமுல்ல
19. வேவல்தெனிய
20. தியல்ல
21. திஹாரிய
22. ஹொரகொல்ல-ஒசட்வத்தை
23. கஹடோவிட்ட
24. ஒகொடபொல
25. உடுகொட
26. அத்தனகல்ல-ஹாுணுபொல
27. ரன்பொகுனுகம
28. வேயங்கொட
29. ஹாுணுபிட்டிய
30. வெலேகொட
31. ரோஸ்விலா கார்டன்
32. என்டேரமுல்ல
33. கொங்கிதொட்ட

34. திப்பிட்டிகொட
35. பாதியதுடுவ
36. பூகொட, குமாரிமுல்ல
37. மல்வான
38. யடிஹேன
39. மாகொல
40. கோனவல, களனிய

இணைப்பு: **III**

## பள்ளிவாசல்கள், தக்கியாக்கள்

| | | |
|---|---|---|
| வத்தளை | 1. | மாபோல ஜும்ஆ மஸ்ஜித் |
| | 2. | மாபோல ஸுப்ஹானி தக்கியா ஆராச்சிகே வத்த |
| | 3. | ஸாலிஹீன் தக்கியா, தூவத்த, மாபோல |
| | 4. | தக்வா தக்கியா, யார்ட் |
| ஜா-எல | 5. | ரத்தொழுகம பள்ளிவாசல் |
| நீர்கொழும்பு | 6. | காமச்சோடை ஜும்ஆப் பள்ளிவாசல் |
| | 7. | மஃனமுல் பலாஹ் ஜும்ஆ மஸ்ஜித் |
| | 8. | நீர்கொழும்பு பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் |
| | 9. | கொச்சிக்கடை ஜாமிஉல் மிலுபர் பள்ளி |
| | 10. | பலகத்துறை ஜும்ஆப் பள்ளிவாசல் |
| | 11. | உடையார் தோப்புப் பள்ளிவாசல் |
| | 12. | மஸ்ஜிதுல் ஹுதா |
| | 13. | காதிரிய்யா தக்கியா |
| | 14. | மத்ரஸதுல் மினன் தக்கியா |
| கட்டான | 15. | முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளிவாசல், கோவின்ன |
| | 16. | மஸ்ஜிதுல் கைராத் |
| மினுவங்கொட | 17. | அல்-மஸ்ஜிதுல் ஸாலிஹாத் பீஇபாதில்லாஹில் காதிர் ஜும்ஆப் பள்ளிவாசல், கள்ளொளுவ |
| | 18. | மினுவங்கொட முஸ்லிம் ஜும்ஆப் பள்ளிவாசல் |
| | 19. | முஹியத்தீன் தக்கியா, கோப்பிவத்த |
| | 20. | கோவின்ன முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளி |
| | 21. | தக்யா வீதித் தக்யா |
| | 22. | எக்ஸத் ஹந்தித் தக்யா |
| | 23. | முனாஸ் ஹாஜியார் மாவத்தைத் தக்கியா |
| மீரிகம | 24. | அல் - மஸ்ஜிதுல் ஸுப்ஹானி, கள்-எலிய |
| | 25. | நாம்புளுவ ஜும்ஆ மஸ்ஜித், பஸ்யால |
| | 26. | மஸ்ஜித் ஜாமிஉல் கைராத், அல்லலமுல்ல |
| | 27. | வெவல்தெனிய ஜும்ஆ மஸ்ஜித் |
| | 28. | ஸபீலுல் ஹுதா ஸாவியா, ரதாவடுன்ன |

29. கள்-எலிய டவுண் பள்ளிவாசல்
30. ஹன்ஸகிரிய பள்ளிவாசல், கள்-எலிய
31. தாஜுத்தீன் மாவத்த பள்ளிவாசல்
32. ஸலீம்புர பள்ளிவாசல்
33. பஸ்யால டவுண் பள்ளிவாசல்
34. பொல்கஹதென்ன பள்ளிவாசல்

அத்தனகல்ல

35. அல்-மஸ்ஜிதுல் ரவ்லா ஜும்ஆப் பள்ளிவாசல்
36. முஹியத்தீன் ஜும்ஆ மஸ்ஜித், கஹட்டோவிட்ட
37. அல்-மஸ்ஜிதுல் அமீனிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல்
38. அல்-மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், உடுகொட
39. மஸ்ஜிதுல் ஹரம் ஜும்ஆப் பள்ளிவாசல், வெயாங்கொட
40. மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், அத்தனகல
41. மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், கஹட்டோவிட்ட
42. அல்-மஸ்ஜிதுன் நூரானிய்யா, ஹொரகொல்ல
43. மஸ்ஜிதுல் பலாஹ், ஒகொடபொல
44. அல்-மஸ்ஜிதுல் அக்பர், தூல்மல, திஹாரிய
45. மஸ்ஜிதுல் இப்றாஹிமிய்யா, திஹாரிய
46. அல்-மஸ்ஜிதுல் பத்தாஹ், பண்டாரநாயக்க பிளேஸ், திஹாரிய
47. மின்ஹத்துல் இப்றாஹிமிய்யா ஸாவியா, கஹட்டோவிட்ட
48. மீர் கனியா தக்கியா, திஹாரிய
49. அல்-மத்ரஸதுல் மல்ஹரிய்யா தக்கியா, ஒகடபொல
50. கறுவாத்தோட்டப் பள்ளிவாசல், திஹாரிய
51. பொல்ஹேன பள்ளிவாசல், திஹாரிய
52. ஹிஜ்ரா மாவத்தைப் பள்ளிவாசல், திஹாரிய

53. புஹாரி தக்கியா, திஹாரிய

54. ரன்பொகுனுகம பள்ளிவாசல்

மஹர

55. அக்பர் டவுண் ஜும்ஆ மஸ்ஜித்

56. கொங்கி தோட்டம் பள்ளிவாசல்

57. ரோஸ் விலா கார்டன் மஸ்ஜிதுல் பிர்தௌஸ்

58. மஹரப் பள்ளிவாசல்

59. மஹர சிறைப் பள்ளிவாசல்

களனி

60. அல்-பத்ரியா தக்கியா, வேலேகொட

61. முஹியத்தீன் தக்கியா, திப்பிட்டிகொட

62. பாதிலிதுடுவ தக்கியா

63. பைதுல் முகர்ரம் ஜும்ஆப் பள்ளிவாசல், பேலியகொட

பியகம

64. றக்ஸபான ஜும்ஆ மஸ்ஜித்

65. தளுக்கள தக்கியா ஜும்ஆ மஸ்ஜித்

66. உளஹிடுவள ஜும்ஆ மஸ்ஜித்

67. யடிஹேன தக்கியா ஜும்ஆ மஸ்ஜித்

68. வடுவேகம ஜும்ஆ மஸ்ஜித்

69. மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ மஸ்ஜித், மாகொல

70. மஸ்ஜிதுல் கதீஜா ஜும்ஆ மஸ்ஜித், உளஹிடுவள

71. மஸ்ஜிதுல் முஹ்ததீன், உளஹிடுவள

72. கோனவல ஜும்ஆ மஸ்ஜித், களனிய

73. வல்கம தக்கியா, வல்கம, மல்வான

74. ஹிதாயத் மஸ்ஜித், விதானகொட, மல்வான

75. மஸ்ஜிதுஸ் ஸைப், பெலன்கஹவத்த, மல்வான

76. மாகொல அனாதை நிலைய மஸ்ஜித், உளஹிடுவள, மல்வான

77. மஸ்ஜிதுல் முபாறக், அல்-முபாறக் தேசியக் கல்லூரி, மல்வான

78. காந்திய வளவ்வ தக்கியா, காந்தியவளவ்வ, மல்வான

79. மஸ்ஜிதுஸ் ஸாலிஹீன், வளவ்வத்த, மல்வான

80. மஸ்ஜிதுத் தஃவா இஸ்லாமிய்யா, கராபுகஸ்ஹந்திய, மல்வான

81. மல்வத்த தக்கியா, மல்வத்த, மல்வான

தொம்பே

82. பூகொட ஜும்ஆ மஸ்ஜித்
83. பூகொட நகரப் பள்ளிவாசல்
84. நக்ஷபந்தியா தக்கியா, குமாரிமுல்ல
85. குமாரிமுல்ல தைக்கா மஸ்ஜித்

இணைப்பு: **IV**

## ஸியாரங்கள்

1. அஷ்ஷெய்கு அஹ்மது ரிபாய் மௌலானா ஸியாரம், றக்ஸபான, மல்வானை
2. ஷெய்குனா அப்பா முஹம்மது ஹுஸைன் இப்னு முஹம்மது ஸியாரம், தளுக்கல, மல்வானை
3. கல்லுக்குளி ஸியாரம், (ஷெய்கு முஹம்மது வலியுல்லாஹ்), திஹாரிய
4. ஊர்மனை ஸியாரம் (ஷெய்கு அபூபக்கர் ஸிந்துனி திஹாரி)
5. செய்கு அப்துல் காதிரி வலி ஸியாரம், உடுவன்கல்லை, அத்தனகல
6. செய்கு அபூபக்கர் பா ஹாஷீம் பா அலவி மௌலானா ஸியாரம் குமாரிமுல்லை, பூகொட

# அறபுக் கல்லூரிகள்

1. ஹஸனியா அறபுக் கல்லூரி, உடுகொட
2. அல்-அமான் அறபுக் சல்லூரி, நீர்கொழும்பு
3. நிழாமிய்யா அறபுக் கல்லூரி, மினுவாங்கொட
4. அன்வாறுல் உலூம் அறபுக் கல்லூரி, மாகொல
5. தாருல் குர்ஆனுல் கரீம், (ஹிப்ளு), கள்எலிய
6. கள்எலிய முஸ்லிம் மகளிர் அறபுக் கல்லூரி, கள்எலிய

## பாடசாலைகள்

| வலயம் | இல. | பாடசாலையின் பெயர் | விலாசம் |
|---|---|---|---|
| நீர்கொழும்பு | 1. | அல்-ஹிலால் ம.ம.வி. | நீர்கொழும்பு |
| | 2. | கம்மல்துறை அல்-பலாஹ் ம.வி. | கொச்சிக்கடை |
| | 3. | காமச்சோடை மு.வி. | நீர்கொழும்பு |
| மினுவாங்கொட | 4. | கல்லொளுவ அல்-அமான் ம.வி. | மினுவாங்கொட |
| | 5. | கள்-எலிய அலிகார் ம.வி. | கள்-எலிய |
| | 6. | நாம்புளுவ பாபுஸ்ஸலாம் வி. | பஸ்யால |
| | 7. | வேவல்தெனிய அல்-ஹஸன் வி. | வேவல்தெனிய |
| | 8. | அல்லலமுல்ல ஸாஹிரா வி. | பஸ்யால |
| கம்பஹ | 9. | கஹட்டோவிட்ட அல்-பத்திரியா ம.வி. | கஹட்டோவிட்ட |
| | 10. | திஹாரிய அல்-அஸ்ஹர் ம.ம.வி. | கலஹெடிஹேன |
| | 11. | உடுகொட அறபா வி. | றுக்கஹவெல |
| | 12. | ஓசாட்வத்த க.வி. | நிட்டம்புவ |
| | 13. | குமாரிமுல்ல வி. | பூகொட |
| | 14. | கஹட்டோவிட்ட மு.ம.க.வி. | கஹட்டோவிட்ட |
| களனிய | 15. | மல்வான அல்-முபாரக் தே.பா. | மல்வான |
| | 16. | யடிஹேன அல்-முஸ்தபா வி. | மல்வான |
| | 17. | ஹுனுப்பிட்டிய மு.வி. | வத்தளை |
| | 18. | மாபோல அல்-அஷ்ரப் ம.வி. | வத்தளை |
| | 19. | வெலேகொட மு.வி. | வத்தளை |

## பிற ஸ்தாபனங்கள்

1. அஹதியாப் பாடசாலைகள்
2. மாகொல முஸ்லிம் அனாதை இல்லம்
3. லேடி பரீத் வயோதிபர் இல்லம், மாகொல
4. திஹாரிய அங்கவீனர் நிலையம்
5. இந்தோனேஷிய ஹாஜிகள் நினைவு நிலையம், கட்டுநாயக்கா
6. கள்ளலிய பெண்கள் அனாதை நிலையம்

# கட்டுரைகள் வழங்கியோர்

1. அல்ஹாஜ் எம். எம். எம். மஹரூப்

இலங்கைப் பல்கலைக்கழகம் (கொழும்பு/பேராதனை), இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பட்டதாரியான இவர், இலங்கை சட்டக் கல்லூரி அட்வகேட் பரீட்சையிலும் சித்தியடைந்தவராவார். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றி, கடைசியாக முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளராக ஓய்வுபெற்றார் கலாநிதி ரீ. பி. ஜாயா, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ், நீதியரசர் எம். ரி. அக்பர் ஆகியோரைப்பற்றி ஆங்கிலத்தில் நூல்கள் வெளியிட்டுள்ளதோடு களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு, இலங்கை முஸ்லிம்களின் வரலாறு ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியருமாவார். தமிழ்நாட்டுப் புனைகதைகளின் தோற்றமும் வீழ்ச்சியும், பிறை வளர்ந்த கதை முதலிய தொடர் கட்டுரைகளின் ஆசிரியரான இவர், தமிழிலும் ஆங்கிலத்திலும் நூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். சர்வதேசப் புகழ்பெற்ற பல ஆங்கில ஆய்வுச் சஞ்சிகைகளில் இக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

2. எம். வை. ஸபருள்ளாகான்

1953ம் ஆண்டு திக்வல்லயில் பிறந்த முஹம்மது யூசுப் ஸபருள்ளாகான் திக்வல்ல மகா வித்தியாலயம், மாத்தறை தாருல் உலூம் மகா வித்தியாலயம், பெலகம தேசிய பாடசாலை, மருதானை இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றுள்ளார். இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றில் சேவையாற்றிய இவர் தற்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் உள்ளகக் கணக்காய்வாளராகக் கடமையாற்றுகின்றார். 1974ம் ஆண்டு முதல் எழுத்துத்துறையில் ஈடுபட்டு பத்துக்கு மேற்பட்ட தமிழ் சிறுகதைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இனங்களுக்கிடையில் நல்லுறவு வளர்க்கும் செயற்திட்டத்தின் கீழ் இலங்கையில் முதன் முதலில் 'அவர்களுக்கு வயது வந்து விட்டது' என்ற நூலை சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.

3. அல்ஹாஜ் எம். எஸ். எம். மசூத்

பூகொடையைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்ஹாஜ் - எம். எஸ். எம். மசூத் அவர்கள் 1962 - 63 ஆம் ஆண்டுகளில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்று நாட்டின் பல பாகங்களில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். 30 ஆண்டுகள் சேவையாற்றியபின் 1990 ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார். கம்பஹ மாவட்ட இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் கடமையாற்றிய இவர், 1970 களில் கம்பஹ மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பல பங்களிப்புக்களைச் செய்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு திஹாரியில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவின் குழுத் தலைவராகக் கடமையாற்றினார். பூகொடை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை உறுப்பினராகவும் பணிபுரிந்த இவர் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார்.

வேறும் பல பொது ஸ்தாபனங்களில் சேர்ந்து பொது சேவையில் ஈடுபட்டுள்ள இவர், கம்பஹ மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி சம்பந்தமான ஆய்வொன்றினைச் செய்துவருகிறார்.

4. எம். எச். எம். லாபீர்

மல்வானையைச் சேர்ந்த மர்ஹூம் முஹம்மது ஹுஸைன் லெப்பை தம்பதிகளின் புதல்வரான முகம்மது லாபிர் 1949.10.25ம் திகதி மல்வானையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை அல்-முபாரக் தேசிய கல்லூரியில் பெற்று 1965ல் மகரகம கபூரியாவில் சேர்ந்து 1972 இல் மௌலவிப் பட்டம் பெற்றார். பின்னர் சுயமுயற்சியில் கற்று 1979 இல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1996ல் பட்டமுப் பின் கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்றார்.

1973ல் மௌலவி உதவி ஆசிரியராக ஆசிரிய சேவையில் இணைந்த இவர், தற்போது அல்-முபாரக் தேசிய கல்லூரியின் பிரதி அதிபராகவுமுள்ளார்.

மல்வானை அஹதிய்யா கல்வி நிறுவனத்தின் தலைவராகவும்; கம்பஹ மாவட்ட அஹதியா சம்மேளன ஸ்தாபகத் தலைவராகவும்; அகில இலங்கை அஹதியா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவராகவும்; கம்பஹ மாவட்ட ஜம்இய்யதுல் உலமாச் செயலாளராகவும்; அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரசாரச் செயலாளராகவுமுள்ளார்.

5. எம். வை. ஏ. அப்துல் காதர்

அல்ஹாஜ் எம். வை. ஏ. அப்துல் காதர் அவர்கள் மல்வானையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அப்போதைய மல்வானை முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலையாக இருந்த, அல் முபாறக் தேசியக் கல்லூரியில் கல்வி கற்றவர். 1959 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் பயிற்றப்பட்ட முதலாந்தர ஆசிரியராகவும், அதிபராகவும் மாத்தளை, கொழும்பு மாவட்டங்களில் 32 வருடங்கள் சேவையாற்றி 1991 - ஜனவரி முதல் ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கைக்குத் தமிழ்ச் சுருக்கெழுத்து, தட்டெழுத்து அறிமுகப்படுத்தப்பட்ட கால கட்டத்தில், அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மேற்படி சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி வகுப்பில் சுமார் இரண்டு வருட கால பயிற்சி பெற்று ஆரம்ப காலத் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களில் ஒருவராகத் தராதரம் பெற்றுள்ளார்.

கல்வியமைச்சின் தமிழ்ப்பாட வழிகாட்டிப் பிரிவில், தமிழ் மொழிக் குழுவில் கடமையாற்றி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழ் மொழித்தின அமைப்புக்குழுவிலும் கடமையாற்றினார்.

அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்க உதவிச் செயலாளராகவும், வை. எம். எம். ஏ. மல்வானைக் கிளைச் செயலாளராகவும், அல் முபாறக் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் சேவையாற்றிய இவர், மல்வானை வாலிபர்களை இஸ்லாமிய ஐக்கிய வாலிப முன்னணி என்ற அமைப்பின் மூலம் ஒற்றுமைப்படுத்திப் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபடுத்தினார்.

தற்போது அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடாத்தப்படும் அரச ஊழியருக்கான தமிழ் மொழிப் பயிற்சிப் போதனாசிரியராகக் கடமை புரிகிறார்.

இவர் ஒரு இஸ்லாமியப் பாடகருமாவார். மர்ஹூம் கதீப் எம். எல். எம். யாகூப் தம்பதியினரின் புத்திரராவார். இவரது துணைவியார் மல்வானைப் பிரதேசத்தின் முதலாவது ஆசிரியையாவார்.

6. எம். எச். எம். அமீன்

கேகாலை மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும், கள்-எலியாவை வாழுமிடமாகவும் கொண்ட இவர் சிங்கள மொழி மூல பயிற்றப்பட்ட முதலாந்தர அதிபர் ஆவார். கம்பஹ மாவட்ட கல்விக் காரியாலயம், பஸ்யால கோட்டக் கல்விக் காரியாலயம் போன்றவற்றில் பல வருடங்களாகச் சேவை செய்தவர். தற்போது கம்பஹ வலயக் கல்விக் காரியாலயத்தில் பணிபுரிகிறார்.

7. எம். எச். எம். புஹாரி

கள்-எலியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா கலாபீடத்தில் 1990 இல் கற்கை நெறியைப் பூரணப்படுத்தியவர். 1993 இல் பேராதனைப் பல் கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சையில் அறபு மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இவர் தற்பொழுது திஹாரிய அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

8. மு. பஷீர்

மர்ஹூம் கான் சாஹிப் அவர்களின் புதல்வராக இவர் 1940ம் ஆண்டு கொழும்பில் பிறந்தார். மினுவன்கொடை, கல்லொழுவையைத் தாயமாகக் கொண்டு 1960ம் ஆண்டு முதல் எழுத்துத் துறையில் ஈடுபடலானார். இதுவரை 100க்கு மேற்பட்ட கவிதை, சிறுகதை, விமர்சனங்கள் எழுதியுள்ளார். கடந்த மூன்று வருடங்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் "வாழும் கதைகள்" என்ற நிகழ்ச்சியை ஒலிபரப்பி வருகின்றார்.

1996ஆம் ஆண்டு "மீறல்கள்" என்ற சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். கடந்த பத்து வருடங்களாக நீர்கொழும்பு இலக்கிய வட்டத்திலும், ஆரம்பம் முதல் மினுவன்கொடை கலை இலக்கிய வட்டத்திலும் தலைவராகச் சேவையாற்றி வருகின்றார்.

9. எம். எச். ஏ. ஸல்மான்

மல்வானை அல் முபாறக் மகா வித்தியாலயம், கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற இவர் ஒரு புவியியல் சிறப்புப் பட்டதாரியாவார். வர்த்தகக் குடும்பமொன்றில் பிறந்த இவர் தந்தையின் வழியையொட்டி இறப்பர் ஏற்றுமதி,

இரசாயனப் பொருட்கள் இறக்குமதி, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன உற்பத்திப் பொருட்களின் விநியோகம் போன்ற பல்வேறு வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார். இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும், இலங்கை இறப்பர் சபை, இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றிலும் உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார். மல்வானை கல்வி, சமூக முன்னேற்றத்தில் பெருமளவு ஈடுபாடுடையவர்.

10. எஸ்.எச். எம். ஜெமீல் (பதிப்பாசிரியர்)

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் ஆலோசகராகக் கடமைபுரியும் எஸ் எச். எம். ஜெமீல், இதற்கு முன்னர் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும்; கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும்; கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் அலுவல்களுக்குப் பொறுப்பான மேலதிகச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி மூலம் பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டத்தையும்; அதே பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமாவில் விசேட சித்தியையும்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டத்தையும் பெற்றுள்ளார். கல்வித்துறையின் சகல படித்தரங்களிலும் கடமையாற்றியுள்ள இவர், கல்விமான், நிர்வாகி, இலக்கியவாதி, வரலாற்று ஆய்வாளர் ஆவார். இருபது நூல்களின் ஆசிரியர்.

நாட்டாரியல் தொடர்பான “கிராமத்து இதயம்” எனும் இவரது நூலுக்கு 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற அரச சாஹித்திய விழாவில் ஆய்வுத் துறைக்கான விருது கிடைத்தது. அதே ஆண்டில் வடக்கு - கிழக்கு மாகாண சாஹித்தியப் பரிசும் இந்நூலுக்குக் கிடைத்தது. முப்பதுக்கும் மேற்பட்ட பிறரது நூல்களையும் பிரசுரிக்கத் துணையாக இருந்துள்ளார்.

# முஸ்லிம்கள் வாழும் ஊர்களின் அமைவிடங்கள்



## Publications of the
## Department of Muslim Religious & Cultural Affairs

1. Muslims of Kalutara District – History & Heritage
2. Muslims of Anuradhapura District – History & Heritage
3. Muslims of Matale District – History & Heritage
4. Muslims of Matara District – History & Heritage
5. Muslims of Kandy District – History & Heritage
6. Muslims of Ampara District – History & Heritage
7. Muslims of Gampaha District – History & Heritage
8. Asen Bey Sarittiram – 4th Edition
9. Varakavi Sheik Alawdeen Padalkal
10. Professor Uwise Felicitation Volume
11. Natpaya Nannool – 3rd Edition
12. Kiramathu Ithayam
13. Islam in Independent Sri Lanka

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்